
மயங்குகிறாள்
ஒரு மாது
ரமணிசந்திரன்

# மயங்குகிறாள் ஒரு மாது

ரமணிசந்திரன்

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை : சென்னை – 600 014.

## நூல் விவரப் பட்டியல்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : மயங்குகிறாள் ஒரு மாது |
| ஆசிரியர் | : ரமணிசந்திரன் |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : ஜூன், 1980 |
| 10ஆம் பதிப்பு | : ஜனவரி, 1998 |
| 11ஆம் பதிப்பு | : செப்டம்பர், 1999 |
| 12ஆம் பதிப்பு | : செப்டம்பர், 2001 |
| 13ஆம் பதிப்பு | : பிப்ரவரி, 2003 |
| 14ஆம் பதிப்பு | : ஜூன், 2004 |
| 15ஆம் பதிப்பு | : செப்டம்பர், 2005 |
| 16ஆம் பதிப்பு | : நவம்பர், 2006 |
| 17ஆம் பதிப்பு | : நவம்பர், 2007 |
| 18ஆம் பதிப்பு | : ஏப்ரல், 2009 |
| 19ஆம் பதிப்பு | : ஆகஸ்ட், 2010 |
| 20ஆம் பதிப்பு | : செப்டம்பர், 2011 |
| தாளின் தன்மை | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 X 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 232 |
| கட்டமைப்பு | : சாதா அட்டை |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ், சென்னை-14. |

# பாராட்டுரை

அன்பு மனம் கொண்ட என் அபிமான எழுத்தாளர் திருமதி. ரமணிச்சந்திரன் அவர்கட்கு, அன்பு வணக்கங்களும் கோடி முத்தங்களும் உரித்தாகட்டும் என இறைவனிடம் பிரார்த்திக்கிறேன்.

உங்கள் அன்பையும் அபிமானத்தையும் வென்ற ரசிகைகளில் நானும் ஒருத்தி. இந்தச் சிறிய இலங்கை நாட்டில் பல்லாயிரக் கணக்கான வாசகிகளில் நானும் ஒருத்தி என்பதை நினைக்கும் போது எவ்வளவு சந்தோஷமாக இருக்குது தெரியுமா? உங்களது நாவல்களில் 30 போல் படித்திருக்கிறேன். இதுவரை நீங்கள் எத்தனை நாவல்கள் எழுதியிருக்கிறீர்கள்? உங்களுடைய நாவல்கள் எத்தனை அற்புதமானது! உங்கள் கதைகள் வாசிப்பதென்றால் எவ்வளவு சுவை தெரியுமா? ஒவ்வொரு கதையிலும் அறுசுவையும உள்ளடங்கிய தாகவுள்ளது.

நான் உங்கள் கதைகளில் முதன் முதல் வாசித்தது "தீபஒளி." உண்மையிலேயே இந்த "தீபஒளி"யில் பிரகாசம் உண்டு. வாசிக்கும் போது விறுவிறுப்பாக இருந்திச்சு. எத்தனை முறை வாசிச்சிருப்பேனோ தெரியாது. அப்படி "தீப ஒளி" என்னைக் கவர்ந்துள்ளது. 'ஜோடிப் புறாக்கள்', 'வளை ஓசை', 'விடியலைத் தேடி', 'லாவண்யா' இவையெல்லாம் என்னால் பலமுறை திருப்பித் திருப்பிப் படிக்கப்பட்டவை. எத்தனை முறை திரும்ப வாசித்தாலும் சலித்துப் போவதில்லை. என்ட உயிர் உள்ளவரை

உங்களுடைய நாவல்களைப் பாதுகாப்பேன். என்னுடைய பொழுதுபோக்கு உங்களுடைய நாவல்களை வாசிப்பது மட்டுமே.

எப்படித்தான் இப்படியெல்லாம் எழுதுகிறீர்கள் என்று ஒரே வியப்பு. இந்தியாவுக்கு வர முடிந்தால் உங்களைச் சந்திக்க முடியுமா? சந்தித்து கோடிக் கணக்கான நன்றிகள் சொல்ல வேண்டும். உங்களுடைய பேனாவுக்கும் கைக்கும் கோடி முத்தம் கொடுக்க வேண்டும். ப்ளீஸ் கட்டாயம் பதில் போடுங்கள். உங்களுடைய பதிலையாவது எழுதி என் ஆசையை நிறைவேற்றுங்கள் என பணிவுடன் வேண்டுகிறேன்

அன்பு வாசகி

**இர்பான் அப்தீன்**



# மயங்குகிறாள் ஒரு மாது

## 1

“அட போடா, நாற்பத்திரண்டு.” கற்றைக்கூந்தலை அலட்சியமாகச் சிலுப்பினாள் மாயா.

“நீ போடி முப்பத்தாறு,” என்றான் பாபு பதிலுக்கு.

“நாற்பத்திரண்டு.”

“முப்பத்தாறு.”

“லொள் லொள் நாற்பத்திரண்டு.”

“உதைப்பேண்டி ராஸ்கல்.”

“அப்போ முப்பத்தாறும் நீயேதான்.” ஹோ ஹோ என்று கைதட்டிச் சிரித்தாள் மாயா.

பதில் சொல்லத் தெரியாமல் கையை ஓங்கிக்கொண்டு கிளம்பினான் பாபு. ஆனால் மாயா அதற்குள் வேகமாக ஓடிப்போய்த் தந்தையின் பின்னே நின்று கொண்டு, “பாபு என்னை அடிக்க வரான்பா!” என்று முதல் புகார் கொடுத்து விட்டாள்.

கணவரிடம் காபியைக் கொடுத்துக் கொண்டிருந்த ரேணுகா ஆத்திரத்துடன் திரும்பினாள். “அவள் உனக்கும் பெரியவள்;

அவளிடம் கை நீட்டாதே என்று சொல்லியிருக்கி றேனில்லையா? மீண்டும் என்ன இது?" என்று மகனை அதட்டினாள்.

"ஆமாம், குறை சொல்ல மட்டும் முதலில் ஓடிவந்து விடுவாள். இவள் என்னை நாற்பத்திரண்டு என்று வையலாமோ?" என்று செயலற்ற கோபத்தில் பொருமினான் மகன்.

தந்தையின் பின் இருக்கும் தைரியத்தில், "ஆகாகா! நீ மட்டும் என்னை முப்பத்தாறு என்று திட்டவில்லையோ?" என்று சீண்டினாள் மாயா.

"அப்படித்தாண்டி சொல்வேன்."

"நானும் அப்படித்தாண்டா சொல்வேன்."

"நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்!" என்று கையமர்த்தினார் சுந்தரம். "அதென்ன நாற்பத்திரண்டு என்று வைவதும் முப்பத்தாறு என்று திட்டுவதும்? எனக்குத் தெரிந்த மட்டில் இரண்டும் இரு நம்பர்கள்தான்," என்ற விசாரணையில் இறங்கினார்.

"ஐயோப்பா. உங்களுக்கு ஒன்றும் தெரியாதா? நாய்க்கு எத்தனை பல் தெரியுமா? நாற்பத்திரண்டு. கழுதைக்கு முப்பத்தாறு. கழுதை நாய் என்றெல்லாம் திட்டக்கூடாது என்று அருமை மம்மி ஆர்டர் போட்டுவிட்ட காரணத்தினாலேதான் இப்படி நம்பர் வரிசையில் இறங்கினோமாக்கும்," என்று சிரித்தாள் மாயா.

"எப்படியோ திட்டியாக வேண்டும்; சண்டை போட்டாக வேண்டும். அவ்வளவுதானே. இந்த இரண்டு இருந்தால் வீடு வெறும் சந்தைக் கடைதான். அடுத்தாற்போல ப்ரீயைப் பாருங்கள். இருக்கும் இடமே ஆளைப் பார்த்துத்தான் கண்டு கொள்ள வேண்டும். இதுகளும் இருக்கிறதே!" என்று கண்டித்தாள் அன்னை ரேணுகா.

அக்காவும் தம்பியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். நமட்டுச் சிரிப்புடன், "அவள்தான் ஏதோ புத்தகத்தில் படித்து இதைச் சொல்லித் தந்ததே!" என்று கோரஸ் பாடினர்.

ரேணுகா தலையில் அடித்துக் கொள்ள, சுந்தரம் சிரித்தார். பிறகு விசாரித்தார். "ஆமாம், பிசாசிற்கு எத்தனை பல்லாம்?"

"டீ ப்ரீ! பிசாசிற்கு எத்தனை பல்டீ?" என்ற கத்தினாள் மாயா.

"இப்படிக் கத்தாதே!" என்று ரேணுகா அதட்டிக் கொண்டிருக்கும்போதே கடைக்குட்டி ப்ரீயா ஓசையின்றி வந்து சேர்ந்தாள்.

உதடுகளில் மெல்லிய முறுவலுடன், "பிசாசிற்குப் பல்லே கிடையாது," என்றாள் மென்குரலில்.

"பொய், பொய், சினிமாவில் பல் ஸெட் மாதிரி வைத்துக் கொண்டு வருமே. மனிதன் ப்ல்தான் கணக்கு அப்பா," என்றான் பாபு.

"அதெப்படிடா?" என்று ஆட்சேபித்தாள் மூத்தவள். "ப்ரீ சொல்லுவதுதான் சரி. செத்தால் சதையெல்லாம் 'டீ கம்போஸ்' ஆகிவிடும். ஈறும் போய் விடும். ஈறு போன பின் பல் அந்தரத்திலா தொங்கும்? சரியான மக்கு போல உளறுகிறாயே!" என்று தம்பியை மட்டம் தட்டினாள்.

"நீ பெரிய புத்திசாலி, முப்பத்தாறு," என்று சீறினான் அவன்.

பிள்ளைகளின் சண்டையை ரசித்தபடியே, "ஆமாம், எதற்குச் சண்டை தொடங்கியது?" என்று கேட்டார் சுந்தரம்.

"அதுவா டாடி...?" என்று தொடங்கிய பெண் நிறுத்தி, "நீதான் உன் இஷ்டம்போல சொல்லேன். நான் போகிறேன்," என்று திரும்பிச் சென்றாள். கதவருகில் சென்றதும் திரும்பி, "குளிக்கும் அறைக்கு!" என்று தளிர் நாக்கை உதட்டோரம் கொண்டு வந்து அழகு காட்டிச் சிரித்துக்கொண்டே ஓடினாள். பாத்ரூம் கதவு சாத்தும் சத்தம் தொடர்ந்தது.

முகத்தில் அசடு வழிய, "முதலில் யார் குளிப்பது என்பதில் தான் சண்டை," என்றான் பாபு.

பிள்ளை முகம் போன போக்கைப் பார்த்த அன்னை தந்தை இருவருமே அடக்கமாட்டாமல் நகைத்தனர்.

பத்தே நிமிடங்களில் 'பிங்க்' கலர் பெல்ஸும் அதே கலரில் பிரிண்டட் டீபைடு ஷர்ட்டுமாக வந்தாள் மாயா.

தம்பியிடம் சென்று, "டேய் தம்பிப் பையா! படு சீக்கிரம் வந்து விட்டேன் பாத்தியா? ஒரு சின்ன ஹெல்ப்டா கண்ணா. சாயங்காலம் வரும் போது லாண்டரியிலிருந்து, என் 'ப்ளு' பெல்ஸ் ஸெட்டை வாங்கி வந்து விடுகிறாயாம்மா? பிளீஸ்மா..." கெஞ்சுதலாகக் கெஞ்சினாள்.

"அதெல்லாம் முடியாது போடி. இதற்கு மட்டுமே நான் வேண்டுமோ!" என்று விரைப்பாகத் தொடங்கிய பாபு தமக்கையின் கெஞ்சும் பார்வையில் இளகி, "சரிசரி, வாங்கி வந்து தொலைக்கிறேன்," என்று முடித்தான்.

"என் தங்கக் கட்டித் தம்பி!" என்றாள் மாயா பெருமையாக.

சற்று முகம் சிவந்தவனாகி, "சொல்லாதே, சொல்லாதே. பிறகு ஒரு நெக்லஸ் செய்ய வேண்டும். இரண்டு விரலைத் தருகிறாயா என்பாய். நம்மால் கட்டுப்படியாகாது!" என்று ஜோக்கடித்துச் சமாளித்துவிட்டுப் போனான் பாபு.

"என்னதான் பெல்ஸோ, மண்ணாங்கட்டியோ, ஒரு சேலையைக் கட்டிக் கொண்டால் அழகாய் இராதா?" என்று தொடங்கினாள் ரேணுகா.

"ஆகா! நாலடிக்கு ஒரு புதையல் எடுக்கலாமே! தொபுகடீர் தொபுகடீர், சீக்கிரமே கோடீஸ்வரர்தான், அப்பா!" என்று சிரித்த மகளுடன் இணைந்து நகைத்தார் சுந்தரம்.

ரேணுகா கணவரிடம் பாய்ந்தாள். "ஆமா, நீங்கள் அதற்கும் சிரியுங்கள். அவளுக்கு ஒரேயடியாகத் தலைக்கு ஏறுகிறது."

"அம்மா! அம்மா!" என்று துள்ளித் துடித்துத் தாயிடம் ஓடி வந்தாள் மாயா. "பல்லியா? கரப்பா? எது அம்மா தலைக்கு ஏறுகிறது? சீக்கிரம் தட்டி விடுங்கம்மா," என்று கண்ணால் சிரித்தாள்.

புன்னகையை மறைக்க முயன்றபடி, "போடி குரங்கு!" என்று உள்பக்கம் நகர்ந்தாள் தாயார்.

ஓடிவந்து தந்தையின் காலடியில் அமர்ந்து கொண்டு, "டாடி! நான் நல்ல பெண்தானே?" என்றாள் மாயா கொஞ்சுதலாக.

"ஆமாடா, கண்ணா," என்று தந்தை ஒப்புதல் வழங்க முகம் மலர்ந்தாள்.

மாயாவும் ப்ரியாவும் கிளம்பிக் கொண்டிருந்தனர். மாயா கல்லூரிக்கு; அடுத்தவள் பள்ளி இறுதி ஆண்டு.

லேசாகப் பவுடரை ஒற்றிவிட்டுத் திரும்பிய தங்கையை ஆசையாகப் பார்த்தாள் மூத்தவள். "அரைத்த சந்தனம் போல என்ன அழகு நிறமடி உனக்கு. என்னைப் பார். உன் பக்கத்தில் எவ்வளவு மட்டமாய்த் தெரிகிறேன். பொறாமைகூட வரும்போல் இருக்கிறது," என்று உதட்டைக் குவித்தாள்.

"ஊகூம். அதெல்லாம் இல்லைக்கா... என் கிளாஸ் மேட்ஸ் எல்லோரும், 'உன் அக்கா எவ்வளவு அழகு!' என்றுதான் சொல்கிறார்கள். நீ சிரிக்கும்போது பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் இருக்குது. உன் கண், பல், உதடு எல்லாம் எப்படிக்கா இவ்வளவு அழகாக அமைந்தன? உன் கண்ணில் எப்போதும் இந்தச் சிரிப்பும் ஒளியும் எப்படி நிற்கிறது?"

கிளுகிளுத்துச் சிரித்தாள் மாயா, "என்ன என்ன பாட்டு மாதிரி 'எப்படி எப்படி பாடுகிறாயே!' ஆமாம், இவ்வளவு நேரம் சேர்ந்து பேசி விட்டாயே. மழை வந்து விட்டால் என் சினிமா ப்ரோகிராம் என்ன ஆவது?" என்று கண் சிமிட்டினாள்.

முறுவலித்துவிட்டு, "நான் சொன்னதெல்லாம் மெய்தான் அக்கா! பாடி ஷேப் கூடப்பார். இடுப்பு எப்படி சின்னதாக

அழகாக இருக்கிறது. கூடவே என் இடுப்பைப் பார்." என்றாள் குறையோடு.

தங்கையின் முகம் வாடப் பொறுக்காமல், "அதெல்லாம் பப்பிஃபேட்டுடி. இன்னும் ஒரு வருஷத்தில் ஓடிப் போய் விடும்." என்று தேற்றினாள் மாயா. "சரி சரி,வா, நேரமாகிறது. இந்தப் பையை வேறு ஆன்ட்டியிடம் கொடுக்க வேண்டும். சீக்கிரம்!" என்று கிளம்பினாள்.

மூன்றாம் வீட்டில் தன் தோழி பிரேமியின் தாயாரிடம் பையை நீட்டினாள். "ஸிப். தைத்து விட்டேன் ஆன்ட்டி."

" ரொம்ப தாங்க்ஸ்மா. நானும் இந்தப் பிரேமியிடம் தலை தலையாய் முட்டிக் கொண்டேன். கடைசியாக நீதானம்மா முடித்திருக்கிறாய்," என்று வாய் நிறையப் புன்னகையும் வாஞ்சையுமாக வந்தாள் அந்த அம்மாள். "அடே, ப்ரீகூட வந்திருக்கிறாளா? பூனைக் குட்டி மாதிரி சத்தமே கிடையாது. நீயும் உள்ளே வாம்மா," என்றாள் அன்பாக.

"அப்போ நான் யார் ஆன்ட்டீ? வெண்கலகக் கடை யானையா?" என்று நகைத்தாள் மாயா.

"சேச்சே. அவள் பூனைக் குட்டியானால் நீ மான் குட்டி!" என்று அவள் செல்லமாகப் பதில் கூறிக்கொண்டு இருக்கும்போதே பிரேமியும் வந்து சேர்ந்தாள்.

"மான், பூனை என்று உலகத்தில் உள்ள மிருக ஜாதியெல்லாம் அடுக்குங்கள். இவ்வளவு வளர்ச்சி பெற்ற மனிதர் ஆன பிறகும் பழைய பிறவிகளோடு ஒப்பிட்டு நம்மை நாமே மட்டம் தட்டுவதா? மனிதர்கள் தம்மை விட மேலாக..."

"போச்சே! போச்சே!" என்று தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்தாள் மாயா. "மாமியார் சொற்பொழிவாற்றத் தொடங்கி விட்டாள். இனி எந்தப் பிறவியில் கல்லூரி போவது? கந்தர்வப் பிறவியிலா? அல்லது தேவ நிலையிலா?" என்று கண்ணால் சிரிப்பு சிரித்தாள்.

"சாவகாசமாய் உட்கார்ந்து கொண்டு அளப்பதைப் பாரேன். வாடி போகலாம்," என்று பிரேமி முடுக்க ஒரு வழியாக எல்லாரும் கிளம்பிப் போனார்கள்.

காலையில் வீட்டைவிட்டுக் கிளம்புவது மட்டும்தான் ஒன்றாகச் செல்வது. மாயா கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள். ப்ரியா பள்ளி இறுதி வகுப்பில் இருந்தாள். பிரேமா அங்கங்கே தங்கி வந்தவள். எனவே மாயாவைவிடப் பெரியவள் என்றாலும் ப்ரியாவுடன்தான் செல்வாள். ப்ளஸ்டூ.

பாபு ப்ளஸ் டூவில் இரண்டாம் ஆண்டு மாணவன். எல்லாருமே அவரவர் பாட நேரம் முடிவதைப் பொறுத்துத் திரும்பி வருவார்கள்.

அன்று மாலை மாயா வருகையில் தெருமுனை வீட்டு ரகுவும் அதே பஸ்ஸில் வந்தான்.

ரகு, மாயா, பிரேமி மூவரின் தந்தையரும் நெடுநாள் நண்பர்கள். மத்திய தர வகுப்பினர். அந்த எக்ஸ்டென்ஷனில் சொஸைட்டி மெம்பராகி வீடு கட்டிக்கொண்டு இருபது ஆண்டுக் கடனையும் கிட்டத்தட்ட அடைத்து முடித்துக் கொண்டிருந் தார்கள், பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகக் குடும்ப முழுமையுமாக நெருங்கிப் பழகிக் கொண்டு இருப்பவர்கள்.

ரகுவைக் கண்டதும் உற்சாக முறுவலுடன் அன்று பார்க்க இருக்கும் சினிமாவைப் பற்றிப் பேசத் தொடங்கினாள் மாயா. "நீ பார்த்து விட்டாயாமே ரகு, எப்படி இருக்கிறது? தனித்தனியா ஆக்ஷன், டைரக்ஷன் என்று பிய்த்து வைக்காதே. மொத்தத்தில் படம் எப்படி?"

"உனக்குப் பிடிக்கும். ஏனென்றால் உன்போல் ஒன்று கூட அதில் வருகிறது," என்று சிரித்தான் ரகு. பிறகு, "குரங்குக்கு எத்தனை பல் மாயா?" என்று அப்பாவி போல் விசாரித்தான்.

சற்றுத் திகைக்கையிலேயே மாயாவுக்குப் புரிந்து போயிற்று. தம்பிப் பிள்ளையாண்டான் தன் ஹீரோவிடம் எல்லாவற்றையும்

சொல்லிவிட்டிருக்கிறான். பதில் தோன்றாமல் ஒரு கணம் தயங்கினாள். மறுவிநாடியே, "அதை ஏன் கேட்கிறாயாம்? வீட்டிற்குப் போனதும் கண்ணாடியைப் பார்த்து எண்ணிக் கொள்ளேன்," என்றாள் கண்ணில் குறும்புடன். பிறகு அடக்க மாட்டாமல் சிரிக்கவும் தொடங்கிவிட்டாள்.

"என்னையா குரங்கு என்கிறாய்? இரு இரு உன்னை ..." என்று முறுவலுடன் அவள் காதைப் பிடித்து லேசாகத் திருகினான் ரகு.

"ஊகூம்... விடு ரகு," என்று சட்டென மாயா விலகு முன் ரகுவின் பார்வை மாறியது. "மாயூ!" என்று ஒருகையால் அவள் தோளைப் பற்றி மறு கரத்தால் பட்டான கன்னத்தில் மெல்ல வருடினான்.

கண்ணில் மருட்சியுடன் அவனைப் பார்த்தாள் மாயா. அவன் பார்வையில் ஏதோ புரிந்தும் புரியாமலுமாக அவளைச் சிவக்கடித்தது. "என்னைத் தொடக்கூடாது!" என்ற வார்த்தைகள் வழக்கம் போல அழுத்தம் திருத்தமாக விழாமல் முணுமுணுப்பில் கரைந்தன. குழப்பத்துடன் அவனைப் பார்த்துவிட்டு வீடு நோக்கி ஓட்டம் பிடித்தாள்.

மாலையில் சுந்தரம் வந்ததும் வழக்கம் போல வீடு கலகலத்தது. அரட்டையின் நடுவே அவர், "இன்று அதாவது நேற்றிரவு..." என்று தொடங்கினார்.

அதற்குள்ளாக, "இன்று எப்படியப்பா நேற்றாகும்?" என்று கிளுக்கிச் சிரித்தாள் மாயா.

மற்ற இருவரும் தொடர்ந்தனர்.

முதலில் மாயாவே சிரிப்பை நிறுத்தி, "அப்பா எப்படித் தப்பாகச் சொல்வார்? சும்மா சிரிக்கிறீர்களே. யோசித்துப் பார்த்தால்...ம்! கரெக்ட். இன்றுதானே நாளைக்கு நேற்றாகும். அதனாலேதான் அப்பா இப்படியாக விளக்கியிருக்கிறார். ஆகா. என்ன பிரில்லியன்ட் ஐடியாப்பா!" என்று மெச்சுவது போல் பாவனை செய்து மீண்டும் சிரித்தாள்.

முறுவலை மறைத்துக் கொண்டு, "வாயை மூடுங்கள் வால்களா. நேற்றிரவு தன் வீட்டில் நடந்ததை இன்று ஒருவர் சொன்னார். அதைத்தான் தொடங்கினேன். ரேணு! ஜானகிராமன் வீட்டில் நேற்றிரவு திருட்டுப் போய் விட்டதாம்," என்றார் சுந்தரம்.

"அடடா! நிறையப் போய்விட்டதாமா? பாவம்!" என்று பரிதாபப்பட்டாள் ரேணுகா.

இழப்பை உணராத கன்றுகள் கேலியிலேயே இருந்தன.

தாயைத் தொடர்ந்து. "அய்யோ, பாவம்!" என்று சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு பாவனை செய்தாள் மூத்த மகள்.

"அய்யய்யோ, பாவம்! பாவம்!" என்று தொடர்ந்தான் பாபு.

சின்னதாய்ச் சிரித்தாள் ப்ரியா.

"உஷ். இதில் கூடக் கேலியா, மாயா?" என்று ரேணுகா மகளை அதட்டினாள். கணவரிடம் திரும்பி, "நிஜமாகவே பாவம்தான். நிரம்பவும் பக்திமான் ஆயிற்றே அவர். அவர் வீட்டில் பூஜையறைச் சாமான்கள் எல்லாம் வெள்ளிதானே. போன வருடக் கொலுவின் போது பார்த்த நினைவு இருக்கிறது. பெரிய குத்து விளக்குகள் இரண்டு. அதெல்லாம் கூடவா போய்விட்டன?.... சே, பாவம்! வெள்ளி விற்கிற விலையில் திரும்பவும் வாங்க முடியுமா என்ன?" என்றாள் இரக்கத்துடன்.

"கடவுள் வெள்ளிதான் வேண்டும் என்று கேட்டாரா?" என்றாள் மாயா ரோஷத்துடன். தாயார் அதட்டியது அவளுக்குப் பொறுக்கவில்லை.

"வெள்ளி என்றால் தீட்டு கீட்டு கிடையாதுடி."

"அதெல்லாம் இல்லை. ராமகிருஷ்ணர் சொன்னதாக நான் படித்திருக்கிறேன். தங்கமும் வைரமும் சாதாரண ஜனங்களுக்குத்தான் பெரிது. கடவுளைப் பொறுத்தவரையில் மனப்பூர்வமான பக்தி மட்டும் போதுமானது என்றாராம். வெறும் மண் அகலும் பூவும் பூஜை பண்ணப் போதும் என்று அவரிடம் சொல்லுங்கள் அப்பா," என்றாள் மாயா வேகம் குறையாமலே.

"உதைக்க வருவான்!" என்றார் தந்தை. "பூஜையறை வெள்ளிச் சாமான் தவிர மற்றது எல்லாமே போயிருந்தால் கூட அவன் இப்படி வருத்தப்பட்டிருக்க மாட்டான். இங்கிருந்த பூசையறைச் சாமானில் கைவைத்து விட்டானே என்றுதான் சொல்லிச் சொல்லி மருகுகிறான். பார்க்கப் பரிதாபமாக இருந்தது."

"திருட்டுப் பயலுக்குப் பூசைச் சாமானும் புளி கரைக்கும் பாத்திரமும் ஒன்றுதான். நக்குகிற நாய்க்குச் செக்கு என்று தெரியுமா? சிவலிங்கம் என்று தெரியுமா?"என்றாள் ரேணுகா.

"கிரேட்!" ஸ்பூனைப் போட்டுவிட்டுக் கைதட்டினாள் மாயா. அம்மா அடிக்கடி பழமொழி சொல்வது வழக்கம்தான் என்றாலும் இந்தப் பழமொழி புதுமையாய் அவள் மனதில் பதிந்தது. கண்கள் வியப்பால் விரிய, "எப்படியம்மா அப்பப்ப கரக்ட் பழமொழியாக உங்களுக்கு உதிர்க்க வருகிறது?" என்று தாயின் தோளைக் கட்டிக் கொண்டு கொஞ்சினாள்.

நெளிந்தாள் ரேணுகா. மகளை விலக்கி, " சீ விடுடி. இப்படித் தொட்டுப் பழகாதே என்று எத்தனை முறை சொல்வது? ஒழுங்காய் தாவணி, சேலை என்று கட்டினால் இந்த ஆண் பிள்ளைத்தனம் வராது," என்றாள்.

"ஆண் பிள்ளைத்தனமா? கட்டிப் பிடிப்பது ஆண் பிள்ளைத்தனமா அம்மா? அப்படியானால் அப்பா......" என்று மூக்கைச் சுருக்கிக் கண் சிமிட்டி மகள் சிரிக்கவும் ரேணுகாவின் முகம் சிவந்தது.

மனைவியின் முகச் சிவப்பை ரசித்த சுந்தரம் ஒரு வழியாக அவள் உதவிக்கு வந்தார். "என்னமோ சினிமாவுக்குப் போவதாகச் சொன்னாயே மாயூ. பாபு கூட உன் டிரஸ்ஸை லாண்டிரியிலிருந்து வாங்கி வந்திருக்கிறான்..."

"ஓ. மறந்தே போனேன்பா, ரொம்ப தாங்ஸ்டா தம்பிப் பயலே!" என்று உடைமாற்ற உள்ளே ஓடினாள் மாயா. "அப்பா,

தியேட்டருக்கு ஒன்பதே காலுக்கெல்லாம் வந்து விடுங்கள். மறந்துவிடக் கூடாது..." என்று குரல் மட்டும் கேட்டது.

இடை வேளையின் போது மாயா அன்டு பார்ட்டி ஆளுக்கு ஒரு பாப்கார்ன் பாக்கெட்டை வாங்கிக் கொறித்தபடியே அதுவரையில் திரையில் ஓடிய கதையை விமரிசனம் செய்தது.

பேச்சினூடே திரும்பிய மாயாவின் கண்களில் இரண்டு அங்குல முதுகுப் பட்டியோடு கூடிய 'ரவிக்'கும் "லோஹிப்' சேலையும் அணிந்த ஒரு பெண்ணின் வளமான இடுப்பு தென்பட்டது.

இடையோடு சேர்ந்து அதை வருடிக் கொண்டிருந்த ஓர் ஆண் கரமும் அவள் பார்வையில் படவே முகத்தில் சிவப்பு ஏறியது. சீ, பொது இடத்தில் கூடவா என்ற ஆத்திரத்துடன் நிமிர்ந்து பார்த்தாள்.

அவன் நல்ல உயரம். உதடுகளில் ஒரு மாதிரிச் சிரிப்புடன் அவன் பார்வை அந்த ஃபாயரில் உள்ள ஒவ்வொரு பெண்ணிடமும் படிந்து அகன்று கொண்டிருந்தது.

தன் பார்வையில் விழுந்த ஒவ்வொருத்தியையும் அவன் ஏதேதோ நிலையில் கற்பனை செய்வது அவன் முகத்திலேயே தெரிந்தது. அந்தப் பெண் குலமகளா அல்லவா என்று அவன் எண்ணிப் பார்த்ததாகவே தெரியவில்லை.

"நக்குகிற நாய்க்கு..." அம்மாவின் பொன்மொழி அந்தக் கணத்தில் அவள் காதுகளில் துல்லியமாக எதிரொலித்துக் கொண்டிருந்தது.

## 2

‘தடி ராஸ்கல். இவனை எல்லாம் நடுத்தெருவில் வைத்துச் சுட வேண்டும்!’ என்று அவள் தன் மனதுள் புகைந்து கொண்டு இருக்கும் போதே அவன் பார்வை தன்மீதும் மோதுவதை மாயா உணர்ந்தாள்.

சேலை கட்டவில்லையே என்று முதல் தடவையாக நினைத்து வருந்தினாள். இழுத்து மூடவும் வழியில்லையே என்று ஏக்கம் பிறந்தது.

இந்தக் குர்த்தாவையும் மனதால் அகற்றி அவன் ரசிப்பதை அந்தப் பார்வையில் அறிந்தபோது அவள் உடம்பு குன்றிப் போயிற்று.

கூட நின்றவள் உடம்பில் அவன் கை அழுந்திப் படிந்த விதத்தில் அவளுக்குக் குமட்டல் எடுத்தது.

பொங்கும் சினத்துடன் அவனைப் பார்வையிலேயே வெட்டிவிட்டு அவனுக்கு முதுகு காட்டுமாறு திரும்பி நின்று கொண்டாள்.

அவன் மீது மட்டுமல்லாமல், அவன்கூட வந்தவளை நினைத்தும் அவளுக்குக் கோபம் பொங்கியது. இந்த மாதிரி முப்பத்தாறுகள்தான் செக்குக்கும் சிவலிங்கத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் செய்து விடுகின்றன.

முதுகிலும் எதுவோ துளைப்பது போல உணர்வு தோன்றவும் அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. செய்கையற்ற சினத்தில் துடித்தவளாய், “வாங்கடி உள்ளே போகலாம்,” என்று இரு தோழிகளையும் இழுத்துக்கொண்டு சென்றாள்.

பார்த்துவிட்டு வந்த படத்தைப் பற்றி வளவளத்தபடியே இரவு உணவை முடித்தாள் மாயா.

கொட்டாவி விட்டபடியே, "பாலாடை எடுத்து வைத்தீர்களாம்மா?" என்று கேட்டு அதை வாங்கி முகத்தில் பூசிக் கொண்டாள்.

முகத்தில் எண்ணெய் வழியத் தாயிடம் வந்து, "இப்போ கொஞ்சம் வெள்ளையாகி விட்டேனாம்மா?" என்று மகள் கேட்டபோது ரேணுகாவுக்குச் சிரிப்பு வந்தது.

"ஆமாமாம். இரண்டு நாள் பாலாடை போட்டுக் கொண்டால் வெள்ளையாகி விடுவார்களாக்கும்? ஒரு நாள் எறும்பு கடித்து வைக்கப் போகிறது பார்," என்று மேலும் நகைத்தாள்.

"வெள்ளையாகணும்னு ஆசையா இருக்கம்மா!" அன்னையிடம் கொஞ்சியபடியே கட்டிலில் விழுந்தாள் மாயா.

போர்வையை இழுத்துக் கழுத்துவரை மூடிவிட்டு மகள் முகத்தையே சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்றாள் தாயார். ப்ரியா போல இவள் எலுமிச்சம்பழ நிறம் இல்லைதான். ஆனாலும் அந்த மூக்கும் உதடும் கண்ணும்! கடவுளே! என் கண்மணிக்கு என் கண்ணே பட்டுவிடக் கூடாது.

படுக்கை அறைக்குள் ரேணுகா சென்றபோது, குறுஞ் சிரிப்புடன் மனைவியை எதிர்கொண்டார் சுந்தரம். "இன்று மாயாவிடம் நன்றாக மாட்டினாயே!" என்ற அவர் உல்லாசமாகச் சிரித்தபோது ரேணுகாவின் முகம் சிவந்து போயிற்று.

சமாளித்துக் கொண்டு பேச்சை மாற்றினாள். " இரண்டு பெண்களும் இரண்டு துருவங்கள். இவளுக்கு ஒரு நிமிஷம் வாய் சும்மா இருக்கிறதா பாருங்கள். எப்போதும் பேசத்தான் துடிப்பு. கொஞ்சமேனும் ப்ரியா போல இருக்கக்கூடாதா என்று இருக்கிறது. வருகிற மாப்பிள்ளை சாதுவாக இருந்தால் குடும்பம் பிழைக்கும். ஆனால் ப்ரீக் குட்டிக்கு கொஞ்சம் இவள் குணத்தில் பார்க்க வேண்டும்," என்று படுக்கையைத் தட்டி விரித்தாள்.

"நாலே மாதத்தில் இருவருக்கும் போர் தொடங்கி விடும்." என்று வந்தார் சுந்தரம். "ப்ரியாவுக்குப் பேச்சு வராது. அங்கே அழகில் மயங்கி நிற்கிற சாதுதான் சரி. இல்லையானால் அவனுக்கு அலுத்துவிடும். மாயாவுக்குச் சரிக்குச் சரியாகப் பேசுகிறவனாக அமைய வேண்டும். அப்போதுதான் இருவருக்கும் வாழ்வில் சுவை இருக்கும்." என்று படுக்கையில் அமர்ந்தார்.

"என்னவோ போங்கள். இந்த மாயாதான் தன் பேச்சால் எந்தக் கஷ்டத்திலும் மாட்டிக் கொள்வாளோ என்று பயமாக இருக்கிறது. நுணலும் தன் வாயால் கெடும் என்பார்களே. இவளுடைய அளவு மீறிய துறு துறுப்பு எங்கே கொண்டுவிட போகிறதோ!" என்று பெருமூச்செறிந்தாள் பெற்றவள்.

"அதெல்லாம் ஒரு கஷ்டமும் வராது அசடு போல் அலட்டாதே. ஆமாம். நீ என் தூரவே நிற்கிறாய்? இங்கே பிள்ளைகள் யாரும் இல்லையே!" என்று குறும்பாகச் சிரித்தவாறே கையை நீட்டி விளக்கை அணைத்தார் அவர்.

அன்னை செல்லவும், ஒருக்களித்துப் படுத்த மாயாவுக்கு ஏனோ ரகுவின் நினைவு வந்தது. அந்த நினைவோடு தூக்கமும் கலைந்து போயிற்று.

ஜாடைமாடையாக இருவரின் பெற்றோருமாக ரகுவுக்கும் தனக்கும் முடிச்சுப் போட்டுப் பேசுவதை மாயா அறிந்தே இருந்தாள். ஆயினும் இன்றுவரை அந்த நினைவில் அவள் மனம் குழம்பியதே கிடையாது. ஆனால் இன்று ரகுவின் பேச்சும் நடப்பும் ஏதேதோ எண்ணங்களைத் தூண்டிவிட்டன. அவன் குரங்கு என்றதை எண்ணிச் சிரிப்பு வந்தது. உதட்டில் முறுவல் நெளிய மெல்லப் புரண்டாள்.

"தூங்கலியா, அக்கா?" என்றது ப்ரியாவின் மென் குரல்.

சற்று திடுக்கிட்டுப் போய், "ஆமாடி," என்றாள் மாயா. சட்டென ஏதோ தோன்றவும் கண்ணை விரித்து-

"ப்ரீ, நீ ஏண்டியம்மா தூங்கலை?" என்று குறுகுறுப்புடன் விசாரித்தாள்.

"உன்னைப் பற்றிய விஷயம்." என்றாள் ப்ரியா வெகுளித்தனமாக.

"ம்ம்!!?"

ப்ரியாவின் குரல் மேலும் தாழ்ந்தது. "ஆமாக்கா! உனக்கும் நம் ரகு அண்ணா இருக்கிறாரே. அவருக்கும் கல்யாணம் செய்யணும்னு அம்மாவும் அப்பாவும் பேசினார்கள். அப்போதிருந்து அதே நினைவாக இருக்கிறது."

கண்ணின் சிரிப்பை இருளில் மறைத்து மாயா மிரட்டலாகப் பேசினாள். "ஓகோ! எனக்குத் தெரியாமல் என் கல்யாணம் பற்றிப் பேசுகிறார்களா? பார்க்கிறேன் ஒரு கை!" என்று சிரித்தாள்.

மறுநாள் காலையில் குளித்துவிட்டு வந்த மாயாவைக் கண்டு வியந்தார் சுந்தரம். "அடேடே! சேலை உனக்கு மிக நன்றாய் இருக்கிறதேம்மா!" என்று புகழ்ந்தார்.

"அடிப்பாவி, என் புதுச் சேலைடி. கசக்காமல் சீக்கிரம் அவிழ்த்து வை. இன்று லேடீஸ் கிளப்பிற்குக் கட்டிக் கொண்டு போக நினைத்திருந்தேன். ஒரு வார்த்தை கூடக் கேளாமல் இது என்ன வேலை!" என்று அதட்டினாள் ரேணுகா.

"எப்போ பார்த்தாலும் 'சேலை கட்டு! சேலை கட்டு!' என்று தொணதொணக்கிறார்கள். கட்டினால் அவிழ்த்து வைடி என்று அதட்டுகிறார்கள். பாருங்கப்பா இந்த அம்மாவை!" என்று சிணுங்கினாள் மாயா.

"ஓ. பார்த்து விட்டேன். எப்போதும் போல மிகவும் அழகாகத்தான் இருக்கிறாள் உன் அம்மா!" என்றார் தந்தை சிரிக்காமல்.

ஆனால் ஓகோ என்று விழுந்து விழுந்து சிரித்தாள் மாயா. சிரிப்பினூடே. "உங்கள் கண்ணுக்கு அப்படித்தானே அப்பா தெரியுமாம்!" என்று தந்தையைக் கிண்டல் செய்தாள்.

மெல்ல நடந்து உள்ளே சென்றவள் இரண்டே நிமிடங்களில் மீண்டும் பெல்ஸில் வந்தாள்.

"திரும்பவும் வேதாளம் முருங்கை மரம் ஏறியாயிற்றா?" என்று கேட்டபடி காபி கப்புடன் சோபாவில் அமர்ந்தாள் தாயார்.

"அது காலைத் தட்டி விடுகிறதும்மா. ஸ்பீடா நடக்கவே முடியவில்லை. சேலை எல்லாம் ப்ரீக்குத்தான் சரி," என்று தாயின் அருகில் தொப்பென விழுந்தாள் மகள். விழுந்த வேகத்தில் தாயின் மடியில் தலையையும் வைத்துக் கொண்டாள்.

"ஷ், மெல்லடி மெல்ல, காபி சிதறி விடும். எல்லாருக்கும் டேபிளில் டிபன் எல்லாம் எடுத்து வைத்து விட்டுத்தான் வந்தேன். அதைச் சாப்பிடாமல் இங்கே வந்து அழிச்சாட்டியம் பண்ணுகிறாயே!" என்று கவனத்துடன் காபி கப்பைக் கீழே வைத்தாள் தாயார்.

அவள் பேச்சைச் சட்டை செய்யாமல், தாயின் முகத்தையே பார்த்தபடி, "ஏம்மா நான் பிறக்கும் முன்னாலே, நீங்கள் குங்குமப்பூ சாப்பிடலை? என் ஃப்ரண்ட் ஹேமா இருக்கிறாளே, அவளோட அக்காவுக்கு பேபி பிறக்கப் போகிறதாம். அது சிவப்பாக இருக்க வேணும்னு தினமும் குங்குமப்பூ போட்டுப் பால் குடிக்கிறாளாம் அவளோட அக்கா. நீங்க ஏன் சாப்பிடலை?" என்று கேட்டாள்.

தான் சிவப்பு இல்லை என்று மகள் வருந்துகிறாளே என்று தாயின் மனம் சற்றுத் துடித்தது. மகள் கூந்தலை வருடியவாறே, "அப்போ இந்த வீடு கட்டுவதற்காக மிகவும் சிக்கனமாக இருந்தோம் மாயூ," என்றாள்.

பளிச்சிட்ட முறுவலுடன் தாயின் இடுப்பைக் கட்டிக் கொண்டாள் மாயா. "பரவாயில்லை. ஆனால் நல்ல வேளை, ப்ரீயோடேனும் சாப்பிட்டீர்களே. அம்மா! நேற்று ஒருத்தி மீன் மாதிரி கண்ணுக்கு மை போட்டுக் கொண்டு வந்தாள். முன்னே பார்த்தால் நன்றாயிருந்தது. ஸைடில் சகிக்கவில்லை!" என்று முகம் சுளித்தாள்.

ஸ்பிரிங் போல ஒரு துள்ளில் எழுந்து கொண்டாள். "அய்யோ, நேரமாச்சுமா. எல்லாம் உங்களால்தான். இப்படி

சோபாவில் ஓரமாக உட்கார்ந்தால் எனக்குப் படுக்கணும் போல் ஆசையாக வராதா? இப்போ தலை வேறு கலைந்திருக்கும், ச்சுச்சு!" என்று உள்ளே ஓடினாள்.

உணவு முடித்து உடை முகம் எல்லாம் சீர்செய்து கொண்டு மீண்டும் முன்னறைக்கு வந்தாள் மாயா. தனியாக பேப்பருடன் இருந்த தந்தையை அணுகி மெல்ல, "அப்பா!. நம்ம பாபு பேசுகிறதைக் கவனித்தீர்களா, நேற்றுத்தான் நானே கவனித்தேன் டாடி. என்னமோ தொண்டையை அடைத்தோ கடித்தோ இருப்பது போல கரகரவென்று இருந்தது..." என்றாள் கவலையுடன்.

"அதாம்மா..." என்று தொடங்கிய தந்தையை உதட்டின் மீது விரல் வைத்து அடக்கினாள் மகள். "ஷ்... மெல்லப்பா! அம்மாவுக்குத் தெரிந்தால் பயந்து விடுவார்கள். நீங்களாக அவனை ஒரு ஈ என் டி. ஸ்பெஷலிஸ்டிடம் கூட்டிப் போய்க் காட்டி விடுகிறீர்களா?" என்று ஆலோசனை கூறினாள்.

கன அக்கறையுடன் மகள் பேசக் கேட்கவும் சுந்தரத்துக்குச் சிரிப்பு வந்தது, "என்னடாம்மா. உன்னைப் போலவும் ப்ரீ போலவும் பாபு எத்தனை நாள் பேசுவது? அப்பா மாதிரி அவனுக்கு ஆண் குரல் வர வேண்டாமா?" என்றார்.

"நிஜமாகவே வேறு ஒன்றுமிராதே அப்பா?"

"நத்திங் பேபி, இப்போதே குரல் மாற அதிக நாள் ஆகி விட்டதே என்று நினைத்தேன்."

மாயாவின் முகம் மீண்டும் பிரகாசமாய் மலர்ந்தது, "அப்போ சரிதானப்பா. டீ ப்ரீ, ரெடியாடி? மா, எனக்கு இன்னொரு தோசை கூடுதலா வைக்கச் சொன்னேனே, வைத்தீர்களா? ஓ. சரி. வரேம்பா, வரேம்மா!"

வீட்டில் ஓசை அடங்கியது.

வழக்கம் போல் அன்று மாலையிலும் மாயாவின் குரல்தான் வீட்டில் ஓங்கி ஒலித்தது.

வீட்டுக்குத் திரும்பும் போது பஸ்ஸில் பார்த்த குழந்தை ஒன்றைப் பற்றி உற்சாகமாக அளந்து கொண்டு இருந்தாள். அதன் வட்ட விழிகளும், பொக்கை வாயும், சிரிப்பும், அவளிடம் தாவி வந்த அழகும்...

"சரிதான், பஸ் பிரயாணம் முழுவதும் ஓசியில் பிள்ளை சுமந்தாயாக்கும்?" என்று கிண்டல் செய்தாள் ரேணுகா.

"போங்கம்மா, தொடுவதற்கு ரோஜா இதழ் மாதிரி என்ன மிருதுவாக இருந்தது தெரியுமா? திரும்பவும் அதன் அம்மாவிடம் கொடுக்கவே எனக்கு மனம் வரவில்லை," என்று குறையோடு உதட்டைக் குவித்தாள் மாயா.

"ஹூம்..." என்று பெரிதாகப் பெருமூச்சு விட்டான் பாபு. "ஊரார் பிள்ளையைத் திருப்பிக் கொடுக்கவே உனக்கு மனம் வரவில்லை. அங்கானால் பெற்ற பிள்ளையைக் கொன்று குப்பைத் தொட்டியில் போட்டு விட்டாள் ஒருத்தி," என்றான் பாபு.

"ஏய்...பொய். இந்த மாதிரி கொடூரமாய் பொய் புளுகாதே," என்று கத்தினாள் மாயா.

"நிஜம்...நிஜம்...நிஜம்... நூற்றுக்கு நூறு நிஜம். பிறந்து இரண்டு நாள்கூட இராது. எங்கள் கல்லூரிப் பக்கம் குப்பைத் தொட்டியி லிருந்து எடுத்துப் போட்டிருந்தார்கள். அதற்குள், 'அனாதைப் பிணம், அடக்கம் செய்யக் காசு போடு!' என்று ஒருவன் பிஸினஸ் கூடத் தொடங்கிவிட்டான். ஆனால் போலீஸ் வந்து பெற்றவளைப் பிடித்து விட்டதாம்!" என்று விவரித்தான் தம்பி.

"பொய்...பொய்..." என்று பதறினாள் மாயா. "நீ சொல்வது எல்லாம் பொய்தான். ஒரு வார்த்தை கூட நான் நம்பவே மாட்டேன். நீ சொல்கிற மாதிரி யாரும் இரக்கம் இல்லாமல் இருக்கவே மாட்டார்கள். நிச்சயமாய் மாட்டார்கள்," என்று பிடிவாதமாக மறுத்த போதும் மாயாவின் முகம் வாடிவிட்டது.

"சும்மா பேச்சுக்குத்தான் நம்ப மாட்டேன் என்கிறாய். ஆனால் உள்ளுக்குள் நம்பத்தான் செய்கிறாய்," என்று கெக்கலி கொட்டினான் பாபு.

கூடவே தமக்கை பதில் சொல்லாததைக் கண்டு சற்று இறங்கிய குரலில், "சத்தியமாய்டி!" என்றான்.

ஆத்திரத்துடன் அவனை முறைத்துப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் மாயா.

ஆனால் சுந்தரம் வந்ததுமே படபடவென்று பொரிந்து கொட்டிவிட்டாள். "அப்பா! இந்த பாபு ரொம்ப மோசம்பா... வந்து... கொடூரமான பொய்யெல்லாம் இட்டுக் கட்டுகிறான். பஸ்ஸில் ஓர் அழகான பேபி பார்த்தானாம்பா. அந்தக் குழந்தையை எப்படிக் கொல்லமுடியும்? பச்சைக் குழந்தையைக் கொன்று குப்பைத் தொட்டியில் அதன் அம்மாவே போட்டு விட்டாளாம், சொல்கிறான். கூடவே இதற்கெல்லாம் சத்தியம் வேறு செய்கிறான்," என்று பொருமினாள்.

மகளின் முகம் கலங்கி விட்டிருப்பதைக் கண்டு அவள் அருகில் சென்றார் சுந்தரம். "என்னடா அம்மா, நீ சொல்வது தலைகால் ஒன்றுமே புரியவில்லையே. பாபு இன்று உன்னிடம் என்ன வழக்குக்கு வந்தான்?" என்று கனிவான குரலில் விசாரித்தார்.

"நான் சொன்னதெல்லாம் மெய்தான் அப்பா," என்று அவசரமாகக் குறுக்கிட்டுச் சொன்னான் பாபு.

"டேய், பொறுடா. பாப்பாவே சொல்லட்டும்," என்று மகனை அடக்கினார் அவர், "நீ சொல்லுடா கண்ணு."

சலுகையுடன் தகப்பனாரின் தோளின் மேல் சாய்ந்து கொண்டாள் மாயா. "டாடி, இன்று வீடு திரும்பும்போது நான் பஸ்ஸில் ஒரு பேபியைப் பார்த்தேன். ரொம்ப... அழகு."

'உன் மாதிரியா?" என்றார் சுந்தரம் சிறுநகையுடன்.

"ஊஹூம். என்னைப்போல இல்லையப்பா, ம்... நம்ம ப்ரீமாதிரி மிருதுவாக அழகாக... அதை நான் பாட்டில் சொல்லிக் கொண்டு இருந்தேனப்பா. அப்போது இவன்..." என்று தம்பியை ஒரு தரம் முறைத்து விட்டுத் தொடர்ந்து, "யாரோ ஒரு தாய்

தன்னுடைய இரண்டு நாள் குழந்தையைக் கொன்று குப்பைத் தொட்டியில் போட்டாள் என்றான். எப்படி மனம் வரும் டாடி! முடிகிற காரியமா? நான் நம்பமாட்டேன் என்றால் அதற்குள் சத்தியம் அது இது என்ற பெரிய வார்த்தை எல்லாம் போடுகிறான்!" என்று புகார் செய்தாள்.

"மெய்யாகச் சொன்னேன் என்றால் போதாதா பாபு? ஏன் சத்தியம் செய்ய வேண்டும்?" என்று கண்டித்தார் தந்தை.

சத்தியம்; ஆணை என்ற வார்த்தைகளை எல்லாம் அலட்சியமாகப் பயன்படுத்துவது சுந்தரத்துக்குப் பிடிக்காது.

பிள்ளைகளிடம் உண்மையையே ஊக்குவித்திருந்தார். பேசுவதே மெய்யாகத்தான் இருக்க வேண்டும். அழுத்திச் சொல்வதானால் 'உண்மையாகவே' என்று சொன்னாலே போதுமானது என்று போதித்திருந்தார்.

"ஸாரிப்பா. இனிமேல் இல்லை," என்று உடனே மன்னிப்புக் கேட்டான் மைந்தன்.

"ஆனால் இவள் நம்பவே மாட்டேன் என்கிறாளே..." என்று அவன் முடிக்கும்முன், "என்னப்பா, நீங்கள்கூட அவன் சொன்னதை ஒப்புவதுபோலப் பேசுகிறீர்களே," என்று அவரிடம் பாய்ந்தாள் மாயா.

கணவருக்கான காபி டிபனுடன் வந்து, "வேறு பேசுங்களேன்..." என்ற ரேணுகாவின் குரலை யாருமே கவனிக்கவில்லை.

"அது மெய்தான் கண்ணம்மா, எனக்கும் தெரிந்ததுதான்," என்றார் சுந்தரம்.

"எப்படியப்பா மெய்யாகும்? பஸ்ஸில் அந்தக் குழந்தையின் முகம் பால் மாதிரி களங்கமே இல்லாமல் என்ன 'இன்னசென்டாக' இருந்தது தெரியுமா? அது போலத்தானே இதுவும் இருந்திருக்கும்? அப்படிப்பட்ட குழந்தையைக் கொல்வது- அதுவும் பெற்றவளே கொல்வது என்றால்... இதெல்லாம் மெய்

என்றால் அவள் ஒரு ராட்சசியாகத்தான் இருந்திருப்பாள்," என்றாள் குரலில் ஆத்திரமும், கண்ணில் நீருமாக.

மகளின் கூந்தலை மெல்ல வருடினார் சுந்தரம். "முழுவிவரமும் தெரியாமல் யாரையும் எதுவும் சொல்லிவிடக் கூடாது பாப்பா! ஒருவேளை அதன் தாயும் ஓர் 'இன்னசென்ட் விக்டி' மாகவே இருக்கலாம்..."

எந்த விதமான சமாதானத்தையும் ஏற்க மறுத்து, தாயின் கைகளில் உயிர் இழந்த அந்த இரண்டு நாள் சிசுவிலேயே நிலைத்தது மாயாவின் மனம்.

கண்கள் சிவந்து கண்ணீரைக் கொட்டின.

## 3

மாயாவின் விழிகளில் நீரைக் கண்டதும் ரேணுகா அதட்டினாள். 'இம்மென்னுமுன் என்னடி அழுகை! போய் முகத்தைக் கழுவிக் கொண்டு வா. யாரேனும் பார்த்தால் சிரிக்கப் போகிறார்கள். எங்கேயோ யாரோ செத்ததற்கு இவள் கண்ணீர் வடிக்கிறாளா என்பார்கள். ம், போய் முகம் கழுவு." என்று மகளை விரட்டினாள்.

அவள் சென்றதும் கணவரையும் மகனையும் பார்த்து, "அவள் குணம் தெரியாதா? போதும் என்றால் நிறுத்துவதற்கு என்ன? இனி அவள் அந்தக் குழந்தையையே நினைத்துக் கொண்டு இருப்பாளே!" என்று பொதுப்படையாக ஒரு டோஸ் கொடுத்தாள்.

மாயா கண்களைக் கழுவிக்கொண்டு வந்ததும், "ரகு அம்மா மாங்காய் தருவதாகச் சொன்னார்கள். பேசிக்கொண்டே

இருந்ததில் வாங்கிக் கொண்டு வர மறந்து போனேன். இப்போது தொக்கு செய்யலாம் என்றால் வழியில்லை." என்று ஓரக் கண்ணால் மகளைப் பார்த்தாள் தாயார்.

அன்னை எதிர்பார்த்தது போலவே, "ஹே, என்னம்மா நீங்கள்? இதோ நான் போய் வாங்கிக் கொண்டு வருகிறேன்." என்று துள்ளிக்கொண்டு கிளம்பிவிட்டாள் மாயா.

அங்கே வீட்டுக்குள் நுழைகையில் எதிரே வெளி நோக்கி வந்து கொண்டு இருந்தான் ரகு.

அவளை ஒரு தரம் கண்ணால் விழுங்கிவிட்டு, "அம்மா, குரங்கு வந்திருக்கிறது!" என்று உள்ளே இருந்த தாயாருக்கு உரக்கக் குரல் கொடுத்துவிட்டுக் குறும்பாகச் சிரித்தான்.

"வெவ் வெவ் வே."

"அசல் குரங்கேதான்."

அதற்குள் அங்கே வந்த ரகுவுடைய தாயார், "போடா போ. இந்தத் தங்கத்தைப் போய்க் குரங்கு என்கிறாயே!" என்று மகனை லேசாகக் கண்டித்தார்.

"அவள் தம்பி அவளைக் கழுதை என்றான். ம்... குரங்கு தேவலாமா அல்லது கழுதை மேலா?" என்று தீவிரமாக யோசிப்பது போலப் பாவனை செய்தான் ரகு.

"யாரும் எப்படியும் பேசிக் கொள்ளுங்கள். எனக்கு அவள் தங்கமேதான், உள்ளே வாடா கண்ணு. நீ போயேண்டா," என்று மாயாவை அழைத்தார் அவர்.

ரகுவுக்கு மீண்டும் ஒரு தரம் அழகு காட்டி விட்டு அந்த அம்மாளைத் தொடர்ந்து உள்ளே சென்றாள் மாயா.

"அத்தை! தொக்கு செய்ய மாங்காய் தருவதாகச் சொன்னீர்களாமே, அம்மா வாங்கி வரச் சொன்னார்கள். கூடுதலாக இரண்டு தருகிறீர்களா? உங்களுக்கும் பாதி கொண்டு வந்து தருகிறேன்," என்றாள்.

"உனக்கு இல்லாததா, தங்கம்? ஆனால் பறித்து வைத்ததை எல்லாம் ரகுவும் அந்த விருந்தாளியும் உப்பு மிளகாய்ப் பொடி தூவிக்கொண்டு தின்று முடித்து விட்டார்கள். நீயே பறித்துக் கொள்கிறாயாம்மா? துரட்டிக் கம்பு அங்கேயே இருக்கிறது." என்றார் அவர்.

"ஓகே. ஆன்ட்டி!" என்று வீட்டின் பின்புறமாக அமைந்திருந்த தோட்டத்திற்குள் ஓடினாள் மாயா.

ஆனால் கப்பும் கிளையுமாகப் பரந்து உயர்ந்திருந்த மரம் ஆதிபுத்தியைத் தூண்டிவிடவே பான்ட்டை இரண்டு மடிப்பு மடித்துவிட்டுக் கொண்டு மரத்தில் ஏறினாள்.

நல்ல பெரிய மாங்காய்களான நாலைக் காம்புடன் பறித்துக் கொண்டு இறங்கலானாள்.

வெறும் கையுடன் ஏறியது இலகுவாக இருந்தது. ஆனால் கையில் நாலு பெரிய காய்களுடன் இறங்குவது சர்க்கஸ் வித்தையாகவே இருந்தது.

மாங்காயைக் கீழே போட்டாலோ தெறித்துச் சிதைந்து வீணாகிவிடும்.

முழுக் கவனத்துடன் சமாளித்துக் கொண்டு கயிற்றில் நடக்கும் சர்க்கஸ்காரியைப் போல் நடந்து வந்த மாயா கடைசியில் சறுக்கி விழுந்தாள்.

விழுந்தவள் தரையை அடையுமுன் இரு வலிய கரங்கள் அவளை ஏந்தித் தாங்கின.

பிடித்த கரங்கள் உடனே அவளை இறக்கி விடாமல் கரங்களுக்குரிய ஆணுடலோடு அவளை அழுத்தி அணைத்தன.

திகைப்புடன் திமிறியபடி நிமிர்ந்து பார்த்த மாயா பிரமித்துப் போனாள்.

அது-அவள்-

அன்று தியேட்டரில் பார்த்த அந்த அவன்!

ஒருகணம் பிரமித்து நின்ற மாயாவுக்கு உடனேயே சினம் பொங்கி எழுந்தது.

இவன் மாயாவை என்னவென்று எண்ணிக் கொண்டான்? அந்தத் 'தாராளம்' என்றா?

ஒரு முயற்சியில் தன்னை விடுவித்துக் கொண்டு ஆங்காரத்துடன் திரும்பினாள்.

முன் தினம் நெஞ்சினுள் துடித்த வார்த்தைகள் இன்று விடுதலை பெற்றன.

மின் வேகத்தில் அவளது வெற்றுக் கரம் அவன் கன்னத்தைப் பலமாகப் பதம் பார்த்தது.

அதே வினாடியில், "நக்குகிற நாய்க்குச் செக்கு என்று தெரியுமா? சிவலிங்கம் என்று தெரியுமா?" எனக் கனலை உமிழ்ந்துவிட்டு, அதே மின்னல் வேகத்தில் ஓடி மறைந்தாள்.

அந்தப் புதியவனுடைய விழிகள் பயங்கரமாக இடுங்கியதை அவள் அறியவே இல்லை.

சற்றுப் பொறுத்துக் கன்னத்தைத் தடவியபடியே உள்ளே வந்த அவனைக் கண்டதும், எழுந்து, "என்னங்க தம்பி?" என்று வினவினார் ரகுவின் தாயார்.

"ம்...இதுவா? தேனீயோ குளவியோ கொட்டி விட்டது... கொடுக்கும் சிறகும் வெட்டப்பட வேண்டிய பிறவி!" என்றான் அவன் ஆழ்ந்த குரலில்.

புரியாதவராக, "எ- என்னங்க..." என்று குழறிவிட்டு, "வந்து... வலிக்கிறதா?" என்று வினவினார். இவன் சுண்ணாம்பு தடவுவானோ என்னவோ? சற்றுத் திணறி விட்டு, "ஏதாவது மருந்து போடலாமா?" என்று கவலையுடன் கேட்டார்.

சட்டென அவன் முகம் தெளிந்தது. பல்வரிசை தெரியப் புன்னகை செய்தான். "ஒன்றுமில்லை அம்மா! ஏதேனும் குஞ்சுத் தேனீதான் என்று நினைக்கிறேன். அதற்குள் வலி குறைந்து

போயிற்றே... ஆமாம், மாங்காய் பறிக்க வந்தாளே, அந்தப் பெண் யார்? திடீரென்று விழுந்தடித்துக் கொண்டு ஓடிவிட்டாள்!" என்று வேடிக்கையை ரசிப்பவன் போலக் கேட்டான்.

"ஓகோ! உன்னைப் பார்த்துத்தான் உள்ளே வராமலே ஓடிவிட்டாளா? இங்கிருந்து ஐந்தாம் வீட்டுப் பெண் அவள். மாயா என்று பேர். ரொம்ப நல்ல பெண் தம்பி. துறுதுறு என்று இருப்பாள்."

"தேனீ போல!" என்று பட்டான குரலில் இடையிட்டான் அவன்.

"அதே ரீங்காரம்தான், தம்பி, எந்நேரமும் கலகலப்பும் சிரிப்பும்தான். வாய் கொடுத்து மீள முடியாது. ஆனால் கள்ளம் கபடமே கிடையாது. எனக்கு உள்ளூர..." என்று மாயாவை மருமகள் ஆக்கிக் கொள்ளும் தன் ஆசையை வெளியிடப் போனார் ரகுவின் தாயார்.

ஆனால் அவன் அதற்குள்ளாக, இடைமறித்து, "பஞ்சாபிப் பெண்ணா?" என்று விசாரித்தான்.

"இல்லையே. தலைமுறை தலைமுறையாக நம்ம... அதாவது எங்களவர்கள்தான். ஏன் கேட்கிறாய்?... ஓகோ. அவள் உடையைப் பார்த்தா? அவளுக்குச் சேலை கட்டினால் காலைத் தட்டுகிறதாம்," என்று செல்லமாகச் சிரித்தார்.

யோசனையில் இருப்பவன் போல அவன் புருவங்களில் ஒன்று நெளிந்தது.

"உடை மட்டிலும் இல்லை, அம்மா! ஒரு பஞ்சாபி வாலிபனோடு அன்று இந்தப் பெண்ணைப் பார்த்தேனே, ரயில்வே ஸ்டேஷனில்... டிக்கெட் 'புக்' செய்யும் இடத்தில் பார்த்தேன். கொஞ்சம் இதுவாக..." என்று முடிக்காமல் விட்டு விட்டான் அவன்.

சௌந்தரம்மாவின் முகத்தில் கலக்கம் சூழ்ந்தது. "இராதே தம்பி. இவளாக இருக்காதே. எங்கள் மாயா அப்படிப்பட்ட பெண்

இல்லையே. கொஞ்சம் துடுக்காகப் பேசுவாள். அது தவிர தப்புத் தவறுக்குப் போகிற பெண் அவள் இல்லையே! இருக்காது தம்பி. மாயாவாக இராது. ஊகூம்..."

அவன் மீண்டும் இனிமையான முறுவல் செய்தான்.

"இவளாக இல்லாமலும் இருக்கலாம். ஏதோ ஒரு அசப்பில் இவள் போலத் தோற்றமாக இருந்திருக்கலாம். இதற்காக நீங்கள் வருந்த வேண்டுமா? அவசியமே இல்லையே. இவள் இல்லை என்றால் போகிறது." என்று தேறுதலாகச் சொன்னான்.

அதன் பிறகு மூன்று தினங்கள் அமைதியாகச் சென்றன.

இந்த மூன்று நாள்களில் மாயா ரகுவின் வீட்டுப் பக்கம் வரவில்லை.

ஆனால், அதில் அதிசயமும் இல்லை. காரணமின்றி அரட்டைக்காக மட்டுமாக அடுத்தவர் வீடு செல்லும் பழக்கம் அவளுக்கு இல்லவும் இல்லை.

அத்துமீறிய ஓர் அந்நியனுக்கு அறை கொடுத்தது மட்டுமின்றி வாயாலும் சூடு கொடுத்த திருப்தியில் அதைப் பற்றியும் அவள் மேலே எண்ணவில்லை.

பஸ்ஸில், கூட்டத்தில் எவனாவது இடிப்பதையும் பார்ப்பதையும் தாய் மனம் வருந்தக் கூடுமோ என்ற பயத்தில் அவள் என்றுமே தாயிடம் சொன்னது கிடையாது.

அது போலவே இந்த நிகழ்ச்சியையும் மனதை விட்டு 'அடச் சீ' என்பது போல் அகற்றி விட்டாள்.

பாடமும், கல்லூரிக் கதைகளும் அவள் நேரத்தைப் பறக்க வைத்தன. கூடவே மாலை வீடு திரும்பும்போது, இப்போ தெல்லாம் தினமும் இணைந்து கொள்ளும் ரகுவின் பேச்சு வேறு.

எல்லாமாகச் சேர்ந்து மூன்று நாள்களும் வினாடிகளாக மறைந்தன

அன்று மாலையில் ரகுவைத் தன்னோடு வரும்படி அழைத்தான், அவர்கள் வீட்டு விருந்தாளியான சுதாகரன்.

ரகுவுக்கு அவ்வளவாக மனம் இல்லை.

சுதாகர் சுவையாகப் பேசிப் பழகிச் சிரிப்பவன்தான்.

ஆனாலும் இப்போது தினமும் மாலையில் மாயா வருகையில் காத்திருந்து அவளோடு சேர்ந்து பேசிக் கொண்டு வருவதை வழக்கமாக்கிக் கொண்டு விட்டானே, அதை விட விருப்பம் இல்லாமல் தடுமாறினான்.

ஆனால் சுதாகரிடம் மறுப்புக் கூறவும் துணிவில்லை.

ரகுவுடைய தந்தை புதிதாகத் தொடங்கியிருந்த தொழில் பெருமளவு சுதாகரைச் சார்ந்தே இருந்தது.

எனவேதான், ஒரு நண்பரை வழியனுப்புவதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்குச் செல்ல வேண்டும் என்றும், ஜாலியாகப் பேசிக் கொண்டே போய் வரலாம் என்றும், சுதாகர் சொன்னபோது ரகுராமன் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று.

தன்னைக் காணாமல் மாயா ஏமாற்றம் அடைவாளோ என்று நினைத்தபடியே ரயில் நிலையத்தில் சுதாகருடன் பாப்கார்னைக் கொறித்தான் ரகு.

ரயிலில் சென்றவர் சுதாகரின் கம்பெனி ஒன்றின் மானேஜர்.

அவரிடம் சில விஷயங்களைச் சொல்லிக் கவனிக்குமாறு கூறி அனுப்பினான் சுதாகர்.

ரயில் கிளம்பும்வரை சுதாகர் நின்றதை அந்த மானேஜரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. "நீங்கள் போங்கள் சார், கேவலம், உங்களிடம் சம்பளம் வாங்குகிற எனக்காக நீங்கள் நிற்பதா? நினைக்கவே எப்படியோ இருக்கிறது," என்றெல்லாம் தவித்தார்.

சற்று நேரம் அவர் பேச்சை எல்லாம் கேட்டுக் கொண்டு இருந்துவிட்டு, "நான் ஸ்டாப்' இல்லையோ," என்று சுதாகர் ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபோது அவர் பேச்சு அடங்கியே போயிற்று.

ரயில் கிளம்பி மெல்லச் சென்றபோது, சுதாகர் திடுமென்று ரகுவின் தோளைப் பற்றி, "அந்தப் பெண்ணைப் பார்த்தாயா! உங்கள் வீட்டுப் பக்கம் உள்ளவள்," என்று காட்டினான்.

"யார்-யார் மிஸ்டர் சுதாகர்?" என்ற புரியாமல் எட்டிப் பார்த்துக் கேட்டான் ரகு.

"அதோ சன்னல் விளிம்பில் கையும், பாப் செய்த கூந்தலும் கொஞ்சம் முகமும் தெரிகிறது பார். பெயர் நினைவில்லை. ஆனால் உன் வீட்டுக்குக்கூட ஒருநாள் மாங்காய் பறிக்க என்று வந்தாளே."

"மாங்காய்? 'பாப்' முடி... மாயாவா! சேச்சே, மாயாவாக இராது... நீங்கள் நன்றாகப் பார்த்தீர்களா? ஊகூம், எந்தத் தடியன் மேலோ சாய்ந்திருப்பது போல் தெரிந்ததே. நிச்சயமாகச் சொல்கிறேன். அது மாயாவாக இருக்கவே இருக்காது," என்று அடித்துப் பேசினான் ரகு.

சுதாகர் ஏதும் பேசாமல் திரும்பினான்.

சற்றுத் தயங்கிவிட்டு, ரகு மீண்டும் சொன்னான். "அந்தக் கை, பாப் செய்த முடி எல்லாமே அவள் மாதிரி இருந்தால் கூட அது நிச்சயம் மாயாவாக இருக்க முடியாது மிஸ்டர் சுதாகர். நான் உறுதியாகச் சொல்வேன் தெரியுமா?" என்று மீண்டும் மீண்டும் கூறினான்.

சுதாகருக்காகச் சொன்னானோ, அவனுக்காக இயம்பினானோ?

"ஒரு நிமிடம் 'வெயிட்' பண்ணுகிறாயா, ரகு? ஒரு ஃபோன் செய்து விட்டு வருகிறேன்," என்று ரகுவை உட்கார வைத்துவிட்டுப் போனான் சுதாகர்.

ரயிலில் பார்த்த பெண் மாயாவாக இராது என்பதை அவன் ஒப்புக் கொண்டானா இல்லையா என்று குழம்பினான் ரகு. அந்தப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே!

ஒரு நிமிடத்தில் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனானே தவிர சுதாகர் வந்து சேர அரைமணி நேரம் ஆயிற்று.

வந்ததும், "ரகு! உன்னை இவ்வளவு நேரமாகக் காத்திருக்க வைத்து விட்டேன். மன்னித்துக் கொள். மிகவும் போர் அடித்திருக்குமே. பிராயச்சித்தமாக ஒரு 'த்ரில்லிங்' சினிமாவுக்கு அழைத்துச் செல்லப் போகிறேன். ஓ.கே.?" என்றான் உற்சாகமாக.

"பிராயச்சித்தமாக என்றெல்லாம் வேண்டாம் சார்," என்று பணிவும் கூச்சமுமாகச் சொன்னான் ரகுராமன்.

"ஆல்ரைட். அப்படியாகத்தான் என்பது இல்லை. என்னோட கம்பெனியாக வாயேன், 'தங்க'த்தில் நல்ல மூவி ஒன்று நடக்கிறது. கம் ஆன் ஃப்ரண்ட்..."

வீட்டிற்கு டெலிபோனில் சொல்லிவிட்டு இருவருமாக முதலில் ஓர் உயர்தர ஹோட்டலுக்குள் நுழைந்தனர்.

சிரித்துச் சிரித்துப் பேசியபடியே உண்டபோது சுதாகரை ரகுவுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

இதுவரை வீட்டிற்கு விருந்தாளியாக வந்த இந்த ஐந்து நாள்களில் அவன் சகஜமாகப் பழகி வந்திருந்த போதும், இன்று அவனோடு மிகவும் நெருங்கிப் போய் விட்டதாக ரகு உணர்ந்தான். ஓர் அரை மணி நேரம் அவனுக்காகக் காத்திருக்க நேர்ந்தது நல்லதுதான். இல்லாவிட்டால் சுதாகரோடு இவ்வளவு நெருக்கமாகப் பழகி இருக்க முடியாதே என்று வெள்ளை மனதோடு நினைத்தான் ரகு.

சினிமா முடிந்த பின் இருவருமாக வீடு வந்து சேர்ந்த போது மணி பத்து.

ஆனால் அந்த நேரத்தில் அவர்கள் தெருவில் பரபரப்பிருந்தது.

எல்லார் வீட்டிலும் விளக்கு எரிந்தது.

மாயாவின் வீட்டின் முன் கூட்டம் இருந்தது.

சுதாகரின் காரைக் கண்டதும் அவசரமாக மாயா வீட்டிலிருந்து வந்தார் ரகுவின் அன்னை சௌந்தரம்.

ரகுவிடம் ஓடிவந்து, அவன் கையைப் பிடித்துக் கொண்டு, "மாயாவைக் காணோமடா, என் தங்கத்தைக் காணவில்லையே கண்ணா!" என்று கதறினார்.

ஆயிரம் இடிகள் ஒன்றாகத் தலைமீது இறங்கியவன் போல, "அம்மா!" என்று வீறிட்டான் ரகு.

## 4

மகனுடைய அலறலில் மேலும் கலக்கம் மிகுந்தவராகச் சௌந்தரம் புலம்பினார்.

"தங்கமாச்சேடா! வைரமாச்சேடா! மிஞ்சி மிஞ்சிப் போனாலும் ஆறரைக்குள் வீடு வந்து விடுவாளேடா. காலேஜிலே கேட்டால் வழக்கம் போலவே காலேஜை விட்டு வந்ததாகச் சொல்கிறார்கள்; தெரிந்தவர் அறிந்தவர் வீடு எல்லாம் அலசி ஆயிற்று. என் கண்மணி என்ன ஆனாளோ தெரியவில்லையடா. தாய் தகப்பன் முகத்தைக் காணச் சகிக்கவில்லையடா. பகவானே! அந்த பில்லா மாதிரி யாரும் ஏதும் செய்து விட்டார்களோ என்னவோ, தெரியவில்லையே!" என்று கண்ணீர் வடித்தார்.

பேயறைந்தவன் மாதிரி முகம் வெளுத்துப் போய், "அம்மா..." என்று மிடறு விழுங்கினான் ரகு.

அதுவரை அந்நியனாய் விஷயம் ஏதும் புரியதாதவனாய் ஒதுங்கி நின்ற சுதாகர் முன்னே வந்து, "என்ன விஷயம் அம்மா? சற்று அமைதிப் படுத்திக் கொண்டு சொல்லுங்கள், யாரைக் காணோம்? போலீசில் சொன்னீர்களா? அடையாளம் சொல்லுங்கள். எதற்கும் நானும் ரகுவும் ஒரு முறை தேடிப் பார்க்கிறோம்," என்றான் ஆதரவாக.

ஏதோ ஓர் ஆதாரம் கிடைத்தது போல, அதைப் பற்றிக் கொண்டு திரும்பினார் ரகுவின் அன்னை. "ஐந்தாம் வீட்டுப் பெண்ணைக் காணோம் தம்பி. நல்ல பெண். காலேஜ் விட்டால் எத்தனை வலிய அழைத்தாலும் வீட்டில் கேளாமல் ஒரு சிநேகிதி வீடு என்று போக மாட்டாள். நேரே வீடுதான். இன்று அவள் இன்னமும் வந்து சேரவில்லை. அவளுக்கு என்னமோ நேர்ந்து விட்டது போல இருக்கிறதே," என்று வேதனையுடன் கூறினார்.

"போலீசில் சொன்னீர்களா?"

"ஐயையோ! வேண்டாம் தம்பி!" என்று பதறினார் சௌந்தரம். "அசிங்க அசிங்கமாய்க் கேட்பான் தம்பி. அப்புறம் ஓடுகாலி என்ற பட்டம் கட்டி விடுவார்கள். மாயாவைப் போய் அப்படி யெல்லாம் அசிங்கப்படுத்துவதா? வேண்டாம் தம்பி, வேண்டாம்!" என்று முகத்தை மூடிக் கொண்டு விம்மினார்.

"மாயா..." என்றான் சுதாகர் யோசனையோடு. "மாயா! அந்தப் பெண் அன்று மாங்காய் பறிக்க வந்தவள்தானே? அவளைத்தானே இன்று..." என்று ரகுராமனின் பக்கம் திரும்பினான்.

"மாயா ஆ..." என்று அலறினான் ரகுராமன். "பாவி! படுபாவி!" என்று முகத்தில் அறைந்து கொண்டு கதறினான். "இப்படிச் செய்து விட்டாயே ராட்சசீ!"

மாயாவையே குற்றம்.சாட்டி அவன் புலம்பியதும், காரணம் புரியாமல் சுதாகரைப் பார்த்தார் சௌந்தரம்.

அவன் லேசாகத் தோளைக் குலுக்கிவிட்டுக் கைகளை விரித்தான்.

"மாயா ஒரு பஞ்சாபி வாலிபனோடு வடக்கே செல்லும் ரயிலில் போகிறாள்," என்ற ரகுவின் வார்த்தைகளில் அந்தக் காலனி மொத்தமும் அதிர்ந்து போயிற்று.

"பொய்! பொய்!"என்று அலறினார் சுந்தரம்.

"ரகு அண்ணா, ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கை விடுத்தான் பாபு.

"உளறாதேடா," என்றார் ரகுவின் தந்தை.

"வேறு யாரையாவது பார்த்திருப்பாய்," என்றனர் பிரேமியின் பெற்றோர்.

"என் தங்கத்தை அப்படிச் சொல்லாதேடா, உன் நாக்கு அழுகிப் போகும்டா!" என்று அழுதார் சௌந்தரம்.

"அம்மா! என்னை விடவா கவலை உங்களுக்கு?" என்று அடிபட்ட வேதனையோடு விம்மினான் ரகு. பிறகு நிமிர்ந்து, "நிஜம்தான் அம்மா! என் கண்ணால் பார்த்தேன். மிஸ்டர் சுதாகர் கூடப் பார்த்தார். இது சத்தியம்!" என்றான்.

"சா...ர்..." என்று இழுத்தபடி அணுகினார் ரகுவின் தந்தை.

தயக்கத்துடன் தோளைக் குலுக்கிவிட்டு எங்கோ பார்த்தான் சுதாகர்.

"போலீசில் சொல்லி ரயிலை மடக்க...," என்று பிரேமியின் தந்தை தொடங்கினார்.

அதற்குள், "என் மாயூ...!" என்ற முனகலுடன் கீழே விழுந்தாள் ரேணுகா. விழுந்த இடத்தில் ஏதோ கூராகக் குத்திச் சிவப்பாய் ரத்தம் பெருகலாயிற்று.

"ரேணு..." என்று மனைவியிடம் ஓடினார் சுந்தரம்.

நினைவற்று இருந்த ரேணுகாவைத் தன் காரிலேயே அழைத்துச் சென்று மருத்துவ மனையில் சேர்த்தான் சுதாகர்.

அங்கே மீண்டும் போலீஸ் பேச்சைப் பிரேமியின் தந்தை ரத்தின பாண்டியன் எடுத்தபோது, "வேண்டாம், சும்மாயிரு," என்று இறுகிய முகத்துடன் பதில் இறுத்தார் சுந்தரம்.

∴ ∴ ∴

மாயாவுக்குத் தலையை ரொம்பவும் வலித்தது.

வயிற்றைப் புரண்டிக் கொண்டு வந்தது.

மூக்கு, தொண்டை எல்லாம் வேப்பிலையைத் தின்றது போலக் கசந்து வழிந்தது.

முகத்தைச் சுளித்தபடியே பாறையாய்க் கனத்த கண்ணிமைகளை மிகுந்த பிரயாசையுடன் மெல்லத் திறந்தாள்.

இது எந்த இடம்?

இது அவளது அறையில்லை.

அவள் வீட்டில் எந்த இடமும் இல்லை.

பிரேமி, ரகும்மா யார் வீடும் இல்லை.

பின்னே?

விழிகளைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள்.

சுவரில் மாட்டியிருந்த இரண்டு இயற்கைக் காட்சிகள், அருகில் வட்டமான ஒரு சிறு மேஜை, அவள் படுத்திருந்த கட்டில் தவிர கிட்டத்தட்ட அறை வெறுமையாகவே இருந்தது. ஊகூம், ஓரமாக ஓர் அலமாரி கண்ணாடிக் கதவுடன் இருந்தது.

ஓரமாகக் கதவு, அது எங்கே போகிறது?

முதலில் இது எந்த இடம்?

யோசித்துப் பார்த்தும் எந்த வகையிலும் சற்றும் அறிமுகமான இடமாக இது தெரியவே இல்லை.

நர்ஸிங் ஹோம் மாதிரிகூட இல்லை.

சிரமத்துடன் மெல்ல எழுந்தாள் மாயா. உடலும் தலையும் எங்கோ பறந்தன.

கலங்கிப் போய், "யாராவது வாருங்களேன்..." என்று உரக்க அழைத்துப் பார்த்தாள்.

ஊகூம், ஒரு பேச்சு மூச்சு இல்லை.

பிடிவாதமாக உடம்பைச் சமாளித்துக் கொண்டு போய் ஓரமாக இருந்த கதவைத் திறந்தாள். பாத்ரூம்!

கண்ணாடி பதித்த வாஷ்பேசின், புதியதாக பேஸ்ட், பிரஷ், சோப் எல்லாம் இருந்தன.

தண்ணீரைத் திறந்துவிட்டு முகத்தில் வாரி அடித்துக் கொண்டாள்.

கொஞ்சம் தெளிவாக இருந்தது.

பேஸ்டையும், பிரஷ்ஷையும் பார்த்ததும், 'பல் துலக்கினால் இந்த வாய் வழுவழுப்பும் கசப்பும் அகலாதா...' என்று தோன்றியது அவளுக்கு.

பல் விளக்கி சோப் போட்டு நன்றாக முகம் கழுவிய பின் மேலும் கொஞ்சம் பரவாயில்லாதது போலத் தெரிந்தது.

பரட்டையாகக் கலைந்திருந்த தலையைக் கையால் முடிந்த மட்டும் கோதி விட்டுக் கொண்டு வெளியே வந்தாள்.

கட்டிலின் பின்புறமாக எதிர் எதிராக இரண்டு கதவுகள் இருந்தன.

அருகே சென்று திறக்க முயன்றபோது இரண்டுமே வெளிப்புறமாகப் பூட்டியிருந்தன.

என்ன இது?

இயங்க மறுத்தது மூளை.

மீண்டும் கட்டிலில் வந்து அமர்ந்தாள்.

அருகில் இருந்த மேசை மேல் ஒரு தட்டில் சில கமலா ஆரஞ்சுப் பழங்கள் இருந்தன.

கூடவே ஒரு துண்டுக் காகிதம்- 'இந்தப் பழம் தின்றால் வாய்க் கசப்புக் குறையும்.'

யார் எழுதியிருப்பார்கள்? யாரேனும் வேடிக்கைக்காக இப்படியெல்லாம் செய்கிறார்களோ? சை...?

யோசித்தபடியே பழத்தை உரித்துச் சில சுளைகளை உண்டாள்.

மெய்யாகவே வாய்க் கசப்பு பெரிதும் குறைந்து போயிற்று. சற்றுத் தெளிவாகவும் தெம்பாகவும் கூடத் தோன்றியது..

இப்போது மீண்டும் யோசித்தாள்.

கடைசியாக என்ன செய்தாள்?

ம்ம்... அன்று...ஆமாம், அது என்று?

புரியவில்லை, போகட்டும்.

அன்று ரகு வருகிறானா என்று திரும்பித் திரும்பிப் பார்த்தபடி வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள்.

பார்க்கின் சவுக்குக் காம்பவுண்டு மூலைப் பக்கம் வந்தபோது ஒரு கறுப்புக் கார்- சாதாரண அம்பாஸிடர்.

அந்தக் கார் அவள் அருகில் நின்றதும், இரண்டு பேர் இறங்கி வழி கேட்டதும், இவள் திருப்பிக் காட்டும்போது என்ன நடந்தது?

விசுக்கென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள் மாயா. கடவுளே, யாரோ 'கிட்நாப்பர்ஸ்?'

மாயாவுக்குச் சிரிப்பு வந்தது. ரியல்லி இது ஏதோ கனவாகத்தான் இருக்க வேண்டும்.

மற்றப்படி அவளை யார் 'கிட்நாப்' செய்வார்கள்?

அதுவும் ஏன்?

பணையத் தொகை கொடுக்க அப்பாவிடம் நிறையப் பணம் கூடக் கிடையாதே. இருந்திருந்து அவளைக் கடத்திச் சென்று என்ன பயன்?

அரிசிப் பல் மின்ன லேசாகச் சிரித்தபடியே தன்னையே கிள்ளிப் பார்த்தாள். வலித்தது.

பின்னே இதெல்லாம் நிஜம்தானா?

வயிற்றுக்குள் ஏதோ பிசைய, சட்டென எழுந்து மீண்டும் கதவுகளை இழுத்துப் பார்த்தாள். திறக்க வில்லைதான். தட்டியும் பார்த்தாள். அதற்கும் பலன் இல்லைதான்.

ஒன்றும் புரியாமல் திகைத்துப் போய்ச் சற்று நேரம் நின்றாள்.

பின்னர் மெல்ல மெல்ல நடந்து சென்று இரு கதவுகளுக்கும் இடையே இருந்த சன்னலைத் திறந்து பார்த்தாள்.

ஒரு கணம் மூச்சு நின்றது.

என்ன அழகு! பல நிற மலர்களுடன் செடி, கொடிகளும் மரங்களுமாகக் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒரே பசுமை.

தூரத்தில் பனிப்புகை படிந்த சிகரங்களுடன் ஒரு மலைத் தொடர் கூட.

இதைப் பார்த்துக்கொண்டே நின்றால் பசிகூட எடுக்காதே! இதை எண்ணும்போதே பசி வயிற்றைக் கிள்ளுவதை மாயா உணர்ந்தாள்.

திரும்பி வந்து மேலும் சில பழங்களை உரித்துச் சுளைகளை விழுங்கினாள்.

மீண்டும் மீண்டும் அது நிஜம் போல் தோன்றும் கனவோ என்றே தோன்றியது.

அந்த அலமாரியைத் திறந்து பார்த்தாள்.

புத்தம் புதியதாக ஒரு சீப்பு, பவுடர், க்ரீம், ரெடிமேட் துணிகள், அவள் அணிவது போல் பெல்ஸும் ஷர்ட்டும்தான் - அவையும் புதியனவே. சில டி.சி.எம். டவல்கள்.

ஒரு முடிவுக்கு வந்தவளாகி ஒரு செட் உடைகளை எடுத்துச் சென்று நன்றாகக் குளித்தாள்.

புருவ மத்தியில் கழுகு போல் பொட்டிட்டுக் கொண்ட பின் மீண்டும் என்ன செய்வது என்று புரியாமல் மலைத்தாள்.

வெளி உலகத்தைக் கண்ணுக்கேனும் காட்டிய சன்னல் அருகே நின்று தவம் கிடந்து பார்த்தாள். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை ஆள் நடமாட்டமே காணவில்லை.

செய்வது அறியாது அவள் திகைத்து நின்றபோது ஒருபுறக் கதவு மெல்லத் திறந்தது.

கோபமும் பயமுமாகக் கவனித்தாள் மாயா.

பணியாட்கள் போல இருவர் வந்தனர்.

ஒருவன் காவலுக்கு நிற்பவன் போலக் கதவின் அருகிலேயே வழியை மறைத்தாற்போல நின்றான்.

மற்றவன் ஒரு சிறு மேசையை உள்ளே தள்ளிக் கொண்டு வந்தான்.

உணவு கிண்ணம் கிண்ணமாக ட்ரேயில் அடுக்கி வலைத் தட்டால் மூடியிருந்தது.

மேசையைப் படுக்கை அருகில் நிறுத்திவிட்டு, அவளை ஒருமுறை பார்த்துவிட்டுக் குளியல் அறைக்குள் சென்றான். அங்கே மாயா கழற்றிப் போட்டிருந்த துணிகளை எடுத்துக் கொண்டு திரும்பினான்.

"யார் நீ? இது என்ன இடம்?" என மாயா அவசரமாகக் கேட்ட கேள்விகள் அவன் காதில், ஏன் இருவர் காதிலுமே விழுந்தது போலவே தெரியவில்லை.

ஒருவேளை தமிழ் தெரியாதோ?

"ஹூ ஆர் யூ? ஏய், துமாரா நாம் க்யா ஹை? என்னை ஏன் ... கடவுளே...ஏய்..." என்று மாயா ஓடிவருமுன் இருவருமாக அறையிலிருந்து வெளியேறி அறைக்கதவை வெளிப்புறமாகப் பூட்டிக் கொண்டு சென்று விட்டனர்.

கை வலிக்கும் வரையில் கதவைத் தட்டிப் பார்த்தாள் மாயா. பலன் ஏதும் காணாததால் "செவிடுகள்" என்று ஆத்திரத்தோடு வைதாள்.

அவளை இப்படி அடைத்து வைத்திருப்பது யாராக இருக்கும்?

அப்பாவுக்கு யாரும் விரோதிகள் உண்டோ? சேச்சே! அப்பாவுக்குப் போய் விரோதிகள் இருக்க முடியுமா?

மாயாவுக்கு அப்பாவை, அம்மாவை, ப்ரீயை, பாபுவை எல்லோரையும் பார்க்கவேண்டும் போல ஏக்கமாக வந்தது.

எல்லோரையும் விட்டு அவளைப் பிரித்து வந்து அடைத்து வைத்துவிட்டுச் சாப்பாடு வேறே வைக்கிறார்களாம்... சாப்பாடு.

யாருக்கு வேண்டும் இந்தச் சாப்பாடு?

எல்லாவற்றையும் கீழே தள்ளிவிட வேண்டும் என்ற ஆத்திரத்துடன் அருகில் சென்றபோது வயிறு மிகவும் பசிப்பது தெரிந்தது. வலைத் தட்டை அகற்றிப் பார்த்தாள். சாதம், சாம்பார், ஏதோ காய்கறிகள், சிப்ஸ், முட்டைகூட....

சட்டென்று அமர்ந்து மடமடவென்று உண்டு முடித்தாள்.

இனி என்ன செய்வது?

அந்தப் பெரிய அறையைக் குட்டிபோட்ட பூனை போலச் சுற்றிச் சுற்றி வந்தாள் மாயா.

முழுதாக மூன்று நாள்கள் மாயா அதே அறைக்குள்ளேயே சுற்றிக் கொண்டிருந்தாள்.

வெளியே செல்லும் வாய்ப்பே அவளுக்குக் கிட்டவில்லை.

அந்த இரு மனிதர்களையும் மீறிக் கொண்டு ஒரு முறை வெளியே செல்ல முயன்றாள் மாயா.

அப்போது காவலுக்கு நின்றவன் ஒரு கையால் அவளைப் பற்றி வந்து படுக்கையில் எறிந்தான்.

கரத்தில் அவன் பிடித்த இடம் கன்றிச் சிவந்து நாள் முழுவதும் வலித்தது அவளுக்கு.

'மிருகம்' என்று திட்டினாள்.

ஆனால் அதுவும் அவனுக்குப் புரிந்தால் அல்லவோ?

அவர்களிடம் பேச்சுக் கொடுக்கும் முயற்சியிலும் அவளுக்கு முழுத் தோல்வியே.

அது மட்டுமல்ல.

காலை வேளைகளில் தேனீக்கள் போலப்பல மனிதர்கள் ஆணும் பெண்ணுமாய் ஏதோ மலை வாழ்கிற மக்களின் உடையில் அங்கேவந்து பெரிய பூங்காபோல் பரந்திருந்த தோட்டத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்தனர்.

வேலை முடிந்த பின் மந்திரம் போட்டாற்போல் அனைவரும் மறைந்து விடுவார்கள்.

அவர்களில் யாரிடமேனும் பேசிவிட எவ்வளவோ முயன்றாள் மாயா.

தமிழ், ஆங்கிலம் எதுவும் புரிபடாமல் இருக்கலாம்.

ஆனால் ஆதி மனிதர்களின் ஜாடை மொழி கூடவா புரியாமல் இருக்கும்?

இவளது தவிப்பைக் கொஞ்சமும் புரிந்து கொள்ளாமல் தங்களுக்குள் சிரித்துவிட்டுப் போனார்கள் அந்த மனிதர்கள்.

சன்னல் வழியே குதிக்க முடியுமா என்று எட்டிப் பார்த்தாள் மாயா.

அகன்ற அந்த 'கிரில்' வேலிக்கு இடையே உடலை ஒருவாறு நெளித்து வெளியே கொண்டு வரலாம் போலத் தோன்றியது.

ஆனால் அவள் சிறையிருந்த அறை இரண்டாம் மாடியில் தரையிலிருந்து முப்பது.... கூடவே இருக்கலாம் - அடிகளுக்கு மேல் இருந்தது.

அங்கிருந்து குதித்தால் நிச்சயம் எலும்பு முறிந்து விடும்.

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டால் கூடக் கையால் தடவி ஒரு வழி காணலாம். இங்கே கண் திறந்து இருந்தும் வழி எல்லாம் அடைக்கப்பட்டு இருப்பதைக் கண்டாள் அவள்.

மூன்று நாள்கள்! அப்பா அம்மா அவளைக் காணாமல் கலங்குவார்களே!

'எந்த மடக் கழுதை என்னை இப்படிச் சிறை வைத்திருக்கிறது?' என்று ஆத்திரமும் குழப்பமுமாகத் திணறினாள் மாயா.

இந்தத் திணறலுக்கு எல்லாம் நாலாம் நாள் முடிவு வந்தது.

அன்று இரவில் உணவு வரும் வேளை.

மனதில் எரிச்சலும் சோர்வுமாகச் சன்னலுக்கு வெளியே இருட்டை வெறித்துக் கொண்டு இருந்தாள் அவள்.

கதவு திறந்த ஓசை கேட்டும் அவள் திரும்பிப் பார்க்க வில்லை.

சாப்பாடாகத்தானே இருக்கும்.

“ஹலோ... மாயா!” என்று ஒரு குரல் கேட்கவும், விழுந்தடித்துக் கொண்டு திரும்பினாள் அவள்.

அங்கே புன்னகை மன்னன் போலச் சிறு ஏளனம் கலந்த சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான் சுதாகர்.

யார் என்ற புதிர் அவிழ்ந்தது. “ஓ, யூ...!” என்றாள் மாயா யோசனையோடு.

“யெஸ். ஐ மை ஸெல்ஃப் தி கிரேட்! என் பெயர் சுதாகரன்,” என்று லேசாகத் தலை தாழ்த்திப் பெருமையோடு நிமிர்ந்தான் அவன்.

## 5

ஏதோ திருப்தியோடு தனக்குள்ளேயே ரசித்துச் சிரிப்பவன் போல அவன் கிண்டலாகத் தலை தாழ்த்தி நிமிரவும் மாயாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

சட்டென்று நிமிர்ந்து, “வாட் இஸ் த ஜோக் மிஸ்டர்?” என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

“சிம்பிள்!” கண்களை லேசாக மூடித் திறந்தான் சுதாகர். “இட் இஸ் ஆன் யூ.”

கண்களில் கூர்மையுடன் அவனை முறைத்துப் பார்த்தாள் அவள், “வாட் டு யூ மீன்?”

அவனது பார்வையோ பாவமோ மாறவில்லை. “சொல்கிறேன், முதலில் சாப்பிடலாம், வா.”

"எனக்குச் சாப்பாடு ஒன்றும் வேண்டியதில்லை. நான் எங்கள் வீட்டுக்குப் போக வேண்டும். முதலில் இதெல்லாம் என்ன 'நான்சென்ஸ்' என்று சொல்," என்றாள் மாயா அதட்டலாக.

அவன் தமிழில் பேசவும் அவளும் தமிழிலேயே தொடர்ந்தாள்.

அவள் அதட்டியதைப் பொருட்படுத்தாமல் அவன் லேசாகச் சிரித்தான். "வா பேபி! முதலில் நன்றாகச் சாப்பிட்டு விடு. ஏனென்றால்... இதன் பிறகு நீ எப்போது சாப்பிடப் போகிறாயோ. பாவம்!" என்று தோளைக் குலுக்கினான்.

"நீ...நீ என்ன சொல்கிறாய்?"

"சாப்பிடச் சொல்கிறேன். அல்லது நான் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டு இருக்கச் சொல்கிறேன். கம்," லேசாக முன்னே சாய்ந்து அவள் கரத்தைப் பற்றினான் சுதாகர்.

"ஏய், என்னைத் தொடக் கூடாது. விடு," என்று உதற முயன்றாள் மாயா.

"சாரி பேபி, டைனிங் ரூம் செல்லும் வழியில் உன்னோடு ஓடிப்பிடித்து விளையாட எனக்குக் கொஞ்சமும் விருப்பம் இல்லை. பார், அதனால்தான். ஆனால் ஓடினாலும் பலன் இராது. எல்லாக் கதவுகளும் பூட்டியிருக்கின்றன. தேவையான இடத்தில் காவலும் வைத்திருக்கிறேன்."

ஏதோ தோட்ட வேலை செய்வதைச் சொல்வது போல அவன் சாதாரணமாகப் பேசுவதை எரிச்சலுடன் கேட்டாள் மாயா.

அவனை முறைத்துப் பார்த்து விட்டு, "ஓடமாட்டேன், விடு!" என்றாள் திடமாக.

"ஓ.கே. உன்னை நம்புகிறேன்," என்று அவள் கையை விடுவித்தான் அவன்.

ஆயிரம் ஆயிரம் கேள்விகள் மனதிலும் முட்டி மோதிச் சரியாக உண்ண முடியாமல் கொதித்தாள், மாயா.

"முடிந்த அளவு சாப்பிட்டுவிடு மாயா! குறைந்தது இரண்டு நாளேனும் பட்டினி கிடப்பாய் என்று நினைக்கிறேன்," என்று கரிசனம் போல ஆலோசனை கூறினான் அவன்.

குரலின் கரிசனத்தைக் கண்ணின் சிரிப்பு பொய்க்க வைத்ததை வெறித்துப் பார்த்தாள் மாயா.

அவன் பேச்சு முழுமையிலுமே ஓர் எள்ளி நகையாடல் ஊடுருவிக் கிடப்பதை மாயா உணர்ந்தாள். ஆயினும் இயல்பான தைரியமும், துடுக்கும் கை கொடுக்க, "ஏனோ?" என்றாள் வெடுக்கென்று.

வரிசையான வெண்பற்கள் தெரிய நகைத்தான் அவன். "நிதானமாகச் சொல்கிறேன், முதலில் சாப்பிட்டு முடி. இந்த வள்ளிக்கிழங்கு வறுவல் மிகவும் ருசி. போட்டுக் கொள். நானும் உலகம் முழுமையும் பார்த்து விட்டேன். சுமன் போல இந்த வறுவலைத் தயாரிப்பவர் வேறு யாரும் இல்லே..."

மாயாவின் கவனம் அவன் பேச்சில் இல்லை. கன்னம் வீங்க அவனை அடித்தபோதும், பிறகும்கூட அவன் அது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. ஒரு முறை வாலாட்டிய ஒருவனுக்குச் செருப்படியே கொடுத்து இருக்கிறாள். பொதுவாக ஒரு தடவை பட்டவன் ஒதுங்கி விடுவது வழக்கம்.

இவன் சிறைப் பிடிக்கும் அளவுக்குச் செல்வான் என்று அவள் எண்ணவில்லையே.

இப்போது 'பட்டினி' என்கிறான்.

அவனை அடித்ததற்குத் தண்டனையாகப் பட்டினி போடப் போகிறானா? எத்தனை நாள் பட்டினி போடுவான்? இரண்டு நாளேனும் என்கிறானே. 'மாயாவுக்குப் பசி தாங்காது!' என்று அம்மா கூறுவது நினைவு வந்தது. தாங்கித்தான் ஆக வேண்டும் போல் தெரிகிறது. தப்புவதற்குத்தான் வழியையே காணோமே. ஆனாலும் எப்படியாவது தப்பியே தீர வேண்டும். தப்பிச் சென்ற பிறகு இந்த ராஸ்கலை நன்றாக மாட்டி வைத்துப் பழிவாங்க

வேண்டும். அப்பா, அம்மாவை விட்டு நாலு நாளாகப் பிரித்து வைத்திருக்கிறானே, இவனை என்ன செய்தால் தகும்?

ஆத்திரமாக அவனை முறைத்தாள் மாயா.

கொஞ்சம் வறுவலை வாயில் அடைத்துக் கொண்டு நிமிர்ந்த சுதாகர் அவள் பார்வையைச் சந்தித்தான். "முதலில் உணவை முடித்து விட்டால் பிறகு ஆசை தீரும் மட்டும் என்னைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம்," என்றான் முறுவலோடு.

"ஆசைப் பட்டுப் பார்க்கும் அளவுக்கு நீ பிரமாத அழகோ?" என்றாள் மாயா உதாசீனமாக.

அவன் தோளைக் குலுக்கிவிட்டு, "நான் அழகோ இல்லையோ, நீ மிகவும் அழகாகத்தான் இருக்கிறாய்!" என்றான்.

எரிச்சலோடு உறுத்து விழித்துவிட்டு, "உன் பாராட்டுதலில் நான் எப்படி உச்சி குளிர்ந்து போனேன் தெரியுமோ?" என்று உதடுகளைக் காது வரை இழுத்துக் காட்டினாள் அவள்.

அவனுக்குச் சிரிப்பில் புரை ஏறிப் போயிற்று. செருமிச் சமாளித்துவிட்டு மேலே உண்ணலானான்.

ஆனால் அவளுக்கு உணவு இறங்க மறுத்தது. அடி வயிற்றினுள் அச்சம் மெல்லக் குளிர் பரப்பிற்று. அழகைப் பற்றிப் பேசுகிறானே! அப்படிப் பார்க்கிறானே! தப்பாக நடக்க முயற்சி செய்வானோ? சே, அன்று பட்ட அறை போதாதா? அதெல்லாம் இராது. அப்படியே அவன் முயன்றாலும் ஒன்றும் நடவாது. காந்தித் தாத்தாகூட எழுதி இருக்கிறாரே, ஒரு பெண்ணின் இசைவு இல்லாமல் அவளை யாரும் கெடுத்துவிட முடியாது என்று.

ஒருவாறு மனதைச் சமாதானம் செய்து கொண்டு மேலே சாப்பிடத் தொடங்கினாள். ப்ரியா, பாபு எல்லாம் அவள் இல்லாமல் எப்படிச் சாப்பிடுவார்கள்? அம்மா! அத்தையும், பிரேமி அம்மாவும்தான் எப்படியாவது கட்டாயப்படுத்திச்

சாப்பிட வைப்பார்கள்... குடும்பத்தின் நினைவில் மாயாவுக்குக் கண்ணைக் கரித்தது.

ஒருவாறு உணவு உண்டு ஒரு முடிவுக்கு வந்தாள்.

சுதாகரன் ஏதோ குரல் கொடுக்க, ஒருவன் தோன்றினான். அவளுக்கு வழக்கமாக உணவு கொணர்பவன்.

அவனிடம் இவன் ஏதோ சொல்லவும், அவனுக்கு வாயெல்லாம் பல் ஆயிற்று.

"அவனிடம் என்ன சொன்னாய்?" என்று ஆர்வத்துடன் விசாரித்தாள் மாயா.

"சில அயிட்டங்கள் வெகு ருசியாக இருப்பதாகச் சொன்னேன். ஆமாம், உன்னைவிடப் பெரியவர்களை நீ என்றுதான் சொல்வாயா?" என்று கேட்டான் அவன்.

"ஏன்?" என்று புருவத்தைச் சுருக்கினாள் மாயா. "அவரிடம் என்று சொல்லியிருக்க வேண்டுமா? வேலையாள் போலத் தோன்றியது."

"ம்... இரவில் பால், பழம் என்று ஏதாவது பழக்கம் உண்டா?" என்று வேறு பேசினான் அவன்.

"ஊகூம், எனக்குப் பாலே பிடிக்காது. அம்மாதான் ஏதாவது பழம் சாப்பிடும்மா என்பார்கள். ஒரே ஒரு வாழைப்பழம் சாப்பிடுவேன், ஆப்பிள் எல்லாருக்கும் பிடிக்கும். ஆனால் அது முதல் தேதி 'ட்ரீட்' மட்டும்தான்... அப்பா... இதோ பார், மிஸ்டர் சுதாகர்- என் பெற்றோர் என்னைக் காணாமல் எவ்வளவு கவலைப் பட்டுக் கொண்டு இருப்பார்கள் தெரியுமா? நீயானால்..."

அவன் அவள் பேசுவதைக் கவனியாமல் அந்த ஆளிடம் ஏதோ சொல்லி அனுப்பினான்.

பிறகு மாயாவிடம் திரும்பி, "வாயேன், மாடிக்குப் போய்விடலாம். இங்கே சுத்தம் செய்வார்கள்," என்று அவள் அருகே வந்தான்.

பழையபடி கையைப் பற்றி அழைத்துப் போக முயற்சி செய்யப் போகிறான் என்பதை உணர்ந்த மாயா சட்டெனப் பின்வாங்கி, "நானே வருவேன்," என்றாள்.

அவன் தோளைக் குலுக்கிவிட்டு, "நட..." என்று முன்னேறலானான்.

உடன் சேர்ந்து நடந்த மாயாவின் விழிகள் தப்பும் வழி தேடித் தேடிப் பயனின்றி அலைந்து சோர்ந்தன. அவன் சொன்னது போலவே பார்க்கும் இடம் எல்லாம் பூட்டும் காவலுமாய்த் தோன்றின.

அவள் சிறையிருந்த அறையின் முன்புறமாக ஒரு பெரிய ஹால் இருந்தது.

அங்கே ஒரு சோபாவில் அமர்ந்து கொண்டு, "உட்கார், மாயா," என்று உபசரித்தான்.

மாயா உதட்டைக் கடித்துக்கொண்டு நிற்கையிலேயே பணியாள் ஒருவன் இரு அழகிய தட்டுகளில் ஆப்பிள் துண்டுகளைக் கொண்டு வந்து டீபாயில் வைத்துவிட்டுப் போனான்.

ஒரு தட்டை அவள் புறமாக நகர்த்திவிட்டு, மற்றொரு தட்டை எடுத்துக் கொண்டு பின்னே சாய்ந்துகொண்டான் சுதாகர். "நீயும் எடுத்துக் கொள்," என்று சொல்லிவிட்டு, ஆப்பிள் துண்டுகளை நாசூக்குடன் உண்ணலானான்.

பலவந்தமாகக் கடத்தி வந்து அடைத்தும் வைத்துவிட்டு என்ன சாதாரணமாக ஒன்றும் நடவாதது போலப் பேசுகிறான். இவனுக்கு நெஞ்சில் துணிகரம் மெய்யாகவே மிகுதிதான்.

மாயாவுக்குச் சினம் மிகுந்தது. "எனக்குப் பழம் வேண்டாம். ஆனால்..." அவள் மேலே பேசுமுன் அவன் இடையில் புகுந்தான்.

"பிடிக்கும் என்றாயே!" என்றான், வியப்படைந்தவன் போல.

அவள் நிமிர்ந்து, "அது எங்கள் வீட்டில்," என்றாள் அழுத்தம் திருத்தமாக.

அவன் மேலும் வியப்பைக் காட்டினான். "ருசி கூடவா வீட்டுக்கு வீடு மாறும்? சாப்பிட்டுத்தான் பாரேன்."

மீண்டும் அதே எகத்தாளம்.

ஆத்திரத்துடன், "முதலில் இதெல்லாம் என்ன என்று சொல்," என்றாள் மாயா உத்தரவிடுவது போல.

"இதுவா? ஆப்பிள் துண்டுகள், உயர் ரகம். ஆஸ்திரேலியன் ஆப்பிள்."

"சீ! நிறுத்து. என்னை ஏன் கடத்திக் கொண்டு வந்தாய்? ஏன் இப்படிச் சிறை வைத்திருக்கிறாய்? சொல்லு. இதெல்லாம் எவ்வளவு பெரிய கிரிமினல் குற்றம் தெரியுமா? இதையெல்லாம் ஏன் செய்கிறாய்?"

"முதலில் ஆப்பிளைச் சாப்..."

அவன் முடிக்கும் முன்பே மாயா குறுக்கிட்டாள். "எனக்கு வருகிற கோபத்தில் அப்படியே தரையில் விசிறியடித்து விடுவேன் தெரியுமா? ஆனால் அது ஒரு நேஷனல் வேஸ்ட் - தேசிய வீணடிப்பு என்று சும்மா விட்டு வைத்திருக்கிறேன். தெரிந்து கொள். முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லுகிறாயா இல்லையா? சொல்லாவிட்டால் நான்..."

"என்ன செய்வாய்?" என்று சிரித்தான் அவன்.

"நான்...நான்..." டீபாயில் வைத்துவிட்டு எழுந்தான். "சொல்கிறேன் கேள்," என்று அவள் எதிரில் வந்து நின்றான்.

இரு கால்களையும் சற்றே அகற்றி வைத்து இடுப்பு பெல்ட் ஜிப்பில் விரலை மாட்டிக் கொண்டு ஓர் அலட்சிய பாவத்துடன் அவன் நின்ற விதம் அவள் மனதில் கலக்கம் தோன்ற வைத்தது.

அவனை அண்ணாந்து பார்க்கையில் உள்ளூரக் குளிர் கூட உண்டாயிற்று. உடல் சிலிர்த்தது.

அவளை ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்தான் அவன். பின் உதடுகள் ஏளனமாய் வளைய, "அன்று என்ன சொன்னாய்? நக்குகிற நாய்க்குச் செக்கு என்று தெரியுமா? சிவலிங்கம் என்று தெரியுமா என்றாயில்லையா? உம்..." என்று குரல் மாறாமல் கேட்டான்.

மாயா நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

அவன் பார்வை அவள் உடலெங்கும் கூர்மையுடன் மேய்ந்தது. "நான் நினைத்தால் உன்னை நிர்வாணமாக்கி என் நாய்களை விட்டே நக்க வைக்கலாம் என்று..."

"யேய்...!" என்றாள் மாயா, அதிர்ந்து போய்.

## 6

அருவருப்பும் அதிர்ச்சியுமான அவள் முகத்தைச் சலன மற்றுப் பார்த்தான் சுதாகர்.

"யா பேபி, முதலில் அப்படி நினைத்தது உண்மைதான்," என்று லேசாகத் தலையசைத்தான்.

"முன்புதானே - முன்புதானே நினைத்தாய்?" என்று லேசாய் மூச்சு விட்டுக் கொண்டு பேசினாள் மாயா.

"ஆமாம், மாயா. முதலில்தான் அப்படித் திட்டமிட்டேன். பிறகு அது சரியில்லை என்று விட்டுவிட்டேன்."

அவள் முக வெளுப்பு மெல்ல மாறி இரத்தம் பரவுவதைக் கண்களில் ஓர் ஏளனத்துடன் அவன் கவனித்தான். பிறகு தொடர்ந்தான். "ஏனென்றால் உன் அர்த்தம் அது இல்லையே. நீ என்னை அல்லவோ நாய் என்றாய். அதனால் நான்தான் உன்னை..."

"ஏய்!" துடிப்புடன் வேகமாக விலக முயன்றாள் மாயா.

ஒரு கையால் சுலபமாக அவளைப் பற்றி ஒரு சோபாவில் தள்ளினான் அவன். "செக்கு சிவலிங்கம்" என்று பழமொழி சொன்னாயே, விரல் உரலானால் உரல் எவ்வளவு பெரியதாகும்? என்றும் உங்கள் தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது தெரியுமா?"

"நீ உரலும் அல்ல, நான் விரலும் இல்லை. என்னை ஒரு நாளும் நீ நெருங்க முடியாது. நெருங்கினால்... அன்று பட்ட அறை மறந்துவிட்டதா?" என்றாள் மாயா துணிச்சலாகவே. அன்று அவனை அறைந்த ஒரு நாள் பூராவும் எரிந்தது. அவனுக்கு எப்படி வலித்திருக்கும்! அளவு மீறினால் இன்னும் கிடைக்குமே என்ற பயம் வராதா என்ன? அவள் தைரியமாக நிமிர்ந்தே பேசினாள். "மரியாதையாக என்னை அனுப்பிவிடு. அல்லது அடுத்த கன்னமும் பழுத்துவிடும்!" என்று எச்சரித்தாள்.

அவனது உதடுகள் மேலும் வளைந்தன. "நான் உன்னை நெருங்க வேண்டுமா? இடியட், மாயா, எங்கள் கேரளாவில் யானை பிடிப்பார்கள். பிடிக்கும் விதம் உனக்குத் தெரியுமா? முதலில் யானையைக் குழியில் விழ வைப்பார்கள். பிறகு பட்டினி போடுவார்கள். முழுப் பட்டினி."

திடுமென அவனது அலட்சிய பாவனை மறைந்தது. முறுக்கேறிய கம்பி போல் ஒரு விரைப்பு அவனிடம் தோன்றியது. "எத்தனை நாள் பட்டினி கிடப்பது என்பதை நீயே முடிவு செய்துகொள். ஆனால் உன் அடுத்த வேளைச் சாப்பாடு..." என்று அவளது அறையை ஒட்டியபடியே இருந்த இன்னொரு கதவைக் காட்டினான். "அது என் பெட்ரூம். அங்கே நீயாக வரும்போதுதான் கிடைக்கும். அதாவது நீ செக்காக மாறி இந்த நாயின் நக்கலுக்கு இடம் தரும்போது..." என்று தெளிவாகக் கூறி முடித்தான்.

சில கணங்கள் மாயாவுக்கு எதுவும் மெய் போலக் காணவில்லை. சை, இப்படி யெல்லாம் யாரும் செய்ய

மாட்டார்கள்; இப்படியெல்லாம் யாரும் பேசமாட்டார்கள். ஊகூம். இதெல்லாம் பொய். சும்மா அவளைப் பயம் காட்டுகிறான்.

நெஞ்சின் பதைபதைப்பை மறைக்க முயன்றபடி, "சும்மா மிரட்டாதே!" என்றாள் நடுங்கும் குரலில்.

"சத்தியம் பண்ணவா?" என்றான், அவன்- பழையபடி கிண்டல் குரலில்.

"சீச்சீ! பெரிய வார்த்தை எல்லாம் பேசாதே. இதோ பார். எஸ்... எங்கள் அப்பா என்னைத் தேடிக் கொண்டு சீக்கிரம் வந்துவிடுவார். நீ..நீ நிச்சயம் மாட்டிக்கொள்வாய். பார், அப்புறம் எத்தனை வருடங்கள் தீட்டுவார்களோ? போ...பேசாமல் வெளியில் என்னை விட்டு விட்டால் உனக்குக் கஷ்டமில்லை. ஏய்! என்னை அப்படி அசிங்கமாய்ப் பார்க்காதே. ம்ம். மரியாதையாக என்னை விட்டுவிடு."

தன் அறையைச் சுட்டிக்காட்டி, "அங்கே நீ வந்த பிறகு..அது இப்போதே ஆனாலும் சரிதான்..." என்றான் அவன் அதே உதட்டோர ஏளன வளைவுடன்.

ஆத்திரத்துடன் அவனை முறைத்துப் பார்த்தாள் மாயா. சட்டென முகத்தைத் திருப்பிக் கொண்டு மடமடவென்று தன்-அதாவது தான் சிறையிருந்த அறைக்குள் சென்று கதவை ஓங்கி அறைந்து சாத்தினாள்.

அவன் முகத்திலேயே அறைவது போல பிரமை. சாத்திய பிறகுதான் சாவி உள்ளே இல்லை என்பது நினைவுக்கு வந்தது.

கதவை மீண்டும் திறந்து, "ஏய், இந்தச் சாவி எனக்கு வேண்டும்," என்றாள் அதட்டலாக.

"அது என்னிடமே பத்திரமாக இருக்கட்டும் பேபி," என்றான் அவன் முறுவலுடன்.

பதிலாக மீண்டும் கதவை ஓங்கிச் சாத்தினாள். அவன் இங்கே வருவானோ? வந்தால் விழியைத் தோண்டி விடுவேன். நாலே அறையில் சுருள வைத்து விடுவேன். என்னை யார் என்று

நினைத்தான் ராஸ்கல்! அவன் பழகிய அந்தக் கழுதை மாதிரி நினைத்தானோ? குடலைப் பிடுங்கி விடுவேன். ஆயிரம் துணிச்சலான செயல்கள் தோன்றிய போதும் எதற்கும் இருக்கட்டும் என்று கட்டிலை இழுத்துக் கதவைத் திறக்க முடியாதபடி ஒட்டிப் போட்டாள்.

அவள் கட்டிலைக் கஷ்டப்பட்டு இழுத்துக் கொண்டு இருந்தபோது கதவில் சாவி திரும்பும் ஓசை கேட்டது.

ஓடிவந்து இழுத்துப் பார்த்தாள். பூட்டியிருந்தது.

அவனாகத்தான் இருக்க வேண்டும். தடி ராஸ்கல், இருக்கட்டும். அப்புறம் இவனைப் பற்றி அப்பாவிடம் நன்றாகச் சொல்லி மாட்டி வைக்க வேண்டும். ஆனால் முதலில் அப்பாவைப் பார்ப்பது எப்படி?

இரவு வெகு நேரம் விழித்து உருண்டு புரண்டு கொண்டே இருந்ததில் மாயாவுக்குக் காலையிலேயே நல்ல பசி.

கட்டிலைப் பழைய இடத்தில் இழுத்துப் போட்டு விட்டுக் குளித்து முடித்தாள்.

மணி ஒன்பதாகியும் காலையிலேயே வரும் காபியைக் கூடக் காணவில்லை.

அப்படியானால் அவன் மெய்தான் பேசினானோ? சும்மா வெறுமனே மிரட்டவில்லையோ?

'மாயா பசி தாங்க மாட்டாள்!' என்ற அம்மாவின் குரல் துல்லியமாகக் காதில் ஒலித்தது. சங்கடத்துடன் நெளிந்தாள்.

சற்று நேரம் பொறுத்துப் பார்த்துவிட்டு எழுந்து சென்றாள். கதவு பூட்டியிருக்கவில்லை என்று கண்டதும் மெல்லக் கதவைத் திறந்தாள்.

அவன் ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்துக்கொண்டு இருந்தான்.

கோடு போட்ட ஸ்போர்ட்ஸ் பனியன். அரைக்கால் சட்டை

உருண்டு திரண்டிருந்த தசைக் கோளங்களைப் பார்க்கையில் அவளுக்குத் திக்கென்றது. இவன் நாலு அறையில் சுருளுகிறவனாகத் தெரியவில்லையே.

உதட்டைக் கடித்துக் கொண்டு சற்று நேரம் நின்று பார்த்தாள். அவன் நிமிர்வதாக இல்லை.

பொறுமை இழந்து. "எனக்குப் பசிக்கிறது." என்றாள் மொட்டையாக.

அவன் மெல்ல நிமிர்ந்தான். "உன் காலை உணவு என் அறைக்குள் இருக்கிறது. நேற்றே சொன்னேனே..." என்றான் சாவதானமாக.

"ஏய். விளையாடாதே. எனக்கு நிஜமாகவே ரொம்பப் பசிக்கிறது."

"நல்லது. வருகிறாயா?" என்று எழுந்தான் அவன்.

"சீ! போ!" கற்றைக்கூந்தல் துள்ளிவிழ விரைவாகத் திரும்பிச் சென்று கட்டிலில் போய் விழுந்தாள் மாயா. கதவை அறைந்து சாத்தி விட்டுத்தான்.

இதென்ன கஷ்டம். இந்த அப்பா அவளைத் தேடி எப்போது கண்டுபிடிப்பார்?

மாயா பட்டினியால் சாகுமுன் வந்து விடுவாரா?

'கண்ணுக்குத் தெரியாத எதிரி காலி வயிறு.'

'பசித்த வயிறு உடலை மட்டுமின்றி உள்ளத்தையும் சக்தி இழக்கச் செய்து விடும்.'

"பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்."

எப்போதோ படித்ததெல்லாம் நினைவுக்கு வந்து அவளைக் கலங்க அடித்தன.

இல்லை இல்லை. அதை எல்லாம் நினைக்கக் கூடாது. தைரியமாக இருக்க வேண்டும். தைரியமாக இருந்தே ஆக வேண்டும்.

இரண்டு நாள்கள் பட்டினியை மாயா பிடிவாதமாகவே தாங்கிக் கொண்டாள்.

உடல் சோர்ந்து துவண்டது. இங்கிருந்து மீளக்கூடும் என்ற எண்ணமே தளர்ந்தது.

தாய், தந்தை, வீடு என்றெல்லாம் நினைத்து அழுகை அழுகையாய் வந்தது.

அவர்களை எல்லாம் பாராமலே சாகப் போகிறோம் என்ற பயம் மெல்ல எழுந்தது.

கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பயம் உறுதியாகி அவளை நடுங்கச் செய்தது.

சுதாகர் அவ்வப்போது சீண்டும்போது தன் அச்சத்தையும் கண்ணீரையும் காட்டாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

ஆனால் அதை அவன் அறியாமல் இல்லையே.

குறிப்பிட்ட யானையின் சக்தி ஒடுங்குவதைத் திருப்தியுடன் காணும் வேட்டைக்காரன்போல மாயாவின் தவிப்பை அவனும் கவனித்தான்.

மூன்றாம் நாள் மாலையில் மாயா மிகவும் சோர்ந்து படுத்து விட்டாள்.

அரை மயக்கம் போலக் கட்டிலில் அவள் சாய்ந்து கிடந்தபோது கதவைத் திறந்து கொண்டு சுதாகர் வந்தான், ஒரு கேக் துண்டை உண்டபடி

மாயாவுக்கு வாயில் நீர் ஊறிற்று. கட்டுப்படுத்த முடியாமல் அவளது கண்கள் ஆவலுடன் கேக்கில் பதிந்தன.

அவள் பார்வையைப் புரிந்து கொண்டு சிரித்தான் அவன், “பசிக்கவில்லையா, மாயா?”

பசிக் களைப்பை மீறிய சினத்துடன் அவனை முறைத்தாள் மாயா. “பசியாமல் எப்படி இருக்கும்? நீதான் பட்டினி போட்டிருக்கிறாயே!” கண்களில் திரண்ட நீரைத் தலையைத் திருப்பி அவன் காணாமல் துடைத்தாள்.

"பின்னே சாப்பிட வாயேன்," என்றான் அவன் இலகுவாக.

"என் சதையையே தின்னும் அளவுக்கு எனக்குப் பசிக்கவில்லை. அந்த அளவுக்கு ஒரு நாளும் பசிக்கவும் பசிக்காது!"

"ம்!" அவன் தோளைக் குலுக்கிவிட்டு, கேக்கை உண்பதில் முனைந்தான்.

பாதி உண்டதும், "வேண்டுமா?" என்று நீட்டினான்.

மாயா திரும்பிப் பார்த்தாள்.

அவனது வலது கரம் கேக்குடன் நீண்டிருக்க, இடக்கரம் அவளது கையை ஏந்தத் தயாராக முன்னே நீண்டிருந்தது.

வேட்டைக்காரன். கண்ணி வைத்துவிட்டுக் காத்திருக்கும் வேட்டைக்காரன்.

வெறுப்புடன் மீண்டும் திரும்பிக் கொண்டாள் மாயா.

"உனக்கு என்னென்ன பிடிக்கும் மாயா? சாப்பாட்டு விஷயத்தில் கேட்கிறேன்."

"எது பிடித்தால் உனக்கு என்ன?"

"இல்லை, இன்று இரவு உணவுக்கு முருங்கைக்காய் காரக் குழம்பு, மசாலா முட்டை, நேந்திரங்காய் வறுவல் எல்லாம் செய்யச் சொல்லலாம் என்று ஐடியா. அனேகமாக இன்றேனும் சாப்பிட வருவாய் என்று நினைக்கிறேன்."

மாயாவின் இதழ்கள் ஒரு கணம் துடித்தன. "சுதாகர்! என்னை விடுதலை செய்துவிடு. என் அம்மாவிடம் என்னை அனுப்பிவிடு. உன்னைப் பற்றி புகார் ஏதும் செய்யாமல், உன் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து விடுகிறோம். ப்ளீஸ் சுதாகர்... ப்ளீஸ் சுதாகர்..."

அவன் சிரித்துக்கொண்டே நின்றான்.

அடக்க மாட்டாமல் பெருகிய கண்ணீருடன் அவள் படுக்கையில் குப்புற விழுந்தாள்.

அன்றிரவு அவளது அறைக்கு இரண்டு ரொட்டித் துண்டுகள் வந்தன. சின்ன ஸ்லைஸ்கள்தான். ஆனால் அவளுக்கு அமிர்தம் போலத் தோன்றின. ஒரே நிமிடத்தில் உண்டு முடித்து விட்டாள்.

ஆனால் இந்த அரைக்கால் வயிற்று உணவு இருந்த பசியைப் பயங்கரமாகக் கிளப்பி விட்டு விட்டது.

வயிற்றில் கையை வைத்து அழுத்தியபடியே நிமிர்ந்த வளுக்குக் கதவின் அருகே சுதாகர் நிற்பது தெரிந்தது.

ஒரு விதமான வெற்றிப் புன்னகையுடன் கதவு நிலையில் சாய்ந்தபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

ஏன்? அவளாக அவன் அறைக்குப் போய் உண்ண வில்லையே. பின் ஏன் இப்படிச் சிரிக்கிறான்? மனதில் தோன்றிய குழப்பத்தை வயிற்றின் கோரப்பசி ஒதுக்கித் தள்ளியது.

சுயமதிப்புக்குக் கட்டுப்பட்டு வாய் கேளாததைக் கண்களின் கெஞ்சலில் அறிந்து அவன் மேலும் சிரித்தான். “இன்னமும் பசித்தால் அங்கே வந்து சாப்பிடு!” என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

வயிற்றுக்குள் தீதான் எரிந்ததோ? போய் எதையேனும் தின்று விடலாமா என்றுகூட மாயாவுக்கு ஒரு கணம் தோன்றி விட்டது.

மறுவினாடியே அந்த எண்ணத்தின் பயம் மனதில் உறைக்கவும் நடுநடுங்கிப் போனாள்.

‘நானா? நானா இப்படிக்கூட நினைத்தேன்?’

நம்பாமல் திணறும்போதே அவனது புன்னகையின் பொருள் புரிந்து போயிற்று.

ஓர் அளவுக்கு மேல் பசியால் களைப்பும் சோர்வும் மிகுமே தவிர, பசியுணர்வு மரத்து விடுகிறது. அதைத் தூண்டிவிடவே அவன் அந்த ரொட்டித் துண்டுகளைத் தந்திருக்கிறான். மேலும்

வேண்டும் என்று தானாகவே வாலைக் குழைத்துக் கொண்டு வருவாள் என்று எண்ணம்.

அந்த எண்ணம் அவளுக்கும் - அது ஒரு கணம்தான் என்றாலும் - தோன்றிவிட்டதே. அதுதான் அவளுள் திகிலைக் கிளப்பி விட்டது.

இப்படியே தொடர்ந்து நடந்தால் என்ன ஆகும்?

எழுந்து சென்று வயிற்றுத் தீ அணைய நிறையத் தண்ணீரைக் குடித்தாள்.

முதலில் தலையைச் சுற்றிக் கொண்டு வரவும் படுத்து விட்டாள்.

சற்றுப் பொறுத்து மீண்டும் எழுந்து அமர்ந்து யோசித்தாள்.

இங்கிருந்து எப்படியும் தப்பியாகவேண்டும். அதுவும் உடனே செய்தாக வேண்டும்.

அப்பா வந்து காப்பாற்றும் வரை காத்திருப்பது தப்பு.

எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் தப்பிச் சென்றே ஆக வேண்டும். ஆனால் எப்படி?

கதவைத் தாண்டிச் செல்ல வழியில்லை.

பெரும்பாலும் அவன் கதவைப் பூட்டியே வைத்திருந்தான். திறந்திருந்த சமயங்களில் கதவை எதிர் நோக்கியவாறே சோபாவில் அமர்ந்திருந்தான்.

'உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கு போல!'

திடுமெனச் சென்று அவனைத் தாக்கிவிட்டு ஓடுவதும் எளிதில் நிறைவேறக் கூடியதாக அவளுக்குத் தோன்றவில்லை. ஏனெனில் மேலுக்கு ஓர் அலட்சிய பாவனையைப் பூசியபடி இருந்தாலும், அவன் எச்சரிக்கையுடனே இருப்பது நன்கு தெரிந்தது.

அப்படியே தாக்கினாலும் வெற்றி வாய்ப்பு நூற்றுக்குப் பத்து சதவிகிதம்கூட இராது. பட்டினியால் போனது போக மீதியுள்ள

அவள் பலம் அவனது கட்டான உடல் காட்டிய பலத்தில் பத்தில் ஒரு பங்குகூடத் தேறுமோ என்னவோ?

சன்னல் மூலம் வழியில்லை.

வேறே?

சட்டென நிமிர்ந்தாள் மாயா. அந்த அறையின் இன்னொரு கதவு!

முதல் நாள் அன்று இந்தக் கதவை ஒட்டிக் கட்டிலை இழுத்து மாயா போட்டிருந்ததும் சுதாகர் திடுமென அறைக்குள் வந்து நின்றான்.

அவள் திகைத்தபோது அவன் கேலிச் சிரிப்புடன் அந்தக் கதவைக் காட்டினான்.

பிறகு அந்தக் கதவை அவன் பூட்டவில்லை.

காரணத்தை அவள் கேளாதபோதே அவனாகவே சொன்னான்.

“இது ஒரு சின்ன பால்கனிதான் மாயா! உயரம் கிட்டத்தட்ட இந்த சன்னல் அளவுதான். எனவே அங்கிருந்து குதித்து ஓடிவிட முடியாது - இந்த பால்கனியின் இன்னொரு கதவு என் அறைக்குள் திறக்கும். அந்தக் கதவின் வழியாக நீ வந்தாலும் எனக்குத் திருப்திதான்!” என்று கண் சிமிட்டினான்.

அவன் சொன்னது மெய்தான் என்பதை மாலையில் சென்று உறுதிப்படுத்திக் கொண்டாள் மாயா.

அவன் சொன்னது போலவே அதே உயரம்தான். சன்னல் அளவுக்கு.

ஆனால்...

முதல் மாடிப் பகுதியில் ‘சன்ஷேட்’ போல ஒன்று தெரிந்தது. கை வழுக்கினாலும், கால் வலித்தாலும் இடையில் சற்று நின்று செல்ல வழியிருக்கும்.

ஒரே ஒரு கயிறு மட்டும் கிடைத்தால் தப்பி விடலாம்.

ஆனால் காவல் காவல் என்பானே... சுற்றிலும் நன்கு கவனித்துப் பார்த்தாள் மாயா. சென்டிமீட்டர் சென்டிமீட்டராக அலசினாள். வெளியே யாரையும் காணோம். தூரத்தில் ஒரு மரத்தடியில் ஒன்றை ஒன்று சாதுவாய்த் துரத்தி விளையாடிக் கொண்டிருந்த மூன்று நாய்களைத் தவிர ஒரு குருவி, காக்கை - சே, இரவில் அவை எங்கே வரும். - ஓர் ஆந்தை, கோட்டானைக் கூடக் காணவில்லை. வெரிகுட்.

ஆனால் இப்போது கயிறு வேண்டுமே! ஊசி குத்திய பலூனாக உற்சாகம் இழந்தாள் மாயா.

மீண்டும் சோர்வுடன் படுக்கையில் அமர்ந்தாள்.

கயிற்றுக்கு எங்கே போவது? இது என்ன தமிழ் ஸ்டண்ட் சினிமாவா? கயிறு, கத்தி, கபடா எல்லாம் உள்ள இடத்தில் சிறை வைக்க?

மனதில் வேதனையுடன் சாய்ந்தாள். மீண்டும் நிமிர்ந்தாள். கயிறு இல்லைதான். ஆனால் பெட்ஷீட் இருக்கிறதே. இதை மூன்று... இல்லை, நாலாகக் கிழித்து முடிபோட்டால் கிட்டத்தட்ட கீழேவரை போய்விடுமே. அப்புறம் ஒரே ஓட்டம்தான். இந்தத் தடியனிடம் விடுதலை. என்ன ஆனந்தம்!

நாளைக் காலை கதவைத் திறந்து பார்க்கையில் 'பே' என்று விழிப்பான். அவன் முகத்தில் லிட்டர் லிட்டராய் அசடு வழியும்.

அசடு வழிய அவன் நிற்பதைப் பார்க்கவேண்டும் போல மாயாவுக்கு ஆசை தோன்றியது. அதற்கு இனி வழியே இல்லை என்று உள்ளூரச் சிரிப்புடன் எண்ணிக் கொண்டாள்.

பெட்ஷீட்டைக் கிழித்து முடிபோடக் கைகள் துருதுருத்தன. மெல்லத் தடவிப் பார்த்தாள். வழவழவென்று பளிச்சென்ற டிசைனுடன் வெகு அழகான பெட்ஷீட். இதைக் கிழிப்பதே தப்பு போலத் தோன்றியது, ஒரு கணம். ஆனால் வேறு வழியில்லை.

சிறு வருத்தத்துடனேயே பெட்ஷீட்டில் கையை வைத்தவளுக்கு இன்னொரு தயக்கம் பிறந்தது.

ஒரு வேளை அவன் சீண்ட வந்தால்?

மனதை அடக்கிக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தாள் மாயா.

அவளது முன்னெச்சரிக்கை சரியே என்பது போலக் கதவு திறந்தது.

தலையை மட்டும் உள்ளே நீட்டி, "வரவில்லையாமாயா?" என்றான் சுதாகர், முறுவலுடன்.

'இளிப்பைப் பார். பல்லை யெல்லாம் தட்ட வேண்டும்!' என்று ஆத்திரத்துடன் எண்ணிக் கொண்டாள் மாயா.

"இன்னும் எத்தனை நாள்?" என்று தோளைக் குலுக்கிவிட்டு அவன் போய்விட்டான்.

கதவில் சாவி சுழன்ற ஓசை கேட்ட பின்னரும் அவள் அசையவில்லை.

பக்கத்து அறையில் நடமாட்டங்கள் எல்லாம் ஒய்ந்து, விளக்கு அணைந்த பின்னரும், 'பெட்டர் ஸேஃப் தன் ஸாரி!' என்று நினைத்தபடி அசையாமலேயே இருந்தாள்.

இனிப் பயம் இல்லை என்ற நிச்சயம் மனதில் தோன்றிய பின் அவசரமாகச் செயல்பட்டாள் மாயா.

பசியிலோ பதற்றத்திலோ கை கால்கள் நிதானமின்றிப் பறந்தன.

எப்படியோ சமாளித்துக்கொண்டு பெட்ஷீட்டைப் பல்லால் கடித்து நான்காகக் கிழித்தாள். இறுக முடி போட்டு ஒரு நீளக் கயிறுபோல் இணைத்து லேசாக முறுக்கிக் கொண்டாள்.

பால்கனியின் கிரில்லில் ஒரு முனையைக் கட்டினாள். இழுத்துப் பார்த்துவிட்டு மெல்ல இறங்கத் தொடங்கினாள்.

தப்பி விடப் போகிறோம் என்ற உற்சாகத்தில் பசியின் களைப்புகூட மறந்து போயிற்று.

"ஸன் ஷேடில்" சற்று நின்று இளைப்பாறிக் கொண்டு அடுத்த பகுதிப் பயணத்தைத் தொடங்கினாள்.

மேலும் பாதி இறங்கி இருப்பாள்.

திடுமென ஒரு நாயின் பலத்த குரைப்புச் சத்தத்தில் திடுக்கிட்டுப் போனாள்.

வழுக்கிய கைப்பிடியை இறுக்கியபடி கீழே பார்த்தாள். அம்மாடி! ஒன்றல்ல, மூன்று பயங்கரங்கள்! அவன் சொன்ன காவலா?

மேல் மாடியிலிருந்து பார்க்கையில் சாதுவாய் சின்னதாய் விளையாட்டுத்தனத்துடன் தெரிந்த அந்த மூன்று நாய்களா?

பற்கள் அத்தனையையும் (அந்த நேரத்திலும் நாற்பத்திரண்டா என்ற நினைவு மாயாவுக்கு வந்தது.) பயங்கரமாகக் காட்டிக்கொண்டு தாவி அவளைக் கடித்துக் குதறி விட முயல்வன போல எம்பிக் குதித்தவாறு இருந்தன, அந்த மூன்று நாய்களும்.

சும்மாவே மாயாவுக்கு நாய் என்றால் கொஞ்சம் பயம். அவளது வகுப்புத் தோழி ரோஸி இறந்ததிலிருந்து அதிகமாகவே பயம்.

இந்த நாய்களிடம் மாட்டிக் கொள்ளவே கூடாது. கூடவே கூடாது.

வந்த வழியே ஏற முயன்ற மாயாவின் கைகள் இற்று விடும் போல் வலித்தன.

தோல்வியின் சோர்வு·வேறு.

கைவலி பொறுக்க முடியாமல் போனபோது, தன்னை அறியாமல், “சுதாகர்! ஏய் சுதாகர்!” என்று உரக்கக் கூவி அழைத்து விட்டாள்.

மறுமுறை அவள் அழைக்குமுன், அவன் அறையில் விளக்கு ஒளிர்ந்தது. வெற்று மார்பும், இடையில் பைஜாமாவுமாக வெளியே பால்கனிக்கு வந்து குனிந்து பார்த்தவன் பலமாகச் சிரிக்கத் தொடங்கினான்.

"என் கை வலிக்கிறது," என்றாள் மாயா கோபமாக.

மீண்டும் அவன் உள்ளே மறைந்து போனான்.

விரைவிலேயே கீழே வந்து நின்று கொண்டு விழுந்து, விழுந்து மேலும் சிரிக்கத் தொடங்கினான்.

"ஏய், நான் எப்படி இறங்குவது?" என்றாள் மாயா ஆத்திரத்தோடு.

"இன்னும் கொஞ்சம் இறங்கி வா."

"நாய்..." என்றாள், அச்சத்துடன்.

"நான் பார்த்துக் கொள்கிறேன். இறங்கு. ஹூம். இவ்வளவு தான் உன் பெட்ஷீட் நீளமா? அப்படியே குதி. பிடித்துக் கொள்கிறேன்."

அவன் கைகள் அவளது தொடையில் அழுந்தின.

அவள் போர்வையை விடவும் மெல்ல மெல்ல இறக்கினான்.

அவளது குர்த்தா சுருண்டு வழவழப்பான வெற்று இடையில் அவன் கரமும் உடலும் அழுந்தின.

அவள் முகம் வெகுவாக மாறிவிட -

"ரொம்பத் தாங்க்ஸ்!" என்று விலகி நின்று சட்டையை இழுத்து விட்டுக் கொண்டாள் மாயா. காந்தல் எடுத்த உள்ளங் கைகளை ஊதிவிட்டுக் கொண்டு, "இந்த நாய் கடிக்குமா?" என்று வினவினாள்.

"சும்மா கடிக்காது. ஆனால் என் எல்லையை விட்டு நீ வெளியேற முயன்றால் துண்டு துண்டாகக் குதறி எறிந்துவிடும்," என்று சொல்லிவிட்டு நாய்களிடம் ஏதோ சொன்னான்.

"பொய்...பொய்."

"சோதித்துப் பாரேன்," என்றான் அவன் ஏளனமாக.

அதற்கு அவளது மனம், உடல் இரண்டிலுமே பலம் இல்லை போலும்.

"ஹூம்..." என்று பெருமூச்சுடன் உள்ளே நடந்தாள் அவள்.

தன் அறைக் கதவைத் திறக்க முயன்றபோது, அது பூட்டியிருப்பதைக் கண்டதும், "கதவைத் திற!" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு எங்கோ பார்த்துக் கொண்டு நின்றாள்.

"தேவை இல்லை, பேபி," என்று வெகு அருகில் அவன் குரல் கேட்கவும், திடுக்கிட்டுத் திரும்பினாள் மாயா.

"ஏய், தொடாதே. என்னைத் தொடக் கூடாது," என்று அதட்டியபடி, தன் இடையில் பதிந்த அவன் கரத்தை விலக்க முயன்றாள்.

"முட்டாள்!" என்று குனிந்து அவளைத் தூக்கினான் சுதாகர்.

பசியினாலும், தோல்வியினாலும் உடலும் மனமும் ஒருங்கே சோர்ந்திருந்த மாயாவை வெல்வது அவனுக்குக் கொஞ்சமும் கடினமாயில்லை.

## 7

அதிகாலையிலேயே மாயாவின் தூக்கம் அல்லது மயக்கம் கலைந்தது.

வழக்கம் போல மூன்று தரம் 'முருகா சரணம்' சொல்லிவிட்டு எழுகையில் அருகில் சுதாகரைக் காணவும் ஒரு கணம் மருண்டாள்.

மறுகணம் எல்லாம் நினைவுக்கு வந்து விட்டது. தாங்க மாட்டாத அருவருப்புடன் எழுந்து விலகினாள்.

*சீச்சீ...*

தவிப்புடன் அவசர அவசரமாக உடைகளைச் சீர் செய்து கொண்டு வெளியே ஓடினாள்.

பேயால் துரத்தப்பட்டவள் போல விழுந்தடித்துக் கொண்டு மாடிப் படிகளில் இறங்கி வெளியே விரைந்தாள்.

அது வாயிலா, வழியா, தப்பும் மார்க்கமா என்று எதையுமே அவள் காணவில்லை.

மூச்சே சிரமமாகித் தவித்த நெஞ்சுக்கு ஒரு வடிகால் போலக் கால்கள் வெறி கொண்டாற் போல் நடந்தன.

சற்று அருகிலேயே நாய்கள் தொடர்வதைக்கூட அவள் உணரவில்லை.

அப்பா, அம்மா, வீடு, மல்லிகை, கல்லூரி, அப்பா... என்னென்னவோ உருவமற்று ஒழுங்கற்று அவளது மார்புக் கூட்டினுள் முட்டி மோதின.

என்ன ஆயிற்று? அம்மா எங்கே? அப்பா.. அவர் சொல்லும் காந்திக் கதைகள் - முன் ஹாலில் மாட்டியிருக்கும் காந்தித் தாத்தா படம். "தாத்தா..." என்று முகத்தை மூடிக்கொண்டு விசும்பி அழுதாள்.

அழுகைக்கு மேல் ஆத்திரமாக அவரிடமே கேட்டாள். ஒரு பெண்ணின் சம்மதம் கொஞ்சமேனும் இல்லாமல் அவளை யாரும் கெடுத்துவிட முடியாது என்று சீதையை உதாரணம் காட்டிச் சொன்னீர்களே. நான் அணுவளவேனும் சம்மதித்தேனா? என்னை மாசுபடுத்திவிட்டானே. சீரழித்து விட்டானே. எப்படி? நீங்கள் கூடவா பொய் சொன்னீர்கள்? உங்கள் வார்த்தையை நம்பித் தைரியமாக இருந்தேனே. இப்போது என்ன செய்வேன்? அம்மா, அப்பா, அப்பா, அம்மா....

மனதோடு புலம்பிக் கொண்டே கண்ணீருடன் நடந்தாள் மாயா.

வழியில் விழி இல்லாததால் நீரில் ஊறியிருந்த பாத்திரம் ஒன்றில் கால் புதைந்தது.

உடம்பில் உணர்வு வந்தவளாகக் குனிந்து பார்த்தாள், காலெல்லாம் சேறு.

'சை, இது வேறா?' என்று மீண்டும் அழுகை பொங்கி வந்தது.

குழந்தை போல் வாய்விட்டு விம்மி அழுது கொண்டே, சென்று அருகில் இருந்த செய் ஊற்றில் காலை நீட்டினாள்.

மெல்லச் சேறு கரைந்து நீங்கிக் கால் முன் போலப் பிரகாசித்தது.

பார்த்துக் கொண்டே இருந்த மாயாவின் கண்ணீர் நின்றது, கண்களில் ஒரு சீற்றம் பிறந்தது.

எவனோ ஒருவனின் உடல் பலம் மிகுதியாகிப் போனதாலேயே அவள் அழுக்காகி விடுவாளா? அவளது உடம்பை அவன் ஜெயித்ததாலேயே அவளைக் கெடுத்து விட முடியுமா?

இது எப்படி நியாயமாகும்?

எந்த வகையில் இதை ஒத்துக் கொள்ள முடியும்?

நாய் நக்கி விட்டதாலேயே சிவலிங்கம் செக்காகிவிட முடியுமா?

'ஒரு பெண் சம்மதிக்காமல்...' என்று காந்தி சொன்னது இதைத்தானோ? மாசு மனதால் ஏற்படுவது என்றுதான் சொன்னாரோ?

மனம் இணங்கி அவள் ஒப்பி நடந்திருந்தால்தான் அவள் மாசுபட்டவள் எனலாமோ?

மனம் உறுதியோடு மறுதளித்திருந்தால் புற உடல் எவ்வளவு அசுத்தப்பட்டிருந்தாலும் அவள் சுத்தமானவள் என்றுதான் கொள்ள வேண்டும்.

இந்தக் கருத்தில்தான் காந்தித் தாத்தா அந்த வார்த்தைகளைச் சொல்லியிருக்க வேண்டும்.

நிச்சயமாக அப்படித்தான் இருக்கும்.

மற்றப் படி பஞ்சாபில் இதுபோலக் கொடுமைக்கு ஆளாகித் திரும்பிய பெண்களைத் தயக்கமின்றி மணக்கவேண்டும் என்று சொல்லியிருப்பாரா? நிச்சயமாக மாட்டார்.

என் மனம்... அதில் நிச்சயமாக இல்லை. அது வெகு சத்தியமான வார்த்தை.

பின் நான் எப்படி மாசு பட்டவள் ஆவேன்?

எச்சில் தெறித்துவிட்டதாலேயே நான் ஓர் எச்சில் பழமாகி விடுவேனா?

இல்லை, இல்லை, ஒரு நாளும் இல்லை.

என் மனம் சுத்தமாக இருக்கையில், நானும் எப்போதும் சுத்தமானவளே.

கலங்கித் தவித்த மாயாவின் மனம் ஒருவாறு தெளிவடைந்தது. இந்த எண்ணத்தை ஆதாரமாகப் பற்றிக் கொண்டு மீண்டும் தலை நிமிர்ந்தாள் அவள்.

ஓர் அசிங்கம் நேர்ந்து விட்டதே என்ற வருத்தம் மறையவில்லைதான்.

ஆனால் மாயாவின் மனதில் ஒரு தெளிவு உண்டாகி விடவே, அவள் நடையில் சோர்வு இருந்தபோதும், தொய்வு இல்லை.

மெல்ல நடந்து வீட்டினுள் சென்றபோது குறுஞ் சிரிப்புடன் அவளை எதிர்கொண்டான் சுதாகர்.

"செக்கா, சிவலிங்கமா மாயா?" என்றான் எகத்தாளமாக

பார்வையாலே அவனை வெட்டிவிட்டு, "தராதரம் தெரியாமல் நாய்கள்தான் நக்கிற்று என்றால் சிவலிங்கம் தன் மதிப்பிழந்து செக்காகிவிடுமா?" என்றாள் மிடுக்காக.

அவன் சிரிப்பு மறைவதைத் திருப்தியுடன் கண்டாள் மாயா.

"அப்படி என்றால்...?" என்று கேட்டான் சுதாகர்.

"நீதான் மகா கெட்டிக்காரனாயிற்றே. கண்டு பிடித்துக் கொள்," என்றாள் மாயா அலட்சியமும் வெறுப்புமாக.

ஒரு கணம் விழிகளை இடுக்கியவன் மறுகணம் புருவங்களை உயர்த்தினான். "அதாவது நீயாக இணங்கி வந்து விடவில்லை. அதனால் மகா சுத்தமானவள்... உன் பாஷையில் மதிப்பிற்குரிய சிவலிங்கம், அப்படித்தானே?"

"பரவாயில்லையே, கண்டு கொண்டாயே."

"வாழையிலை முள்ளில் பட்டாலும், முள் வாழையிலையில் பட்டாலும், கிழிவது வாழையிலைதான்."

"நான் வாழையிலை அல்ல. ஆனால் உவமைதான் வேண்டும் என்றால் இன்னொன்று கேட்டுக் கொள். சகதி தெறித்து விட்டதாலேயே யாரும் சாக்கடையாகிப் போவது இல்லை."

"அப்படியானால் நீ மாசுபட்டு விடவில்லையா?"

"இல்லை இல்லை இல்லை. என் மனம் அணுவளவும் வளைந்து விடவில்லை. மனம் சுத்தமாக இருக்கையில் எந்த விதத்திலும் நான் அசுத்தம் அடைந்துவிட மாட்டேன். இந்த நிலையை மாற்ற உன் தாத்தா வந்தால் கூட முடியாது," என்றாள் மாயா அழுத்தம் திருத்தமாக.

"இந்தத் திமிரை அடக்காமல் நானும் விடப்போவது இல்லை," என்றான் அவன் வேகத்துடன்.

"இது திமிர் அல்ல. தன்னம்பிக்கை, எந்த நிலையிலும் என் மனம் சுத்தம் கெடாது என்பதில் உள்ள மன உறுதி."

"அதை உடைக்க எனக்கு வழி தெரியும்."

"இருக்கவே இருக்கிறதே, பட்டினி போடுவது!" என்று கூறிவிட்டு அலட்சியமாகத் திரும்பி நடக்க முயன்றாள் மாயா.

பசியாலும் வேதனையாலும் களைத்த உடல் தடுமாறியது.

அருகில் இருந்த சோபாவைப் பிடித்துக் கொண்டு, முடிந்த அளவு உறுதியோடு நடக்கத் தொடங்கினாள்.

“சாப்பிட வா,” என்று அழைத்தான் அவன்.

மாயா தயங்கக்கூட இல்லை.

அவன் முன்னே வந்து நின்று வழிமறித்து, “டைனிங் ரூமில்,” என்றான் அவன் தொடர்ந்து.

அண்ணாந்து பார்த்து அவன் முகத்தை ஆராய்ந்தாள் அவள்.

கவனத்துடன் துடைத்து விட்டது போல, அவன் முகத்தில் சற்றும் உணர்ச்சியே இல்லை. ஆனால் சில கணங்களில் அவன் கண்களில் சிரிப்பு தோன்றிவிட்டது. “டைனிங் ரூமில்தான். ஒரு பெண்ணை மடக்கப் பட்டினி போடுவது தவிர வேறு வழிகளும் இருக்கின்றன,”

அலட்சியமாகத் தலையை வெட்டினாள் மாயா. தோளைத் தழுவி நின்ற கருங்கூந்தல் ஒருமுறை துள்ளி விழுந்தது.

“மெல்ல மெல்ல, கழுத்துச் சுளுக்கிக் கொள்ளப் போகிறது,” என்று ஏளனத்துடன் எச்சரித்தான் அவன்.

அவன் கூறிய வழிகள் என்னவாக இருக்கக்கூடும் என்ற யோசனையோடு அவனுடன் நடந்தாள் மாயா.

அன்று மாலையில் தன் தோட்டத்தை மாயாவுக்குச் சுற்றிக் காட்டினான் சுதாகர்.

அந்தத் தோட்டத்திற்குத் தனித்தன்மை இருந்தது. மயில் போல, மான்போல என்றெல்லாம் சர்க்கஸ் வேலை அங்கே இல்லை. அதே மாதிரி, கட்டம், வட்டம் என்று கடுமையான ஒழுங்கு முறைகளும் இல்லை. செடிகளும் புதர்களும் தன்னியல்பாய் வளர்ந்திருந்தன. ஆனால் அதிலேயும் கருத்தை உறுத்தாத ஓர் ஒழுங்கும் இருந்தது.

காய்ந்த மலர்கள் என்று ஒன்று கூடக் காணமுடியவில்லை. தழை, களை என்று ஏதும் இல்லை.

செடிகள் இயல்பான வளர்ச்சியும் அழகுமாய்ச் செழுமை காட்டி நின்றன.

பாராட்டும் விதமாக மாயா இதைச் சொல்லவும், அவன் இதழ்களில் இயல்பான ஒரு முறுவல் மலர்ந்தது. "என் சொந்த ஐடியாவாக்கும்!" என்றான் பெருமிதத்துடன்.

"என்ன ஆச்சரியம்!" என்று மாயா விழிகளை மலர்த்தினாள்.

"ஏனோ?" என்று கேட்காமலேயே, அவன் கண்களில் எச்சரிக்கை கலந்த ரசனை தோன்றிவிட்டது.

"இல்லை... உன் ஐடியா என்றால் செடிகளுக்கு உரம், தண்ணீர் எல்லாவற்றையும் நிறுத்தியிருப்பாயே. இந்தச் செடிகள் இப்படிச் செழிப்பாக வளர்ந்து பூத்திருக்கின்றனவே, என்ற ஆச்சரியந்தான்," என்று புன்னகையுடனேயே குத்தினாள் மாயா.

"இன்று காலையில்தானே பெண்களை இலை கிளை என்று ஒப்பிட்டுப் பேசக்கூடாது என்று யாரோ சொன்னார்கள்.." என்று இழுத்தான், அவன் - கிண்டலாக.

நிஜமான வியப்புடன் அவனைப் பார்த்தாள் மாயா. "பரவாயில்லையே, உனக்கும் நகைச்சுவை இருக்கிறதே. இது அதைவிடப் பேராச்சரியம்!"

அவன் வாய்விட்டுச் சிரித்ததை ஆச்சரியத்துடன் கண்டாள் மாயா.

இப்படிச் சிரிப்பவன் எப்படி வில்லனாக இருக்க முடியும்?

சிரித்து முடித்துவிட்டு, "பொதுவாக இந்தப் பகுதியில் செடிகளுக்குத் தண்ணீர் அதிகம் தேவைப் படாது, மாயா! மண்ணும் வளமான கறுப்பு மண், அவ்வப்போது கொஞ்சம் உரம், நீர் அவ்வளவுதான். மலைப் பகுதி என்பதால், அதிக நோயும் வருவதில்லை," என்று விளக்கினான் அவன்.

மலைப் பகுதி என்றதும், காலை நேரங்களில் தோட்ட வேலை செய்ய வரும் மலை ஜாதியினர்கள் நினைவு வந்தது அவளுக்கு. "இங்கே என்ன மொழி பேசுகிறார்கள் மிஸ்டர் சுதாகர்? தமிழ், இங்கிலிஷ், ஹிந்தி ஒன்றுமே தெரியவில்லையே," என்று அவனிடம் விசாரித்தாள்.

"பாவம், பேசிப் பார்த்தாயாக்கும்!" என்று சிரித்தான் அவன். "பயப்படாதே, கண்ணே! இங்கே பேசுவது கன்னடம் கலந்த மலையாளம். சாதாரணமாக மலையாளம் பேசுகிறவர்களுக்குக் கூடப் புரியாது. எனவே நீயும் நானும் கொஞ்சும் மொழி வேறு யாருக்கும் புரியாது. அப்புறம் அந்த 'மிஸ்டர்' எல்லாம் போடாதே. ரொம்பவும் அந்நியமாய்த் தெரிகிறது. நேற்றைய ராத்திரிக்குப் பின் பொருத்தமும் இல்லை," என்று சீண்டினான்.

சற்று அமைதி பெற்றிருந்த மாயாவின் முகம் மீண்டும் கலங்கியது. ஆத்திரமும் வெறுப்புமாக, "பெருமையா? மூன்று நாள் பட்டினி போட்டுவிட்டுப் பிறகு அந்தப் பெண்ணிடம் பலப் போட்டியில் ஜெயித்திருக்கிறாய் அல்லவா? மிகமிகப் பெருமைப்படத்தக்க விஷயம்தான். முகம்மது அலியை வென்றால் கூட இவ்வளவு கர்வம் உண்டாகக் காரணம் இராது," என்றாள் குத்தலாக.

முகம் கறுக்க, அவளைத் தன்புறம் திருப்பினான் சுதாகர்.

"தொடாதே, என்னை," என்று திமிறித் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றும் முடியாமல் போகவே, அசையாமல் நின்று அவனை வெறித்தாள் மாயா.

அவன் குரல் மெதுவாகவும் நிதானமாகவும் வெகு அழுத்தமாகவும் எழுந்தது. "என்னிடம் ஜாக்கிரதையாகப் பேச வேண்டும் மாயா! எனக்குக் கோபமூட்டுவது உனக்கு நல்லதல்ல!" என்ற எச்சரிப்புடன் அவளை விடுவித்தான்.

நெஞ்சு சில்லிட்டதை மறைக்க முயன்றபடி, 'பெரிய துர்வாச முனிவர் சபித்து விடுவார்!" என்று முணுமுணுத்தாள் மாயா.

இரவு உணவின் போதே மாயாவுக்கு வயிற்றினுள் பிசையத் தொடங்கிவிட்டது. இரவு வருகிறதே. அவன் வழி எதுவாக இருக்கும்?

'கடவுளே! எதுவானாலும் தாங்கும் பலத்தை எனக்குக் கொடு. அதற்குள் எப்படியாவது அப்பாவை இங்கே கொண்டு சேர்த்து விடு. முருகா முருகா...'

உணவு முடிந்தபின் ஹாலில் அமர்ந்து ஓர் ஆங்கில வாரப் பத்திரிகையைப் புரட்டினாள் மாயா.

கண்ணில் பட்ட எழுத்துக்கள் ஏதும் அவளது கருத்தில் பதியவில்லை. மீண்டும் மீண்டும் மனம் அவன் சொன்ன அந்த வேறு வழிகளிலேயே சென்று நின்றது. 'இவன் ஏதும் சித்திரவதைச் சேம்பர் வைத்திருப்பானோ? இந்த மூன்று மாடி வீட்டில் அப்படி ஓர் இடம் இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லைதான்... ஆனால் இந்த அப்பா ஏன் இன்னமும் அவளைக் காப்பாற்ற வில்லை? மெட்ராஸ் போலீஸ் மிகவும் மூளை உள்ளது என்பார்களே.'

திடீரென, "மாயா, புத்தகம் தலைகீழாக இருக்கிறது." என்றது அவன் குரல்

தூக்கிவாரிப் போட்டவளாகப் புத்தகத்தைத் திருப்பினாள் மாயா. பார்த்தால் இப்போதுதான் தலைகீழாக இருந்தது. "சரியாகத்தானே...' என்று திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

அவன் சிரித்தான். "ஒரு வார்த்தைகூடப் படித்த மாதிரித் தெரியவில்லையே..." என்று கை மறைவில் நாசூக்காக ஒரு கொட்டாவியை வெளியேற்றினான். "தூக்கம் வரவில்லையா, மாயா?"

'இ...இல்லை."

"பொய், தூக்கம் வந்துவிட்டது. ஆனால் பயமாகவும் இருக்கிறது. அதுதானே....நீ கோபமாகப் பார்த்தாலும் அழகாகத் தான் இருக்கிறது. போகட்டும். நீ போய்த் தூங்கு மாயா! ஆனால்

நேற்றுப்போல் முயற்சி ஏதும் செய்யாதே. நாய்கள் குதறிக் கொன்றுவிடும்."

அவனை வெறித்து நோக்கிவிட்டு எழுந்து நடந்தாள் மாயா.

கதவருகில் அவள் சென்றதும், அவன், "கட்டிலை எல்லாம் முட்டாள்தனமாக இழுத்துப் போட்டுக் கொண்டிராதே மாயா! நான் உள்ளே வர நினைத்தால் இன்னொரு கதவைப் பயன்படுத்த முடியும் அல்லவா? ஆனால்...இன்று நன்றாகத் தூங்கு. குட் நைட்!"என்றான்.

பதில் சொல்லாமல் உள்ளே சென்றாள் மாயா.

மறநாள் காலையில் அறை சுத்தம் செய்யும் பையன் வந்தான்.

சுதாகரன் வந்த நாளில் இருந்து அறையைச் சுத்தம் செய்துவிட்டு அழுக்குத் துணிகளை எடுத்துச் செல்வது இவன் தான்.

அன்று அவனைப் பார்த்ததும் மாயாவுக்கு ஒரு ஐடியா பிறந்தது. மெல்ல வெளியே எட்டிப் பார்த்தாள். சுதாகரைக் காணோம்.

சுத்தம் செய்யும் பையன் அழுக்குத் துணி எடுக்கக் குளியல் அறைக்குள் சென்றபோது பின்னோடு தானும் சென்றாள். அவன் திகைத்து வாயைப் பிளந்தான்.

அவனிடம் தன் கையில் கிடந்த வாட்சைக் காட்டினாள். கழற்றி, 'உனக்கு வேண்டுமா?' என்பது போல ஜாடையில் வினவினாள்.

பையனின் கண்களில் ஆவலைக் கண்டதும் மேலும் ஜாடையில் பேசத் தொடங்கினாள்.

பேச்சு எளிதாக இல்லை. முதலில் கடிதம் என்றாலே அவனுக்குப் புரியவில்லை.

பலப்பல ஜாடைகள் மூலம் மிகவும் சிரமப்பட்டு ஒருவாறு அவனுக்கு அவள் புரிய வைத்தது இதுதான்.

மாயா அவனிடம் ஒரு கடிதத்தைத் தருவாள். அதை அவன் போஸ்ட் செய்துவிட வேண்டும். செய்து விட்டால் அவளுடைய வாட்சை அவனுக்கே அவள் கொடுத்து விடுவாள்.

அவனது தலை உருட்டலில் அவளுக்கு அளவிலா ஆனந்தம் உண்டாயிற்று.

ஹாலில் மேசைமீது பென் ஸ்டாண்டைப் பார்த்த நினைவு அவளுக்கு இருந்தது. அவன் அறியாமல் ஒரு பால்பாயிண்ட் பேனாவை எடுத்து வந்தாள்.

மதிய உணவின்போது சில சோற்றுப் பருக்கைகளைப் பாண்ட் பாக்கெட்டில் மறைத்துக் கொண்டு வந்தாள்.

படிக்கவென்று ஒரு பத்திரிகையையும் கொணர்ந்தாள். அதில் அதிகம் படித்திராத பக்கம் ஒன்றை எடுத்து நாலுபுறமும் மடித்து ஒட்டி ஒரு தபால் உறை போலச் செய்து கொண்டாள்.

இன்னொரு தாளில், “அப்பா! ரகுப்பா வீட்டுக்கு வந்த சுதாகர் என்னைத் தன் வீட்டில் அடைத்து வைத்திருக்கிறான். உடனே வந்து காப்பாற்றுங்கள்!”என்று எழுதினாள்.

அவள் செய்து வைத்த கவரில் வைத்து மூடி ஒட்டினாள்.

தந்தையின் பெயரைக் கவரில் எழுதும்போது நெஞ்சு அடைத்தது. சமாளித்துக் கொண்டு விலாசத்தை எழுதி முடித்தாள்.

துவைத்து ‘அயர்ன்’ செய்த ஆடைகளை வைக்க அவன் வந்தபோது கவரையும் க்டிகாரத்தையும் அந்தப் பையனிடம் கொடுத்தாள்.

ஸ்டாம்பு பற்றி ஜாடை செய்து பார்த்தாள். ஆனால் அவனுக்குப் புரிய வைக்க முடியாததால் விட்டு விட்டாள். பரவாயில்லை. அப்பாவே ஃபைன் கட்டி வாங்கிக் கொள்ளட்டும். கடிதத்தைப் படித்ததும் அப்பா போலீசோடு வருவார். இவனை... இந்தச் சுதாகரை விலங்கு மாட்டி அழைத்துக் கொண்டு போவார்கள். அங்கே கோப்பைக் கஞ்சி குடிக்கட்டும்...

பாவம்தான். ஆனால் பாவம் என்ன பாவம். அவன் செய்திருப்பதற்கு நன்றாகப் படட்டும்.

வீட்டில் அம்மா மடியில் படுத்து ஒரு மூச்சு அழ வேண்டும்.

அப்புறம் அப்பாவிடம் மட்டும் இதைச் சொல்ல வேண்டும். அவள் முதுகில் தட்டி, 'யூ ஆர் கரெக்ட், பாப்பா! காந்தி அதே அர்த்தத்தில்தான் சொன்னார்,' என்பார். அப்புறம் இதையெல்லாம் கெட்ட கனவாக மறந்து விட்டு நிறையப் படித்துப் பட்டம் வாங்க வேண்டும்.

அப்புறம் ரகு... ரகுவிடம் இதைச் சொல்லலாமா? அப்பாவிடம் ஞாபகமாகக் கேட்க வேண்டும்.

ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் அந்தப் பூ மனதில் முட்டி மோதி வெடித்தன.

"என்ன கனவு?" என்ற சுதாகரின் குரல் கேட்கவும், மாயா தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு நிமிர்ந்தாள்.

"ஒ..ஒ...ஒன்றுமில்லை."

அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "மணி எட்டு ஆகிறது. சாப்பிட வா," என அழைத்துச் சென்றான்.

இரவு உணவு முடிந்ததும், முன்தினம் போலவே இருவரும் சற்று நேரம் பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டு இருந்தனர்.

திடுமென, "உன் வாட்ச் எங்கே, மாயா?" என்று வினவினான் சுதாகர்.

குப்பென்று வியர்த்தது அவளுக்கு. 'அது...அது...அது...' என்று திக்கினாள்.

"தொலைந்து போயிற்றா?"

"ஆ...ஆமாம்..." என்று அவன் சொன்ன காரணத்தை அவசரமாகப் பற்றிக் கொண்டாள் மாயா.

"அடடா...ச்-சுச்சு!" சற்று அதிகமாகப் பரிதாபப் படுகிறானோ?

"கை மொட்டையாக எப்படியோ தெரிகிறது. பரவாயில்லை. இதையேனும் போட்டுக் கொள்," என்று பான்ட் பாக்கெட்டினுள் துழாவி ஒரு வாட்சை எடுத்து அவள் கையில் மாட்டி விட்டான்.

மாயாவின் இதயம் தொண்டைக்குள் வந்து துடித்தது.

ஏனெனில் அது அவளது கைக்கடிகாரமேதான். பாவி எப்படிக் கண்டுபிடித்தான்?

"உன்னிடம் வாங்கியதும் நேராக என்னிடம் வந்து தந்தான்," என்றான், அவன் - ஏளனமாக.

மறுபாக்கெட்டில் கை விட்டு இன்னொன்றையும் எடுத்தான். அரும் பாடு பட்டு அவள் உருவாக்கிய கவர்.

அவளிடம் காட்டிவிட்டுக் கிழித்துக் குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டு அவள் எதிரே வந்து நின்று கொண்டு அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

"என் ஆளுக்கே லஞ்சம் கொடுக்க உனக்கு என்ன துணிச்சல் இருக்க வேண்டும்? உன்னை..."

"என்ன செய்து விடுவாயாம்?" கைகளைப் பின்னே சேர்த்துக் கொண்டு விரைப்பாக நிமிர்ந்து அவனை முறைத்தாள் மாயா.

ஆனால் ஏறித் தணிந்த மார்பகத்தில் அவன் பார்வை பதியவும் சட்டெனக் குன்றிப் போனாள்.

திரும்பி நின்று கொண்டு, "எனக்குக் கட்டுவதற்குச் சேலை வேண்டும்," என்று எரிச்சலுடன் மொழிந்து விட்டுத் தன் அறையை நோக்கிப் போனாள்.

இரண்டே எட்டில்' அவள் எதிரே வந்து நின்று வழியை மறைத்து, "இன்று அங்கே..." என்று தன் அறையைக் காட்டினான்.

அடுத்த வழியைக் காட்டப் போகிறானோ?

மீண்டும் தொண்டைக்குள் வந்து துடித்தது மாயாவின் இதயம்.

8

சுதாகர் தன் அறையைக் காட்டியதும் ஒரு கணம் மாயாவின் உடல் ஆடிப் போயிற்று. ஆனால் தன் பயத்தை அவனுக்குக் காட்டாமல் அசையாது நின்றாள்.

“நீயாகவே வந்து விடுவது நல்லது, மாயா,” என்றான் அவன் எச்சரிப்பது போல்.

அந்தக் குரலில் மாயாவின் பயம் மறைந்து சினம் தலை தூக்கியது. பூச்சாண்டி காட்டுகிறானா? “நெவர்! ஒரு போதும் இல்லை!” என்றாள் அழுத்தம் திருத்தமாக.

“நெவர் ஸே நெவர். ஏனெனில் அடுத்த வினாடி நடப்பதுகூட நமக்குத் தெரியாது,” அவன் குரல் மிகவும் நிதானமாகத் தெளிவாக ஒலித்தது.

“போடா!” என்று கூந்தல் ஒரு தரம் துள்ளி விழ அலட்சியமாகத் தலையைத் திருப்பினாள் மாயா.

அதே அலட்சியத்துடன் அவனைச் சுற்றிக் கொண்டு செல்ல முயன்றவள், அடுத்த வினாடியில் வலியால் துடித்துப் போனாள்.

அவளது வலக்கை அவனிடம் சிக்கியிருந்தது. அதை என்ன செய்தானோ? மாயா தவியாய்த் தவித்தாள், “ஏய் வலிக்கிறது. மெய்யாகவே ரொம்...ப வலிக்கிறது. சுதாகர் ஸ்...சு.” விடுவித்துக் கொள்ளச் செய்த முயற்சிகள் வலியை அதிகமாக்கி விடவே அவனிடம் கெஞ்சத் தொடங்கினாள். “ப்ளீஸ் - விட்டுவிடு சுதாகர்! ரொம்பவும் வலிக்கிறது ப்ளீஸ்.”

“விடுகிறேன். ஆனால் நீ என் அறைக்கு வர வேண்டும்.” அதே குரல் மாறாமல் நிபந்தனை விதித்தான் அவன்.

'போடா' என்றதற்காகத் தண்டிக்கிறான் என்று முதலில் நினைத்திருந்தாள் மாயா. விஷயம் வேறு என்று தெரிந்ததும் பல்லைக் கடித்துக் கொண்டு அசையாது நின்றாள்.

அவன் அழுத்தத்தை மிகுதிப்படுத்த, மிகுதிப்படுத்த, வலி தாளாமல் தன்னை மீறி முனகிய போதும் அவள் தன் உறுதியில் பிறழவில்லை.

அவனும் விடுவதாகத் தெரியவில்லை.

வலி தாளாமல் மாயாவுக்குக் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தபோது, அபயம் என்பது போல், எங்கோ ஒரு மணி ஒலித்து விட்டுவிட்டு மூன்று முறை அந்த ஒலி கேட்டது.

புருவத்தில் முடிச்சுடன் ஒரு கணம் அசைவற்று நின்றான் சுதாகர். பிறகு, "இன்று தப்பி விட்டாய்," என்று அவள் கையை விட்டுவிட்டு அவசரமாக எங்கோ போனான்.

கை விடுபட்டு விட்டதா? அவன் அங்கே இல்லாததால் கை விடுபட்டுத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தாள் மாயா. ஆனால் வலி சற்றும் குறையவில்லையே.

மெல்லக் கையைத் தூக்கிப் பார்த்தாள் மாயா. சிறு அசைவையும் தாங்க மாட்டாமல் துவண்டாள். அச்சத்துடன் விரல்களை அசைத்துப் பார்த்தாள். விரல்களில் சுவாதீனம் இருப்பதாகவே தெரியவில்லை.

அவள் கை ஒடிந்து போயிற்று

இனி இந்தக் கையால் அம்மா செய்யும் பிரிஞ்சியை அள்ளிச் சாப்பிட முடியாது; அப்பாவுக்கு ஸ்வெட்டர் பின்ன முடியாது; ப்ரீக்கு டிசைன் போட முடியாது.

எண்ணும்போதே கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது. விம்மலும் விக்கலுமாய் அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

'அப்பா! என்னால் தாங்க முடியவில்லையே! என்னை மீட்க ஏன் இன்னும் வரவில்லை? எப்போது வருவீர்கள், அப்பா?' என்று புலம்பி அழுதாள்.

காலையில் பார்க்கையில் கை நன்றாக வீங்கிப் போயிருந்தது.

ஒரு கதையில் வில்லன் ஒரு சிறுவனின் விரல், கை, கால் என்று வெட்டியதாகப் படித்த நினைவு வந்தது. இவனும் கை கால் என்று ஒடிப்பானோ?

கற்பனை விளைவித்த பயங்கரத்தில் உதடுகள் நடுங்கின.

சமாளித்துக் கொண்டு இடக் கையாலேயே பல் துலக்கிக் குளித்து முடித்துவிட்டு பால்கனியில் நின்று நெடுவானத்தை வெறித்தாள், 'அப்பா! சீக்கிரம் வாருங்களேன்...'

"ஹேய்! காபி குடிக்க வரலையா?" என்று சுதாகரின் குரல் உற்சாகத்துடன் கேட்டது.

அவனுக்கு என்ன? உதட்டைப் பல்லால் அழுத்திக் கொண்டு அசையாமல் நின்றாள் மாயா.

"ஏன் மாயா? வாயேன்," என்று அவள் தோளைப் பற்றித் திருப்பினான் சுதாகர்.

"என்னைத் தொடக் கூடாது," என்று சீறினாள் அவள்.

"ஓ.கே. பேபி, வா காபி குடிக்கலாம்," என்று விடாப்பிடியாக அவளை அழைத்துச் சென்றான் அவன்.

உதடுகளை அழுந்த மூடிக் கொண்டு இடக் கையாலேயே காபியைக் கலந்து கொண்டாள் மாயா.

புருவங்களைச் சுருக்கினான் அவன். "ஏய், ஏன்... ஆகா. மறந்தே போனேன் பார். கை வலிக்கிறதா மாயா?" என்று எழுந்து அருகில் வந்தான்.

கையை மறைக்க முயன்றாள் மாயா.

"ஷ்... காட்டு மாயா. பிறகு கை ஏதும் முடம்கிடம் ஆகிவிடப் போகிறது..." என்று அவள் கையை இழுத்துப் பார்த்தான் அவன். "அடடா, வீங்கி விட்டதே. விரலை அசைக்க முடியவில்லை, இல்லையா? ரொம்பவும் வலிக்கிறதா, பேபி?" என்று மெல்ல வருடினான்.

"வலியா? சேச்சே! என்ன சுகமாய்..." என்று குத்தலாகத் தொடங்கிய போதும் முடிக்க முடியாமல் விழிகளில் நீர் பொங்கி வழியலாயிற்று மாயாவுக்கு.

"ஹூம் ஹூம்... அழக் கூடாது. ஸாரி பேரி. இவ்வளவு வலி தாங்குவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை, ஆனால் இப்போது இன்னும் கொஞ்சம் கூடுதலாகவே வலிக்கும். பொறுத்துக் கொள்கிறாயாம்மா?"

சந்தேகத்துடன் அவனைப் பார்த்தாள் மாயா.

அவன் இளம் புன்னகையுடன், "நம்புமாயா, கையில் மூட்டு பிசகிவிட்டது. பழைய இடத்திற்குத் திருப்ப வேண்டும். அதிகம் வலிக்கும்தான். ஆனால் இப்போதைய வலியைப் பார்த்தால் கை நிரந்தரமாக முடமாகிப் போகும். அது கூடாதல்லவா? குறைந்த பட்சம் என்னைப் போல எவனையாவது அறைவதற்காக வேனும் கை வேண்டும்," என்று விஷமத்துடன் சேர்த்துச் சொன்னான் அவன்.

"மெய்யாகவே கையைக் குணமாக்குவாயா, அல்லது ஒரேயடியாக..."

"நிஜம் மாயா! இப்படியே விட்டு விட்டால்தான் கை நிச்சயமாகப் போய்விடும்," என்று மெதுவான குரலில் நிதானமாக இயம்பினான் சுதாகர்.

இந்தச் சில நாள்களில் அவனுடைய இந்தக் குரலின் மெய்த்தன்மையை மாயா புரிந்து கொண்டிருந்தாள். எனவே வேறு எதுவும் பேசாமல் கையை அவன் பக்கம் நீட்டினாள்.

"பொறு..." என்று உள்ளே சென்று ஏதேதோ எடுத்து வந்தான் அவன்.

அவள் அருகில் அமர்ந்து, முகத்தைத் திருப்பிக் கொள்ளச் சொல்லிவிட்டுக் கையைப் பார்க்கலானான்.

வலியை எதிர்பார்த்துத்தான் மாயா இருந்தாள். ஆனால் இவ்வளவு கடுமையான வலியை அல்ல.

ஆனால் எதிர்பார்த்திருந்த அவன், அவள் துள்ளிய போதும், கை அசையாமல் பார்த்துக் கொண்டான். வேதனை தாளாமல் அவள் மூர்ச்சையுற்ற போதும் அவன் கருமமே கண்ணாக இருந்தான்.

மாயாவின் கண்ணிமைகளை யாரோ குளிர்ந்த பஞ்சினால் மிருதுவாக வருடினார்கள்.

"ஷ்-எழுப்பாதீர்கள், அப்பா!" என்று சிணுங்கியபடியே சாய்ந்திருந்த தோளில் இன்னமும் இதமாகத் திரும்பி முகத்தைப் புதைத்துக் கொண்டாள் மாயா.

'அப்பாவின் தோள் இன்னும் மெத்து மெத்தென்று இருக்குமே!' என்று தோன்றவும் சிரமத்துடன் விழிகளைத் திறந்து பார்த்தாள். ஓ! இவனா? விலகினாள்.

"விழித்துக்கொள் மாயா! இதோ இந்தத் தண்ணீரைக் குடி," என்றான் சுதாகர்.

குளிர்ச்சியான பனிநீர் சில்லென்று நாவில் உறைத்தது. வேண்டாம் என்று தடுப்பதற்காகத் கையைத் தூக்கினாள். 'ஏய்...இதென்ன? அப்பாடியோவ், பாக்ஸிங் போகிறவள் போல இவ்வளவு பெரிதாகக் கட்டிவிட்டாயே! அடடே... சுதாகர்! எனக்கு விரலை அசைக்க முடிகிறதே!" என்று குதூகலத்துடன் கூவினாள் மாயா.

"மணிக்கட்டையும் அசைக்கலாம். இரண்டு நாள் பொறுமையாக இருக்கவேண்டும். ஆனால் உன் பொறுமை பற்றி எனக்கு அதிக நம்பிக்கை இல்லாததால் சிம்பு வைத்துக் கட்டி விட்டேன்,"என்றான் அவன்.

"ரொம்ப தாங்க்ஸ் சுதாகர்! கை ஒடிந்து போயிற்று என்று நினைத்தேன்...உன்னிடம் ஃபெல் பென் இருக்கிறதா சுதாகர்? இந்த பாண்டேஜ் வெள்ளையை மாற்ற ஏதாவது படம் வரையலாமே!" என்றாள் யோசனையோடு.

"உனக்கு வெண்மை பிடிக்காதா?" என்று எழுந்து போய் பெல்பென் ஸெட்டை எடுத்து வந்தான் அவன்.

"ஊகூம், அப்பாவுக்குப் பிடிக்காது. அப்படியே எனக்கும் பிடிக்காமல் போய்விட்டது. உனக்கு வரையத் தெரியுமா? எனக்கு இடக் கை வரைய வராது."

சில விநாடிகள் பேசாதிருந்தான் அவன். பிறகு உதட்டில் சிறு ஏளன முறுவலுடன் அவளது கைக் கட்டில் ஒரு கோமாளியின் படத்தை வரைந்தான்.

"பூ வரைவாய் என்று எதிர்பார்த்தேன்," என்றாள் மாயா ஏமாற்றத்தோடு. பிறகு, "ஆனாலும் நன்றாகவே வரைந்திருக்கிறாய், சுதாகர்! அதற்கு ஒரு தாங்க்ஸ்!" என்று எழுந்தாள் மாயா.

சற்று நின்று, "என்னை விட்டுவிடேன் சுதாகர்! தயவு செய்து... ப்ளீஸ்..." என்றாள் கெஞ்சுதலாக.

"நான் உன்னைக் கட்டியா வைத்திருக்கிறேன்?" என்றான் அவன் கேலியாக

"உன் நாய்களைக் கட்டிப் போட்டாலும் போதும்," என்றாள் வேகத்தோடு. மீண்டும் குரல் மாற, "ப்ளீஸ் சுதாகர்! உன்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று அப்பாவிடம் சொல்கிறேன், உனக்கு ஒரு கஷ்டமும் வராமல் பார்த்துக் கொள்கிறேன். என்னை விட்டு விடுகிறாயா?" என்றாள்.

"அப்படி என்ன நடவடிக்கை எடுத்து எனக்குப் பிரமாதமான கஷ்டம் வந்து விடுமாம்!" என்றான் அவன் அலட்சியமாக.

அவள் விழிகள் விரிந்தன. "ஏன் சுதாகர்! போலீசில் புகார் செய்தால் உனக்குத் தண்டனை கிடைக்குமே!"

"போலீசில் சொன்னதும் தண்டனை கொடுத்து விடுவார்களா? கேஸ் நடக்குமே, நீயாக என்னோடு வந்து விட்டு இப்போது பெற்றோருக்குப் பயந்து மாற்றுகிறாய் என்பேன்."

"அது பொய் என்று உனக்கும் தெரியும். எனக்கும் தெரியும்," என்றாள் அவள் வெட்கத்துடன்.

"நிச்சயமாய். ஆனால் அது உனக்கும் எனக்கும் மட்டும் தான் தெரியும். இங்கே நாம் குதூகலமாக இருந்தது பற்றி இங்கே நிறையப் பேர் சாட்சி சொல்வார்களே! அப்புறம் உன் கேஸ் என்ன ஆகும்? உன் அப்பாவின் மானம் எவ்வளவு உயரத்தில் பறக்கும்?"

"முழுப் பொய்... இப்படி அநியாயப் பொய்யெல்லாம் சொல்லுவாயா?"

"சர்வ நிச்சயமாய்!" என்று எழுந்தான் அவனும். "சேலை கேட்டாயே. என்ன நிறமெல்லாம் பிடிக்கும்?" என்று ஒன்றுமே நடவாததுபோல் விசாரித்தான்.

"ஒரு கண்ணராவியும் பிடிக்காது!" என்று வெடித்தா அவள்.

தோளைக் குலுக்கிவிட்டுப் போய் விட்டான் அவன்.

இப்போதெல்லாம் மாயாவுக்கு அறைக்குள் சிறை என்பதெல்லாம் இல்லை. தன் நாய்களிடம் அவனுக்கு முழு நம்பிக்கை இருந்தது.

அவன் வீட்டில் இல்லாத வேளையில் மாயா முயற்சி செய்து பார்த்தாள். எல்லைக்குள் சும்மா வளைய வந்த நாய்கள் எல்லை அருகில் சென்றாலே பயங்கரமாய்ப் பல்லைக் காட்டிப் பாய வந்தன. இந்த நாய்களை எப்படி வெல்வது?

குறிக்கோள் இல்லாமல் தோட்டத்திலே அங்கும் இங்கும் அலைந்தாள் . வீட்டு நினைவில் தவித்தாள். அப்பா, அம்மா எல்லோரும் எப்படித் தவிக்கிறார்களோ? ப்ரீ அழுதே கரைந்துவிடுவாள். பாபுவுக்கு மட்டும் விஷயம் தெரிந்தால் இந்த சுதாகரைக் கொன்றே விடுவான். அவனுக்கு ஒன்றும் சொல்லவே கூடாது. ரகு...ரகுவின் முறுவல் நினைவுக்கு வந்தது. பாவம், எவ்வளவு வேதனைப் படுகிறாரோ என்ற பரிதாபம் தோன்றியது. எல்லாம் இந்தப் பாவி சுதாகரால். அவன் பார்வையும் அவன் மூஞ்சியும்! பாவி! இதற்கெல்லாம் ஒருநாள் நன்றாகப் படுவான்.

சுதாகர் மாலையில் வருகையில் பத்து சேலைகளும் உடன் வந்தன. கூடவே பொருத்தமாக ஜாக்கெட், பெட்டிகோட் எல்லாம் சரியான அளவில் அவன் வாங்கி வந்ததைக் காணவும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவள் வியப்புடன் பேசவும்!, அவன் 'அனுபவம்' என்றான், ஒரு கோணல் சிரிப்புடன்.

முதலில் புரியாமல் விழித்தவளுக்கு உடனேயே முகம் சிவந்தது. முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஆயினும் அவள் விடவில்லை.

'செக்குகளோடு நாய்க்கு உண்டான பழக்கதோஷம்!" என்று சேர்த்துச் சொன்னாள்.

இரண்டொரு நாள்களில் மாயாவின் கைக்கட்டை அவிழ்த்தான் சுதாகர்.

கை கொஞ்சம் விரைப்பாக இருந்ததுபோல் தோன்றியதே தவிர, வேறு மாற்றம் இல்லை. விரைவிலேயே அந்த 'ஸ்டிஃப்னஸ்' கூடச் சரியாகிவிடும் என்று அவன் சொல்லவும் மீண்டும் ஒருமுறை நன்றி சொன்னாள் மாயா.

அவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கிவிட்டு, "நன்றியை எனக்குச் சொல்லாதே. அன்றிரவு மிகவும் சிரமப்பட்டுப் பிறவி எடுத்த ஒரு ஜோடிக் குழந்தைகளுக்குச் சொல். ஏனென்றால் சமயத்தில் அந்தத் தடை நேர்ந்திரா விட்டால் உன் கை ஒடிந்துதான் போயிருக்கும்!" என்றான் விட்டேற்றியாக.

"யார்-உன் குழந்தைகளா?" என்று தயக்கத்துடன் கேட்டாள் மாயா.

"பல்லைத் தட்டி விடுவேன்," என்றான் அவன் ஆத்திரத்துடன். அவன் முகத்தில் ஜொலித்த கோபத்தைக் கண்டு பிரமித்துப் போனாள் மாயா.

“ஏன்?” என்றாள் புரியாமல்.

“காலையில் கூட்டமாய்ச் சுத்தம் செய்ய வருகிறார்களே, அவர்கள் எல்லாம் வழிவழியாய் எங்கள் பிரஜைகள் மாதிரி நல்லதற்கும், கெட்டதற்கும், உதவிக்கு என்னிடம்தான் வருவார்கள். அவர்களுக்கு நன்மை செய்வது என் பொறுப்பு. அங்கே போய்...சை... புத்தியைப் பார்...” என்று எரிந்து விழுந்து விட்டு எழுந்து போய் விட்டான் அவன்.

அப்போதும் மாயாவுக்கு எதுவும் விளங்கவில்லைதான்.

அன்று மாலையிலிருந்து ஓர் இறுக்கம் பரவியிருந்தது. இங்கே கூட வியர்க்கிறதே, என்று காலரைத் தூக்கிவிட்டுக் கொண்டாள் மாயா.

சட்டென அவன் பார்வை அவள் உடலில் பதிந்த விதத்தைக் கண்டதும் உள்ளூரக் கடுத்துக் கொண்டாள். ‘முழியைப் பார் முழியை!’ என்று. ‘நாளை கட்டாயம் சேலைதான். தட்டிவிடும் என்று தயங்கக் கூடாது.’

“புயல் வந்தாலும் வரும் , பால்கனியில் நின்று பார்க்கலாம். வா மாயா. பார்க்க நன்றாக இருக்கும்.” என்று அவளை அழைத்தான் அவன்.

ஆசையும் பயமும் அவள் முகத்தில் அலைமோதின. “இடி மின்னல் எல்லாமே வருமே!” என்று இழுத்தாள் அவள்.

“உன்னை அவை விழுங்கி விடாமல் நான் பார்த்துக் கொள்கிறேன். வா,” என்று இழுத்துப் போகாத குறையாக வற்புறுத்தி அழைத்துச் சென்றான் சுதாகர்.

தொலைதூரத்தில் பட்டாசு ஒலியும், வெளிச்சமும் போல வானம் கவர்ச்சியாக இருந்தது.

மெல்ல மெல்லக் கூதல் காற்று மழையைக் கொண்டு வரவும் மாயாவின் உடல் குளிரில் சிலிர்த்தது.

“குளிருதே, நான் உள்ளே போ... ஏய், நீ என்ன செய்கிறாய்?...ஏ...ஏன்?”

மாயாவின் அறையைப் பால்கனிப் பக்கமாகப் பூட்டி விட்டுத் திரும்பினான், சுதாகர்.

உதடுகளில் வழக்கமான வளைவுடன், "இங்கிருந்து உள்ளே செல்ல மீதமுள்ள வழி என் அறை மட்டும்தான். அங்கே குளிருக்கு இதமாகப் போர்வை, கணப்பு எல்லாம் இருக்கும். நானும் இருப்பேன். வருகிறாயா? அல்லது இங்கேயே மழையிலும் குளிரிலும் கூதல் காற்றிலுமாக உடல் விரைத்து உயிரை விடுவதானாலும் அது உன் இஷ்டம். எது வேண்டுமோ, முடிவு செய்து கொள்," என்று தன் அறைக் கதவைத் திறந்து உள்ளே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

அடுத்த வழியா? ஒருகணம் கயிறாக இருப்பவன் மறுகணம் பாம்பாகி விடுகிறானே. ஈரப்பசையே இல்லாத ராட்சதன் ஆகி விடுகிறானே. இவனும் ஒரு பெண் வயிற்றில்தானே பிறந்திருப்பான்? பாவி.

ஆத்திரத்துடன் அவனை முறைத்துவிட்டு நிமிர்வுடன் மறுபுறம் திரும்பினாள் மாயா. ஆனால் சீறிச் சுழன்ற வாடைக் காற்று அவளைக் குலுக்கியது. பனி நீர் போல மழைச்சாரல் காற்றுடன் சேர்ந்து பல்லாயிரம் ஊசிகளாகக் குத்தியது.

அடி வயிறு, நெஞ்சுக் கூடு எங்கும் கடுங்குளிர் பரவி அவளை நடுங்க வைத்தது.

சேலையென்றாலும் சற்றேனும் இழுத்து மூடலாம், இந்தக் குர்த்தாவில் அதற்கும் வழியில்லையே.

மார்பின் குறுக்காகக் கைகளைக் கட்டிக் கொண்டு ஒரு மூலையில் ஒண்டிக் கொண்டு நின்றாள் மாயா.

ஆனால் சீறிச் சுழன்று அடித்த குளிர்காற்றும் மழையும் அவளை நன்கு நனைத்து வெடவெடக்க வைத்தன.

அவளையே சலனமின்றிப் பார்த்துக் கொண்டு அடுத்தடுத்து சிகரெட்டுகளைப் புகைத்தான் அவன்.

இன்னோர் உயிர் இப்படித் துன்புறுகிறதே என்ற இரக்கம் கூடவா வராது? இவனுக்கு வரவில்லையே. அனுபவிக்காமல் இருந்தால் மாயா நம்பியிருக்க மாட்டாள்.

ஒருமுறை, "இந்தக் குளிரில் மாட்டிக்கொண்டு சிலபேர் செத்துக்கூட இருக்கிறார்கள், மாயா!" என்று எச்சரிப்பது போலக் கூறினான்.

இன்னொரு முறை, "உள்ளே கதகதப்பாக சுகமாக இருக்கிறது, மாயா!" என்று ஆசை காட்டினான்.

இரண்டிற்கும் மாயாவின் பதில் வெறுப்பில் குளித்த பார்வை மட்டும்.

மெல்ல மெல்லக் குளிரைத் தாங்கும் சக்தி மறைந்து கொண்டு இருப்பதை மாயா உணர்ந்தாள்.

கை கால் விரல்கள் எல்லாம் விரைத்து மரத்துப் போனதுபோல் தெரிந்தது.

ஏதேனும் தேகப் பயிற்சி செய்தால் உடம்பில் சூடு வரும் என்று மூளை சொன்னபோதும் செயலாற்றும் திறன் இன்றி உடம்பு தளர்ந்தது.

சாவுபற்றி அவன் சொன்னது பொய்யில்லை. வெறும் மிரட்டல் அல்ல என்பது புரிந்தது.

மூட்டையைப் போல் சுருண்டு உடல் உறுப்புகள் தன் போக்கில் வெட்டிக் கொள்ளத் தொடங்கின.

குளிரினால் விரைத்துச் சாகப் போகிறோம் என்ற எண்ணம் அவள் மனதில் உறுதியானபோது சூடான இரு கரங்கள் அவளைத் தூக்கின.

உள்ளே கணப்பின் அருகில் கிடந்த சோபாவில் அவளை அமரவைத்து நனைந்துவிட்டிருந்த ஆடைகள் அனைத்தையும் கழற்றி எறிந்தான் சுதாகர்.

அவனைத் தடுக்க நினைத்தும் முடியாமல் கை கால் செயலிழந்து விழித்தவாறு இருந்தாள் மாயா.

ஒரு பெரிய டர்க்கி டவலால் அவளைப் பரபரவென்று அழுந்தத் துடைத்தான் அவன்.

இன்னொரு டவலால் அவளைச் சுற்றி மூடிவிட்டு உள்ளங்கை, உள்ளங்கால்களில் ஏதோ ஒரு தைலத்தை ஊற்றிச் சூடு வர வேகமாகத் தேய்த்தான்.

பிறகு அவளைத் தொட்டுப் பார்த்துவிட்டு உள்ளே சென்று ஒரு கப்பில் ஆவி பறக்க எதையோ எடுத்து வந்தான். "பால். சொட்டு விடாமல் குடித்துவிட வேண்டும்," என்று வாயில் கப்பை வைத்துச் சிறு குழந்தைக்குப் புகட்டுவது போலப் புகட்டினான்.

அவள் குடித்து முடித்ததும் மீண்டும் அவளைத் தூக்கிச் சென்று படுக்கையில் கிடத்தி உல்லன் போர்வையால் நன்கு மூடிவிட்டான்.

தானும் உடை மாற்றிக் கொண்டு வந்து அவளை அணைத்தாற்போல அருகில் சாய்ந்து கொண்டான்.

மாயாவுக்கு மரத்துப் போயிருந்த உடம்பில் மெல்லச் சுரணை திரும்பலாயிற்று. மனதிலும் கூடத்தான்.

கை, கால், உடல் எங்கிலும் ஒவ்வோர் அணுவிலும் தாள மாட்டாத வலியை உணர்ந்தாள் அவள்.

நெஞ்சுக்குள் அதை விடவும் வலித்தது.

இன்னமும் எத்தனை வழிகள் அவனுக்குத் தெரியும்?

இந்த இரண்டைக்கூடத் தாங்க முடியவில்லையே.

மேலும் அவளை அணைத்தாற் போலப் படுத்திருக்கிறானே; அன்று போல் செய்வானோ? தடுக்க இயலாது போல் இருக்கிறதே.

அப்பா, அப்பா, அப்பா...அம்மா, அப்பா...

மெல்லத் தலையைத் திருப்பிக் கொண்டு ஓசையற்று விசித்தாள் மாயா.

## 9

மாயாவிடம் அசைவை உணர்ந்து விரல்களால் அவள் கண்ணைத் தொட்டுப் பார்த்தான் சுதாகர்.

ஈரத்தை உணர்ந்ததும், "ஷ்... பைத்தியம்! இப்போது என்ன அழுகை? இனி உன்னைக் குளிரில் தள்ள மாட்டேன். பயப்படாமல் தூங்கு. வேறு எதையும் நினைக்கக்கூடாது. தூங்கு." என்று தேற்றினான்.

கதகதப்பான அவனது விரல்களின் வருடலில் மாயாவின் ஈரம் படிந்த விழிகள் மூடின.

மறுநாள் காலையில் கண்களைத் திறந்து பார்க்கும் போது, நல்ல வேளையாக அவனைக் காணோம்.

கட்டிலின் அருகில் ஒரு டீபாயில் ஒரு பிங்க் கலர் சேலை, பிளவுஸ், உள்ளாடைகளும் இருந்தன.

தன் நிலையை அறிந்து வெட்கியவளாக அவசர அவசரமாக ஆடைகளை அணிந்தாள்.

ஆனால் ஏனோ கைகால்கள் எல்லாம் நிலையின்றிப் பறந்தன. யோசனையோடு மெல்ல வெளியே வந்தாள்.

ஹாலில் அவன் இருந்தான்.

அவளைக் கண்டதும், ஒரு கப்பில் காபியைக் கலந்து, அவளிடம் நீட்டினான். "உனக்குச் சேலை பிரமாதமாய் இருக்கிறது!" என்று 'கமெண்ட்' கொடுத்தான்.

"ச்சு" என்று தலையை வழக்கம் போலச் சிலுப்பியவள் தடுமாறி விழப் போனாள். ஏன்?

ஏதோ தோன்றவும் அவன் பக்கம் திரும்பி, "பாலில் என்ன கலந்திருந்தாய்?" என்று கோபத்துடன் கேட்டாள்.

அவன் கண்களில் ரசனை பரவ, "பிராந்தி!" என்றான்.

"ஆ!"

"ஆமாம். டார்லிங்! உன்னைக் குடிகாரி ஆக்கிவிட்டேன். என்ன செய்யப் போகிறாய்?" என்று நகைத்தான் அவன்.

"ஏய்..." அவள் விழிகள் அவனை ஐயத்துடன் நோக்கின.

அவளது பார்வையில் இருந்த கேள்வியை உணர்ந்து சிரித்தான் அவன். "எதையும் நம்பி விடுவாயா, மாயா? வீணே கவலைப்படாதே பேபி! உன்னைக் குடிப்பழக்கத்துக்கோ வேறு எதற்குமோ ஆளாக்கப் போவது இல்லை."

"அப்படியானால்..."

"நேற்று உன் உடம்பில் சூடு வருவதற்காகத்தான் பிராந்தி சேர்த்தேன். இப்போது காபி குடி. பிளாக் காபி. தடுமாற்றம் போய்விடும். இனி வேறு எந்த வேதனை வழிகளையும் கையாளப் போவதே இல்லை. நம்பு," என்றான் நிதானத்துடன்.

வினாடிக்குள் மாயாவின் முகம் பூவாய் மலர்ந்தது. "அப்படி என்றால் என்னை விடுவித்துவிடப் போகிறாய் தானே, சுதாகர்?" என்று ஆவலே வடிவாக வினவினாள்.

"இல்லை," என்றான், அவன் - ஒற்றைச் சொல்லாக.

"பின்னே?" என்றாள், அவள் - திகைப்புடன்.

"உன் மனம் தானாக மாறும் வரையில் இங்கே சிறையிருப்பாய்."

"அது இந்தப் பிறவியில் மாறாது!" என்று வெடுக்கெனப் பதில் வந்தது.

"அப்படியானால் ஜன்மம் முழுவதும் இங்கேயே கழி," என்று எழுந்தான் அவன்.

மாயா பதறிப் போனாள். "ஏய் சுதாகர்! யோசித்துப்பாரேன். காலம் முழுமைக்கும் ஒருவரை அடைத்து வைக்க முடியுமா? அதுவும் இந்தக் காலத்தில்?" என்று நயமாகவே பேசிப் பார்த்தாள்.

"முடியுமா முடியாதா என்றுதான் பாரேன்..." என்றான் அவன் விட்டேற்றியாக. "இப்போது கொஞ்சம் மன்னித்துக் கொள்கிறாயா? நான் தேகப் பயிற்சி செய்ய வேண்டும்." எழுந்து சோம்பல் முறித்து விட்டு, "நீ விழித்ததும் என்னைப் பார்த்துக் கூச்சப்படப் போகிறாயே என்று இங்கே வந்ததில் காலைப் பயிற்சி விட்டுப் போயிற்று." சிகரெட்டை அணைத்து ஆஷ்ட்ரேயில் போட்டு விட்டு நகர்ந்தான்.

இந்தக் கதை எல்லாம் யாருக்கு வேண்டும்? எல்லாம் அவனுக்கு எவ்வளவு அலட்சியமாக இருக்கிறது?

"பார், இரண்டே நாளில் போலீஸ் வந்து உன்னை விலங்கு மாட்டி இழுத்துப் போகப் போகிறது பார்."

"அதெப்படி வரும்? அதுவும் என்னைத் தேடி....!"என்று புருவங்களை உயர்த்தினான் அவன்.

"ஏன், நீ என்னிடம்... என்னிடம் வாலாட்டவில்லை? அடிபடவில்லை? அதை வைத்து உன்னைக் கண்டுபிடித்து விடுவார்கள்," என்று மேலும் பயமுறுத்திப் பார்த்தாள் மாயா.

"அதைத்தான் நீ யாரிடமும் சொல்லவில்லையே," என்றான் அவன் சாவதானமாக.

அவள் வாயைப் பிளந்தாள். "உனக்கு எப்படித் தெரியும்?"

அவன் சிரித்து விட்டு, "நீ ரகுவிடம் சொல்லியிருந்தால் அவன் என்னிடம் பழகிய முறை மாறியிருக்கும். உன் பெற்றோரிடம் சொல்லியிருந்தால் உனக்குத் துணை ஏற்பட்டிருக்கும். இரண்டும் இல்லை என்பதை அறிந்த பின்தான் உடனே வேலையில் இறங்கினேன், ஸோ... இந்த மிரட்டல் எல்லாம் பயனில்லை பேபி," என்று கேலியில் முடித்தான்.

ஆத்திரத்துடன், "நான்...நான் இந்தச் சாமானையெல்லாம் உடைத்து ரகளை பண்ணுவேன்," என்றாள் அவள்.

கைகளை நீட்டி மடக்கித் தசை அசைவுகளைப் பார்த்த படியே நடந்தவன். "மாட்டாய், ஒரு ஆப்பிள் பழம் வீணாவதை நேஷனல் வேஸ்ட் என்பவளுக்கு எதையும் உடைக்க மனம் வராது,"என்றான் கவலையற்று.

"உடைத்தால்?" என்றாள் மாயா விடாப்பிடியாக.

"வேறு வாங்கிக் கொள்ள என்னால் முடியும்." என்று அக்கறையின்றிக் கூறிவிட்டுத் தன் அறைக்குள் போய் விட்டான் அவன்.

சுற்றிலும் பார்த்தாள் மாயா. கடைசல் பிடித்த கால்களுடன் வட்டமான கண்ணாடி மேஜை, சித்திர வேலைப்பாடுடன் நாற்காலிகள், ஷோகேஸ்...

இதையெல்லாம் எப்படி உடைப்பது?

ஆனால் தினம் உடைத்தால் எத்தனை வாங்கிப் போடுவான்?

கேட்டு விடுவது என்று வேகமாக அவனது அறைக்குள் சென்று, "எத்தனை தரம்..." என்று தொடங்கியவள் தடுமாறிப் போனாள்.

அவன் வெறும் ஜட்டியுடன் நின்று தேகப் பயிற்சி செய்வான் என்று அவள் எண்ணவில்லையே. முகம் சிவக்க, "ஸாரி..." என்று முனகிவிட்டு வேகமாக வெளியேறினாள்.

வரும்போதே சில நாள்களாகத் தான் தேகப் பயிற்சி செய்யாதது நினைவு வந்தது. வீட்டில் என்றால் காலையில் பல் துலக்கியதுமே எல்லோரும் தேகப்பயிற்சி செய்தாக வேண்டும். தேகப் பயிற்சி முடிந்த பின்தான், பத்திரிகை கூட.

பத்திரிகைக்கும் குளியலறைக்கும் பாபுவுடன் போடும் சண்டை நினைவு வந்தது. கூடவே தொண்டையை அடைத்துக் கொண்டு அழுகையும் வந்தது.

அடக்கிக் கொண்டு அறைக்குள் சென்றாள். சேலையை அவிழ்த்து எறிந்து விட்டு பெல்ஸைப் போட்டுக் கொண்டு பயிற்சிகளைத் தொடங்கினாள்.

கடைசியாக நின்றபடியே பின்னால் வளைந்து தரையைத் தொட்டுக் கொண்டு இருந்தபோது அறைக் கதவு திறந்தது. "அடடே பிரமாதமாக வளைகிறாயே!" என்று அவன் பாராட்டும் குரலும் கேட்டது.

உதட்டைக் கடித்துக் கொண்டு மிகவும் நிதானமாக நிமிர்ந்தாள் அவள்.

ஆத்திரமாக முறைத்து, "யாரைக் கேட்டுக் கொண்டு இப்போது உள்ளே வந்தாய்?" என்று அதட்டலாகக் கேட்டபடி சேலையை எடுத்து மேலே போட்டுக் கொண்டாள் மாயா.

அவன் நிதானமாக உள்ளே வந்து கட்டிலின் மீது கால்மேல் கால் போட்டபடி அமர்ந்தான். "என் வீடு. யாரைக் கேட்க வேண்டும்?" என்றான் எகத்தாளமாக.

உடனே மாயா மாறினாள். "உன் வீடுதானே சுதாகர். இங்கே நான் ஏன் இருக்க வேண்டும்? என்னை அனுப்பி விடேன்," என்றாள் கெஞ்சுவது போல.

அவன் தலையைப் பின்னே சாய்த்துச் சிரித்தான். "இங்கே சுற்றி அங்கே சுற்றிக் கடைசியில் அதிலேயே நிற்கிறாயே... அதோடு நீ இங்கே இருப்பது ஒரு காரணத்துக்காகத்தான் என்பதை மறந்து விட்டாயா?' என்றான் குறும்பாக.

வெறுப்புடன் குளியல் அறைக்குப் போய்ச் சேலையை ஒழுங்காகக் கட்டிக் கொண்டாள் மாயா.

அந்த வீட்டை அன்று சுற்றிக் காட்டினான் சுதாகர்.

பெரிய மாளிகை. ஆனால் அங்கங்கே புதிதாகச் சேர்த்துக் கொண்டது போல ஒரு தோற்றம் இருந்தது.

காரணத்தை அவன் சொன்னான். "ஏழெட்டுத் தலைமுறையாக இது எங்களுடையது. குடும்பத் தலைவர்கள் அவ்வப்போது தங்கள் ருசிக்கேற்ப இணைப்பார்கள்."

“நீ என்ன சேர்த்தாய்?”

“நம் இருவரின் அறைகளும் அதற்கு மேல் ஒரு சின்ன அறையும், முதலில் நீ இந்தப் பகுதியை நன்றாகப் பார்,” என்று ஒரு கதவைத் திறந்தான்.

ஆச்சரியத்துடன் வாயைப் பிளந்து கொண்டு சற்று நேரம் நின்றாள் மாயா.

அழகிய இளநீல வண்ணச் சுவர் முழுமையும் பல மிருகங்களின் சித்திரங்கள். ஆனால் மிருகங்கள்தான் சற்றே பயமுறுத்தின. சிங்கம், புலி, முதலை என்று ஆசனங்களின் கைப்பிடி, கால்கள் எல்லாம் மிருகங்களின் அமைப்புதான். “இது இது என்ன இடம்?” என்று விசாரித்தாள்.

“நர்சரி, எனக்காக என் பெற்றோர் அமைத்தது. என் குழந்தைப் பருவம் கழிந்த இடம்.”

வியப்புடன் அவனை ஏற இறங்கப் பார்த்தாள் மாயா. ஒரு பிள்ளைக்கா இவ்வளவு பெரிய அறை! அதில் இத்தனை பொருள்கள்! யார் செய்வார்கள்? நீ ரொம்பப் பெரிய பணக்காரனோ, சுதாகர்?” என்று விழிகளை விரித்தாள்.

“ம்...ரொம்ப...ப்ப்ப, அதோ பார், என் பெற்றோரின் படம்.”

பெரிதான வண்ணப் படம். அருகில் சென்று கூர்ந்து பார்த்தாள் மாயா. “உன் அம்மா அழகாக இருக்கிறார்களே!”

“ஆமாம், ரொம்ப்ப்ப!” என்றான் சுதாகர், ஒரு விதமான குரலில்.

குழப்பத்தில் அவனை நோக்கி விட்டுப் படத்திடம் திரும்பினாள் அவள். “நீ உன் அப்பா மாதிரியா? ஊகூம். எனக்குக் கண்டுபிடிக்கத் தெரியவில்லை. ஆனால் உன் அப்பாவின் மீசையைப் பார்த்தால் பயமாக இருக்கிறது. கண்ணைப் பார்த்தாலும் தான்,” என்றாள்.

“எனக்கும் அப்படித்தான் இருந்தது,” என்று ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான் அவன்.

“அப்பாவைப் பார்த்தால்கூடப் பயமாக இருக்குமா, என்ன?” என்று ஆச்சரியப்பட்டாள் மாயா.

அவன் பதில் கூறாமல் புகையை வெளியிட்டான்.

“ஏன் பயப்பட வேண்டும்? உன் பெற்றோருக்குத்தான் உன்மேல் மிகுந்த பிரியம் இருந்திருக்கிறதே.”

“எப்படிச் சொல்கிறாய்? இதை யெல்லாம் பார்த்தா?” ஓர் உதாசீனத்துடன் சுற்றிலும் கை காட்டினான் சுதாகர்.

“ம்.”

அவனது உதடுகள் வெகு ஏளனமாக மடிந்தன. “கையில் பணம் இருக்கும்போது செலவு செய்வது போல மிகவும் சாதாரண விஷயம் எதுவுமே இல்லை, பேபி.”

“ம்ம்... எனக்குத் தெரியவில்லை. ஆனால் எங்கள் வீட்டில் அப்படி நிறையப் பணம் இருந்தது இல்லை... ஆனால் சுதாகர்! இங்கே ஏன் இந்த மாதிரிப் பயங்கர மிருகங்களின் படங்களை வரையவேண்டும்? நானாக இருந்தால் அழகான பூக்கள், முயல், மான், மிக்கி மவுஸ், டொனால்ட் டக்...இப்படித்தான் வரையச்செய்வேன். திடுமென்று பார்த்தால் பிள்ளைகள் பயந்து போகாதா?”

“அங்கே பெட்ரூம் இருக்கிறது. அதையும் பார்த்து விட்டு வா,” என்று மூன்று புலிகள் தாங்கிய ஒரு ஸ்டூலில் அமர்ந்தான் அவன்.

கதவைத் திறந்து பார்த்த மாயா, அவசரமாக மூடினாள். கண்கள் அகல, “சிறுவனாக இருந்தபோது நீ அங்கேயா படுப்பாய் சுதாகர்? ஏன் சுற்றிச் சுற்றிப் பயங்கரமாகப் பாயும் மிருகங்களின் படங்கள்... ஏன் அப்படி?” என்று கேட்டாள்.

அலட்சியமாகப் புகையை ஊதிவிட்டு, “நான் படுதைரிய சாலியாக வளர வேண்டாமா? அதற்காகத்தான்.” என்றான் அவன்.

“ஆனால் இரவில் திடீரென்று விழித்துப் பார்த்தால் ஏதும் பயமாக இராதா?... ஆனால், உன் அம்மா பக்கத்தில்

இருந்திருப்பார்களே," என்று ஓர் ஆறுதல் அடைந்தாள் மாயா.

"அம்மாவா? பைத்தியம். அம்மா அருகில் இருந்தால் மனதில் தைரியம் எப்படி வரும்? தனியாகத்தான் படுக்க வேண்டும். எத்தனையோ தரம் இரவில் பயந்து போய்ச் சமையல்கார ராமனிடம் ஓடிப் போய் அவனோடு நாடாக் கட்டிலில் படுத்திருக்கிறேன். அப்பா அம்மாவுக்குத் தெரியாமல்தான். தெரிந்தால் அதற்கு வேறு தண்டனை கிடைக்குமே!"

"ம்ம்..." என்றாள் மாயா, இரக்கத்துடன். ஒன்று தோன்றவும் நிமிர்ந்து, "ஆனால் உன்னிடம் அன்பு இருந்ததால்தானே நீ தைரியசாலியாக வளர வேண்டும் என்று இவ்வளவு ஏற்பாடு செய்திருக்க வேண்டும்," என்றாள்.

சிகரெட்டைக் காலின் கீழ் போட்டு நசுக்கினான் சுதாகர். "அன்பைப் பற்றி எல்லாம் எனக்குத் தெரியாது, மாயா! என் பெற்றோரை நான் அதிகம் பார்த்ததுகூடக் கிடையாது. அனேகமாக மைசூர் அல்லது மெட்ராஸில் ஏதாவது விருந்து கேளிக்கைகளில் இருப்பார்கள். மற்ற சமயம் ஏதாவது பாரின் டூர் இருக்கும். இங்கே இருப்பது அபூர்வம்."

"இப்போது எங்கே?"

மேலே காட்டினான் அவன். "என் பன்னிரண்டாவது வயதில் ஒரு பிளேன் ஆக்ஸிடென்டில் இறந்து போனார்கள். எனக்கு அதில் ஒன்றும் தோன்றவில்லை. சொல்லப் போனால் இந்த அறையிலிருந்து விடுதலை என்ற மகிழ்ச்சிதான்."

தன் வீடு, தாய் தந்தையரின் கேலி, சிரிப்பு, ஆதரவு எல்லாம் நினைவு வந்தது மாயாவுக்கு. ஓர் அவசரத்துடன், "உன்னைப் பார்த்தால் எனக்குப் பாவமாக இருக்கிறது, சுதாகர்," என்று தெரிவித்தாள்.

அவன் தோளைக் குலுக்கினான்.

"உன் தாய்மொழி என்ன சுதாகர்? நன்றாகத் தமிழ் பேசுகிறாயே. அதாவது என் மாதிரியே பேசுகிறாயே!"

"சொன்னேனே, கன்னடம் கலந்த மலையாளம் என்று. பதின்மூன்றிலிருந்து படித்தது எல்லாம் சென்னையில், ஸோ தமிழ்."

"உன் கூடப் பிறந்தவர்கள்?"

"நான் ஒரே பிள்ளை."

"ஓகோ, எங்கள் வீடு மாதிரிச் சத்தம் இராது. சில சமயம் சந்தைக் கடை என்பார்கள் அம்மா. அதிலும் நானும் பாபுவும் தான் லொட லொட, ப்ரீ பேசவே மாட்டாள்."

"யார் ப்ரீ?"

"ப்ரீ தெரியாதா? ப்ரியா. என் சிறிய தங்கை. ரொம்பவும் வெள்ளை. இருட்டிலே அவள் நின்றால் கூடப் பளிச்சென்று தெரிவாள். கொஞ்சம் பூசினாற் போல இருப்பாளா. அதில் வருத்தம் அவளுக்கு.

"உனக்கு நல்ல ஷேப்," என்றான் அவன் ரசனையுடன்.

"நீ ஒன்றும் சொல்ல வேண்டியது இல்லை," என்று வேகமாகக் கூந்தலை ஒதுக்கினாள் அவள். மீண்டும் தங்கை நினைவில் ஆழ்ந்து, 'பார்க்க மிகவும் ஸ்வீட்டாக இருப்பாள். என்னைத் தவிர வேறு யாரிடமும் லேசில் பேச மாட்டாள்." என்றாள்.

"சேர்த்து வைத்து நீ பேசுவாயாக்கும்!" என்றான் அவன் கேலியாக.

மாயாவுக்குச் சிரிப்பு வந்தது. "மெய்தான். சின்னப் பிள்ளையிலிருந்தே ரொம்பப் பேசுவேனாம். ஒரு தடவை ஓர் ஐந்து நிமிடம் பேசக் கூடாது என்று அப்பா அதட்டினார்களாம். ஒரு நிமிடம் கழித்துப் பார்த்தால் உட்கார்ந்தபடியே தூங்கி விட்டிருந்தேனாம். இப்போதும் அப்பா அதைச் சொல்லிக் கேலி செய்வார்," என்று கன்னம் குழிய நகைத்தாள்.

அவனும் சிரித்தபடியே ஒற்றை விரலால் அவளது கன்னத்துக் குழியைத் தொட்டுப் பார்த்தான்.

சட்டென விலகி, "ஏய், தொடாதே!" என்று முறைத்தாள் மாயா.

கவனியாதவன் போல, "உனக்கு நாய் என்றால் பிடிக்காதா, மாயா?" என்று பேச்சை மாற்றினான் அவன்.

"பிடிக்கவே பிடிக்காது. என் தோழி ரோஸியை, அவள் வளர்த்த நாயே கடித்து விட்டது. அப்புறம் அவள் நாய் மாதிரிக் குரைத்துக் குரைத்து... அம்மா, பயங்கரம்!" என்று உடல் சிலிர்த்தாள் மாயா. "அதிலிருந்தே எனக்கு நாய் என்றாலே பயம். ஆனால் உனக்குப் பிடிக்கும் போல் இருக்கிறதே."

"யெஸ், பேபி! சின்ன வயதில் அவைதான் என் தோழர்கள்."

"எங்கள் பாபுவுக்கு நாய் என்றால் பிடிக்கும். நான் அவனை நாற்பத்தி இரண்டு என்று திட்டுவேன். ப்ரீதான் சொல்லித் தந்தாள். அவள் நிறையப் படிப்பாள். ஒரு புத்தகத்தில் இருந்து..."

"அப்பப்பா! ப்ரீ ப்ரீ என்று உயிரை விடுகிறாயே. அவள் உன்னை நினைக்கிறாளோ என்னவோ?"

"அவள் கட்டாயம் நினைப்பாள். என் நினைவில் மெலிந்து கூடப் போயிருப்பாள். பாபுகூட என்னை எங்கெங்கே தேடி அலைகிறானோ! அப்பா அம்மா கூட. அவர்களைப் பிரிந்து நான் இருந்ததே இல்லை. சுதாகர்! என்னை விட்டுவிடேன். அவர்களைப் பாராமல் எனக்கு உடம்பெல்லாம் கூட வலிக்கிற மாதிரி இருக்கிறது. நெஞ்செல்லாம் அடைக்கிறது. ப்ளீஸ் சுதாகர்..." என்று தொடங்கிக் கெஞ்சலில் முடித்தாள் மாயா.

கண்ணைச் சிமிட்டி, "எங்கே... தொட்டுப் பார்க்கட்டுமா?" என்றான் சுதாகர்.

ஆத்திரமாக அவனை வெட்டுவது போலப் பார்த்தாள் மாயா.

"அம்மாடியோ, எனக்குப் பயமாக இருக்கிறதே!" என்றான் சுதாகர் கிண்டலாக.

வேதனையுடன், "சுதாகர்! என் துன்பம் கொஞ்சம் கூடத் தெரியவில்லையா? நீயும் மனிதன்தானே!" என்றாள்.

சுதாகரின் சிரிப்பு மறைந்தது. "நான் மனிதனா? நாய் என்று அல்லவா கேள்விப்பட்டேன்!" என்றான் ஏளனமாக.

## 10

அன்று மாயா சொன்ன வார்த்தைகளைச் சுதாகர் மறக்க வில்லை. அது மட்டுமல்ல. மறக்கப் போவதாகவும் இல்லை என்பது அவளுக்கு நன்கு புரிந்தது.

பரிவாகப் பேசிய போதும் பல் தெரியச் சிரித்தபோதும் பழி வாங்கும் எண்ணத்தை அவன் விட்டுவிட வில்லை.

தந்தை வந்து தன்னைக் காப்பாற்றுவார் என்ற எண்ணமும் அவளுக்கு மெல்ல மங்கிக் கொண்டு வந்தது. இந்தப் பத்து நாள்களில் காப்பாற்ற முடியாதவர் இனி மட்டும் எப்படிக் காப்பாற்றிவிட முடியும்?

அவளைக் கண்டுபிடிப்பதற்குத் தேவையான எந்தவிதத் தடயமும் இல்லாதபடி இந்த ராட்சசன் வெகு கவனமாகத் திட்டமிட்டுச் செயலாற்றி இருக்கிறான்.

ஆனால் அப்படி ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு போய்விட முடியும் என்பதை அவளால் நம்பக்கூட முடியவில்லை. ஆயினும் நம்பித்தான் ஆக வேண்டும். இல்லா விட்டால் அவள் இந்நேரம் மீட்கப்பட்டிருப்பாள்.

அப்பாவால் அவளை மீட்க முடியவில்லை. சுதாகருடைய நிபந்தனைக்கு இவள் இணங்கப் போவதும் இல்லை. அவனாக மனம் இரங்கி வந்து அனுப்பப் போவதும் இல்லை.

மிகுந்திருப்பது எப்படியாவது அவளாகவே தப்பிச் செல்வதுதான். எப்படி?

யோசனையோடு அந்தப் பரந்த தோட்டத்தில் சுற்றினாள் மாயா. பழக்கமற்ற சேலை காலைத் தட்டி விடவே லேசாகத் தூக்கிச் செருகிக் கொண்டு நடந்தாள்.

அதற்குள் மோப்பம் பிடித்துக் கொண்டு ஒரு நாய் ஓடி வந்தது.

முதலில் இந்த நாயை ஓட்டத்தில் வெல்ல வேண்டும். மற்றப்படி தப்பிச் செல்ல வேறு வழியில்லை.

அங்கே பூட்டப்பட்டிருந்த ஒரு கார் ஷெட் இருக்கத்தான் செய்தது. ஆனால் அது திறந்திருந்தாலும் மாயாவுக்குக் கார் ஓட்டத் தெரியாதே.

வீட்டுக்குப் போனதும் முதலில் டிரைவிங் ஸ்கூலில் சேர்ந்து கார் டிரைவிங் படிக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள் மாயா.

முதலில் வீட்டுக்குப் போக வேண்டுமே!

சேலையுடன் வேகமாக நடந்து பழகினாள் மாயா. நாய்களும் கூடவே வந்தன.

சாதாரணமாகக் கூடவே நடந்த நாய்கள் எல்லையருகே சென்றதும் உறுமி மிரட்டின.

நாளை ஓடிப் பழக வேண்டும் என்று நினைத்துக் கொண்டு உள்ளே வந்தாள் மாயா.

அன்றிரவில் அவளுக்கு ஓர் அதிர்ச்சி!

அவள் உறங்கத் தொடங்கிய நேரத்தில் சுதாகர் அவளது அறைக்கு வந்தான். வந்து அவளது கட்டிலில் சர்வ சாதாரணமாக அமரவும் அவள் மிரண்டு போனாள்.

"நீ அங்கு வர மறுத்தால் நான் இங்கே வந்து விட்டுப் போகிறேன்," என்றான் அமைதியாக.

இந்தச் சில நாள்களில் அவனது அமைதிக் குரலை அவள் புரிந்து கொண்டிருந்தாள். எனவே பதில் சொல்லாமல் போராடினாள். பயனற்ற போராட்டம்.

இது அடிக்கடி நடக்கவும் மாயா திணறிப் போனாள்.

தான் முன்பு நிச்சயித்தபடி வேகமாக ஓடிப் பழகினாள்.

வேகத்தை மிகுதியாக அதிகரித்தபோது கால் தட்டிக் குப்புற விழுந்தாள்.

கை கால் எல்லாம் சிராய்ப்புடன் நல்ல அடி. எரிச்சலும் வேதனையுமாக அவளுக்கு அழுகை வந்தது.

அதற்குள் எங்கிருந்தோ வந்த சுதாகர் அவளை உள்ளே தூக்கிச் சென்று காயங்களுக்கு மருந்திட்டான். பிறகு, "முட்டாள்!" என்றான், ஒரு விதமான பார்வையுடன்.

காயங்கள் ஆறியதும் இன்னொரு வழியில் முயன்றாள் மாயா.

அந்தத் தோட்டத்தில் இருந்த பல்வேறு மரங்களில் சில மதிலை ஒட்டியும் இருந்தன.

மரத்தில் ஏறி மதிலுக்கு அந்தப் பக்கம் குதித்து விட்டால்?

எண்ணிய வேகத்தில் மரத்தில் ஏறி விட்டாள் மாயா. மதில் புறக்கிளையில் இறங்கி மதிலில் இறங்கியதும்தான் நடுங்கிப் போனாள்.

நாய்களில் பெரியதாக இருந்த ஒன்று வேகமாக ஓடி வந்து மதில் மேல் பாய்ந்து ஏறி அவளைத் துரத்தத் தொடங்கியது.

மறுபுறம் குதிக்கவோ, அந்தப் பக்கம் பெரும் பள்ளமாக இருந்தது.

இந்தப் பக்கம் இரு நாய்கள் காத்திருந்தன.

நிற்கவும் இயலாத நிலை.

நாய் கடித்து விடுமோ என்று எல்லை மீறிய பயத்தில் கண்மண் தெரியாமல் மதில் மேலேயே ஓடலானாள்.

ஏதோ குரல் கேட்டது போல் தோன்றிய போதும், நின்று கவனிக்கத் தைரியம் இல்லாமல் வேகமாக ஓடினாள்.

கடைசியாகக் கால் வழுக்கிக் கீழே விழுந்தாள். எல்லையற்ற பயத்துடன் நாயின் பற்களை எதிர்பார்த்தவளைச் சுதாகரின் கரங்கள் தூக்கி விட்டன.

"முட்டாள்! நீ இன்னும் இந்த முயற்சியைக் கைவிட வில்லையா? நாய்கள் மேலே விழுந்து குதறியிருந்தால் என்ன ஆவாய்?" என்று கோபமாகக் கடிந்தான். 'பேசாமல் நாய்களைக் கடிக்க விட்டிருக்க வேண்டும். சரியான தண்டனையாகி இருக்கும். ஏன் நிற்கிறாய்? உள்ளே போ," என்று அதட்டினான்.

அவளுக்குக் கை கால் உதறுவதைக் கண்டதும் தானே அவளைத் தூக்கிச் சென்று சோபாவில் உட்கார வைத்து விட்டுக் குளிர்ச்சியான பழச்சாறு கொணர்ந்து குடிக்கச் செய்தான்.

பதைப்பும், உதறலும் மெல்ல நின்றதும் மாயா கண்ணீர் உகுக்கலானாள்.

அவள் அருகில் உட்கார்ந்து கொண்டு, முதுகில் தட்டிக் கொடுத்தான் சுதாகர். "இடியட்! இப்போது என்ன ஆகிவிட்டது? நான்தான் சமயத்தில் வந்து நாய்களிடமிருந்து உன்னைக் காப்பாற்றி விட்டேனே," என்றான் இதமாக.

ஏதோ மனதில் உறைக்க. "உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று வினவினாள் மாயா.

முறுவலுடன் தோளைக் குலுக்கினான் அவன். "என் பைனாகுலர்ஸ் வழியாகச் சும்மாவேனும் பார்த்துக் கொண்டிருந்தேன். நீ மரம் ஏறுவதும் நாய்கள் தொடர்வதும் கண்ணில் பட்டது இப்படித்தான் நடக்கும் என்று யூகித்து ஓடி வந்தேன்," என்றான் சாதாரணமாக.

ஆனால் தினமுமே அவள் தோட்டத்தில் சுற்றுவதை 'பைனாகுலர்ஸ்' வழியே கண்டு ரசிப்பது அவனுக்கு மிகவும் சுவாரசியமான பொழுதுபோக்கு என்பதை மட்டும் சொல்லாமல் மறைத்து விட்டான்.

ஒவ்வொரு முயற்சியும் தோற்கவும் - வேதனையுடன், "எவ்வளவு நாள் என்னை இப்படிச் சிறை வைப்பாய் சுதாகர்?" என்று அவன் பக்கம் திரும்பிக் கேட்டாள் மாயா.

கண்ணில் குறும்பும் ஒளியுமாக, "நீயாக என்னிடம் வரும் வரை. அல்லது எனக்கு உன்னிடம் அலுப்புத் தட்டும்வரை. இந்த இரண்டுமே இப்போதைக்கு நடக்கும் போலத் தெரியவில்லை!" என்று சிரித்தான் அவன்.

அவள் பரபரப்புடன் பேசினாள். "சுதாகர்! எனக்காக அப்பா எங்கெங்கே தேடி அலைகிறாரோ? எப்படி எப்படிப் பரிதவிக்கிறாரோ? கொஞ்சம் யோசி சுதாகர்."

"அல்லது கைகழுவி விட்டாரோ?" என்றான், அவன் - சாவதானமாக.

"அப்பா ஒரு நாளும் அப்படிச் செய்ய மாட்டார்," என்றாள் அவள் வேகத்துடன்.

"எவனோடாவது ஓடிவிட்டதாக முடிவு கட்டி யிருந்தால்..." என்று சீண்டினான் அவன்,

"என் அப்பா ஒரு நாளும் அப்படி நினைக்க மாட்டார்." என்றாள் அவள் அழுத்தந்திருத்தமாக. "ஏன், என்னைத் தெரிந்த யாருமே நினைக்க மாட்டார்கள். சுதாகர்! சுதாகர்! எனக்கு எல்லாரையுமே.. அப்பா, அம்மா, ப்ரீ, ப்ரேமி ஆன்ட்டி, அங்கிள், அத்தை எல்லாரையுமே பார்க்க வேண்டும்.. என்னை விட்டுவிடு, சுதாகர்! ப்ளீஸ், தயவு செய்து என்னை விட்டு விடு..." என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள் மாயா.

"ஏன் அப்படிப் பறக்கிறாய்? உன்னை அங்கே யார் சேர்த்துக் கொள்வார்கள்?"

"ஏன்? ஏன் மாட்டார்கள்?"

"கெட்டுப் போன பாலைச் சாக்கடையில்தான் கொட்டுவார்கள்..."

"நான் ஒன்றும் கெட்டுப் போனவள் இல்லை," என்று சீறினாள் மாயா. "நான் பாலும் அல்ல. உன்னைப் போல ஆறு அறிவுடைய மனிதப் பிறவிதான். தெரிந்து கொள். நானாகத் தவறு செய்யாத வரையில் நான் கெட்டுப் போனதாக ஒப்புக் கொள்ள மாட்டேன்," என்றாள் ஆத்திரத்துடன்.

"பெண்ணும் பாலும் ஒன்று என்று..." நமட்டுச் சிரிப்புடன் தொடங்கியவனைச் சினத்துடன் இடைமறித்தாள் மாயா. "சும்மா வைத்திருந்தாலே பால் கெட்டுப் போய்விடும். அப்படியானால் பெண்களும் எப்படியும் கெட்டுப்போய் விடுவார்களா என்ன? இந்த மாதிரித் தனக்கு வசதியாக உவமைகளைச் சொல்லிச் சொல்லிப் பெண்களை மட்டம் தட்டுவதே உன் ஆண் இனத்துக்குப் பழக்கம் ஆகிப் போயிற்று," என்றாள்.

"என் ஆண் இனமா?" புருவங்களை உயர்த்திக் கேட்டான் அவன். "ரகுகூட அப்படித்தானோ?"

"ரகுவைப் பற்றி நீ ஒன்றும் பேச வேண்டியது இல்லை," என்று கிறீச்சிட்டாள் மாயா.

"ஷ், மெல்லப் பேசு. எனக்கு மட்டும்தானே கேட்க வேண்டும்? ஏன் மாயா, ரகுவும் அப்படி நினைத்தால்..."

"ரகு ஒரு ஜென்டில்மேன். உன் மாதிரி இல்லை. நடந்ததை எல்லாம் நான் அவரிடம் சொன்னதும் உன்னைக் கோட்டுக்கு இழுக்கப் போகிறார் பார்," என்று அடித்தொண்டையில் சீறினாள் அவள்.

"நிஜமாகவா!"அவன் அலட்சியமாக நகைத்தான். "ரகு எப்படி ஆள் என்று நினைக்கிறாய் மாயா. என்னைக் கிழிக்கும் அளவு கெட்டிக்காரன் என்றா? அய்யோ பாவம், இப்படி நட என்று வழிகாட்டினால் அடி பிசகாமல் அப்படியே செல்லும் செம்மறி ஆடு."

அவன் பேச்சை முடிக்குமுன் உதடுகளை அழுந்த மூடிக்கொண்டு எழுந்து போய்விட்டாள் மாயா.

சுதாகர் தொடர்ந்து இப்படியே பேசுவதில்லை.

ஹவாயில் பார்த்ததும், 'இன்றைய நாள் உங்களுக்கு நல்லதாகவே இருக்கட்டும்!' என்று வாழ்த்துவது, கிரீஸில் புத்தாடை அணிந்தால், 'இதை அணியும் போதெல்லாம் நல்ல உடல் நலத்துடன் அணியுங்கள்!' என்பது - இப்படிப் பல நாட்டிலும் அவன் மனதைக் கவர்ந்த பழக்கங்கள் பற்றி, அங்கங்கே நடந்த சுவையான நிகழ்ச்சிகள் பற்றி எல்லாம் ரசிக்கும்படியாகப் பேசுவான்.

மாயாவுக்குக் கோபமோ அழுகையோ நிலைக்காது;

ஆத்திரமாகப் பேசினாலும், சற்றுப் பொறுத்து, 'ஸ்போர்ட் ஸ்டாரை' அவன் நீட்டும் போது முகம் மலர்ந்து விடும்.

"தினமும் நேந்திரம் பழம் சாப்பிடுகிறாயே, அலுக்க வில்லையா?" என்று கமெண்ட் அடிப்பாள்.

அவன் பதிலுக்குத், "தினம் சோறு சாப்பிடுகிறாயே, அலுக்கவா செய்கிறது?" என்பான் திருப்பிக் கொண்டு.

"விதம் விதமாய்க் குழம்பு, கூட்டு வைக்கிறோம்," என்பாள் அவள்.

"எங்கள் நேந்திரம் பழம் பால் மாதிரி ஒரு முழு உணவாகும். வேளைக்கு இரண்டு பழம் உண்டால் வேறு உணவே தேவை இல்லை," என்றான் அவன் பெருமையாக.

"பின்னே ஏன் மற்றதைச் சாப்பிடுகிறாயாம்?" என்றாள் கிண்டலாக அவள்.

"நீ சொன்னது போல் அலுத்து விடக் கூடாதே என்றுதான்."

"ஆக அலுத்து விடும் என்று ஒப்புக் கொள்கிறாய் இல்லையா?" என்று அரிசிப் பல் காட்டிச் சிரித்தாள் மாயா.

"சிலது அலுப்பதே இல்லை, மாயா," என்றான் அவன் ஒரு மாதிரிக் குரல் மாற.

புரியாமல், "அதெல்லாம் இல்லை. தினமும் என்றால் எதுவானாலும் அலுத்துத்தான் போய்விடும்," என்று அடித்துப் பேசினாள் மாயா.

'உன் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அலுத்துப் போய்விட்டதா? அவர்களும் தினம் தினம்தானே..." என்று குறும்புடன் நகைத்தான் அவன்.

சீ... என்று முகம் சிவந்தாள் மாயா. பிறகு அமர்ந்த குரலில், "இப்படி எல்லாம் பேசுவதே பாவம், சுதாகர்! அப்பாவும் அம்மாவும் எவ்வளவு பிரியமாய் இருப்பார்கள் தெரியுமா! அந்தப் பக்கத்திலேயே எங்கள் வீடு மாதிரிக் கிடையவே கிடையாது! ஏன், எங்கேயும் இருக்காது!" என்றாள்.

"ஏன் கோணலாகக் கட்டியிருக்கிறதா?"

அவள் ஏளனமாக உதட்டைப் பிதுக்கினாள். 'ஐயே, வீடு என்றால் வெறும் கட்டடமா? அது ஹோம். நான் சொல்வது குடும்பம். அதெல்லாம் உனக்கு எங்கே தெரியப் போகிறது? ஆனால் எங்கள் வீடு கூட மிகவும் அழகுதான், இல்லையா சுதாகர்?"

"அங்கே எல்லா வீடுகளுமே ஒரு மாதிரிதான் தோன்றின," என்றான் அவன் ரசனையற்று.

"ஊகும், அதெல்லாம் இல்லை. எங்கள் வீட்டின் முன்புறம் எல்லாம் நிறைய ஜாதியும், மல்லியும், ஸைடில் காய்கறி, பின்னால் தென்னை, கொய்யா... சுதாகர், என்னை விட்டு விடு, ப்ளீஸ்..." என்று மீண்டும் பல்லவியைத் தொடங்கினாள் மாயா.

அவன் பதில் கூறாமல் உணவில் முனைந்தான்.

"சுதாகர்! நீயே யோசித்துப்பார்: நீ அந்தப் பெண்ணைப் போல, என்னை நினைத்து... வந்து நினைத்தது தப்புதானே?" என்று விடாமல் வாதாடினாள் மாயா.

"நினைவில் கூடச் சுத்தமாக இருக்க, நான் ரகுபோல் ஜெண்டில் மேன் இல்லையே!" என்றான் அவன் அசையாமல்.

"நினைவில் மட்டும் இல்லை, அன்று நீ..."

"என்ன செய்து விட்டேன்? நீ விழுந்து விடாமல் காப்பாற்றினேன், ஈடாக ஒரு சிறு அணைப்பு. பொறு, உனக்குப் பிரியம் இல்லையானால், 'நோ, மிஸ்டர், ஐயாம் நாட்கேம்,' என்று சொல்லி விலகிக் கொள்ள வேண்டியதுதானே. நாகரிகம் இல்லாமல் அறைவதா? நாய் என்பதா?"

நாகரிகம் பற்றி இவன் பேசுகிறானே!

சைத்தானா வேதத்தை ஓதுவது?

மாயா அயர்ந்து போனாள்.

மாயா எவ்வளவு கெஞ்சியபோதும் சுதாகரிடம் இரக்கமே தென்படவில்லை.

மீண்டும் பலவாறு முயன்றாள்.

அந்தச் சமையல்காரனிடம் பேசிப் பார்த்தாள்- முகத்தில் சிறிதும் சலனம் இல்லாமல் கல்லால் ஆன சிலையாக நின்றான் அவன்.

காலையில் தோட்ட வேலை செய்ய வந்தவர்கள் நகைத்துவிட்டுப் போனார்கள்.

நாய்களுக்கு உணவு கொடுத்து அவற்றினிடம் பழகிப் பார்த்தாள். அவை மோந்தும் பார்க்கவில்லை.

அவன் இவளது அத்தனை முயற்சிகளையும் கண்டு சிரித்தான்.

அலுத்துப் போய் அவள் அமர்ந்தபோது, "மாயா! ராமன் எனக்காக உயிரைக் கூட விடுவான். அந்த மலை ஜனங்களுக்கு நான் கடவுளின் பிரதிநிதி. நாய்கள் என் கையால் அல்லது ராமனின் கையால் தரும் உணவுகளை மட்டுமே சாப்பிடும். இந்த அசட்டுமுயற்சிகளை விட்டு விட்டு என் நிபந்தனையை ஏற்றுக்

கொள். அதாவது உன் பெற்றோரிடம் திரும்ப வேண்டும் என்ற ஆசை இன்னமும் இருந்தால்..." என்று அவன் கூறியபோது அவள் விரைப்பாக எழுந்து விலகிப் போனாள்.

அவனாக மனம் இரங்கினால் தவிரத் தப்பும் மார்க்கம் எதுவும் இல்லை என்பதை மாயா ஐயம் திரிபற உணர்ந்தாள். மீண்டும் மீண்டும் கெஞ்சினாள்.

அவன் மறுக்கும் போதெல்லாம் தவித்த மனதிற்குச் சற்று ஆறுதல் கொடுத்தது அந்தப் பரந்த தோட்டம்தான்.

எல்லையைத் தொட்டாலன்றி நாய் ஏதும் செய்யாது என்ற நிச்சயம் பிறந்து விட்டதால் கண் பார்வையில் தொடர்ந்த நாய்களை அவள் பொருட்படுத்தவில்லை.

இயல்பிலேயே மாயா உற்சாகமும் ஆர்வமும் உள்ள ஆரோக்கியமான பெண்.

தோட்டத்தைச் சுற்றச் சுற்ற அவளது ஏக்கமும் தவிப்பும் தானாக மாறி மெல்ல மெல்ல இயற்கை அழகில் ஈடுபட்டு மனம் அமைதி அடையத் தொடங்கி விடும். ரசனையும் தோன்றும். அந்த மலைப் பிரதேசத்தின் குளிச்சியான சீதோஷ்ணத்தில் மலர்ந்த பெரிய மலர்களில் மனம் ஒன்றிப் போவாள்.

எதையும் தனித்து அனுபவித்து அறியாததால் பகிர்ந்து கொள்ள அந்தச் சுதாகரையே அழைப்பது உண்டு.

அன்று ஓர் அழகிய டேலியா ஒயின் சிவப்பில் மலர்ந்து கொண்டிருந்தது. வெல்வெட்டின் மிருதுவோடு தன் எண்ணற்ற இதழ்களை அது மெல்ல விரிக்கையில் மாயா மெய்ம்மறந்து போனாள். மானாய் ஓடிச் சென்று சுதாகரை அழைத்து வந்து காட்டினாள். "பாரேன், அய்யோ, எவ்வளவு அழகு!"

அவள் கண்ணின் ஒளியை ரசித்தபடியே மலரைப் பறிக்கக் கையை நீட்டினான் அவன்.

அவனைத் தடுத்து, "பறிக்காதே, பறிக்காதே! செடியிலேயே அழகாக இருக்கட்டும்," என்றாள் மாயா.

"பறித்து உன் காதோரம் வைத்தாலும் அழகாகவே இருக்கும், பேபி!"

"நான் பார்க்க முடியாதே. அதோடு செடிக்கும் ஒன்று விடாமல் பறிக்கக் கூடாது என்று அம்மா சொல்வார்கள்."

"தட் இஸ் ஸில்லி, மை கேர்ள்!"

"அதெல்லாம் இல்லை. பாரேன், என்ன அழகாக இருக்கிறது!" பூவிலிருந்து கண்ணை எடுக்காமல் சுற்றி வந்தபடி "எந்தப் பக்கம் இருந்து பார்த்தாலும் ஒரே அழகுதான்!" என்றாள்.

"நிச்சயமாய்."

அவன் குரலில் சட்டென நிமிர்ந்தாள் மாயா. அவன் பார்வை பூவில் இல்லை. தன்மீது இருக்கிறது என்று கண்டதும், 'சை' என்று திரும்பினாள்.

"மெய்யாகவே டார்லிங்!"

சட்டென ஆத்திரம் அடைந்தவளாய், "தயவுசெய்து என்னை டார்லிங் என்று அழைக்காதே, சுதாகர்! அந்த வார்த்தையை அசிங்கப் படுத்துவது போல இருக்கிறது. முன்னெல்லாம் எங்கள் அம்மாவை அப்பா கூப்பிட்ட வார்த்தை அது. அதை இழிவுபடுத்தாதே!" என்றாள் மாயா.

அவள் பேச்சின் கடைசியை அலட்சியம் செய்து, "முன்பு என்றால் இப்போது எப்படி அழைக்கிறார்?" என்று விசாரித்தான் அவன்.

வீட்டு நினைவில் இளம் புன்னகை மலர்ந்தது மாயாவுக்கு. "நாங்கள் எல்லாரும் வளர்ந்து விட்டோம் இல்லையா? அதனால் அம்மை, யோவ், அம்மாள் என்று எல்லாம் கூப்பிடுவார். சுதாகர்! ப்ளீஸ்... உன் காலில் விழுந்து வேண்டுமானாலும் கேட்டுக் கொள்கிறேன். என்னை விட்டுவிடு," என்று இறைஞ்சினாள்.

அவன் முறுவலோடு, "அதன் வழிதான் உனக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன் என்ற ஞாபகம்," என்றான்.

மாயா பார்வையில் அவனை எரித்தாள்.

இன்னொரு நாள் தோட்டத்திற்குத் தினமும் வந்து போகும் ஒரு கிளியைப் பற்றி அவனிடம் சொன்னாள்.

புகையை ஊதியபடி, "அதுதான் நிறைய வருமே," என்றான் அவன்.

"ச்சீ... அதில்லை சுதாகர்! இந்தக் கிளிக்கு மட்டும் கழுத்தில் ஒரு மஞ்சள் பட்டை இருக்கிறது, தெரியுமா? நல்ல சிவப்பு மூக்கும் இளம் பச்சை நிறமும், கண்ணைத் திருப்பி அது பார்ப்பதும்... சுதாகர்! இருபத்தி நாலு மணி நேரமும் அதைப் பார்த்துக் கொண்டே இருந்து விடலாம். அலுப்பே தோன்றாது!' என்றாள் ஆனந்தமாக.

ஆனால் இரு தினங்களில் அந்தக் கிளியையே கூண்டில் அடைத்து, "மாயாதேவிக்கு அடியேன் காணிக்கை!" என்று குனிந்து வணங்கி அவன் அளித்தபோது மாயா பதறிப் போனாள்.

"ஐயோ! என்ன இது? சுதந்திரமாக வானில் பறப்பதைக் கூண்டிலா அடைப்பது?" என்று அவசரமாகக் கூண்டைத் திறந்து விட்டாள்.

வெளியே வந்த பறவை பறக்க முடியாமல் கீழே விழவும் துடிதுடித்தபடியே தூக்கிப் பார்த்தாள். பளபளவென்று இருந்த பசிய இறகுகள் வெட்டப்பட்டு இருப்பதைக் காணவும் மளமளவென்று கண்ணீர் வடியக் கிளியைத் தூக்கி வருடினாள். "இது என்ன சுதாகர்! என்னால் தாங்க முடியவில்லையே!" என்றாள், வேதனையோடு.

"இறகை வெட்டாவிட்டால் பறந்து போய்விடுமே, பேபி! பழகும் வரை இப்படித்தான் செய்வது," என்று கிளியை வாங்கிக் கூண்டில் விட்டு மூடினான் சுதாகர்.

"உனக்கு இருதயமே இல்லையா?" என்று விம்மி விம்மி அழலானாள் மாயா.

மேலும் மேலும் அவளது அழுகை அதிகமாகவும், "ஷ்... என்ன பேபி இது? உனக்குச் சந்தோஷமா இருக்கும் என்றுதான் பிடித்து வரச் சொன்னேன். இப்போது என்ன ஆகிவிட்டது? இதோ பார், கிளிக்கு நிறையப் பழமும் பாலும் கொடுத்து வந்தால் சீக்கிரமே இறகு முழுசா வளர்ந்து விடும். பிறகு பறக்க விட்டு விடலாம். ம்? அழக் கூடாது, மாயா. சொன்னால் கேளம்மா." என்று அவன் தோளிலேயே அவளைச் சாய்த்துச் சமாதானம் செய்யும்படியாகவும் ஆயிற்று.

கிளியைச் சர்வ ஜாக்கிரதையுடன் பாதுகாத்தாள் மாயா.

வேளா வேளைக்குப் பால் பழம் எல்லாம் ஒழுங்காகத்தான் வைத்துப் பாதுகாத்து வந்தாள்.

ஆனாலும் இரண்டு நாள்கள் இரை எடுக்காமல் கிடந்த கிளி மூன்றாம் நாள் செத்துப் போயிற்று.

ஆபிஸ் அறையில் ஏதோ பைலைத் திருப்பிச் சரி பார்த்துக் கொண்டு இருந்தான் சுதாகர்.

கதவைத் தள்ளித் திறந்துகொண்டு உள்ளே வந்த மாயாவின் முகத்தைப்பார்த்ததும் சட்டெனப் பேனாவைப் போட்டு எழுந்து வந்தான்.

"என்ன, பேபி?"

"கிளி...கிளி செத்துப் போயிற்று. பட்டினியாகக் கிடந்தே உயிரை விட்டுவிட்டது. சுதந்திரமாகச் சிறகடித்துக் கொண்டிருந்த பறவை, அதன் கூட்டில் அதற்குக் குஞ்சுகள் கூட இருந்திருக்கலாம். அதைப் பிடித்தாயே, சிறகை ஒடித்தாயே, இப்போ செத்தே போய்விட்டதே!" சட்டெனக் குரல் உடையக் கைகளில் முகம் புதைத்து அழுதாள்.

சொல்வது அறியாமல் சற்றுத் திகைத்து விட்டு, 'ஐயம் ஸாரி, ட்ரூலி ஸாரி, பேபி!" என்றான், அவள் கூந்தலை மெல்ல நீவியபடி.

அந்தக் கிளியைப் போலத்தான் சுதாகர் அவளையும் சிறை வைத்திருக்கிறான். இன்பமான குடும்பச் சூழ்நிலையில் இருந்து

அவளைப் பிரித்து நாய்களைக் கொண்டு அவளது நடமாட்டத்தைக் குறுக்கி... இனி என்ன ஆகும்?

சொல்லொணாத வேதனையுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள் மாயா.

சட்டென அவளை இழுத்து அணைத்து, "அப்படிப் பார்க்காதே, பேபி! மெய்யாகவே நானும் வருந்துகிறேன்!" என்றான் சுதாகர்.

ஒன்றும் பேசாமல் அவன் கைகளை விலக்கி விட்டு வெளியே போனாள் மாயா.

## 11

செத்துப் போன கிளிக்கும் தனக்கும் ஒப்புமை நினைத்தே சோர்ந்து போனாள் மாயா.

எந்த நிலையிலும் பசித்து ருசித்து உண்பவள் இப்போது உணவில் விருப்பமற்று நகர்ந்தாள்.

இரண்டாம் வேளையும் அவள் கொறித்துவிட்டு எழக் கண்டதும் சுதாகரின் புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது.

'இன்னும் கொஞ்சம்' சாப்பிடு பேபி! பட்டாணிக் குருமா நன்றாக இருக்கிறது..."

தலையை அசைத்துவிட்டுத் திரும்பினாள் மாயா. கிளிக்கும் இப்படித்தான் உணவு பிடிக்காமல் போயிற்றோ என்று நினைத்தாள். மீண்டும் திரும்பி, "சுதாகர்! என்னை விடுவிக்கவே மாட்டாயா? ப்ளீஸ், என்னால் தாங்க முடியவில்லையே!" என்றாள் விழிகளில் நீர் திரையிட.

முகம் சட்டெனக் கடுமை பெற, "ஒரு நாளும் அனுப்பப் போவது இல்லை," என்றான் அவன்.

உதட்டைக் கடித்து விம்மலை அடக்கிக் கொண்டு நகர்ந்தாள் மாயா.

யோசனையோடு அவளையே பார்த்த சுதாகரின் கண்கள் சட்டெனப் பளிச்சிட்டன.

இரண்டே எட்டில் அவளைத் தடுத்து நிறுத்தி. "ஆல்ரைட் மாயா! அழாதே. கொஞ்ச நாளில் உன்னை உன் வீட்டுக்கு அனுப்புகிறேன்," என்றான்.

வினாடிக்குள் ஸ்விட்ச் போட்டாற் போல அவள் முகம் ஒளி பெற்று விகசித்தது. 'எப்போது? எப்போது சுதாகர்? எப்போ?" என்றாள் ஆர்வத்தோடு.

"ம்ம்..." என்று அவன் உதட்டோரத்தில் வளைவுடட யோசிப்பது போலப் பாவனை செய்யவும் மாயா பயந்து விட்டாள்.

"ப்ளீஸ் சுதாகர்! நீ கிழவியான பிறகு அப்படி இப்படி என்று ஏதாவது வேடிக்கை என்று நினைத்துச் சொல்லி விடாதே. என்னால்...என்னால் தாங்கிக் கொள்ளவே முடியாது சுதாகர்!" என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு. எல்லையற்ற பயத்துடன் வேண்டினாள்.

"சேசே. அப்படி இல்லை...ம்...ஓகே மாயா! இன்றிலிருந்து பத்து... இல்லை எதற்கும் மேலும் இரண்டு சேர்த்துக் கொள்ளலாம். இன்றிலிருந்து ஓர் ஆண்டில் உன்னை இங்கிருந்து அனுப்பி விடுகிறேன்." என்றான் அவன்.

முக மலர்ச்சியுடன், "கட்டாயம்தானே. சுதாகர்? ஆனால் ஒரு வருடமா? அடேயப்பா! பன்னிரண்டு மாதம்! ச்சூ... பரவாயில்லை. எப்படியும் ஒரு வருடம்தானே! அப்போ இன்றைக்கு முன்னூற்று அறுபத்து ஆறாம் நாள் நான் என் அம்மா அப்பாவோடு இருப்பேன். ப்ரீ. பாபு..." என்றவள் திடீரென்று விழிகளில் கலக்கம் சூழ. "சுதாகர்! நீ சும்மாவேனும் சொல்லவில்லையே? நிஜம். நிஜமாய் அனுப்பிவிடு வாயில்லையா?" என்று கவலையுடன் வினவினாள்.

அவள் முகத்தையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அவன், "பிராமிஸ்!" என்றான்.

அப்போதும் மாயாவின் முகம் தெளியவில்லை. "எங்கள் வீட்டில் ப்ராமிஸ் என்றால் பகல் போய் இரவு வருவது போல் வெகுவெகு நிச்சயம் என்று அர்த்தம். நீ... நீயும்..."

"அப்படியேதான், பேபி! ஆனால் ஒன்று. அப்போது செல்வதற்கு நீ விரும்ப வேண்டும். அவ்வளவுதான்!"

"அப்பாடி!" என்று பெருமூச்சுவிட்டாள் மாயா. "அந்தக் கிளிபோல இங்கேயே செத்துப் போவேனோ என்று பயந்து போயிருந்தேன்," என்றாள்.

பிறகுதான் அவன் பேச்சின் பின் பகுதியை மனதில் உணர்ந்தவளாய், "நான் ஏன் விரும்பமாட்டேனாம். விட்டால் இன்றே ஓடி விடுவேனே!" என்று ஒரு கப் ஃப்ரூட்ஸால்டை எடுத்துச் சுவைக்கலானாள்.

பார்வையில் குறுகுறுப்புடன், "அங்கே ஃபாக்டரி காவலுக்கு இருந்த நாய்களை அனுப்பிவிடலாமா என்று ஒரு யோசனை..." என்று இழுத்தான் சுதாகர்.

கண்கள் பளிச்சிட நிமிர்ந்தாள் மாயா. "மெய்யாகவா சுதாகர்?..." எனும்போதே விஷயம் புரிந்து, "ஏன் இப்படி எல்லாம் ஏய்க்கிறாய்?" என்று முறைத்தாள்.

முறுவலித்தபடியே, "எனக்கு ஒரு சந்தேகம் மாயா! சில மாதங்களில் உன்னை அனுப்பி விடுவதாக உறுதி தந்துவிட்டேனே, இப்போது கூட வாய்ப்புக் கிடைத்தால் ஓடுவாயோ என்று யோசித்தேன்," என்றான்.

மாயாவின் கூந்தல் ஒரு தரம் துள்ளி எழுந்தது.

"பின்னே? வாய்ப்புக் கிடைத்தால் நழுவவிட நான் என்ன முட்டாளா?"

முறுவல் மறைய, "உனக்கு இங்கே என்ன குறை, மாயா? வளமான உணவு, நல்ல ஆடைகள், நீ விரும்பினால் நகைகள்

கூட நான் தருவேன். கூடவே ரசிப்பதற்கு இயற்கை எழில், மலைத் தென்றல்..."

"இரண்டே இரண்டு குறைகள்!' என்றாள், மாயா - பளிச்சென்று.

"என்னென்ன?"

"ஒன்று என் குடும்பத்தினர் இங்கே இல்லாதது. அடுத்தது..." என்று இழுத்தாள் மாயா.

"ம்' என்று குறுஞ்சிரிப்புடன் ஊக்கினான் அவன்.

"இரண்டாவது நீ இங்கே இருப்பது...' என்று துடுக்காகப் பதில் சொல்லிவிட்டு ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தா மாயா.

அவன் நன்றாகச் சிரித்தபடியே, "தைரியத்தைப் பார். என் வீட்டில் நான் இருப்பதைக் குறை என்கிறாயா?" என்றான்.

"அதைத்தான் நானும் சொல்கிறேன், உன் வீட்டில் நீயும் என் வீட்டில் நானும் இருப்பதுதான் இயல்பு. மாறாக என்னை இங்கே கொண்டு வந்தால் இந்த மாதிரிப் பேச்சையும் அனுபவித்துத்தான் ஆக வேண்டும்," என்று கண்ணால் சவால் விட்டாள் மாயா.

"என்ன செய்வது?" என்று தோளைக் குலுக்கினான் அவன். "முள்ளுக்குப் பயந்தால் ரோஜாவைப் பறிக்க முடியுமா?"

அர்த்தம் புரிந்த அவளுக்கு ஆத்திரம் வந்தது. அடக்கிக் கொண்டு, "ஒரு கதை படித்தேன், சுதாகர். அதைச் சொல்லட்டுமா?" என்று சாதுவாகக் கேட்டாள்.

ஒரு விநாடி அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு, "சொல்லேன்..." என்று நாற்காலியில் வசதியாகச் சாய்ந்து கொண்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான் அவன்.

"வந்து...வந்து... ஓர் அழகான பெண்ணை ஒரு பழைய கால முரட்டு ஜமீன்தார் அவளுக்கு இஷ்ட விரோதமாய்ச் சிறை வைத்தானாம்."

"நம் கதையா?"

"அவள் பட்டினியாய்க் கிடந்து முரண் செய்தாளாம்."

"ஓ! அப்படியானால் நம் கதை இல்லை. அவள் தானாகவே பட்டினியாய்க் கிடந்தாள் என்கிறாயே."

"ச்சு... குறுக்கே பேசாதே. அப்புறம் ஒரு நாள் காவலுக்கு இருந்தவனிடம் இளநீரும் அரிவாளும் கேட்டு இளநீர் சீவிக் குடித்தாளாம்."

"ம்ஹூம்..." என்றான் அவன் நன்றாக மலர்ந்த முறுவலுடன்.

அவள் அவனை முறைத்துவிட்டு, "காவல்காரன் சொன்ன விவரத்தைக் கேட்டதும் அந்த ஜமீன்தார் முரடன் நன்றாக அலங்காரம் செய்து கொண்டு அந்தப் பெண்ணிடம் வந்து, 'பெண்ணே! உன் தங்கக் கையால் ஓர் இளநீர் சீவிக்கொடு!' என்று இளித்தானாம்...' சாப்பாட்டு மேசைமேல் இருந்த பழம் வெட்டும் கத்தியைக் குறிப்பாய்ப் பார்த்து விட்டு, அவளும் சீவினாளாம்..." என்று இழுக்கும் போதே அவன் குறுக்கிட்டான்.

"ஆனால் அது இளநீரை அல்லவாம்..." என்று முடித்து விட்டு ஓகோ என்று சிரித்தான் சுதாகர். 'பேபி பேபி...' என்று மீண்டும் ஒரு மூச்சு நகைத்தான். பிறகு, "மிரட்டிப் பார்க்கிறாயாக்கும். இந்தப் பழம் வெட்டும் கத்தியைக் கொண்டு என்னை வெட்டி விடுவாயா? என்னை வெட்டும் அளவு உனக்கு மனதில் முரட்டுத் தனம் கிடையாது என்பதும் உன்னால் என்னை எளிதில் வெட்டிவிட முடியாது என்பதும் ஒருபுறம் இருக்கட்டும். என்னை வெட்டிவிட்டு நீ எப்படி வெளியே போவாயாம்? என் உத்தரவு இல்லாமல் நாய்கள் உன்னை விடாதே..." என்று மீண்டும் சிரித்தான்.

"நீ ஒன்றும் சொல்ல வேண்டியது இல்லை," என்றாள் மாயா விரைப்புடன்.

சிரிப்பை அடக்கிக் கொண்டு, "மாலையில் டென்னிஸ் விளையாடலாமா?" என்று பேச்சை மாற்றினான் அவன்.

தன்னைப் பார்த்து அவன் சிரித்த கோபம் அவளுக்கு ஆறாததால், 'நீ பெரிய கெட்டிக்காரன். பலசாலி என்று காட்ட வேண்டுமாக்கும்? நான் ஒன்றும் வரவில்லை," என்று வெடுவெடுத்தாள் அவள்.

"வேண்டுமானால் விட்டுத் தருகிறேன். மாயா," என்று சீண்டினான் அவன்.

"ஒன்றும் தேவையில்லை. நானே ஜெயிப்பேன்," என்று தலையைச் சிலுப்பினாள் மாயா.

"எங்கே பரிதாபகரமாய்த் தோற்றுப் போய் அழுவாய்."

"நீதான் தோற்பாய்."

"நீதான்."

"நீயே - தான்."

"பார்ப்போமா?"

"பார்ப்..." சொல்லை முடிக்கு முன்னே அவனது தந்திரம் புரிந்துபோய், "நாளை மாலையில்," என்று சொல்லிவிட்டுத் தலையைச் சரித்துக் குறும்புடன் நகைத்தாள் மாயா.

"கெட்டிக்காரிதான்!' என்று இணைந்து நகைத்துவிட்டுத் தொடர்ந்தான் அவன். "என்னிடம் கற்றுவிட்டு என்னையே ஜெயிக்கப் போகிறாயாக்கும்!" என்றான் ஏளனமாக.

"அதுவும் என்னிடம் படித்ததுதான்," என்று உடனேயே பதில் வந்தது.

"அடேயப்பா! அப்படி உன்னிடம் நான் எதைக் கற்று விட்டேனாம்?"

சிரிப்பு பேச்சை முந்த, "பேச்சு!" என்று கிளுகிளுத்தாள் அவள்.

"அம்பேல்!" என்று கைகளைத் தூக்கினான் அவன். "பேச்சிலாவது உன்னை ஜெயிப்பதாவது! நடக்கிற காரியமா பேபி!" என்று சிரித்தான் அவன்.

மாயாவின் மனது எங்கோ சென்றது. "எங்கள் பாபு கூடக் கடைசியில் அப்படித்தான் சொல்வான். அம்மாதான், 'அவனுக்கு விட்டுக் கொடுடி, சாண் பிள்ளையானாலும் ஆண் பிள்ளை!' என்பார்கள்..."

"அது என்ன ரைம்?"

"ரைம் இல்லை, பழமொழி. எங்கள் அம்மா எதற்கும் சரியாக ஒரு பழமொழி சொல்வார்கள்..." சட்டென அவள் முகம் வாடியது. அதுபோலப் பழமொழிதானே இவ்வளவு இன்னலில் கொண்டு வந்து விட்டது. வேதனையுடன் அவனை வெறித்துப் பார்த்தாள் மாயா. "ஒரு நாள் நிச்சயமாக... ஒரு நாள் இதற்கெல்லாம் சேர்த்து நீ மிகமிகக் கஷ்டப்படப் போகிறாய் பார்..." என்று நிஷ்டூரமாக மொழிந்து விட்டு மேலும் நில்லாமல் ஓடிவிட்டாள்.

மறுநாள் முந்திக் கொண்டு வந்து காலண்டரில் தேதி கிழித்தாள்.

"ஒரு நாள் குறைந்தது!" என்று கூறும்போதே, அவள் முகம் வாடலாயிற்று. "இன்னும் முன்னூற்றி அறுபத்தி நாலு நாள்கள்! அடேயப்பா!" என்றாள் வருத்தத்துடன்.

பிறகு ஏதோ யோசனையுடன், "அவ்வளவு நாளும் நீ இங்கேயே இருப்பாயா?" என்று அவனிடம் விசாரித்தாள்.

"ஏன்?"

"இல்லை... போர் அடிக்காதா என்று நினைத்தேன்."

"சொந்த வீட்டில் கூட போர் அடிக்குமா?"

"எங்கள் வீடு மாதிரி என்றால் அதற்கு வாய்ப்பில்லை. ஆனால் இங்கே மொட்டு மொட்டென்று நீ தனியே இருக்க வேண்டுமே."

"போர் அடிக்காமல் செய்வதற்கு இங்கே ஆயிரம் பொழுது போக்குகள் உண்டு. ஒன்று மட்டும்தான் வசதி இல்லாதது.

வழக்கமாக அந்த ஆசை வந்தால், ஸிட்டி ஸைட் போவேன். ஆனால் இப்போதுதான் நீ இருக்கிறாயே!" என்று விஷமமாகச் சிரித்தான் சுதாகர்.

கன்றிச் சிவந்த முகத்தைத் திருப்பிக்கொண்டு, "அப்படி எல்லாம் ஆசை வருகிறவன் ஒழுங்காகக் கல்யாணம் செய்து கொள்வதுதானே..." என்று எரிச்சலாக மொழிந்தாள் மாயா.

"அது சுலபமில்லையே பேபி."

புருவங்களை உயர்த்தி, "ஏன், எவளும் உன்னைப் பண்ணிக் கொள்ளமாட்டேன் என்கிறாளா?" என்று அவனை மட்டம் தட்ட முயன்றாள் மாயா.

அவள் பேச்சையே கவனியாதவன்போல, "எனக்கு எவளையாவது பிடிக்க வேண்டாமா?" என்றான் அவன்.

குழப்பத்துடன் திரும்பிப் பார்த்தாள் மாயா.

"யெஸ், பேபி! தொடுவதற்குப் பிடித்தால் மணந்து கொள்ளவும் பிடிக்கும் என்பது இல்லை, பார். உன்னைத் தொடுவது எனக்கு மிகவும் பிடித்துத்தான் இருக்கிறது ஆனால் அதற்காக உன்னை மணந்து கொள்ளவும் பிடிக்குமா?"

"உனக்குப் பிடித்தால்கூட உன்னை மணந்து கொள்ள நான் தயாரில்லை," என்று வெறுத்தாள் மாயா.

அவன் வெகு சாவதானமாக, "ஓகே. இப்போதைய ஏற்பாடே எனக்கு மகிழ்ச்சிதான்," என்று உரைத்தான்.

ஆத்திரமாக உறுத்து விழித்துவிட்டு, "வெட்கம், நாகரிகம், அசிங்கம் -இதெல்லாம் என்ன என்றே உனக்குத் தெரியாது, இல்லையா சுதாகர்?" என்றாள் அவள்.

"முன்பின் தெரியாதவனை நாய் என்றவள், முதல் சந்திப்பிலே கை நீட்டி அடித்தவள், அறியாத ஒருத்தியை நாய் நக்கும் செக்கு என்றவள்-வெட்கம், நாகரிகம், அசிங்கம் இதை எல்லாம் பற்றி உனக்கும்தான் என்ன தெரியும் மாயா?"

"நான்...நீ..." என்று உதட்டைக் கடித்துக் கொண்டு திரும்பினாள் மாயா.

"ஆகா..." என்று கைதட்டினான் அவன். "பேச்சில் உன்னை வென்று விட்டேன் பார்!" என்று பெருமையடித்துக்கொண்டான். உடனேயே சற்று யோசிப்பது போலப் பாவனை செய்துகொண்டு, "அப்படியானால் இன்று டென்னிஸில் நீ என்னை வென்று விடுவாயோ?" என்று மிகவும் அதிகமாய்க் கவலை காட்டினான்.

"ஆமாம், ஜெயிக்கத்தான் போகிறேன்," என்று கறுவினாள் அவள். ஆனால் கூடவே அவனது பாவனையில் சிரிக்கவும் செய்தாள்.

அவள் சிரிப்பதை ரசித்தபடி, "இன்று கல்யாணக் குகை பார்க்கப் போவோமா?" என்று வினவினான் அவன்.

விழிகள் விரிய, "கல்யாணம் குகையில் செய்வார்களா?" என்று ஆர்வமாக விசாரித்தாள் அவள்.

குறுஞ்சிரிப்புடன், "நீயே பாரேன்," என்றான் அவன்.

மாலையில் கீழ்த் திசையாக அவளை அழைத்துச் சென்றான்.

அங்கே வந்து சேர்ந்த பின் முதல் முறையாக அவனது எல்லையைத் தாண்டி மாயா சென்றது அன்றுதான்.

வெகு தூரம் சென்ற பின் ஒரு சிறு ஓடையைத் தாண்டினர்.

"தண்ணீர் ஐஸ் மாதிரி இருக்கிறதே!" என்றாள் மாயா. கூடவே, "அந்தக் குருவியைப் பார். அந்தப் பூவைப் பாரேன். இதென்ன, தாமரை மாதிரித் தரையெல்லாம் பச்சை பச்சையாக..." என்று ஆயிரம் கேட்டாள் அவள்.

சிறுநகையுடன் பதில் சொல்லிக் கொண்டே அழைத்துச் சென்றான் சுதாகர். "நன்றாக இருக்கிறதா?"

"எல்லாம் நன்றாக இருக்கின்றன. ஆனால் இதுதான் பிடிக்கவில்லை," என்று உடன் வந்த நாய்களைக் காட்டினாள், அவள்.

“உன் காவல்தான், வாய்ப்புக் கிடைத்தது என்று எண்ணி நீ ஓடினால்...?”

“உனக்கு இரண்டு கால்கள் இல்லையா?” என்றாள் மாயா கிண்டலாக.

“திவ்வியமாக இருக்கின்றன. ஆனால் இங்கே ஒளிந்து கொள்ள நிறைய இடம் இருக்கிறதே. நாயானால் மோப்பத்தில் கண்டுவிடும். மற்றப்படி தப்புத் தவறாய் எங்கேனும் ஒளிந்து கொண்டு நீ பாம்பு புலிக்கு இரையாகிவிடக் கூடாதே என்ற நல்ல எண்ணத்தால்தான் நாய்களை அழைத்து வந்தேன்.”

“புலி...” மருட்சியுடன் விழிகள் சுழல, அவனை நெருங்கி நின்றாள் மாயா. “இங்கே புலி எல்லாம் வருமா?”

அவன் சும்மா சிரிக்கவும், அழகு காட்டிவிட்டு மேலே நடந்தாள்.

மலைப் பகுதியில் செங்குத்தாகச் சிறிது தூரம் ஏறியதும், மாயா நின்று, “மேலே ஏன் கூட்டிப் போகிறாய்?” என்று கண்டிப்பான குரலில் வினவினாள்.

அவன் தலையில் அடித்துக்கொண்டான். “பின்னே குகை சமவெளியிலேயா இருக்கும்?”

“ஓ... ஸாரி சுதாகர்! நீ ஊருக்கு அனுப்புகிறேன் என்று சொல்லிவிட்டு மலை மேல் அழைத்து வரவும் சந்தேகப்பட்டு விட்டேன்,” என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள் மாயா.

மெல்ல முறுவல் செய்தான் அவன்.

சற்று மேலே சென்றதும் சில பாறைகளின் மேல் வெண்மையாக ஏதோ தெரிந்தது. பாக்கெட்டிலிருந்து சாவிக் கொத்தை எடுத்து அதில் இருந்த சிறு கத்தியால் அந்த வெண்மையான பொருளைத் துண்டுகளாக வெட்டி எடுத்தான் சுதாகர். “சாப்பிட்டுப் பார்,” என்று அவளிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றைக் கடித்தான். நாய்களிடமும் சிலவற்றை நீட்டினான்.

வாயில் போடாமல், "இது என்ன?" என்று விசாரித்தாள் அவள்.

"நாச்சுரல் பால்கோவா. காட்டு எருமைகள் கன்றுக்குப் போக மீந்த பாலை இப்படிப் பாறைகளில் தேய்த்து வெளியேற்றும். அது காற்றிலும் வெயிலிலும் காய்ந்து இப்படி ஆகும்," என்று விளக்கினான் அவன்.

"எனக்கு வேண்டாம் சுதாகர்! எத்தனை காக்கை, குருவி... ஊகும்... வேண்டாம்."

அவன் உதடு வளைந்தது. "கொஞ்சம் முன் ஓடையில் நீர் அருந்தினாயே. அதில் எத்தனை காக்கை... குருவி... மிருகங்கள்..."

"ஏய்... சொல்லாதே, சொல்லாதே!" என்று தெரிவித்தாள் மாயா. "நிஜமாகவே இது சுத்தமாய் இருக்குமா?"

"பாரேன்," என்று உடைத்துக் காட்டினான் அவன்.

தயக்கத்துடன் வாயில் போட்டுக் கொண்டாள் அவள்.

உடனே முகம் மலர, "வெகு ருசி!" என்று இன்னமும் கொஞ்சம் வாங்கி உண்டாள்.

மேலும் பல துண்டுகளைப் பெயர்த்து எடுத்து உண்டபடியே மேலே நடந்தனர் இருவரும்.

"கல்யாணக் குகை வாசிகளுக்கு இதுவும் ஓர் உணவுதான்... இதோ பார் ஒரு குகை," என்று காட்டினான்.

இருவருமாக உள்ளே சென்றனர். ஒரே இருட்டு.

சிறு பென்சில். டார்ச்சை அடித்துக் காட்டினான் அவன்.

உயரே உறிகளில் சில குடுவைகள் தொங்கின. ஒன்றைத் திறந்து காட்டினான் சுதாகர். "தினை மாவும் தேனும் ஆன கலவை. எத்தனை ஆண்டுகள் சென்றாலும் கெடாது!" என்றான்.

மாயாவுக்கு ஒரே குழப்பம். "ஆனால் சுதாகர்! இவ்வளவு சின்னதாக இருக்கிறதே, இதில் கல்யாணம் எப்படி நடக்கும்?" என்று வெகுளித்தனமாய் வினவினாள்.

"இந்தக் கல்யாணத்துக்கு இது போதும்," என்று சிரித்தபடியே வெளியே அவளை அழைத்து வந்தான் அவன்.

"அதோ பார், இன்னொன்று. ஆனால் அதில் ஆள் இருக்கிறது. வாயிலில் கல் தொங்குகிறது பார்" என்றான்.

"போய்ப் பார்க்கலாமா?" என்று ஆவலுடன் ஓர் எட்டு எடுத்து வைத்தாள் அவள்.

"நாகரிகம் தெரிந்தவள் பேசுகிற பேச்சா இது? அந்தக் குகைக்குள் இருப்பது யார் தெரியுமா? கல்யாண மாப்பிள்ளையும் பெண்ணும் மட்டும்."

'ஓ!' மாயாவின் முகம் ரத்த நிறம் கொண்டது. "தேனிலவு!" என்று முணுமுணுத்தாள்.

அவள் முகத்தைப் பார்த்தபடி, "நீ நினைப்பது போலக் கல்யாணம் ஆன பிறகு இங்கே வருவதில்லை, மாயா! காலையில் நம் தோட்டத்திற்கு வருகிறார்களே, அவர்களுக்கு இது ஒரு வழக்கம். எவனுக்காவது ஒரு பெண்ணைப் பிடித்துப் போய்விட்டால் இங்கே தூக்கி வந்துவிடுவான். அப்புறம்..." என்று சிரித்தான் சுதாகர்.

"அந்தப் பெண்ணின் சம்மதம்?"

"அதைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை."

"அதெப்படி? அவளுக்குப் பிடிக்காவிட்டால்..."

"பிடிக்கும்படி செய்வது அவன் சாமர்த்தியம். அதில் அவர்களுக்குப் பெருமைகூட. முரட்டு குதிரைக் குட்டியை அடக்குவது போல்."

"காட்டு மிராண்டித்தனம்!" என்று வெடித்தாள் மாயா. "பார்பேரிஸம், ராட்சசத்தனம்."

அவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான். "எதுவோ பேபி. இதுவரை எந்தப் பெண்ணும் வெறுத்துப் போனதாகச் சேதியில்லை."

"படிப்பறிவே் இல்லாதவர்கள். வேறே வழியில்லை என்று பணிந்திருப்பார்கள்."

"அதொன்றும் இல்லை. அவர்களில் விவாகரத்தும் வெகு சுலபம். இங்கே ஒருவகைக் கோரைப்புல் இருக்கிறது. அதை எடுத்து இரண்டாகக் கிழித்துக் கணவனுக்கும் தனக்கும் இடையே மனைவி போட்டு விட்டால் கணக்குத் தீர்ந்தது. ஆனால் அந்த உரிமை பெண்களுக்கு மட்டும்தான்."

"பரவாயில்லையே, அந்த மட்டும் பெண்கள் பிழைத்தார்கள்."

"பாலன்ஸ் மெயின்டெயின் பண்ணுகிறார்கள். மணப்பது அவன் உரிமை என்றால் மறுப்பது அவள் உரிமை."

"ஓகோ! இப்போது புரிகிறது," என்றாள் மாயா யோசனையோடு.

"என்ன புரிகிறது?"

"அவர்களிடம் ஜாடையில் நான் எவ்வளவோ வேண்டியும் யாருமே எனக்கு உதவ வரவில்லை. இப்படியும் இரக்கமற்று இருப்பார்களா என்று நினைத்திருந்தேன். அவர்களைப் பொறுத்தவரை அது அப்படியில்லை என்று புரிந்தது. இவர்கள் என்ன இனம் சுதாகர்?" என்று விசாரித்தாள் மாயா.

"ஏதோ ஒரு மலைஜாதி, எனக்குத் தெரிந்தவரையில் நாலைந்து தலைமுறையாக இங்கே இருக்கிறார்கள். எங்கள் குடும்பம்தான் அவர்களுக்கு மன்னர் பரம்பரை."

"பெரிய பெரிய ராஜ பரம்பரை எல்லாம் போன இடம் தெரியவில்லை..." என்று கேலியாக இழுத்தாள் மாயா.

அவன் சிரிக்கவில்லை. சீரியஸாகவே, "மெய் மாயா! நானும் இவர்களை முன்னேற்ற எவ்வளவோ செய்துதான் பார்க்கிறேன்.

அப்பா கூட ஆங்கிலத்தைத் திணித்துப் பார்த்து விட்டு, விட்டு விட்டாராம். நான் வேறு ஒன்று செய்தேன். இவர்களது மொழிக்கே ஆங்கில வடிவம் கொடுத்து எழுத வைக்கிறேன். அதிலிருந்து ஆங்கிலத்துக்குத் திருப்புகிறேன். கொஞ்சம் பரவாயில்லை போலத் தெரிகிறது. ஆனால் படிப்பது எல்லாம் எனக்காகத்தான். தனக்கு நல்லது என்ற எண்ணமே கிடையாது. அதுவும் பையன்களுக்கு எருமையும், வெள்ளாடும், மணிப்பயிரும் விட்டால் வேறு வழிகளில் ஆர்வமே வருவது இல்லை," என்றான்.

"பெண்களேனும் ஆசையாகப் படிக்கிறார்களா?"

"ஆசையாக என்று இல்லை. ஆனால் கொஞ்சம் அக்கறை இருக்கிறது. ஜானிம்மை என்ற ஒரு பெண், போன ஆண்டு நர்ஸாகி விட்டாள். இன்னும் இருவர் ஸ்கூல் ஃபைனல் எழுதப் போகிறார்கள்."

"ஆமாம். அந்த ஜானிம்மையை யாரும் தூக்கி வர வில்லையா இப்படி?" என்று குகையைக் காட்டிக் கேலியாகச் சொன்னாள். "போட்டா போட்டி இருக்குமே!"

"எனக்குப் பயந்து யாரும் துணிய மாட்டார்கள்," என்றான் அவன் அழுத்தத்துடன்.

"ஓகோ!" என்று தலையைச் சரித்து அவனைப் பார்த்தாள் மாயா.

"தப்பாக நினையாதே!" என்று சினத்துடன் அவள் கையைப் பற்றிச் சீறினான் சுதாகர். "அவர்கள் எல்லோரும் என் குடிமக்கள். தன் மகளை எவனும் தொடுவானா? இந்தக் குடியின் பெண்கள் எல்லாரும் அப்படித்தான்."

சுதாகரிடம் ஒரு புதிய மனிதனை ஆச்சரியமாகக் கண்டாள் மாயா.

ஆனால் ஒவ்வோர் இரவிலும் அவன் அவளிடம் வரவும் அவள் தவித்துப் போனாள்.

அவளது எதிர்ப்பை அடக்கியபடியே, "உன்னால் என்னைத் தடுக்க முடியாது, மாயா! அதோடு உனக்கு என்ன நஷ்டம்? நீயாக வராதவரையில் நீ சாக்கடை ஆகிவிடப் போவது இல்லை என்கிறாய். அப்புறமாய் உன் பெற்றோரிடம் போன பிறகு ஒட்டு மொத்தமாய் ஒரு கங்கா ஸ்நானம் செய்துவிட்டால் தீர்ந்தது. அதுவரை போராடாமல் பொறுத்துக் கொள்வதுதானே," என்றான், கிண்டலாக.

வெறுப்புடன் முறைத்து விட்டு, "நீ குளிக்குமுன் சாக்கடையில் ஒருமுறை முழுகுவாயோ?" என்றாள் துடுக்காக.

"பலே!" என்று சிரித்து அவளைத் தொட்டான் அவன்.

சில நாள்களாக மாயாவுக்கு உடம்பில் என்னென்னவோ செய்தது. தலை தாங்கமாட்டாத பாரத்துடன் கனத்தது. வயிற்றில் நெஞ்சில் எல்லாம் ஏதோ பிசைந்தது. அன்று பல் துலக்கிவிட்டு வந்தவள் மீண்டும் கட்டிலில் விழுந்தாள்.

"காபி, மேடம்," என்று ட்ரேயுடன் வந்து காபியை அவளுக்குக் கொடுத்தான் சுதாகர்.

பிறகு அங்கேயே ஒரு கன்னடப் பத்திரிகையோடு அமர்ந்து கொண்டான்.

சற்று நேரம் அவனைப் பார்த்துவிட்டு, அச்சத்துடனேயே அவனை அழைத்தாள் மாயா, "சுதாகர்! நீ என்னைக் கொல்லப் போகிறாயா?" என்றாள் குரல் நடுங்க.

"வாட்!" திகைப்புடன் பத்திரிகையிலிருந்து நிமிர்ந்தான் அவன். "டோன்ட் பி ஸில்லி."

"தயவு செய்து நிஜத்தைச் சொல்லி விடு, சுதாகர்! ஏதேனும்...ஏதேனும் ஸ்லோ பாய்ஸன் -மெல்லக் கொல்லும் விஷம் ஏதேனும் - என் சாப்பாட்டில் கலந்து விட்டாயா?"

பத்திரிகையை மடித்துப் போட்டுவிட்டு அவள் அருகே வந்து அமர்ந்தான் சுதாகர். அவள் முகத்தில் விழுந்திருந்த கூந்தலை ஒதுக்கிவிட்டு, "ஏன் இப்படி எல்லாம் உளறுகிறாய்?" என்று இதமாகவே கேட்டான்.

அவளது விழிகளில் நீர் நிறைந்தது. "பின்னே எனக்கு இப்படிக் கஷ்டமாக இருக்கிறதே. நிற்க முடியவில்லை. உட்கார முடியவில்லை, தலை எங்கோ போகிறது... சிரிக்காதே. சுதாகர்! மெய்யாகவே அதுபோலத்தான் இருக்கிறது. ஒரே அசதி வேறு! பார். இப்படிக் கையைத் தூக்குவதுகூடக் கஷ்டமாக இருக்கிறது," என்று அழுதாள் மாயா.

"அழாதே பேபி! நான் டாக்டர் சங்கரை வரச் சொல்கிறேன். அவன் சரி செய்து விடுவான்."

ஏதோ யோசனையில் அவள் விழிகள் ஒளி பெற்றன. "டாக்டர் என்றால் அவருக்கு இங்கிலீஷ் தெரி..." என்றவள் சட்டெனக் கையால் வாயைப் பொத்திக் கொண்டாள்.

அவன் உரக்கச் சிரித்தான். அவளது மூக்கைப் பிடித்து ஆட்டிவிட்டு, "என் சம்பளத்தில் வாழும் டாக்டர் எனக்குப் பிடிக்காததைச் செய்யமாட்டான். ஆனால் பேபி, உனக்குத் தேவை ஒரு லேடி டாக்டரோ என்று எனக்கு ஒரு சந்தேகம்," என்றான் சிறு நகைப்புடன்.

"ஏன்?" என்று புரியாமலே முதலில் வினவிய மாயாவின் கண்கள் சட்டென அகன்றன.

பிரமிப்புடன் எழுந்தவள், "ஏய், நீ..." என்று வெறி கொண்டவள் போல் அவன் முகம், மார்பு எங்கும் தன் மெல்லிய கரங்களால் குத்தலானாள்.

வெகு சுலபமாக அவள் கரங்களைப் பற்றித் தடுத்தான் அவன்.

தோற்றுச் சுருண்டு, "போ போ..." என்று கதறிய அவளைத் தன்புறம் திருப்பி நிமிர்த்தினான் அவன்.

"என்மேல் குற்றமில்லை! நான் மாசு பட்டவள் ஆக மாட்டேன் என்றாயே! இப்போது மாசு உன் வயிற்றிலேயே வளர்கிறதே! சொல் மாயா! இப்போது நீ பழைய குற்றமற்ற தூய்மையான மாயாதானா?"

வெற்றியின் கர்வத்தில் கண்கள் பளபளக்க அவன் கேட்டான்.

“வெல் பேபி! நீ இன்னமும் சிவலிங்கம்தானா? சொல்லு.”

## 12

“வெல் பேபி, நீ இன்னமும் சிவலிங்கம் - தானா?”

நீ இன்னமும் சிவலிங்கம்தானா?

நீ இன்னமும் சிவலிங்கம்தானா?

மீண்டும் மீண்டும் அதே கேள்வி இடியோசை போலச் செவிகளில் முழங்க மாயா மிரண்டு போனாள்.

அவளது விழிகளில் மருட்சியைக் கண்ட சுதாகர், அவள் வயிற்றில் லேசாகத் தட்டி, “இதற்கு என்ன சொல்கிறாய்?” என்று கர்வத்துடன் கேட்டான்.

பாவி பாவி பாவி... மாயாவின் நின்றுவிட்ட நெஞ்சு வெகு வேகமாகத் துடித்தது.

பழி வாங்குவதற்காக ஒருவன் இவ்வளவுக்கும் முனைவானா? எப்படி முடியும்? ஆனால் முடிந்து விட்டதே இவனுக்கு.

ராட்சசன்! அவன் முகத்தில் பலங்கொண்ட மட்டும் ஓங்கி அறைய வேண்டும் போலக் கையும் மனமும் துடித்தது மாயாவுக்கு. ஆனால் அதை எதிர்பார்த்தே அவன் இருப்பது போலத் தோன்றவும் சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள்.

அதை விடவும் மிகுந்த பிரயாசையுடன் தன் பதற்றத்தையும் பயத்தையும் வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டாள்.

இல்லாத அமைதியைக் காட்டி, "நான்...நான் அபார்ஷன் செய்து கிளீன் செய்து கொள்வேன்," என்றாள் முகத்தைத் திருப்பிக் கொண்டு.

"ஓ! கெட்டிக்காரத்தனமான பதில்தான்! ஆனால் நீ இங்கிருந்து செல்லும்போது அது முடியாதது ஆகிவிடுமே. கையில் 'குவா குவா'வோடு அல்லவா போவாய்," என்று எள்ளினான் அவன்.

"நான் ஏன் அப்படிப் போகிறேன்? நீ உருவாக்கியதை நீயே வைத்துக் கொள் என்று உன் கையிலே தந்து, வந்தது போலே 'சிங்கிள்' ஆகப் போவேன்," என்றாள் மாயா சற்றும் தளர்வைச் காட்டாமல்.

"ஒரு தாய்..." என்று தொடங்கியவனைச் சீற்றத்துடன் இடைமடறித்தாள் மாயா.

"தாயா? நானா? எண்ணத்தில்கூட நான் இணங்க வில்லையே. அப்படி இருக்க இது என் குழந்தை ஆகுமா? சீச்சீ, பிதற்றாதே!" என்றாள் கடுமையாக.

"ம்?" லேசான பிரமிப்புடன் பாராட்டுதலையும் காட்டின அவன் விழிகள்! "பரவாயில்லையே - பேபி! ஆனாலும் பொறுத்திருந்து பார்ப்போம்..." என்று அப்போதைக்கு முடித்தான்.

அதன் பின் பல நாள்கள் மாயா மிகவும் கஷ்டப் பட்டுப் போனாள்.

ஓயாத மனக் குழப்பமும் பயமும் உடல் கோளாறை மிகுதிப் படுத்தினாற் போல இடைவிடாத தலைச் சுற்றலும் வாந்தியுமாக வெகுவாகச் சிரமப்பட்டாள்.

அவள் துன்புற்று நெளிகையில் அவன் மட்டும் வழக்கம் போலத் துடிப்பாகவும், ஆரோக்கியத்துடனும் அலைவதைப் பார்க்கும்போது மிகுதியாக ஆத்திரம் வரும். இவன் தப்புக்கு நான் தண்டனை அனுபவிப்பதா என்று பொருமுவாள்.

கூடவே இது என்ன ஆகும் என்று உள்ளூரக் கலங்கிப் போவாள்.

ஆனாலும் அப்பாவைப் பார்த்துவிட்டால் அவர் எல்லாத் துன்பங்களுக்கும் தீர்வு கண்டு விடுவார்; சரி செய்து விடுவார். அப்புறம் பயமே இல்லை என்று மனதோடு சொல்லிச் சொல்லித் தைரியத்தை வரவழைத்துக் கொள்ளப் பெருமுயற்சி செய்வாள்.

ஆனால் சில சமயங்களில் சுதாகரின் சீண்டலில் அந்தத் தைரியம் ஆடிக் காற்று இலவம் பஞ்சாகப் பறந்து போகும்.

அவன் அருகில் இருக்கையில் அவனோடு வார்த்தைப் போராட்டம் நடத்திச் சோர்ந்தாள்.

தனித்திருக்கையில் தன் எண்ணங்களுடனேயே போராடி அதைவிட மோசமாய்ச் சோர்ந்தாள்.

ஆனால் இந்த நிலைக்கு என்ன செய்வது? ஒரு லேடி டாக்டரிடம் போய் ஏதாவது செய்யலாம் என்றால் கூட அதற்கு வழியில்லை.

இந்தக் கட்டாய இயலாமையால் அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது.

நெஞ்சார யாரிடமேனும் ஒரு குரல் சொல்லி அழுது விட்டால்கூட மனம் தேறிவிடும் போல இருந்தது.

யாரிடமேனும் என்ன, அவளது தந்தையிடம்தான். அவரிடம் நடந்தது எல்லாம் சொல்ல முடிந்து விட்டால் கூடப் போதும். அப்புறம் அவர் தேறுதலாகச் சொல்லும் வார்த்தைகளில் எல்லாத் துன்பமும் பறந்து விடும்; மறந்து விடும் என்று மாயா நம்பினாள்.

கூடவே ரகுவின் நினைவும் வந்தது. ரகு இதை எப்படி ஏற்றுக் கொள்வானோ என்று கொஞ்சம் கலங்கினாள்.

ஆனால் அதை எல்லாம் அப்பா பார்த்துக் கொள்வார். அப்பாவைப் பார்த்துவிட்டால் எல்லாம் சரியாகிப் போகும் என்றெல்லாம் எண்ணி மனது திடம் கொள்ளுவாள்.

லேசான முறுவலுடன் கூடிய தந்தையின் சாந்தமான முகம் அவளது மனக் கண்ணில் தோன்றி அவ்வப்போது அவளை அமைதிப் படுத்தும்.

கூடவே சுதாகர் அவனது டாக்டரிடமிருந்து வாங்கி வந்து தந்த சில மருந்துகள், அவளது உடல் துன்பத்தை வெகுவாகக் குறைத்துத் தெம்பை வருவித்தன.

மேலும் முதலில் சற்றுக் குத்தலாகவும் கிண்டலாகவும் பேசி அவளைக் கலவரப்படுத்திய போதும், பிறகு, ஏனோ சுதாகர் அதை எல்லாம் வெகுவாகக் குறைத்துக் கொண்டான். அவள் உள்ளூர வருந்துவதை அறிந்து இரக்கம்தான் உண்டாயிற்றோ! ஆனால் அவனுக்குக் கூட இரக்கம் உண்டாகுமா?

முடிந்த அளவு மாயாவை மகிழ்விக்கவே அவனும் முயல்வது போலத் தோன்றியது.

நிறையக் கதைப் புத்தகங்கள், ரிக்கார்டுகள் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான்.

சிரிக்கச் சிரிக்க ஏதாவது பேசினான்.

ஆயினும் அவளுக்கு எதுவும் பிடிக்கவில்லையே. "எங்கள் அம்மா பொங்கலுக்கு எல்லாக் காய்கறிகளும் போட்டு ருசியாகக் காரக் குழம்பு செய்வார்கள்!" என்று அவள் கண்ணீர் மல்கினாள் ஒருநாள்.

உடனே சமையல்காரனைக் கொண்டு அதைச் செய்வித்துத் தந்தான். ஆனால் அவளோ, 'அம்மா செய்தது தான் ருசி!' என்று அப்படியே ஒதுக்கினாள்.

"நிலவின் அழகைப் பார்," என்று அவன் காட்டினால், தன் வீட்டு மொட்டை மாடியில் சாப்பிட்ட நிலாச்சாப்பாட்டை எண்ணி ஏங்கினாள் மாயா.

மாலை வேளைகளில் அவளை வற்புறுத்தி 'வாக்கிங்' அழைத்துச் செல்வான்.

ஒரு நாள் ஒரு மாதிரி அரை வட்டம் போல அமைப்புள்ள குடிசைகள் நிறைய இருந்த இடத்திற்கு அவளை அழைத்துப் போனான் சுதாகர்.

அங்கிருந்தோர் அனைவரும் அவனிடம் ஆவலுடனும் மரியாதையுடனும் பேசுவதை மாயா கண்டாள்.

குறுகுறுவென்று அந்த மக்களின் பார்வை தன்மீது பாயவும் முகம் சிவந்தாள்.

ஓர் இளைஞன் இவளைச் சுட்டிக்காட்டிச் சுதாகரிடம் ஏதோ சொல்லவும். எல்லோரும் நகைத்தனர். சுதாகரும் உடன் நகைத்துவிட்டுத் திரும்பினான்.

அவர்களை விட்டுச் சற்று தூரம் வந்ததும். ஓர் ஆவலுடன் அவனையும் பாதையையும் கணக்கிடுவது போலப் பார்த்தாள் மாயா.

அவளது பார்வையை இனம் கண்டு கொண்டு, "இன்னமுமா ஓட்டத்தில் கவனம்? உன்னால் முடியுமா என்று கூடவா யோசிப்பதில்லை," என்று அதட்டினான்.

"ச்சு..." என்று சோர்வுடன் மேலே நடந்தாள் மாயா. ப்ரீயின் இனிய புன்னகை. பாபுவின் கடமுடாப் பாசம்... ஒவ்வொன்றாய் எண்ணுகையில் அவளுக்குக் கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது.

ஒரு நாள் வெளியே சென்றுவிட்டு அவன் திரும்பி வந்தபோது சில நகைகளும் உடன் வந்தன.

"பிடிக்கிறதா பேபி?" என்று அவளிடம் நீட்டிய போது வியப்புடன் பார்த்து விட்டு மறுத்தாள் அவள்.

ஏன் இவ்வளவு இரக்கம் என்ற கேள்விக்கு வெகு விரைவிலேயே விடை கிடைத்தது.

ஒரு மென்மையான இசையை ரிக்கார்டு ப்ளேயரில் ஒலிக்கச் செய்து விட்டு அவள் அருகில் அமர்ந்து அவள்

கையைப் பற்றி, "உனக்கு வேண்டிய வசதி எல்லாம் செய்து தருகிறேன். இங்கேயே இருந்து விடுகிறாயா, பேபி?" என்று மிருதுவாகக் கேட்டான் அவன்.

கண்களை விரித்துப் பார்த்து விட்டுச் சட்டென அவன் கையை உதறினாள் மாயா.

ஆக இதெல்லாம் அவனது வெற்றிக்காகத்தான்.

பலத்தாலும் பயமுறுத்தல்களாலும் அவள் மனதைப் பணிய வைக்க முடியவில்லை. எனவே இப்போது பசப்பு மொழியாலும் பணத்தாலும் முயற்சி செய்கிறானாக்கும்.

'நீயும் செக்குத்தான்!' என்ற ஒரு வார்த்தையை மெய்யாக்கிவிட அவன் என்னவெல்லாம் செய்கிறான்!

"சீச்சி!" என்று அருவருப்புடன் கூறியவள் அதன் பின் முடிந்தமட்டும் தனித்தே இருக்க முயன்றாள்.

நான் கெட்டு விடவில்லை என்பதில் அவள் மனம் உறுதியாக இருந்தாலும் வேறு ஒரு குழப்பம் அவளைச் சூழ்ந்து வதைத்தது.

தோட்டத்தில் அன்றுவரை கண்டும் மனதில் பதியாது போனவை எல்லாம் இன்று விசுவரூபம் எடுத்து அவளைப் பயமுறுத்தின.

எங்கிருந்தோ வந்து தேன் அருந்தி விட்டு வண்டு சென்றுவிட, பிஞ்சையும் காயையும் தாங்கிக் கிளை வளைய மரம் நிற்பது புதுவிதமாய் மனதை உறுத்தியது.

பேடையைத் துரத்திப் பிடிக்கும் ஆண் பறவை அப்படி இணைந்த போதும் முட்டைகளையும் குஞ்சுகளையும் தாய்ப் பறவை பேணும் விதம் நெஞ்சைப் பிசைந்தது.

தாய்மை என்றால் பாசம் வந்துவிடுமா?

அது வேண்டாத தாய்மை என்றாலுமா?

அப்படியானால் இந்தக் குழந்தை மீதும் அவளுக்குப் பாசம் வருமா? வந்தால் என்ன ஆகும்?

பறவைக்குப் பகுத்தறிவு இல்லை; பற்றும் பாசமும் இயற்கை உபாதை போலத் தானாக வருகிறது. ஆனால் மனிதனுக்கு ஆறாம் அறிவு இருக்கிறதே. வெறுப்பில் விருப்பம் எப்படி வரும் என்று தன்னைத் தானே தேற்றிக் கொள்வாள்.

ஆயினும் கலங்கும் மனம் அப்போதைக்கு மேலாகத் தெளிந்தாலும் உள்ளே சேறு மறைந்திருக்கும் குளம் போலவே இருந்தது.

உள்ளும் வெளியிலுமாக உடலில் தோன்றிய ஒவ்வொரு சிறு மாற்றமும் அவள் வயிற்றைக் கலக்கின.

தடுக்க முடியாமல் வளர்ந்து வரும் கருவை நினைத்தாலே நெஞ்சு நஞ்சாகிவிடும்.

யாரிடம் சொல்லி ஆறுதல் தேடுவது?

இவளது கலக்கம் பற்றித் தெரிந்தாலே அவன் கொக்கரிக்கக் கூடும்.

மீண்டும் அப்பா அம்மா என்று உள்ளூரக் கதறித் துடிக்கலானாள்.

சுதாகர் வாங்கி வந்திருந்த விதம் விதமான 'ரிக்கார்டு' களில் சூலமங்கலம் சகோதரியின் சஷ்டி கவசமும் இருந்தது.

மனம் தாங்க மாட்டாமல் தவிக்கும் போதெல்லாம் இந்த ரிக்கார்டைப் பாட வைத்துக் கேட்பது மாயாவுக்கு வழக்கம் ஆயிற்று.

ஆனால் வயிற்றினுள் குழந்தை துடிக்கத் தொடங்கிய பின் இந்த ஆறுதலும் பயனற்றுப் போயிற்று.

முதலில் என்னவோ ஏதோ என்று பயந்த பிறகு இதுவாகத் தான் இருக்கும் என்று தனக்குத் தானே அனுமானித்துக் கொண்டபின் ஒரேயடியாக நெஞ்சு உதறத் தொடங்கி விட்டது.

பதற்றத்துடன் வயிற்றைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். ஐந்து மாதக் கரு என்பது சிறிய அளவில் கை கால்கள்

அனைத்தும் கொண்ட சிசு என்று படித்த நினைவு வந்தது. குப்பென்று வியர்த்து நனைந்தாள்.

'இன்னும் ஆறு மாதம் எப்போது முடிந்து தொலைக்கும்?' என்று அவனிடம் வெடித்துவிட்டு மறுபுறம் திரும்பிக் கண்ணைத் துடைத்தாள்.

"என்ன மாயா?"

"உன் பிள்ளையை உன்னிடம் தந்து விட்டு நான் என் அப்பாவிடம் போக வேண்டும்."

"அப்படியானால் நீ இங்கே தங்கவே மாட்டாயா?"

"மாட்டேன். மாட்டேன். மாட்டவே மாட்டேன்."

"ம்...?" அவளை ஏற இறங்கப் பார்த்தான் சுதாகர். "ஓகே பேபி. அடுத்த வாரம் உன்னை உன் வீட்டிற்கு அனுப்பி விடுகிறேன்," என்றான் கண்ணை எட்டாத முறுவலுடன்.

"மெய்?" என்றாள் அவள் சந்தேகத்துடன்.

"ப்ராமிஸ்!" என்றான் அவன் முகம் மாறாமல்.

"ஆகா!" என்று மகிழ்ச்சியுடன் துள்ளினாள் மாயா.

"மெல்ல மெல்ல..." என்று எச்சரித்தான் அவன். அவள் முகத்தைத் கூர்ந்து கவனித்தபடி, "ஆனால், பாவம்! நீ மிகவும் ஏமாறப் போகிறாய்." என்றான்.

"ஏன்?"

"இப்போது உன்னை யாரும் அங்கே ஏற்றுக் கொள்ள மாட்டார்களே!"

"ஏனோ?"

"கண்ணாடியில் பார்," என்றான், அவன் பழைய ஏளனத்துடன்.

ஓடிச் சென்று கண்ணாடியில் பார்த்தாள் மாயா. கொஞ்சம் நன்றாகவேதான் உப்பித் தெரிந்தது வயிறு. முடிந்த அளவு

எக்கிக் கொண்டு சேலையை இழுத்து மூடினாள். "இது...இது தெரியாது. அப்படியே தெரிந்தாலும் அங்கே எல்லோருக்கும் என்னைப் பற்றி நன்றாகத் தெரியும். அதனால் எல்லாருமே என்னைத் தவறாக எண்ணாமல் ஏற்றுக் கொள்வார்கள்," என்றாள் நம்பிக்கையோடு.

"ம். பிள்ளையை என்ன செய்யப் போகிறாய்?" அவன் அக்கறை அற்றவன் போல விசாரித்தான்.

ஒரு கணம் மாயாவின் கண்களில் கலக்கம் சூழ்ந்தது. உடனே அதை உதறி, "அதை அப்பாவிடம் கேட்க வேண்டும். உன்னிடமோ அல்லது அனாதை ஆசிரமத்திலோ... அதை எல்லாம் அப்பா பார்த்துக் கொள்வார். எங்கள் அப்பாவுக்கு எல்லாம் தெரியும்," என்றாள் பெருமையோடு.

"ஓகே. சரிதான், பேபி. உன்னிஷ்டம். ஆனால் எனக்கு ஒரு வாக்குறுதி கொடு," என்றான் அவன்.

"என்ன?" என்பது போலப் பார்த்தாள்.

ஒரு கணம் தயங்கி விட்டு, "ஒரு போதும் தற்கொலைக்கு முயலக் கூடாது," என்று சொன்னான் அவன்.

'கலீர்' என்று சிரித்தாள் மாயா. "ஸில்லி, நான் ஏன் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேனாம்? அப்பா, அம்மா, பாபு, ப்ரீ, ப்ரேமி ஆன்ட்டி... அப்புறம் எல்லாரும் இருக்கையில்... ஏன் இப்படி உளறுகிறாய் சுதாகர்?"

ஆனால் அவன் முகத்தில் புன்னகையின் சாயல் கூடப் படியவில்லை. கவனத்துடன் அவளைப் பார்த்து, "எல்லாருமே இருந்தாலும் அவர்களுக்கு நீ ஒன்றும் இல்லை என்று ஆகிவிட்டால்? முக்கியமாக ரகு..." என்று முடிக்காமல் நிறுத்தினான்.

"ரகுவைப் பற்றி நீ பேசாதே," என்றாள் மாயா ஆத்திரத்துடன். ரகுவுக்கென்று அவள் மனதில் ஒதுக்கி வைத்திருந்த உரிமைகளை எல்லாம் பலவந்தமாகப் பறித்தவன் என்ற கோபத்தில் அவள் முகம் சிவந்தது.

"ஆல்ரைட்... ஆல்ரைட்.... . மற்றவர்களைப் பற்றி மட்டும் பேசலாம். எல்லாருமே உன்னைக் கை விட்டு விட்டால் ஒரு வேளை நீ அந்த வழியில்..."

அழுத்தம் திருத்தமாகப் பேசினாள் மாயா. "முன்னேயே பலமுறை சொல்லியிருக்கிறேன் சுதாகர்! இப்போது மீண்டும் கேட்டுக் கொள். என்னைப் பற்றி அங்கே எல்லாருக்கும் நன்றாகத் தெரியும். யாரும் என்னைத் தவறாக எண்ணவே மாட்டார்கள். அதனால் இந்த மாதிரி முட்டாள்தனமான எண்ணங்களுக்கு அவசியமே இல்லை. நானும் கோழை யில்லை. தற்கொலையில் தப்புவதற்கு!"

"ஆனாலும் எனக்கு உறுதி மொழி வேண்டும் மாயா."

அலட்சியமாக அவனைப்பார்த்தாள் மாயா. "அதைப் பெற, ஏன், என்னிடம் எதைப் பெறவுமே உனக்கு எந்த வித உரிமையும் கிடையாது சுதாகர்!" என்று முடித்தாள்.

மாயா கிளம்புகிற நாளும் வந்தது.

சொன்னபடியே அன்றைக்கு எட்டாம் நாள் அவளை வழியனுப்பி வைத்தான் சுதாகர்.

கிளம்பு முன்னரும் கடைசியாக மீண்டும் கேட்டான். "மாயா! கட்டாயம் போய்த்தான் ஆக வேண்டுமா, பேபி? அங்கே உனக்கு நிறைய ஏமாற்றங்கள் காத்திருக்கலாம்."

அவள் தலையை அலட்சியமாகத் திருப்பியதில் கூந்தல் ஒரு தரம் துள்ளி விழுந்தது மட்டிலுமே அவனுக்குப் பதிலாக இருந்தது.

ஆனால் மறுகணம் அவனுடைய ஆழ்ந்த இறுகிய அணைப்பில் சிக்கித் திணறினாள் மாயா.

"ஏய்...விடு... விடு..."

ஒருவாறு அவன் அவளை விடுவித்தபோது இருவருக்குமே மூச்சு வாங்கியது.

சினத்துடன் முறைத்தவளை, மன்னிப்புக் கோரும் பாவனையில் பார்த்து, "தயவு செய்து கோபப்படாதே, பேபி! கடைசியாக என்று நினைத்தேன்...போகலாம் வா," என்றான்.

அவளது பொருள்கள் அடங்கிய ஒரு பெரிய, தோளில் மாட்டக்கூடிய 'கிட்பாக்'கை எடுத்துக் கொண்டு ஷெட்டில் இருந்து வெளிக் கொணர்ந்து நிறுத்தியிருந்த காரை நோக்கி நடந்தான்.

அவளும் நடையில் துள்ளலோடு அவனைத் தொடர்ந்தாள்.

மலைப்பாதைக்கு வந்ததும், "இங்கே பஸ் வரும் மாயா! இதோ இந்தப் பையில் பணம் இருக்கிறது. கோவையிலிருந்து மதுரைக்கு ரயில் டிக்கெட்டும் இருக்கிறது. பஸ்ஸில் கோவைக்கு டிக்கெட் வாங்கிக் கொள். கோவை ரயில்வே ஸ்டேஷனில் மதுரைக்கு ரயில் ஏறு," என்று குழந்தைக்குப் போல் விளக்கினான்.

மனித வாடையே இல்லாத காட்டுப் பிரதேசம். ஒரு கணம் மருண்டு போய் அவன் கையைப் பற்றினாள். ஆனால் உடனேயே விட்டுவிட்டு இறங்கி நின்றாள்.

"பை பேபி. ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள். எந்த நேரமானாலும் எந்த நிலையிலானாலும் நீ இங்கே வரலாம். உனக்கு என் வீடு திறந்தே இருக்கும். வழி உனக்குத் தெரியும்," என்றவன், காரைத் திருப்பிக் கொண்டு போய்விட்டான்.

பஸ்ஸிலும் ரயிலிலும்மாகப் பிரயாணம் செய்து மதுரை ஜங்ஷனில் இறங்கும்போது மாயாவுக்கு அது கனவோ என்றுகூடத் தோன்றியது.

கூடல் மாநகரத்துக் கோபுரங்களைக் கண்டதும் உள்ளத்தில் குதூகலம் கொப்பளிக்கத் தொடங்கியது.

பையைத் தோளிலே மாட்டிக் கொண்டு பஸ் ஸ்டாப்பை நோக்கி விரைந்தாள்.

பஸ்ஸில் ஏறி டிக்கெட்டுக்குப் பணத்தை எடுக்கும் போது அவள் முதல் முதலாக அதிர்ச்சியுற்றாள்.

“இந்த நிலையில் நிக்காதேம்மா. உக்காந்து பணத்தை எடு.” என்ற கண்டக்டரின் குரலில் அவள் முதல் முறையாக அதிர்ந்தாள்.

கிட்டத்தட்ட அவளது வயதுள்ள பெண் ஒருத்தி எழுந்து, “நீங்கள் உட்காருங்கள்,” என்று இடம் தந்த போது மனம் குழம்பிப் போயிற்று.

இருட்டும்வரை கோயிலில் இருந்துவிட்டு இரவில் வீடு போகத் தோன்றியது.

ஆறரை மணிவரை மீனாட்சி கோவிலில் சுற்றிவிட்டு மீண்டும் பஸ் பிடித்துச் சென்று இறங்கி வீட்டை நோக்கி நடந்தாள்.

பழக்கமான பாதை.

ஆவலும் பரபரப்புமாக நடக்கவே முடியாதது போலக் கால் தட்டியது.

தெரு விளக்கின் ஒளியில் ஆசையுடன் சுற்றிலும் பார்த்தபடியே நடந்தாள்.

இங்கேதான் அன்று காரில் மடக்கியது. அப்பாடி! இப்போதேனும் விடுதலை கிடைத்ததே. கடவுளே! இடையில் எத்தனை துன்பங்கள்!

திடீரென யாரோ ‘தூ’ வெனக் காறி உமிழும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் மாயா.

வெறுப்பும் அருவருப்புமான பார்வையை உமிழ்ந்து விட்டுக் கடகடவென்று திரும்பிப் போய்க் கொண்டிருந்தான்-ரகு.

நெஞ்சில் விழுந்த அடியின் வலியில் சற்றுநேரம் பிரமித்து நின்றாள் மாயா.

## 13

ரகு!

கிட்டத்தட்ட இதே இடத்தில் ஒருநாள் அவளது கன்னத்தை வருடிய ரகு!

தன் புண்ணுக்குப் புனுகிடுவான் என்று மாயா நம்பியிருந்த அதே ரகு!

இன்று விசாரிக்காமலேயே அவளைக் குற்றவாளி என்று முடிவு கட்டிவிட்ட இவன் அதே ரகுதானா?

காட்டுகிற வழியில் செல்லும் செம்மறி ஆடு என்று ரகுவைப் பற்றிச் சுதாகர் சொன்னது நினைவு வந்தது.

அவளைப் பற்றித் தவறாக எண்ணும்படி ரகுவுக்குச் சுதாகர் வழி காட்டியிருப்பானோ?

அப்படியே அவன் செய்திருந்தாலும் அவன் காட்டிய வழியில் சென்றால் இவன் என்ன மனிதன்!

எண்ண எண்ண மாயாவுக்கு மனதில் வருத்தமாக இருந்தது.

ஆனால் ரகு மட்டிலுமே அவளது உலகம் இல்லையே! அம்மா, அப்பா, தம்பி, தங்கை, பிரேமி, அங்கிள்... மீண்டும் பெருகிய உற்சாகத்துடன் வீட்டை நோக்கி நடந்தாள் மாயா.

இதோ திருப்பம்...இதோ வீடு!

காலை எடுத்து வைக்கக்கூட முடியாமல் மாயாவுக்கு உடம்பெல்லாம் பரபரத்தது.

சின்னக் கேட்டை மெல்லத் திறந்து உள்ளே அழைப்பு மணியின் பட்டனை அழுத்தினாள். அப்பா, அம்மா... அம்மா அப்பா... என்று நெஞ்சு உருப்போட்டது.

"எவுரு?"

முரட்டு மீசையும் கட்டமிட்ட லுங்கியும் வலைப் பனியனுமாகக் கதவைத் திறந்த அந்த அந்நிய மனிதனைக் கண்டதும் மாயாவுக்கு ஒன்றுமே ஓடவில்லை. எதுவும் புரியாமல் சில கணங்கள் பேந்தப் பேந்த விழித்தாள்.

"அ, எவுரம்மா..." என்று அந்த ஆள் சற்று எரிச்சலுடன் தொடங்கவும் சமாளித்துக் கொண்டாள்.

"நான் மிஸ்டர் சுந்தரத்தைப் பார்க்கவேண்டும்."

"சுந்தரம்? எவுரு..." என்று புருவங்களைச் சுருக்கினான் அவன்.

நெஞ்சில் மண்டத் தொடங்கிய பீதியை அடக்கியபடி "இ... இந்த வீட்டுச் சொந்தக்காரர்..." என்றாள் மாயா கம்மிய குரலில்.

"யாரு...ஓகோ அவுரா? அவரு வீட்டை எனக்கு வித்து மெட்ராஸ் போச்சே."

சில கணங்கள் பிரளயத்தின் நடுவில் நின்றாள் மயாயா.

அப்பா இந்த வீட்டை விற்பதா?

மூன்றோடு நாலாவது குழந்தை இந்த வீடு என்று கேலி பேசுவது நினைவு வந்தது.

இந்த வீட்டைப் பிரிய மனமின்றிச் சென்னை செல்லும் பிரமோஷனைக்கூட அவர் மறுத்தது நினைவு வந்தது.

இதை எப்படி விற்றார்?

"ஏனு, எவுரு?" எரிச்சல் காட்டிய ஒரு பெண் மாயாவை நிகழ்காலத்துக்கு இழுத்து வந்தது.

அந்தப் பெண்ணின் கோலத்தைக் கண்டு குமட்டலும் வந்தது.

"இப்போ...இப்போது அவர் எங்கே?" என்றாள் பிரயாசையுடன்.

"மெட்ராசு!" என்ற பதிலுடன் கதவு மூடிக் கொண்டது.

"மெட்ராஸ் என்பது உள்ளங்கை அளவு இடமாடா, மடையா?" என்ற கத்த வேண்டும் போல் ஆத்திரமும் அழுகையுமாக வந்தது அவளுக்கு.

பேசாது திரும்பி நடந்தாள்.

மல்லிகைப் பந்தலைக் காணோம்,

அவள் நட்ட ராமபாணம் எங்கே?

அதையெல்லாம் கட்டிக் காத்த அவளுடைய குடும்பம் எங்கே?

மனதோடு உடம்பும் சோர்ந்து போய்ச் சற்று நேரம் கேம் பில்லர் மீது சாய்ந்து நின்றாள்.

பிறகு பிரேமியின் வீட்டை நோக்கித் திரும்பி மெல்ல நடந்தாள். அங்கிளிடம் கேட்டால் எப்படியும்... அப்பாவின் இருப்பிடம் தெரியும் அல்லவா?

சிறு ஆறுதல் மூச்சுடன் நடக்கத் தொடங்கியவள் உடனே நின்றாள்.

எதிரே வருவது அவரேதான்.

முறுவலுடன் அவர் எதிரே போய், "கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல வந்து விட்டீர்களே, அங்கிள்! உங்கள் வீட்டுக்குத்தான் வந்து கொண்டு இருந்தேன். வீட்டில் யாரோ ஒரு மனிதன் இருக்கிறான். என்னென்னவோ சொல்கிறான், ஒரே பயமாக இருக்கிறது," என்று கவலையில் முடித்தாள் மாயா.

வறண்ட குரலில், "நீயேதானா? உன்னைப் போல இருக்கிறதே என்றுதான் வந்தேன். என்னோடு வா," என்று முன்னே நடந்தார் பிரேமியின் தந்தை ரத்தின பாண்டியன்.

"என்ன அங்கிள், என்ன யோசனை? உங்கள் வீட்டுக்கு எதிர்த் திசையில் நடக்கிறீர்களே! திரும்பி வாருங்கள்," என்றாள் மாயா கேலியாக.

நின்று, "வீட்டில் பிரேமியும் அவளுடைய கணவரும் இருக்கிறார்கள்..." என்று தொடங்கியவர் முடிக்குமுன், மாயா மற்றதெல்லாம் மறந்து உற்சாகத்துடன் குறுக்கிட்டாள்.

"பிரேமியின் கணவரா? பிரேமிக்கு எப்போது கல்யாணம் ஆயிற்று அங்கிள்? அங்கிள்! மாப்பிள்ளை எப்படி இருக்கிறார்? உயரமாக, சிவப்பாக அவளுக்குப் பொருத்தமாக இருக்கிறாரா? நான் பார்க்க வேண்டுமே. வாருங்கள் அங்கிள், சீக்கிரமாகப் போவோம்," என்ற பரபரத்தாள் - ஆனந்தமாக.

ஆனால் அவர் பெயருக்குக் கூட முறுக்கவில்லை. "நில்," என்று அதட்டினார் "உன்னைப் போல ஒருத்தி பிரேமியின் தோழி என்று தெரிந்தால் மாப்பிள்ளை அவளைப் பற்றிக் குறைவாக நினைத்து விடுவார். அதனால் அவளை நீ இப்போது பார்க்க முடியாது," என்றார் கடுமையான குரலில்.

"அங்கிள்!" என்று அதிர்ச்சியுற்றுக் கூவினாள் மாயா.

"சீ! மெல்லப் பேசடி. இழுத்து வைத்திருக்கும் அவமானங்கள் போதாதா?" என்று கடுகடுத்தார் ரத்தின பாண்டியன்.

"வா, என்னோடு," என்று அவளைச் சற்று மறைவான பகுதிக்கு அழைத்து-கிட்டத்தட்ட இழுத்துச் சென்றார். பிறகு, "உனக்கு என்ன துணிச்சல் இருந்தால் மீண்டும் இங்கே முகத்தைக் காட்டுவாய்?" என்றார் சினத்துடன்.

அதிர்ச்சியும் குழப்பமும் மாறி ஆத்திரம் மிகவே தலையை வெடுக்கென நிமிர்த்தினாள் மாயா. "என் வீட்டுக்கு வர எனக்கு என்ன பயம்?"

"எங்கே இருக்கிறது உன் வீடு? என் சுந்தரம் கவரிமான் ஆயிற்றே. ஆசையாய்க் கட்டிய வீடு. ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்ச் சம்பளம். எல்லாவற்றையும் விட்டு விட்டுக் குற்றவாளி போலக் கூசி மறைய வைத்து விட்டாயேடி. பாவி!" என்று குமுறினார் பிரேமியின் தந்தை.

"நான் ஒரு தப்பும் செய்யவில்லை அங்கிள்? என்னை..." என்று விளக்க முயன்றாள் மாயா.

"கதை விடாதே. வயிற்றில் வேறு கொண்டு வந்து விட்டு வாய்ப் பேச்சு வேறா?" என்று சீறினார் அவர்.

"என்னை அறிந்தவர்கள் யாரும் என்னைப் பற்றித் தப்பாக எண்ண மாட்டார்கள்." என்று அன்று சுதாகரிடம் அடித்துப் பேசிய வார்த்தைகள் இன்று அவளையே அடித்தன.

அந்த வலியை மீறிய ஆத்திரத்துடன், "அங்கிள்! உங்களுக்கு என்னை எத்தனை காலமாகத் தெரியும்? நான் அப்படிப் பட்டவளா?" என்று கேட்டாள் அவள்.

"அப்படித்தான் என்ற நிரூபணத்துடன் வந்து விட்டுக் கேள்வியா கேட்கிறாய்?"

"அய்யோ, அங்கிள் - அங்கிள்! இதில் என் தப்பு ஒன்றும் இல்லை, அங்கிள்! என்னை ஒருவன் தூக்கிக்..."

"சீ! மூடடி வாயை..." என்று அதட்டினார் அவர். "வடக்கே செல்லும் ரயிலில் ஒரு தாடிக்காரனுடன் அன்று உன்னைப் பார்த்ததற்குச் சாட்சி இருக்கிறது."

"யார் அந்தச் சாட்சி?"

"ரகு."

இப்போது மாயா அதிர்ந்து போனாள். "அதெப்படி முடியும்?" என்றாள் திகைப்புடன்.

"ஆமாம்ம். அதெப்படி முடியும்? எவ்வளவோ திட்டம் போட்டு ரகசியமாய்த்தானே ரயில் ஏறினாய், அப்படி இருக்க

அதை ரகு எப்படித்தான் பார்த்திருக்க முடியும்?" என்று நையாண்டி செய்தார் ரத்தின பாண்டியன்.

என்ன மனிதர் இவர்! பெ...ரீ...ய...மாமா...ஆத்திரத்துடன் தலையைக் குலுக்கினாள். அந்தப் பேச்சை அப்படியே விட்டு விட்டு, "அப்பா எங்கே இருக்கிறார்? எனக்கு அவருடைய விலாசம் வேண்டும்," என்றாள் மொட்டையாக.

"ஏன், அங்கேயும் போய் உன் அம்மாவின் மிச்சம் மீதி இருக்கிற அரை உயிரையும் பறிப்பதற்காகவா? தர முடியாது," என்றார் அவர் கண்டிப்பாக.

உடனே தன் வேதனை, அவமானம், அதிர்ச்சி அத்தனையும் மறந்து, "அம்மாவுக்கு என்ன அங்கிள்? என்றாள் கவலையுடன்.

"என்ன ஆக வேண்டும் என்று எந்தக் கழுதையோடோ ஓடினாயே, அதுதான்..." என்று குத்தினார் அவர்.

"அய்யோ, அதை விடுங்கள், அங்கிள்! இப்போது அம்மாவுக்கு என்ன என்று சொல்லுங்கள் அங்கிள்!" என்று தன்னை மீறி அழுது கொண்டே கேட்டாள் மாயா.

ஒருகணம் தயங்கிவிட்டு, "ஆகா! என்ன நடிப்பு! இவ்வளவு அக்கறை உள்ளவள்தான் அன்று எக்கேடும் கெடட்டும் என்று குடும்பத்தை விட்டு ஓடினாயாக்கும்!" என்று மீண்டும் புண்ணிலேயே குத்தினார் பிரேமியின் தந்தை.

உதட்டைக் கடித்து அழுகையை அடக்கினாள் மாயா. "என் மனச்சாட்சி சுத்தமாக இருக்கிறது. அது எனக்குப் போதும். இப்போது நீங்கள் சொல்லவில்லையானால் நான் பிரேமியிடமே கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்," என்று திரும்பினாள்.

"காலை ஒடித்து விடுவேன். கழுதை! பிளாக்மெயில் பண்ணிப் பார்க்கிறாயா? என் வீட்டுப் படி ஏறினால் அறைந்தே கொன்று விடுவேன். முறைக்கிறாயா? திமிர் பிடித்த ராஸ்கல். இதோ கேட்டுக் கொள். சொல்கிறேன். அன்று ரகு

சொன்னதைக் கேட்டு, என் கண்ணம்மாளா என்று கதறிவிட்டு விழுந்தவள்தான் ரேணுகா. அப்புறம் இங்கிருந்து போகும் மட்டும் வேறு பேச்சுப் பேசவில்லை. சுந்தரம் மானஸ்தன். வீட்டைக் கால் விலைக்கு விற்று விட்டு ஊரை விட்டே போய் விட்டான். உடல் தேய உழைத்து இந்த அளவுக்கு உயர்ந்தான். ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் சம்பளம், டிவிஷனல் மானேஜர் பதவி. அரை நொடியில் உதறிவிட்டுப் போய்விட்டான். அங்கே போய் இருநூறு ரூபாய்க்குக் கணக்கு எழுதுகிறானாம்..." திரும்பி நின்று கண்ணைத் துடைத்துக் கொண்டார் அவர். மீண்டும் இரு மடங்கு சினத்துடன் திரும்பினார். "இத்தனைக்கும் காரணமாய் இருந்துவிட்டு மீண்டும் இங்கே எதை அழிக்க வந்தாய்? போ. போய் விடு. எங்கிருந்து வந்தாயோ, அங்கேயே போய்விடு." என்றார்.

குனிந்திருந்த தலையை வெடுக்கென நிமிர்த்தி, "நான் எங்கே போக வேண்டும் என்பது எனக்குத் தெரியும், அங்கிள்! இப்போது எனக்கு அப்பாவின் அட்ரஸ் கொடுங்கள்," என்றாள் மாயா.

"ஏன்? ஏதோ கொஞ்ச நஞ்சமேனும் மீளத் தொடங்கி இருக்கும் குடும்பத்தை அடியோடு அழிக்க வேண்டுமா? ஒரு நாளும் அது மட்டும் நடக்காது."

"நான் வேறு யாரிடமும் கேட்டுத் தெரிந்து கொள்வேன்," என்றாள் மாயா பிடிவாதத்துடன்.

"யாரிடம் கேட்பாய்? உள்ளம் உடைந்து ஓடுகிறவன் ஊருக்கெல்லாம் சொல்லிவிட்டா ஓடுவான்? ஏதோ உடன் பிறந்தவன் போலப் பழகிய பாசம்-நான் கெஞ்சிக் கேட்டதால் என்னிடம் மட்டும் சொன்னான். என்னிடம் சொன்ன பாவத்துக்கு நான் இன்னமும் அவனைத் துன்பப்பட வைத்து விடுவேனா! ஒருக்காலும் இல்லை."

துடிக்கும் உதடுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, "நான் அம்மாவைப் பார்க்க வேண்டும், அங்கிள்! அம்மாவுக்கு

ஆறுதல் சொல்ல வேண்டும்! ப்ளீஸ்..." என்று கெஞ்சிக் கேட்டாள் மாயா.

அவர் இரக்கமின்றி, "உன்னை என்றேனும் ஒருமிக்க மறக்க முடிந்தால் அன்றுதான் அந்த மனதுக்கு ஆறுதல் கிட்டும். தெரிந்து கொள்! போ, போ, எங்கேனும் போய்த் தொலை! போக இடம் இல்லாவிட்டால் ஆறு, குளம், குட்டை எங்கேனும் விழுந்து செத்துத் தொலை," என்றார்.

வேதனையையும், கண்ணீரையும் அடக்கிக் கொண்டு நிமிர்ந்தாள் மாயா. "சொல்லாவிட்டால் போங்களேன். மெட்ராஸ் உலகளவா விரிந்து பரந்து கிடக்கும்? நானே அங்கே அப்பாவைத் தேடிக் கண்டு கொள்கிறேன்." வெகு தைரியமாக சொல்லும்போது, 'மெட்ராஸ் என்பது உள்ளங்கை அகல இடமாடா?' என்று கேட்க நினைத்தது வெகு அசந்தர்ப்பமாயும் மகா அநியாயமாயும் நினைவுக்கு வந்தது. கட்டாயமாய் அதை மறக்க முயன்றபடி நடக்கத் தொடங்கினாள்.

அதற்குள், "ஏய், நில்," என்று அதட்டினார் ரத்தின பாண்டியன். "இந்த நிலையில் உன்னைப் பார்த்தால் பார்த்த கணமே உன் தாயின் உயிர் போய்விடும். அவள் இருப்பதால் தான் சுந்தரமும் ஏதோ நடமாடுகிறான்! பாவி, அங்கே போய் அதையும் அழித்துவிடாதே! மீறி அங்கே சென்று இன்னும் ஏதும் இன்னல் செய்தாய் என்று மட்டும் எனக்குத் தெரிய வந்தால் இந்த உலகத்தில் நீ எங்கே ஒளிந்தாலும் சரி, உன்னைக் கண்டு பிடித்துக் கொல்லாமல் விடமாட்டேன், ஜாக்கிரதை!" என்று அடித் தொண்டையில் எச்சரித்தார்.

அவரை ஒரு தரம் வெறித்து நோக்கிவிட்டுப் பதிலேதும் சொல்லாமல் நடந்தாள்.

முதலில் அவள் மறைந்த போது தன் நண்பன் பட்ட துயரங்கள் எல்லாம் மீண்டும் மனதில் தோன்றி, "சனியன்! செத்துத் தொலையட்டும்!" என்று முணுமுணுத்தபடி திரும்பி நடந்தார் ரத்தின பாண்டியன்.

## 14

ஒரு சோற்றுக்கு இரண்டாகப் பதம் பார்த்தாயிற்று.

ரகு.

அங்கிள்.

இவர்களிடம்தான் மாயா எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தாள்!

இப்போது அவளுக்கு மூச்சடைப்பது போல் இருந்தது. சற்று நின்று ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

போகட்டும். இவர்கள் எல்லாரும், என்னதான் பழகினாலும் அந்நியர்கள்தானே. ஆனால் அப்பா ஏன் வீட்டை விட்டுப் போக வேண்டும்?

ஒரு வேளை இவர்கள், அங்கிளும் ரகுவுமே இப்படி என்றால், சுற்றி உள்ள மற்ற வீட்டுக்காரர்கள்ளக் கேட்கவே வேண்டாமே! இவர்கள் எல்லாரும் கண்டபடி பேசவும், அதைக் கேட்டுத் தாங்க முடியாமல் போயிருப்பார்களா?

அப்படித்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தாள் மாயா. மற்றப்படி அங்கிள் சொல்வது போல் அம்மாவோ அப்பாவோ அவளைத் தவறாக எண்ணியிருக்கவே மாட்டார்கள்.

இவர்கள்தான், சுற்றியுள்ள இந்த மனிதர்கள்தான் ஏதேதோ சொல்லி, அவர்களை வேதனைக்குள்ளாக்கி விரட்டி இருக்க வேண்டும்.

“அப்பா! நான் வந்துவிட்டேன் அப்பா! பணம் போனால் என்ன? நாம் மீண்டும் சேர்ந்து ஒரே குடும்பமாய் மகிழ்ச்சியோடு

இருக்கலாம் அப்பா!" என்று மனதால் தந்தையோடு பேசினாள்.

ஆனால் அப்பாவைக் கண்டுபிடிப்பது எப்படி?

பிரேமியின் தாய்க்குத் தன் பெற்றோர் விலாசம் தெரிந்திருக்கலாமோ என்று ஒரு கணம் தோன்றியது மாயாவுக்கு.

ஆனால் உடனே அந்த எண்ணத்தைக் கைவிட்டாள். ரத்தின பாண்டியன் சாதாரணக் குடும்ப விஷயங்களைக் கூட மனைவியிடம் சொல்ல மாட்டார். "அது வெறும் அசடு. மனதில் ஒன்றும் நிற்காது!" என்பார். அப்படிப் பட்டவர் ரகசியமாக இருக்க வேண்டும் என்று நினைத்த இந்த விலாசத்தைக் கண்டிப்பாக மனைவியிடம் சொல்லியிருக்கவே மாட்டார்.

ரகுவின் பெற்றோர்.

மூன்று குடும்பங்களும் பின்னிப் பிணைந்தவைதான். என்றாலும் ரகுவின் தந்தை சற்றே மூத்தவர். 'பிஸினஸ் மேன்.' அதனால் பிரேமியின் தந்தை அளவுக்குச் சுந்தரத்திடம் அவருக்கு அவ்வளவு நெருக்கம் கிடையாது.

ஆனால் சௌந்தரம் அம்மாள், 'தங்கம்! தங்கம்!' என்பாரே. எதற்கும் அவரிடம் விசாரித்துப் பார்க்கலாமா?

தெருவைச் சுற்றிக் கொண்டு ரகுவின் வீடு இருக்கும் மறுமுனைக்குப் பிரேமியின் தந்தை அறியாமல் சென்றாள் மாயா.

காம்பவுண்டு சுவரை ஒட்டி நடந்து வரும்போது சௌந்தரத்தின் குரல் கேட்டது. "சாப்பிட வாயேன்டா! நீ சாப்பிட்டு முடித்தால் நானும் படுப்பேன். எனக்கென்ன சின்ன வயசா, செய்து கொண்டே இருக்க!" என்று அவர் அலுப்புடன் கூறிக் கொண்டு இருந்தார்.

அந்த அன்பான பெண்மணியின் குரலைக் கேட்கையில் மாயாவுக்கு விழிகளில் நீர் கசிந்தது.

"நீங்கள் படுங்களேன்! நானே போட்டுக் கொண்டு சாப்பிடுவேன்," என்று எரிந்து விழுந்தது ரகுவின் குரல்.

"ஆமாமாம், சாப்பிடுவாய். ஒரு பிடி சோற்றில் மோரை விட்டு அரைச் சாப்பாடு சாப்பிட்டு விட்டு எழுந்து விடுவாய். ஹூம், இதை எல்லாம் மாயா பார்ப்பாள் என்று நினைத்தேன்."

"அம்மா!" என்று அலறினான் ரகு.

"என்னமோடா, என் தங்கம் எப்படித்தான் போனாலும்..."

"உங்கள் தங்கம்தான் பித்தளையிலும் கேவலமாய்ச் சந்தி சிரித்து விட்டாளே. பிள்ளையார் மாதிரி வயிற்றைச் சாய்த்துக் கொண்டு ஆனந்தமாய் வந்து நிற்கிறாளே!" என்று கொதித்துக் குமுறினான் ரகு.

"எங்கேடா? எங்கே?"

"நில்லுங்கள், அம்மா!" என்று முழக்கினான் ரகு.

"ஒன்றை நன்றாகக் கேட்டுக் கொண்டு அடுத்த அடி எடுத்து வையுங்கள். அந்த ஓடுகாலியின் பெயரை இனி ஒரு தரம் நீங்கள் சொன்னால் கூட நான் இந்த வீட்டை விட்டுப் போய் விடுவேன். இது நிச்சயம். அவளாக இங்கே வந்தால் கூட அடித்து விரட்டி விடவேண்டும். இல்லாவிட்டால்...ஜாக்கிரதை!" என்று முடித்தான்.

"ஏண்டா இப்படி எல்லாம் பேசுகிறாய்? உன்னை விடவா எனக்கு உலகத்தில் ஒன்று பெரிது? என்னமோ பழகின பாசம். அவள் அம்மா அப்பா போன இடம்தான் தெரியவில்லை... இல்லையடா இல்லை. இனி அவர்களைப் பற்றிப் பேச வில்லை?" என்று மகனைச் சமாதானம் செய்வதில் முனைந்தார் சௌந்தரம்.

சௌந்தரம் அம்மாளின் அன்பை நினைத்து முதலில் மனம் உருகினாலும் அவரும் தன்னைத் தவறாகத்தான் எண்ணுகிறார் என்று வருத்தமாக இருந்தது மாயாவுக்கு.

இவர்கள் எல்லாரும் எப்படித் தன்னைத் தவறாக எண்ணலாம் என்று ஆச்சரியத்தோடு ஆத்திரமும் அவளுக்கு வந்தது.

சாட்சி ரகு என்று பிரேமியின் தந்தை சொன்னாரே! நேராக ரகுவிடம் சென்று என்ன பார்த்தாய் என்று கேட்கலாமா என்று கூட நினைத்தாள் மாயா.

ஆனால் அவன் காறி உமிழ்ந்த நிலையில் அவனைப் பார்த்துப் பேசக்கூட அவளுக்குப் பிடிக்கவில்லை.

சுதாகரின் பேச்சிலிருந்து அவளைப் பற்றித் தவறாக எண்ணும் அளவுக்கு ரகுவைச் சுதாகர் தயார் செய்திருக்கிறான் என்று மாயா ஊகித்திருந்தாள்.

ஆனாலும் யார் என்ன் சொன்னாலும் ரகு அவளைப் பற்றி எப்படித் தவறாக நினைக்கலாம் என்று ஆத்திரம் வந்தது அவளுக்கு.

அவளிடம் அவ்வளவு நம்பிக்கைகூட இல்லாத அவனைப் பற்றி அவளுக்கு மட்டும் என்ன வந்தது?

போகட்டும். யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எண்ணிவிட்டுப் போகட்டும். மாயாவைப் பொறுத்தவரையில் அவளுக்கு அப்பா இருக்கிறார், அம்மா இருக்கிறாள், பாபு, பிரியா என்று அவளுடைய எல்லாருமே இருக்கிறார்கள். மற்றவர்களைப் பற்றி அவள் கொஞ்சமும் கவலைப்படப் போவது இல்லை.

எப்படியும் சென்னையில் தந்தையைக் கண்டுபிடித்து விடலாம். அதன் பிறகு ஒரு துன்பமும் இல்லை என்ற நம்பிக்கையுடனேயே மாயா சென்னையைச் சென்று அடைந்தாள்.

வழி நெடுக அவளுக்கு ஒரே யோசனைதான்.

பிரேமியின் தந்தை மாயாவை எவ்வளவு அவமதிப்பாய்ப் பேசினாலும் அவளுடைய பெற்றோரிடம் அவர் மிகுந்த அன்பும் மதிப்பும் உடையவர்.

அவர் ரேணுகா பற்றிக் கூறியது அவள் நெஞ்சை மிகவும் உறுத்தியது.

எப்படியும் அவளுடைய தாயாருக்கு இன்னொரு அதிர்ச்சி வரக்கூடாது. இது முக்கியம்.

ஆனால் இந்த ஒரு முக்கியமான விஷயம் தன் குடும்பத்தைத் தேடும் வேலையை மாயாவுக்குக் கடினமாக்கி விட்டது.

சென்னைப் பத்திரிகைகளில் விளம்பரம் கொடுக்கலாம் என்று மாயா முதலில் நினைத்திருந்தாள். அது இப்போது சாத்தியம் அற்றுப் போயிற்று. ஏனெனில் சில பெண்களைப் போல இராமனோ இராவணனோ யார் ஆண்டாலும் நமக்கென்ன என்று இருப்பவள் அல்ல அவள் தாய். ஒழுங்காகப் பத்திரிகை படிப்பவள். எனவே மாயா விளம்பரம் கொடுத்தால் அது அவள் கண்ணில் படாமல் இருக்க வாய்ப்பு இல்லை. அந்த மாதிரித் திடீர் அதிர்ச்சியை அவளுக்கு அளிக்க முடியாது.

முதலில் அப்பாவைக் கண்டுபிடித்து அவர் மூலம் மெல்ல ரேணுகாவின் விஷயத்தை நிதானமாகத் தெரிவித்து அதன் பின்தான் மாயா மீண்டும் அன்னையை அடைய வேண்டும்.

தந்தையைத் தேடுமுன் தங்கும் இடம் தேடும்போதே மாயா சிரமப்பட்டுப் போனாள்.

சில பெண்கள் ஹாஸ்டலில் சென்று இடம் கேட்டாள். அவளை ஏற இறங்கப் பார்த்து விட்டு, ஓர் இகழ்ச்சிப் புன்முறுவலுடன் கையை விரித்தார்கள்.

முகம் சிவக்க வெளியே நடந்துவிட்டாள் மாயா.

பின்னர் நடுத்தரமாகத் தென்பட்ட ஒரு லாட்ஜில் ரூம் எடுத்தாள்.

நாள் வாடகை பத்து ரூபாய். மாதம் முந்நூறு ரூபாய். பரவாயில்லை. அப்பாவைக் கண்டுபிடிக்கும் வரையில்தானே என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

கூடவே அப்பாவின் இப்போதைய மாத வருமானம் அதற்கும் குறைவு என்று நினைவு தானாகவே வரவும் வருத்தமாகவும் இருந்தது.

முதலில் சுதாகரின் பணத்தைச் செலவு செய்வது அவளுக்கு ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. ஆனால் இது அப்பாவைப் பார்க்கும் வரைதான். அதோடு அவனது திருவிளையாடலின் விளைவுதானே இந்தத் துன்பம் எல்லாம். அதனால் பரவாயில்லை என்று மனதைத் தேற்றிக் கொண்டாள்.

மீண்டும் தந்தையை எப்படிக் கண்டுபிடிப்பது என்ற தீவிரமாய்ச் சிந்தனை செய்தாள்.

பத்திரிகையில் விளம்பரம் செய்ய முடியாது.

போலீசிடம் நம்பிக்கையில்லை. அவளை அப்பாவுக்குத் தேடித் தர முடியாதவர்களால் அப்பாவை அவளுக்குக் கண்டு தரமுடியுமா? அதோடு அடையாளத்துக்குக் காட்ட அப்பாவின் போட்டோ கூட இல்லையே.

அவளேதான் தேடிக் காண வேண்டும்.

ஆனால் எப்படி?

தந்தை எங்கோ கணக்கராக வேலை பார்ப்பதாக ரத்தினபாண்டியன் சொன்னார். கடையில் கணக்கு எழுதப் போகும்போது ஏதாவது பஸ் ஏறித்தானே போவார். ஒவ்வொரு பஸ் ஸ்டாப்பிலும் ஒவ்வொரு நாளாக நின்று பார்ப்பது என்று முடிவு செய்தாள்.

கொஞ்சம் கடினமான காரியம்தான். ஆனாலும் இதிலும் ஓர் அனுகூலம் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. நோயுற்ற தாயார் பஸ்ஸில் அங்கும் இங்கும் செல்லப் போவது இல்லை. எனவே இசகுபிசகாய் அவர் கண்ணில்பட்டுத் திடீர் அதிர்ச்சி ஏதும் ஆகிவிடாது.

ஒரு வழி தோன்றி விட்டதால் அதிலிருந்து மேலே மளமளவென்று யோசனை ஓடிற்று மாயாவுக்கு.

ரொம்பப் பெரிய, பகட்டான கடைகள் இருக்கும் பகுதியை விட்டு விடலாம். ஏனென்றால் அங்கெல்லாம் வெறும் இருநூறு ரூபாய்ச் சம்பளம் கொடுக்க மாட்டார்கள்.

அதே போல ரொம்பச் சின்னக் கடைகள் பகுதியையும் விட்டு விடலாம். சின்னக் கடைக்கு இருநூறு அதிகம்தான்.

நடுத்தரமாய்க் கொஞ்சம் வசதி உள்ள கடைகள். ஆனால் அந்த மாதிரிக் கடைகள் சென்னையில் எத்தனை ஆயிரம் இருக்கக்கூடும்! அதை அப்போது அவள் எண்ணவில்லை.

முடிவு செய்வது சுலபம்தான். ஆனால் காரியத்தில் இறங்கும்போது அவளுக்கு மலைப்பாய் இருந்தது.

முதல் முதலாக மாம்பலம் பஸ் ஸ்டாண்டில் காலை ஏழரை மணி அளவில் பெற்றவரைத் தேட என்று வந்து நின்ற போது மாயாவுக்கு முதல் முதலாக இந்த மலைப்பு.

எத்தனை பஸ்கள்! எத்தனை 'ரூட்'கள்!

அதோடு பஸ் ஸ்டாண்டில்தான் ஏற வேண்டும் என்பது இல்லையே. ஒவ்வொரு 'ரூட்'டிலும் இடையே எத்தனை ஸ்டாப்புகள்!

இதில் எங்கே ஏறி இறங்குகிறார் என்றுகூடத் தெரியாமல் ஒருவரை எப்படிக் கண்டு பிடிப்பது?

அதை விடவும் பஸ் ஏறாமல் நடந்தே சென்று விட்டால்?

பல நினைவில் நெஞ்சு பதைத்தது மாயாவுக்கு.

'இல்லை இல்லை, அப்படி எல்லாம் இராது. கடவுள் இருக்கிறார். அப்பா இருக்கும் இடத்தை அவர் நிச்சயமாக எனக்குக் காட்டுவார்,' என்று மீண்டும் மீண்டும் மனதில் சொல்லித் தைரியத்தை உருவாக்கிக் கொண்டாள்.

'காக்க காக்க கனகவேல் காக்க!' நிச்சயமாய்க் கனகவேல் காக்கும்.

ஏழரை மணியிலிருந்து காத்து நின்றாள் மாயா. எட்டு, ஒன்பது, பத்து...பத்தரை. ஒருவேளை இன்று அப்பாவுக்கு லேட்

ஆனால் என்று நினைத்துப் பதினோரு மணி மட்டும் வருவோரையும் போவோரையும் பார்த்துப் பார்த்துச் சோர்ந்தாள் மாயா.

அருகில் இருந்த ஒரு பெஞ்சில் அமர்ந்து சற்று இளைப் பாறினாள்.

கையோடு கொண்டு வந்திருந்த் உணவை விழுங்கி விட்டு அடுத்த ஸ்டாப்பிற்குச் சென்றாள். நாலரை மணியிலிருந்து எட்டரை வரை நின்று அலுத்துப் போய்த் திரும்பவும் லாட்ஜை அடைந்தாள்.

தினமும் அடுத்தடுத்த பஸ் ஸ்டாப்பாக மாறி மாறி நின்று சோர்ந்தாள்.

அக்கம்பக்கம் நிற்போரின் விசித்திரப் பார்வையைக் கூடச் சற்றும் பொருட்படுத்தவில்லை அவள்.

'யார் எப்படிப் பார்த்தால் எனக்கு என்ன? எனக்கு அப்பாவைக் காண வேண்டியது முக்கியம். மற்றது பற்றிக் கவலை இல்லை,' என்று எண்ணிக் கருமமே கண்ணாய் நின்றாள்.

ஆனால் இப்படியே ஒரு மாதம் சென்று முடிந்த போது பெருமளவு நம்பிக்கை குறைந்தது அவளுக்கு.

இது இலவு காக்கும் கிளி வேலை என்ற எண்ணம் ஓயாது தோன்றி அவளை வதைத்தது.

கூடவே வளர்ந்து வந்த வயிற்றின் பாரமும் அவளைக் கலங்கச் செய்தது.

'அப்பா! அப்பா! எனக்குப் பயமாக இருக்கிறதே. சீக்கிரமாய் என் கண்ணில் பட்டு விடுங்களேன், அப்பா! ப்ளீஸ் அப்பா...' என்று தினமும் கண்ணீரால் தலையணையை நனைத்தாள்.

ஒருநாள் இப்படி நிராசையுற்று அழுது கொண்டு இருந்த போதுதான் தந்தைக்குப் பதில் தம்பியைத் தேடினால் என்ன என்ற எண்ணம் மாயாவுக்கு உண்டாயிற்று.

பாபு எப்படியும் கல்லூரியில் சேர்ந்திருப்பான். இருநூறு ரூபாய் வருமானத்தில் கல்லூரிப் படிப்பும் கஷ்டம்தான் என்றாலும், வீடு விற்ற பணம் இருக்குமே, எப்படியும் அவனைக் கல்லூரியில் சேர்த்திருப்பார் அப்பா என்று நிச்சயமாய் நினைத்தாள் மாயா.

ஆண்கள் கல்லூரி எங்கும் தேடினாலே போதும்.

மறைந்த உற்சாகம் எல்லாம் மீண்டும் திரும்ப, மறுநாள் ஆர்வத்துடன் தேடும் வேலையைத் திரும்பவும் தொடங்கினாள்.

மெடிக்கல் லைனில் பாபுவுக்கு ஆசை அதிகம். மாயாவுக்கும் தம்பி பெரிய டாக்டர் ஆக வேண்டும் என்பதில் ஆசை உண்டு. எனவே முதலில் மருத்துவக் கல்லூரிகளில் தேடினாள்.

ஆனால் அதுவும் அவள் எண்ணியபடி எளிதாக இல்லை.

முதலில் மோகன்தாஸ் பாபு என்ற பெயரில் புதிய பையன் சேர்ந்திருக்கிறானா என்று ஆபீஸ் அறையில் கேட்பதற்கே சற்றுத் தயக்கமாகத்தான் இருந்தது.

துணிந்து அவள் கேட்ட போது அங்கே அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தார்கள்.

"இந்தச் சின்ன வயதில் இப்படியும் ஏமாற்றி விட்டிருக்கிறானே, ராஸ்கல்!" என்று ஒருவர் முணுமுணுத்த போது மாயாவின் முகம் ரத்தமாகிப் போனது.

"அவன் என் தம்பி!" என்று நறுக்கெனக் கூறினாள்.

ஆனால் அதன் விளைவாக அவர் "ஓகோ" என்று அவளை ஏற இறங்க வேறு மாதிரிப் பார்த்தபோது அப்போதும் அவள் முகம் சிவந்துதான் போயிற்று.

வெளியேறி விடத் துடித்த கால்களை அடக்கியபடி பிடிவாதத்துடன் நின்றாள்.

ஆனால், "புதிதாக அந்தப் பெயரில் யாரும் சேரவில்லை," என்று ரிஜிஸ்டரில் பார்த்துச் சொன்னபோது, 'ஏன் நிற்கிறோம்?' என்று வருந்தினாள்.

கிட்டத்தட்ட எல்லாக் கல்லூரிகளிலும் இதுவே அனுபவம் ஆயிற்று.

வேதனையையும் அவமானத்தையும் பல்லைக் கடித்து விழுங்கிய போதும் பலன் இல்லையே என்பதுதான் அவளுக்குப் பெரும் துக்கமாக இருந்தது.

அவள் காணாமல் போன துயரத்தில் பரீட்சையில் கோட்டை விட்டு விட்டானோ என்று சந்தேகம் வரவும் 'டியூட்டோரியல் காலேஜ்' களிலும் தேடினாள். பலன் தான் ஏதும் இல்லை.

நொந்த மனத்துடன் பழைய தேடலைத் தொடர்ந்தாள்.

மன வேதனையும் ஒன்பது மாத வயிறு தந்த துன்பமும் தாங்கமாட்டாமல் ஒரு நாள் தபால் ஆபீஸில் பணம் கட்டி ரத்தின பாண்டியனுக்கு டெலிபோன் செய்து பார்த்தாள்.

ஆனால் மாயாவின் குரலைக் கேட்டதுமே ரிசீவரைக் கீழே வைத்து விட்டார் அவர்.

ஆனால் மாயா விடவில்லை. மீண்டும் போன் செய்தாள்.

"தயவு செய்து வைத்து விடாதீர்கள், அங்கிள்! என்னால் கண்டுபிடிக்க முடியவே இல்லை. தயவு செய்து சொல்லுங்கள் அங்கிள். ப்ளீஸ் ப்ளீஸ் ப்ளீஸ் அங்கிள்!" என்று கதறினாள்.

"என்னை வெட்டினாலும் கூடச் சொல்ல மாட்டேன். என் அலுவலக நேரத்தை வீணடிக்காதே!" என்று மறுபடியும் ரிசீவரை வைத்து விட்டார் அவர்.

மனம் உடைந்துபோய் ஒரு மூச்சு விம்மி அழுது கண்ணீர் விட்டாள் மாயா.

பிறகுதான் இருக்கும் இடம் நினைவு வந்து கண்ணைத் துடைத்துக் கொண்டு பூத்தை விட்டு வெளியேறினாள்.

பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கை மனதில் இல்லாத போதும், வேறு வழி ஏதும் தெரியாத ஒரே காரணத்தால், மீண்டும் பஸ் ஸ்டாப்புகளில் தந்தையைத் தேடத் தொடங்கினாள்.

தந்தையைக் காணுமுன் சுதாகருடைய குழந்தை பிறந்து விடுமோ என்ற எண்ணம் தோன்றும் போதெல்லாம் இதயம் இருக்கும் இடத்தில் பனிப்பாறை அமர்ந்தாற்போலப் பயத்தில் உறைந்து போனாள் அவள்.

அந்தக் குழந்தையை என்ன செய்வது?

எந்தக் குழந்தையையும் தெளிவாக்கும் தந்தை, எந்தச் சிக்கலையும் தீர்க்கும் அப்பா, அவரைக் காணாமல் இந்தச் சங்கடத்திலிருந்து மாயா எப்படி மீள முடியும்?

இப்போதெல்லாம் அதிக நேரம் நிற்க முடியாமல் மாயாவுக்கு என்னென்னவோ செய்தது.

கால்கள் மிகவும் வலித்தன.

அடிக்கடி புலன்கள் எல்லாம் மங்குவது போல உணர்ந்தாள்.

ஆயினும் மனதின் பிடிவாதம் உடலின் அத்தனை துன்பங்களையும் மீறி, நின்று நின்று தேடினாள்.

எதற்கும் ஓர் எல்லை உண்டு என்பார்கள்.

ஆனால் அத்தனை எல்லைகளும் அவளிடம் தோற்று ஓடின-அப்பா அப்பா அப்பா என்ற ஜபம் தவிர!

தந்தையைக் காண வேண்டும்; தாய் மடியில் தலை வைத்துப் புரள வேண்டும் என்ற எண்ணம் மட்டும் இல்லாது போயிருந்தால் உணவைக்கூட விட்டிருப்பாள்.

அன்று பதினோரு மணி வரையிலும் தந்தையைத் தேடிவிட்டு அருகில் இருந்த பூங்காவினுள் சென்று ஒரு மரத்தடியில் காலை நீட்டிக் கொண்டு மரத்தின் மேல் சோர்வாகச் சாய்ந்து அமர்ந்தாள்.

வயிற்றினுள் இருந்த சிசுவின் 'களுக் முளுக்' என்ற அசைவுகளால் சேலை அங்கங்கே எழும்பி அமர்வதைப் பீதியுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

பார்க்கக் கூடாது, பார்க்கப் பார்க்கப் பயம்தான். இதைப் பார்க்கக் கூடாது என்று மனம் நினைத்தாலும் கண்கள் அவளையும் மீறி வயிற்றிலேயே பதிந்திருந்தன.

இந்தக் கலவரத்தில் மரத்தடியில் மறுபுறமாக இருவர் அமர்வதை அவள் கவனிக்கக்கூட இல்லை.

"மனதைச் சமாதானப் படுத்திக் கொள்ளப்பா, ராஜா! தைரியத்தை வரவழைத்துக் கொள்."

உலகம் எல்லாம் ஒரு கணம் அசைவற்றுப் போயிற்று மாயாவுக்கு.

ஏனெனில் அது அவளுடைய அப்பாவின் குரல்.

## 15

அலை மோதும் நெஞ்சுக்கு ஆறுதலைத் தரும் வார்த்தைகள் மட்டும் அல்ல; குரல்கூட.

தந்தையின் குரலைக் கேட்டதும் மாயாவுக்கு ஒரு கணம் உடம்பெல்லாம் ஓய்ந்து போயிற்று. எல்லையற்ற நிம்மதியில் அப்படியே தொய்ந்தாள்.

சில விநாடிகள் அசையும் சக்தியற்று அப்படியே கிடந்தாள்.

அப்போது சுந்தரத்தின் வார்த்தைகளுக்கு யாரோ பதில் கூறுவது அவள் காதுகளில் விழுந்தது.

"இந்தப் பிறவியில் எனக்குச் சாந்தி ஏது சார்? அய்யோ? எனக்கு இந்த வேதனை வரும் என்று எண்ணவே இல்லையே! மூன்றே நாள் காய்ச்சலில் என் செல்வம் போய் விட்டாளே..." என்று விம்மினார் அந்த மனிதர்.

பரிதாபத்தில் நெஞ்சு உருகிப் போயிற்று மாயாவுக்கு. 'மகளின் உயிரைப் பறிகொடுத்த ஒருவருக்கு அப்பா ஆறுதல் கூற முயற்சி செய்கிறார் போலும். இந்த வேளையில் இடைமறிக்கக் கூடாது. ஆனால் மகளை உயிருடன் பறி கொடுத்துவிட்டு அவர் கலங்கி நின்ற போது யாரிடமிருந்தேனும் அவருக்கு அறுதல் கிட்டியிருக்குமா? பாவம், அப்பா!' என்று தந்தையை நினைத்ததும் பரிதாபப் பட்டாள்.

சுந்தரத்தின் குரல் மீண்டும் ஒலித்தது. "சாவிலே கூட ஒரு சாந்தி இருக்கிறது, ராஜா. உன் குழந்தைக்குப் பாவம் செய்யத் தெரியாத முடியாத வயது. நிச்சயம் அவள் கடவுளிடம் தான் சென்றிருப்பாள். அதை நினைத்து அமைதி பெறு, அப்பா."

"சாந்தி...அமைதி...சார்! மகளின் சாவைவிடப் பெருந்துயரம் ஒன்றுமே இல்லை சார்."

"அனுபவப்பட்டவன் சொல்கிறேன், கேளப்பா. மகளின் சாவுகூடச் சில துயரங்களை விட இனிமையானதுதான். அதெல்லாம் நல்ல வேளையாக இனி உனக்கு நேர முடியாது. மேலும் நீ உன் மனைவியை எண்ணிப் பார்! நீயே கலங்கிப் போனால் அவள் கதி என்ன? அவளது துயரத்தைக் குறைப்பது உன் கடமை அல்லவா?"

"ஆமாம்...சார். ஆமாம். அவள், பாவம், தலைகூடத் தூக்கவில்லை. நாள் முழுவதும் கூடவே சுற்றிக் கொண்டு இருப்பாளா...பாவம், நான் அவளைப் பார்க்க வேண்டும். வரட்டுமா சார்? உங்களுக்கு ரொம்ப நன்றி சார். ஆண் பிள்ளை அழுகிறானே என்று ஒதுக்காமல் என்னோடு வந்ததற்கு."

தந்தைக்காக மனம் உருகிப் போனாள் மாயா.

மகள் செத்திருந்தால்கூட ஏதோ ஒரு முடிவு என்று தெரிந்திருக்கும்.

இப்போது கண்ணைக் கெடுத்து நாக்கை வெட்டி கை கால்களை முடக்கி என்று என்னென்ன செய்தார்களோ என்று கலங்கி இருப்பார்.

'அப்படி எல்லாம் ஒன்றும் இல்லையப்பா!' என்று அவர் முன்னே சென்று குதிக்கத் தோன்றியது.

ஆனால் அப்பாவோடு இருப்பவருக்கு அவள் விஷயம் ஏதேனும் தெரியுமோ தெரியாதோ! திடீரென்று முன்னே போய் நின்றால் பிரேமி அப்பா மாதிரி அசிங்கமாக ஏதாவது நினைத்து விட்டால் அது அப்பாவுக்குக் கேவலம் ஆயிற்றே.

மெல்ல எட்டிப் பார்த்தாள்.

திக்கென்றது.

கூட வந்த மனிதரோடு அவளுடைய தந்தையும் சேர்ந்து நடந்து கொண்டிருந்தார்.

அவசரமாக எழுந்து நடந்து மரத்துப் போயிருந்த கால்களைச் சிரமத்துடன் எட்டிப் போட்டு அவர்களைத் தொடர்ந்தாள் மாயா.

நல்ல வேளையாகப் பூங்கா வாயிலிலேயே கூட வந்தவர் பிரிந்து போனார்.

சிறு கூனல் போட்டிருந்த சுந்தரம் பூங்காவின் கேட்டில் சாய்ந்து பெருமூச்சு விடுவதை மாயா கண்டாள்.

தொண்டை அடைக்க, உடம்பு பதற, கண்ணீர் மல்க, "அப்பா...டா...டி...." என்று அவள் அழைத்தாள்.

சாட்டையடி விழுந்தாற் போல உடம்பு விரைத்துத் திரும்பினார் சுந்தரம். வினாடிக்குள் அவரது கண்கள் கனலைப் பொழிந்தன.

மாயா பயந்து போனாள்.

அப்பாகூட அவளை வெறுக்கக் கூடுமோ?

தவறாக எண்ண முடியுமா?

கடவுளே! அதை அவளால் தாங்கவே முடியாதே.

அவர் பேசத் தொடங்கு முன் அவசரமாக, "நான் சத்தியமாகச் சொல்லுகிறேன் அப்பா! நான் தப்பு பண்ண வில்லை," என்றாள் பதற்றத்துடன்.

அவர் முகத்தில் கடுமையான வெறுப்பும் சேர்ந்தது. "எவ்வளவு சாதாரணமாகச் சத்தியம் செய்கிறாய். இதுவே நீ எப்படி ஆகிவிட்டாய் என்று காட்டுகிறதே!" என்றார் சினத்துடன்.

"அய்யய்யோ. அப்படி இல்லையப்பா. நான் சொல்வது மெய் என்பதை அழுத்திச் சொல்லத்தான், ஸ்ட்ரெஸ் பண்ணத்தான் சத்தியம் என்றேன், அப்பா! டாடி... டாட்! தயவு செய்து தப்பாக ஏதும் சொல்லி விடாதீர்கள். என்னால் அதைத் தாங்கவே முடியாது, அப்பா! நீங்களும் ஏதேனும் சொன்னால் என்னால் அதைத் தாங்கவே முடியாது, டாடி..." என்றாள் அழுகையோடு மாயா.

"சீச்சி! அழுது ஆர்ப்பாட்டம் செய்து ஊரைக்கூட்டாதே, நாயே!" என்றார் அவர் வெறுப்பாக.

தன்னை யறியாமல் 'நாற்பத்திரண்டு' என்று முணுமுணுத்தாள் மாயா.

ஆனால் தந்தையின் முகம் மேலும் கடுப்பதைக் கண்டதும் கெஞ்சுதலாக, "அப்பா! நான் உங்கள் பெண். அவசரப்பட்டு முடிவு எடுக்காதீர்கள், அப்பா..." என்று யாசிப்பவள் போலக் கைகளை ஏந்தினாள்.

"தினவெடுத்துத் திரியும் நாய்களுக்கெல்லாம் நான் தகப்பனில்லை!" என்றார் சுந்தரம் கடுமையாக.

நம்ப இயலாத பயங்கரத்தில் மலைத்து நின்றாள் மகள்.

செயலற்றுப் பிரமித்த அந்தப் பார்வை அவரது கோபத்தைக் கூட்டியது. "போனதுதான் போனாயே. அங்கேயே செத்துத் தொலைவதுதானே. இந்தக் கோலத்தில் என் முன்னே வந்து நிற்க, பாவி! உனக்குக் கொஞ்சமும் மானமில்லை? சுரணை கெட்ட உடம்பு. எத்தனை கை பட்டதோ? சீ!" வார்த்தைகளாலேயே அவளைக் கொன்றுவிட முனைந்தவர் போலச் சரமாரியாய்ப் பொழிந்தார்.

'தந்தை' என்ற பற்றுக்கோல் ஒன்றை மட்டும் ஆதாரமாய்க் கொண்டு எல்லா விதமான வேதனைகளையும் சகித்து நிமிர்ந்தாள் மாயா. இப்போது பற்றுக்கோலே தலையில் இடியாய் இறங்கவும் அப்படியே ஒடிந்தாள்.

"அப்பா..!" என்று கதறியவள், மூச்சடைத்தாற்போலத் திடுமெனக் கண்களை மலர விழித்தாள். "அ...அப்...பா..." என்று மீண்டும் கதறியபடியே இரண்டாகி விடுவது போல வலித்த இடையைப் பற்றியபடி மயங்கி விழுந்தாள்.

மீண்டும் மாயாவுக்கு நினைவு வந்தபோது ஒரு ஸ்ட்ரெச்சரில் படுத்திருப்பது புரிந்தது.

"இந்தப் பெண்ணின் கணவர் பெயர் என்ன? நீங்கள் இவளுக்கு என்ன உறவு சார்?" என்று யாரோ கேட்டார்கள்.

"உறவா, சீச்சீ! வாயைக் கழுவுங்கள்..." இ...இது அப்பாவின் குரல்தான். எவ்வளவு வெறுப்பாகப் பேசுகிறார் என்று எண்ணும் போதே கண்களில் நீர் பொங்கியது.

அவர் தொடர்ந்தார். "ஏதோ அநாதை, பாவம்! தெருவில் வலியெடுத்துக் கிடக்கிறதே என்று ஆஸ்பத்திரியில் சேர்க்க வந்தால் என்னைப் போய் உறவா என்கிறீர்களே. ஊரில் கிடக்கும் எத்தனையோ கேடுகெட்ட கழுதைக்கெல்லாம் நான் உறவாக முடியுமா என்ன? கணவன் பேர் எல்லாம் அதையே கேட்டுக் கொள்ளுங்கள். ஆனால் அதற்கே தெரியுமோ

என்னவோ! சரி சரி, என் பொறுப்பு முடிந்தது. நான் போகிறேன்."

கூடை நெருப்பை வாரித் தலையில் கொட்டினால் கூட இவ்வளவு எரியுமா!

அடியானால் அடி, எப்படிப்பட்ட அடி!

மூச்செடுக்கக்கூட முடியாமல் மாயா மீண்டும் மயக்க மானாள்.

ஆனால் பிள்ளை வலியால் மீண்டும் உணர்வு பெற்றாள்.

வலி தாளாமல் முனகியபோது அருகே இருந்த நர்ஸ், "அட சும்மா கிட!" என்று அதட்டினாள்.

அங்கங்கே கண்ணில்பட்ட ஒவ்வொரு முகத்திலேயும் சிறு கடுப்பும் ஏளனமும் ஏன்?

மாயாவுக்கு உடனே காரணம் புரிந்து விடவே உடல் குன்றியது.

அப்பாவின் வார்த்தைகள். கூடவே கழுத்திலும் தாலி இல்லை. ஆனால்...

எதையும் எண்ணிப் பார்க்கவும் முடியாமல் வலி பயங்கரமாக எடுத்தது.

தன்னையும் மீறி, "வலி தாங்க முடியவில்லையே. அம்மாடி பயமாய் இருக்கிறதே!", என்று கதறி அழுதாள்.

"இந்தப் பயம் எல்லாம் அப்பல்ல வந்திருக்க வேணும்!" என்ற குரலில் மீண்டும் துடித்தாள்.

"ஷ்... என்னம்மா இது சத்தம். அடக்கிக் கொள். ம் ...சத்தம் போடலாமா?" என்று இனிய குரலில் கூறியபடி ஓர் இளம் லேடி டாக்டர் மாயாவின் அருகே குனிந்து அவளது நெற்றிக் கூந்தலைப் பரிவுடன் ஒதுக்கினார்.

பரிவு! எத்தனை மாதங்களுக்குப் பிறகு முதன் முறையாக இப்படி ஒரு கனிவான குரலை மாயா கேட்கிறாள்.

கண்ணீர் மளமளவென்று பெருக, "எனக்கு ரொம்ப... ரொம்ப-ரொம்ப வலிக்கிறதே டாக்டர். தாங்க முடியவில்லையே!" என்று குரலை அடக்கி விம்மினாள்.

"ஓர் உயிரை உலகத்துக்குக் கொண்டு வருவது என்றால் எளிதா அம்மா? பொறுத்துக் கொள்...இன்னும் எப்படியும் இரண்டு மணி நேரமாவது ஆகும். இதற்கே அழுதால் பெரிய வலியெல்லாம் தாங்க வேண்டாமா?" என்று பரிசோதித்தபடியே பேசினார் டாக்டர்.

டாக்டரின் கையைப் பிடித்துக் கொண்டு, "டாக்டர்! இங்கேயே என் பக்கத்திலேயே இருங்களேன்..." என்று கெஞ்சிக் கேட்கையிலே, அவரது முகம் சுளிக்கக் கண்டு, கையை விட்டு விட்டாள் மாயா, முகவாட்டத்துடன். "நேரம் இல்லாவிட்டால் வேண்டாம், டாக்டர். யாராவது அன்பாக இருக்க மாட்டார்களா என்று இருந்தது," என்று குரல் நடுங்க உரைத்தாள்.

"ஓ!" மீண்டும் ஒரு தரம் அவளது நெற்றியை வருடி விட்டு, "இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்கள்! உன்னிடமே உட்கார முடியுமா அம்மா! பல்லைக் கடித்துப் பொறுத்துக் கொள். ஒருதரம் ரவுண்ட்ஸ் முடித்துவிட்டு உன்னிடம் வருகிறேன். நீ மட்டும் கத்தவே கூடாது. சரிதானா?" என்று இதமாக உரைத்தார் அந்த லேடி டாக்டர்.

நன்றியோடு முறுவலித்தாள் மாயா. "இன்னும் ஒன்றே ஒன்று டாக்டர். இதற்கு மேலும் ரொம்ப வலிக்குமா?" என்று வினவினாள் கண்களில் அச்சம் தவிர்க்க.

இரக்கத்துடன் அவளைப் பார்த்துவிட்டு, "உன்னிடம் யாரும் சொல்லவில்லையாம்மா?"என்றார் டாக்டர்.

"யார் சொல்லுவார்? அம்மா... யாரும் இல்லையே. நான்...நான்தான் அநாதை ஆயிற்றே!" என்றாள் வேதனை யோடு.

“கடவுள் இருக்கையில் யாரும் அநாதை இல்லையம்மா. இதோ பார். அழக் கூடாது. இன்னும் ரொம்பத்தான் வலிக்கும். ஆனால் எப்போதும் கடவுள் நம் பக்கத்திலேயே துணையிருக்கிறார் என்று நினைத்துத் தைரியமாய் இருக்க வேண்டும். என்ன? நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் வருகிறேன். அதுவரை கூச்சல், சத்தம் ஒன்றும் இருக்கக் கூடாது, ஓகே?” என்று முறுவலித்தபடியே டாக்டர் சென்றார்.

கடவுள் துணையிருந்தால் இவ்வளவு கொடூரமான தெல்லாம் நடக்க முடியுமா? மாயாவுக்குப் புரியவில்லை.

“கடவுளே! நான் என்ன பிழை செய்தேன்? ஏன் இப்படி எல்லாம் என்னைத் தண்டிக்கிறாய்? ஏன்? ஏன்?” என்று உதட்டைக் கடித்து முனகலை அடக்கிக் கொண்டு மானசீகமாய்க் கடவுளிடம் கேள்விக் கணைகளைத் தொடுக்கலானாள் மாயா.

ஆனால் கேள்வியைத்தான் அடுக்க முடிந்ததே தவிர பதில் ஒன்றுகூடத் தெரிய வரவில்லை.

அப்பாடி என்று ஓய்ந்து படுத்திருந்தாள் மாயா.

வயிறு ஒட்டி அமுங்கிக் கிடப்பதைக் காணும் போதே யாருடைய உடம்போ போலத் தோன்றியது.

வயிற்றுச் சுமை இறங்கிப் போயிற்று.

ஆனால் அது பத்து மடங்கு கனத்துடன் நெஞ்சில் ஏறி அமர்ந்து கொண்டது போலும்.

அருகில் சிறு தொட்டிலில் தெரிந்த வெண்ணிறக் கால்களையும் கறுப்பான சுருள் மயிரையும் காணும் போதெல்லாம் நெஞ்சைச் சுற்றிலும் குளிர் எடுத்தது. உடம்பெல்லாம் நடுநடுங்கியது. போக்கிடம் அற்ற மனம் உள்ளுக்குள்ளேயே தந்தையை உருவகித்து அவரிடம் புலம்பியது. ஒன்றுமே புரியவில்லையே. இது என் குழந்தை என்கிறார்களே. இல்லையே, இல்லையேப்பா. எல்லாமாக ஒரே

பயமாக இருக்கிறதே. அப்பா! அப்பா! அப்பா! நீங்களும் என்னைக் கைவிட்டு விட்டீர்களே! இனி நான் என்ன செய்யட்டும்? என்ன செய்யட்டும். அப்பா? அப்பா...” என்று கதறியடித்து, காப்பாற்ற அப்பா வர மாட்டார் என்ற உண்மை உறைக்க ஓய்ந்து போனாள்.

‘அப்பா’ என்ற ஒரே மந்திரத்தில் அத்தனை அடிகளையும் தாங்கியவள், மந்திரமே தவறு என்று அறிந்த போது செய்கையற்றுச் சோர்ந்தாள்.

இனி என்ன என்ற கேள்வியின் பூதாகாரத்தில் பயந்து நடுங்கி ஒடுங்கினாள்.

திடுமென ஏதோ பரபரப்பு.

மாயாவை ஸ்ட்ரெச்சரில் ஏந்தி எங்கோ கொண்டு சென்றார்கள்.

புரியாமல், புரிந்து கொள்ளும் ஆர்வமும் இல்லாமல் சோர்ந்து கிடந்தவள் இதமான குளிர்ச்சியுடன் கூடிய ஒரு பெரிய அறையில் உள்ள மெத்தைக் கட்டிலில் தன்னைக் கிடத்தவும் திகைத்தாள்.

“ஏன்? என்ன? இங்கே ஏன்?” என்று தடுமாற்றத்துடன் விசாரித்தாள்.

“இதுதான் அதிர்ஷ்டம் என்கிறது,” என்று நொடித்தாள் உடன் வந்த நர்ஸ், “பணக்காரக் கிறுக்கு. முன்னே இங்கே பிறந்த ஒரு பணக்காரருக்கு இப்ப ஆண் குழந்தை பிறந்து இருக்காம். தன் பிள்ளை பிறந்த அதே நேரத்திலே இந்த ஆஸ்பத்திரியிலே ஏதாச்சும் பிள்ளைங்க பிறந்திருந்தால் தாயையும் பிள்ளையையும் தன் செலவிலே ராஜ மரியாதை பண்ண நினைச்சு விட்டார். உன் அதிர்ஷ்டம். உன் பிள்ளைதான் அதே நேரத்தில் பிறந்தது. பாரேன். எப்படி எப்படியோ பிள்ளை பெற்றாலும் உனக்குக் கொள்ளை அதிர்ஷ்டம்தான். இதெல்லாம் சரியாக நடக்கிறதா என்று பார்க்கத் தன் குடும்படாக்டரையே அனுப்பி இருக்கார்.”

அதிர்ஷ்டமா?

மாயாவுக்குப் புரிந்து விட்டது.

இதில் எல்லாமா அவள் மயங்கி விடுவாள் என்று அவன் நினைக்கிறான்? இன்னமும் அவன் பழி வாங்கும் எண்ணத்தை விடவில்லை.

இதை எல்லாம் ஏற்பாடு செய்ய உன்னதமான தொழில் செய்யும் ஒரு டாக்டர் வேறு.

"அந்த டாக்டரை நான் பார்க்க வேண்டும்," என்றாள் சட்டென்று.

"எதுக்கு? நன்றி சொல்லணுமாக்கும்? நீ சொல்லாட்டியும் செய்வாங்க. கவலைப்படாதே!" என்று அசட்டையுடன் சொல்லிவிட்டுத் தன் போக்கில் போர்வையை மடித்து மெத்தையின் கீழ்ச் செருகினாள் அந்த நர்ஸ்;

ஏதோ கெட்டழிந்த பெண் என்ற எண்ணத்தோடு அந்த நர்ஸ் நடத்துவது மாயாவுக்குப் புரிந்தது. 'சுருக்' கென்று குத்தவும்தான் செய்தது. ஆனால் அதைவிடப் பெரிய பெரிய குத்துகளை எல்லாம்தான் கண்டு விட்டாயிற்றே.

அதோடு இவளாவது யாரோ ஓர் அந்நியள். அறியாமல் சொல்லிவிட்டுப் போகிறாள். போகட்டும். போகட்டும். போகட்டுமே!

"நான் அந்த டாக்டரைப் பார்க்க வேண்டும்," என்று பிடிவாதத்துடன் எழ முயற்சி செய்தாள் மாயா.

"அட, இந்தா, சும்மா இரு. சேச்சேச்சே. இது வேற ரோதனையா? பேசாமல் படுத்திரு. நான் போய்ச் சொல்லுகிறேன்," என்று மாயாவைப் படுக்க வைத்துவிட்டு எரிச்சலுடன் அவள் நிமிர்ந்தபோது வெளியே பேச்சுக் குரல் கேட்டது.

குரலை அடுத்து இருவர் அறையினுள் வந்தனர்.

நர்ஸின் அட்டென்ஷனைக் கண்டு ஏதோ பெரிய டாக்டர் என்று ஊகித்தாள் மாயா.

சார்ட்டை எடுத்துப் பார்த்துவிட்டுப் பொதுப்படையாக இரண்டொரு கேள்விகள் கேட்டார் வந்தவர்களில் பெரியவர்.

அதன் பின் உடன் வந்த இளைஞர், "எந்த வசதி வேண்டுமானாலும் கேளுங்கள் அம்மா! செய்து கொடுக்கச் சொல்லியிருக்கிறார் என் நண்பர்,"என்றார் ஆங்கிலத்தில்.

"உங்களிடம் தனியாகப் பேச வேண்டும்," என்றாள் மாயா, அவரையே கூர்ந்து பார்த்தபடி. "தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள், டாக்டர்," என்று பெரிய டாக்டரிடம் வாய் சொன்னாலும் பார்வை மற்றவர் முகத்தை விட்டு விலக வில்லை.

"இட்ஸ் ஆல்ரைட் மை சைல்ட். நர்ஸ், கம் வித் மி..." என்று நர்ஸுடன் வெளியேறினார் பெரியவர். தோளைக் குலுக்கி விட்டுப் பேசாதிருந்தார், அவர்.

கதவு சாத்தப்பட்டதும், "அந்தப் பெரிய மனிதன் சுதாகர்தானே?" என்றாள் மாயா.

"மற்றவர் முன்னிலையில் அவமானப்படுவது எவ்வளவு பெரிய வேதனை என்று எனக்குத் தெரியும், டாக்டர்! அதனால் தான் உங்களிடம் தனியே பேச வேண்டும் என்றேன். ஆனால் எனக்குப் பதில் சொல்லுங்கள் டாக்டர். உங்களுக்கே வெட்கமாக இல்லை?" என்றாள் ஒரு தீவிரத்துடன் மாயா.

"நான் வெட்கப்பட என்ன இருக்கிறது?" என்றார் அவர் நிதானமாக.

"நியாய அநியாயத்தைப் பகுத்தறியும் புத்தியிருந்தால் உங்களுக்கே தெரியும். இவ்வளவு படித்தவர், உயர்ந்த தொழிலைச் செய்கிறவர். உங்களுக்கு என் விஷயத்தில் இழைக்கப்பட்ட அநீதி தெரியாதா? அதை எதிர்த்து ஒரு விரலையேனும் அசைக்கவில்லையே, நீங்கள்!" என்றாள் மாயா வேகத்துடன்.

சங்கரின் முகம் சற்றும் மாறவில்லை. "அதில் நான் என்ன செய்திருக்க முடியும்? மேடம்! எனக்கும் மனைவி இருக்கிறாள். இரு குழந்தைகள் இருக்கின்றன. வயதான பெற்றோர், சகோதரிகள் எல்லாருமே. உங்களுக்காக ஒரு விரலை அசைக்க முயன்றிருந்தால் என்ன ஆகியிருக்கும்? சுதாகர் எனக்குத் தரும் சம்பளம் எவ்வளவு தெரியுமா? என்னுடைய முதல் கடமை என்னுடைய குடும்பத்திற்குத்தான். உங்களுக்கு உதவ முயன்றிருந்தால் என் வேலை போயிருக்கும். என் குடும்பம் நடுத் தெருவில் நின்றிருக்கும். அப்போது நீங்களா உதவி செய்வீர்கள்?"

மாயாவுக்கு ஆத்திரம் பொங்கியது. "சந்திரகுப்த மௌரியர் ரூல் தெரியுமா உங்களுக்கு? ஒரு வீடு எரியும் போது ஆரோக்கியமான ஒருவன் ஓடிப்போய் உதவாவிட்டால் அவன் கையை வெட்டி விடுவார்கள்!" என்று கண்ணால் அவனுக்கு நெருப்பிட்டாள்.

"வாழ்வதற்கு இப்போது இருக்கும் போட்டி அன்று இருந்திராது." என்றான் சங்கர் சலனம் அற்று. "அவரவர் விதி என்று இருக்கிறது மேடம்! அதை மீற யாராலும் ஆகாது... இங்கே உங்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து தர ஏற்பாடு செய்திருக்கிறான். வரட்டுமா?" என்று வெளியேறினார்.

இது விதியா! என்ன தப்பு செய்தாலும் உன் விதி என்று விதியின் தலையில் பாரத்தைப் போட்டு விடலாமா?

அல்லது அவரவர் செய்யும் நன்மை தீமைகளைப் பொறுத்தே விதி அமைகிறது என்றால் மாயா செய்த தப்பு என்ன?

இவ்வளவு பெரிய வேதனைகளை எல்லாம் அனுபவிக்க. நான் என்ன தவறு செய்திருக்கக் கூடும் என்று யோசித்தாள் மாயா.

பள்ளியில் படிக்கும்போது சில சமயங்களில் ஹோம் வொர்க் செய்ய மறந்து போய், டீச்சரிடம் உடம்பு சரியில்லை

என்று பொய் சொன்னதை நினைத்தாள். பொய் பெரிய பாவம் என்று அப்பா சொல்லுவாரே. அதன் விளைவோ?

கேட்டால் தர மாட்டாளே என்று ஒரு தரம் ராதிகாவின் வாட்டர் கலரை அவளிடம் கேளாமலே எடுத்துப் பயன்படுத்தி விட்டு வைத்து விட்டது நினைவு வந்தது. அது களவுதானே. அதுவும் பாவம் அல்லவா? அதன் விளைவோ?

ஆனால், இதற்காக வெல்லாம் இவ்வளவு பெரிய துன்பங்கள் நேர்ந்துவிடுமோ? எப்படி அது நியாயமாகும்?

மாயாவின் யோசனையின் ஊடே குழந்தை குரல் கொடுத்தது.

உள்ளே வந்த நர்ஸ், "பிள்ளைக்குப் பால் கொடு!" என்று குழந்தையை அருகில் கிடத்தி மேல் துணியில் கை வைத்த போது உடம்பெல்லாம் உதறல் எடுத்துப் பதறிப் போனாள் மாயா.

"என்னைத் தொடக்கூடாது. ஏய்... சீ..." என்று நர்சின் கையைத் தட்டி விடும்போதே முட்டி மோதிக் கொண்டு அழுகை வந்தது. "போ... போ... அய்யோம்மா... நான் மாட்டேன்..." என்று கதறலானாள்.

ஆனால் மனம் வேறு. உடம்பு வேறு ஆயிற்றே!

குழந்தையின் அழுகுரல் பலக்கப் பலக்க நெஞ்சில் பால் பெருகித் தினவெடுத்தது. வேதனை தாளாமல் மார்பை அழுத்திக் கொண்டு முனகினாள்.

அதற்குள் நர்ஸ் சென்று லேடி டாக்டரை அழைத்து வந்தாள்.

"என்னம்மா மாயா, முரட்டுப் பிடிவாதம் செய்கிறாயாமே. அச்சச்சோ. அழாதேடா, அழகு பேபி! இதோ கொஞ்சம் பொறுத்துக் கொள்..." என்று குழந்தையைத் தூக்கிக் கொஞ்சியவாறே மாயாவைப் பார்த்த டாக்டருக்கு அவளது வேதனை புரிந்தது.

"இதோ பார், மாயா! பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ இந்தக் குழந்தைக்குப்பசி இருக்கிறது. அதைத் தீர்க்கும் உணவு உன்னிடம் இருக்கிறது. பெண்கள் அன்ன பூரணிகள். இந்தச் சிசுவின் பசியையேனும் நீ போக்கக் கூடாதா? அதோடு உனக்கும் வலிக்கிறதில்லையா? அதோடு செயற்கை முறையில் இதை நீக்குவதானாலும் கூட அந்த நர்ஸ்தான் வருவாள். வந்து தொட்டு..."

"அய்யே! வேண்டாம்."

"பின்னே?"

வேறு வழி காணாமல் திகைத்துப் பரக்கப் பரக்க விழித்து விட்டு, தோல்வியின் கண்ணீரோடு தலையைத் திருப்பிக் கொண்டு, "நான்...நானே...டாக்டர்! நர்ஸை வெளியே போகச் சொல்லுங்கள். நீ...நீங்களும்தான்..." என்றாள், மெல்லிய குரலில்.

குழந்தையை மாயாவின் அருகே கிடத்தி விட்டு லேசாகச் சிரித்துவிட்டு டாக்டர் வெளியே சென்றார்.

தன்னையும் உடலையும் இந்த உலகம் முழுமையையும் அருவருத்தபடியே குழந்தையை எடுத்தாள் மாயா.

மார்பின் வலி மறைந்தது.

ஆனால் மார்புக் கூட்டினுள் வேதனை பல மடங்கு பெருகிப் போயிற்று.

இயற்கையே அவளைத் தாங்குகிறதே! அப்படியானால் இது அவளுடைய குழந்தைதானா?

'கிடையவே கிடையாது. இல்லவே இல்லை. அதெப்படி? அப்பாவும் இப்படி என்றால்.... முருகா! நீயாவது வாயேன். ஏதாவது செய்யேன்-முருகா முருகா முருகா...' என்று கடவுளிடம் முறையிட்டாள்.

ஆனால் முருகன் அவ்வளவு சீக்கிரம் இறங்கி வருகிறவனா?

இந்தத் துன்பங்கள் ஏன் வந்தன என்ற திகைப்பும், இனி என்ன ஆகும் என்ற மலைப்புமாக இருதினங்களைக் கழித்தாள் மாயா.

மூன்றாம் நாள் குழந்தையைப் பசியாற்றித் தொட்டிலில் கிடத்திவிட்டுக் கொல்லும் நினைவுகளோடு அவள் போராடிக் கொண்டு இருந்தபோது கதவு தட்டும் ஓசை கேட்டது.

யாரோ நர்ஸ் என்று நினைத்தபடி அலுப்புடன் திரும்பிப் பார்த்தாள் மாயா.

வந்தவன் பாபு.

## 16

தம்பியைக் கண்டதும் ஒரு கண நேரத்தில் மாயாவின் இதயம் 'ஜிவ்' வென்று சிறகடித்து எட்டாத உயரம் சென்று எங்கெங்கோ பறந்தது.

பாபு இங்கே அவளைப் பார்க்க வருவதானால் அப்பாதானே அவனுக்கு விவரம் சொல்லியிருக்க வேண்டும்? அப்படியானால் அவள் நினைத்ததுபோல அவளுடைய தந்தை அவளைக் கைவிடவில்லை. அன்று ஏதோ ஆத்திரத்தில் பேசிவிட்டாலும் இப்போது அதை உணர்ந்து தம்பியை அனுப்பி இருக்கிறார், அவளை அழைத்து வர!

அத்தோடு இந்தப் பிரியமான தம்பியைப் பார்த்து எத்தனை காலம் ஆகிவிட்டது?

"பாபூ...!" என்று ஆசையுடன் அழைத்து விழி நிறைய அவனைப் பார்த்தாள்.

பார்வையை மறைத்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "உட்கார், பாபு." என்றாள்.

ஆனால் தம்பியின் விழிகளில் குரோதத்தைக் காணவும் மீண்டும் வாடிப் போனாள்.

அப்பா கைவிடவில்லை என்று எண்ணி விநாடிக்குள் பொங்கிய மகிழ்ச்சி தோன்றிய வேகத்திலேயே அழிந்தது.

ஆயினும் அவனது தோற்றம் மனதை உறுத்த, "மெலிந்து போய் இருக்கிறாயே பாபு!" என்றாள் வேதனையுடன்.

"வேறு எப்படி இருக்க வேண்டும் என்று எண்ணி ஓடினாய்?" என்று வெறுப்புடன் கேட்டான் அவன்.

ஒரு தரம் அவன் பார்வை அறை எங்கும் சுழன்றது.

பின்னர் உதடுகள் இகழ்ச்சியாக வளைய, "ஏ. சி. ரூமா? பரவாயில்லை, நீ பிடித்தது புளியங்கொம்புதான். அதனால்தான் நாங்கள் எல்லாரும் எக்கேடு கெட்டாலும் கெடட்டும் என்று ஓடினாய். அப்படித்தானே?" என்றான்.

மாயா மெல்ல நிமிர்ந்து, "யோசித்துப் பார். பாபு! நான் அப்படிப்பட்டவளாடா?" என்று வருத்தத்துடன் கேட்டாள்.

"இல்லை என்று கடைசிவரை நம்பினேனேடி, பாவி! ரகு அண்ணா சொன்னதைக்கூட நான் நம்பவில்லையே, ஆனால்..."

"பாபு! இதற்கெல்லாம் ஒரு விளக்கம் இருக்க முடியாதா? அது என்ன என்று கேட்கக்கூட உங்களில் யாருக்கும் தோன்றவில்லையேடா!" என்று ஏக்கமாக வினவினாள் அவள்.

"கொலைகாரனிடம் கேட்டால்கூடத் தான் செய்த குற்றத்துக்கு ஒரு விளக்கம் கூறுவான்!" என்றான் பாபு விட்டேற்றியாக.

உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் மௌனமாக இருந்தாள் மாயா. பிறகு ஒரு பெருமூச்சுடன் பேசத் தொடங்கினாள்: "பாபு! நீ சிறு பையன் இல்லை, ஒரு பெண்ணின் விருப்பம் இல்லாதபடியே ஏதேதோ நடக்க முடியும்."

"ஆனால் இந்த ஏ.சி. ரூம், ஃபாரின் நைலக்ஸ் சேலை, எல்லாவற்றுக்கும் மேலாகக் கிட்டத் தட்ட ஓர் ஆண்டாக உன் மௌனம்..."

"இல்லையடா பாபு! பல மாதங்களாக உன்னைத் தேடித் தேடி அலைந்தேன். உனக்காக ஒவ்வொரு காலேஜையும் அலசினேன். மெடிக்கல் காலேஜில் கூட."

வெறுப்புடன் உரக்க நகைத்தான் பாபு. "ஜோக் அடிக்கிறாயா, அக்கா? நீ ஓடின பிறகு எந்த முகத்தை வைத்துக் கொண்டு அங்கே என் படிப்பைத் தொடர்ந்து இருப்பேன் என்று நினைத்தாய்?"

"பாபு!" என்றாள் மாயா, வேதனையுடன்.

"ஆமாம். என் படிப்பு, ப்ரியாவின் படிப்பு, அப்பாவின் வேலை எல்லாவற்றுக்கும் சேர்த்து அங்கே ஒரு பெரிய முழுக்குப் போட்டுவிட்டு முகத்தை மூடிக்கொண்டு ஓடி வந்தோம். இங்கே அப்பாவுக்கு மாதம் இருநூறு ரூபாய் சம்பளம். நான் பேப்பர் போட்டு மாதம் நூறு ரூபாய் சம்பாதிக்கிறேன். ப்ரீ கூடை பின்னுகிறாள். ராஜயோகம்தான்."

"நான் இப்படியெல்லாம் நினைக்கவில்லையேடா!" என்று கைகளால் முகத்தை மூடிக் கொண்டு விம்மினாள் மாயா.

"ஏன்? நினைத்திருந்தால் ஓடாமல் இருந்திருப்பாயோ?" என்று ஏளனமாக வினவினான் பாபு.

"நான் ஓடவில்லையடா. என்னை..." என்று தம்பியிடம் விளக்க முயன்றாள் அவள்.

ஆனால் அவன் விட்டால்தானே. "ஆமாமாம். ஓடவில்லை தான். நீ ரயிலில் அல்லவா போனாய்? அதிலும் ஏசி கோச்சா

அல்லது கேவலம் ஃபர்ஸ்ட் கிளாஸ்தானா?" என்றான் எகத்தாளமாக.

மாயாவுக்குத் தொண்டை அடைத்தது. தோற்றுப் போனவளாகத் தம்பியை ஏக்கத்துடன் பார்த்து, "செத்த பாம்பைத் திரும்பவும் அடிக்கத்தான் வந்தாயாடா?" என்றாள் சிரமத்துடன்.

"இல்லை," என்று ஒரு நோட்டுக் கற்றையை எடுத்து அவளிடம் வீசினான் பாபு. "இதோ இதில் ஆயிரம் ரூபாய் இருக்கிறது. இதை எடுத்துக் கொண்டு இந்த ஊரைவிட்டு, ஏன் - இந்த உலகத்தை விட்டே சென்றாலும் சரிதான்- எங்கேனும் போய்விடு. இங்கே இருந்து இந்த ஊரிலும் எங்கள் முகத்தில் கரிபூசி விடாதே. ஏதோ கொஞ்சம் பரவாயில்லாமல் வாழத்தொடங்கி இருக்கிறோம். அதையும் கெடுத்துவிடாதே என்று சொல்லச் சொல்லி அப்பா தன்னிடம் கடைசியாக மீந்திருந்த இந்தத் தொகையைக் கொடுத்து அனுப்பினார். அம்மா, தாயே! நானும் உன்னைக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து போய் விடம்மா!" என்று கும்பிடு போட்டான்.

அவனது குத்தலும் ஏளனமும் நெஞ்சைப் பொத்தலாக்கிய போதும், அதை விடுத்து, "பாபு! கடைசிப் பணம் என்றால் எப்படிடா? வீடு விற்ற பணம் எல்லாம் என்ன ஆயிற்று?" என்று கவலையுடன் வினவினாள் அவள்.

"ஓகோ, அதில் பங்கு வாங்கத்தான் எங்களைத் தேடினாயா? பரதேவதை, கணக்குத் தருகிறேன், கேட்டுக் கொள், கால் விலைக்கு விற்றதிலும் அந்த ஆள் பாதிப் பணம் கொடுத்தான். இங்கே அம்மாவின் வைத்தியத்துக்குச் செலவானது போக."

'பாபு! அம்மா எப்படி இருக்கிறார்கள்! நான் அம்மாவைப் பார்க்க வேண்டுமேடா!" என்று குரல் தழுதழுத்தாள் மாயா.

"ஏன்? அம்மா இந்த அளவுக்கு உயிரோடு இருப்பது கூட உனக்குப் பிடிக்கவில்லையா? ஒரேயடியாகக் கொன்று விட வேண்டுமா?" என்றான் அவன் குரோதத்துடன்.

"பாபூ! அப்படிச் சொல்லாதேடா, அம்மாவை- அம்மாவை-" என்று பேச முடியாமல் விக்கினாள் மாயா.

ஒரு குரூர திருப்தியுடன், "ஆமாம், உன்னைப் பார்த்தாலே அம்மாவின் உயிர் போய்விடும். வீட்டில் உன் பெயரையே உச்சரிப்பது இல்லை, ஏன் தெரியுமா? அதுவே அம்மாவுக்கு எமனாகிவிடுமோ என்றுதான். ஒருவேளை அதுதான் உனக்கு ஆசையானால் இங்கேயே உலவி எங்கள் குடும்பத்தைத் சிதறடி. அல்லது கொஞ்சமேனும் உன் நெஞ்சில் ஈவு இரக்கம் இருந்தா இவ்வளவு நாள் போனது போல் போய்விடு. எங்கள் குடும்பம் கலையாமல் இருக்கட்டும் என்று திரும்ப வராமலேயே போய்விடு," என்றான் பாபு.

கண்ணீர் நின்று போய்விட மாயா மெல்ல நிமிர்ந்தாள். "கவலைப்படாதே, பாபு. அப்படி ஒன்றும் உங்கள் குடும்பத்தை 'நான்' கலைத்துவிட மாட்டேன். 'நான்' என்ன ஆனால் என்ன? 'உங்களை'ப் பொறுத்த வரையில் 'நீங்கள்' நிம்மதியாக இருங்கள்," என்று தலையை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

"இந்த நாக்கு மட்டும் அப்படியே இருக்கிறது!" என்றான் பாபு ஆத்திரத்துடன்.

"உடன் பிறந்தது ஆயிற்றே. உயிர் உள்ள வரையில் எங்கே போய்விடும்?"

"அதுவும்தான் ஏன் இருக்க வேண்டும்? ஒரு வழியாய்ப் போய்த் தொலைந்தால் அப்பாவும் நானும் நிம்மதியாக இருப்போம்," என்றான் பாபு இரக்கமற்று.

திரும்பாமலேயே, "போய்விடு பாபு - மேலே எதுவும் பேசாமல் போய்விடு. போகும்போது இந்தப் பணத்தையும்

எடுத்துக் கொண்டு போய்விடு. எனக்கு.....எனக்குத் தேவைப் படாது." என்றாள் மாயா தெளிவற்ற குரலில்.

"அந்தக் கழுதை தருவது இருக்குமே!" என்றான் குத்தலாக. மேலே அவனுக்கே தாங்காமல், 'பாவி! என் குடும்பம் போல உலகத்திலேயே கிடையாது என்று பெருமையோடு இருந்தேனே. ராட்சசி. எல்லாவற்றையும் தலை கீழாக்கித் தலை குனிய வைத்து விட்டாயே!" என்று புலம்பி விட்டான். அவசரமாகக் கண்ணைத் துடைத்துக் கொண்டு தன் பலவீனத்திற்காகவும் அவள் மீதே ஆத்திரத்தைக் காட்டி, "சொன்னது நினைவிருக்கட்டும். எங்கள் கண்ணில்படாமல் எங்காவது போய்விடு. ஏசி ரூம்காரிக்கு இந்தப் பணம் தேவைப்படாது என்று அப்பாவிடம் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்." என்று மடமட வென்று வெளியேறி விட்டான்.

"என் குடும்பம்போல உலகில் உண்டா என்று நானும்தான் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேன்!" என்று முணு முணுத்தாள் மாயா.

அப்படியே உடைந்து போய் ஆற்றுவார் தேற்றுவார் இல்லாமல் விக்கி விக்கி அழலானாள்.

அழுததால் ஜுரம் விடவே மேலும் பத்து நாள் கழித்து குழந்தை பிறந்த இருபதாம் நாள் மாலையில் மாயாவை ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்தார்கள்.

முன்பு தங்கியிருந்த லாட்ஜுக்கே சென்றாள் மாயா.

பல்லை இளித்தபடி ஏதோ விசாரித்த லாட்ஜ் முதலாளியிடம் தலையசைத்துவிட்டு அறைக்குள் சென்றாள்.

குழந்தையைக் கட்டிலின் ஓரமாகக் கிடத்திவிட்டு மறு ஓரமாகக் குழப்பத்துடன் அமர்ந்தாள் மாயா.

அன்று வரை சுதாகரின் பணத்தில் வாழ்க்கைச் செலவு செய்ததில் மாயாவுக்குத் தப்பு ஏதும் தெரியவில்லை.

எப்படியும் ஒரு நாள் தந்தையைக் கண்டு பிடித்துவிடலாம். குடும்பத்தோடு இணையும் வரையிலான அந்த இடைக் காலத்தில் அதுவும் முக்கியமாகப் பெற்றவரைத்தேடும் காலத்தில் செலவு பண்ண அந்தக் குடும்பத்தில் இருந்து அவளைப் பிரித்ததன் தண்டனையாக அவனது பணம் செலவழிவதில் தவறு இல்லை என்று மாயா தீர்மானித் திருந்தாள்.

ஆனால் அந்தக் குடும்பம் அவளை முழுமையாக உதறி விட்ட பிறகு அவன் பணத்தில் வாழ்வது ஈனமாகப் பட்டது.

முதலில் ஒரு வேலை பார்த்துக்கொண்டு அவன் பணத்தில் இதுவரை செலவானதை எல்லாம் கட்டாயமாகத் திருப்பி தந்துவிட வேண்டும் என்று நினைத்தாள்.

ஆனால் வேலை தேட அவளுக்கு என்ன குவாலிஃபி கேஷன் இருக்கிறது.

பழைய மாயாவாக இருந்திருந்தால், ஏதோ ஒரு வேலை எப்படியாவது கிடைக்கும் என்ற நம்பிக்கை அவளுக்குத் திடமாக இருந்திருக்கும். அலட்சியமாகத் தலையைக் குலுக்கி விட்டு வேலை தேடவும் அந்தக் கணமே முயன்றிருப்பாள்.

ஆனால் அடிமேல் அடி விழுந்து நைந்து போயிருந்த இந்த மாயாவின் நெஞ்சில் நம்பிக்கையின் சாயல் கூடத் தோன்ற மறுத்தது.

அதோடு அந்தக் குழந்தை!

அதை என்ன செய்வது?

அதை வைத்துக்கொண்டு என்ன வேலை செய்ய முடியும்?

அன்றொரு நாள் குப்பைத் தொட்டியில் குழந்தையைக் கொன்று போட்டவளின் நினைவு மாயாவுக்குத் திடீரென்று வந்தது.

அந்தப் பெண்ணுக்கும் இந்த மாதிரிதான் துன்பங்கள் நேர்ந்தனவோ?

ஆனால் ஒரு பச்சைக் குழந்தையை எப்படிக் கொல்ல முடிந்தது என்று எண்ணும்போதே அன்று நடந்தது எல்லாம் அவளுக்கு நினைவில் தோன்றியது.

முகம் அறியாத ஒருத்தியை, "இன்னசென்ட்விக்டிம்" என்ற தந்தைக்குத் தனது சொந்த மகளுக்கு அப்படியும் நேர்ந்திருக்கலாமோ என்ற சந்தேகம் கூட வரவில்லையே!

ஏன்?

ஏன் இப்படி?

ஏன் இந்தத் துன்பங்கள் எல்லாம் அவளுக்கு நேர்ந்தன?

அவள் செய்த எந்தத் தப்புக்காக இந்தத் தண்டனை?

ஒவ்வொன்றாக நினைக்க நினைக்க கண்ணைக் கரித்துக் கொண்டு அழுகை வந்தது அவளுக்கு.

* * *

அந்த லாட்ஜின் உரிமையாளர் மாயாவைக் கணித்திருந்த விதமே வேறு.

ஏதோ நல்ல குடும்பத்துப் பெண்.

தகாதவனை நம்பி அவனோடு ஓடி வந்தவள்.

கருவுற்றதும் அவன் ஓடிவிட்டான்.

இவள் தினமும் அவனைத் தேடுகிறாள்.

இப்போது பிள்ளையும் பிறந்து உள்ளது.

எனவே அவனைப் பற்றிய நம்பிக்கையை விட்டிருப்பாள்.

சின்ன வயதுக்காரி. அழகானவள்.

இத்தனையும் கூட்டிப் பார்த்தபோது அவருக்கு ஓர் அருமையான ஐடியா பிறந்தது.

பிறந்த மாத்திரத்தில் செயலாற்ற எண்ணிப் பொறுப்பை உதவியாளரிடம் ஒப்படைத்துவிட்டு மாயாவின் அறையை நாடிச் சென்றார்.

கதவைத் தட்டிவிட்டு உள்ளே செல்லும்போது அவசரத்தில் துடைக்கப்பட்டிருந்த அவளது அழுத கண்கள் அவருக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டின.

அவரைக் கண்டதும் சற்றுத் திகைத்து, “வாடகை அட்வான்ஸ் இருக்குமே!” என்றாள் மாயா.

“அய்யோ, அதுக்காக வரலையம்மா. சின்னப் பொண்ணா இருக்கிறியே, வழியைச் சொல்லலாம்னு வந்தேம்மா.”

ஒருவேளை இவரே ஏதாவது வேலை தரக்கூடுமோ என்ற எண்ணத்தில், “என்ன?” என்று விசாரித்தாள் மாயா.

அவர் வசதியாக நாற்காலியில் உட்கார்ந்துகொண்டார்.

“யம்மா, இத்தனை நாளு நீ அலைஞ்சது எனக்குத் தெரியும். ஏதோ, அதோகதியா வுட்டுட்டுப் போனவன் போயே போயிட்டான். ஆனா அதையே நினைச்சு நீ கரையப்படாது பாரு. அதோட கையிலே குழந்தை வேறே. அதையும் காப்பாத்தணும். தாயாச்சே. சும்மா தின்னுகிட்டே இருந்தாக்கா கையிலே இருக்கிறது எத்தனை காலம் வரும்? ஏதோ நமக்குன்னு ஒரு வழியைத் தேடிக்கிடணுமில்லே? வெளியே வேலை கெடைக்கிறது ரொம்ப கஷ்டம். கிடைச்சாலும் என்ன வரும்?”

“ம்...?” என்று புரியாமல் கேட்டாள்.

“ஆமாம்மா. நமக்குத் தங்கறதுக்கு மட்டும்னு இன்னொரு லாட்ஜ் இருக்கு. அங்கே எல்லாம் ‘டீசண்டு பீப்பி’ளுங்கதான் வருவாங்க. உன்ன மாதிரி படிச்ச சிறு வயசுப் பொண்ணுங்க

கம்பெனி குடுத்தா ரொம்ப புடிக்கும். சொம்மா அள்ளி அள்ளித் தருவானுங்க ஏதோ ஒரு மாதம் உடம்பைத் தேத்திட்டியானா அப்புறம் மனங் கொண்ட மட்டும் சம்பாதிக்கலாம். என்னமோ, உன் பிள்ளையை எப்படிக் காப்பாத்துவியோ அப்படின்னு யோசிச்சு... நல்லா யோசிச்சு மெல்லப் பதில் சொல்லு... அப்ப நான் வரட்டா?" என்று அவள் முகம் மாறிய விதத்தில் பேச்சை முடிக்காமலேயே வெளியேறினார் அவர்.

அவர் வெளியே சென்றது கூடத் தெரியாமல் பிரமித்து நின்றாள் மாயா.

அடி! அடி! அடி!

அடியம்மா, எவ்வளவு பெரிய அடி.

துள்ளல் துடிப்பு ஒன்றுக்கும் இடமில்லாதபடி செமத்தியான அடி!

கண்கள் இருண்டன.

கால்கள் தடுமாறின.

காதுகளில் பேரோசை, செக்கு செக்கு செக்கு என்று யாரோ திருப்பித் திருப்பித் திருப்பி...

நானா? நானேயா? மாட்டேன். நிச்சயமாக மாட்டேன். அதைவிடச் சாவு மேல். ஆமாம் சாவு. சாவேதான், செத்து விட்டால் நெஞ்சைக் கசக்கும் இந்த வேதனை இராதல்லவா? கண்ணீரைக் கொட்ட'வைக்கும் ஆயிரம் ஆயிரம் நினைவுகள் தோன்றாதல்லவா?

தன் போக்கில் கண்ணைத் துடைக்கக் கைகள் முயன்ற போதுதான் கண்ணீரே வரவில்லை என்று புரிந்தது.

இம்மெனுமுன் வரும் கண்ணீர் இந்த இடிக்கு வராதது ஆச்சரியம்தான்.

கண்ணீரை மீறின துயரமா?

அல்லது சாவு நெருங்குகையில் ஒவ்வோர் உறுப்பாகச் செயலிழந்து போகுமே. முதலாவதாகக் கண்ணீர்ச் சுரப்பி செயல் மரத்துப் போயிற்றா?

ஏதேதோ எண்ணங்கள் காரண காரியமற்று நெஞ்சில் தோன்றி மறைந்தன. மறையாது நின்றது ஒரு வார்த்தை. அதுதான் சாவு.

சந்தர்ப்பம் தெரியாமல் குழந்தை சிணுங்கியது.

அது ஒன்று இருப்பது அப்போதுதான் நினைவில் எட்டச் சிசுவின் அருகே சென்றாள்.

"நீயும் உன் தகப்பன் போல எத்தனை செக்குகளை உருவாக்குவாயோ. ஆனால் அதற்கு நான் விட மாட்டேன். முதலில் உன்னை..." என்று குனிந்து பிள்ளையைத் தூக்கினாள்.

சிறு யோசனையுடன் மீண்டும் கிடத்தினாள். "இரு. இருட்டும் வரை இரு. பிறகு நம் இருவருக்குமே விடுதலை. உனக்கு இந்த உலகத்திலிருந்து விடுதலை. எனக்கு இந்தத் துன்பங்களில் இருந்து விடுதலை!" என்று முணுமுணுத்தாள்.

கண்ணதாசன் எழுதிய 'துன்பங்களிலிருந்து விடுதலை' புத்தகம் சம்பந்தம் இல்லாமல் நினைவு வந்தது.

இங்கே விதி யார் மூளையில் இருந்து விளையாடியது?

மணி எட்டரை.

அந்த லாட்ஜின் எதிர்ச் சாலையில் இருந்து லாட்ஜைப் பராக்குப் பார்ப்பது போலக் கண்காணித்துக் கொண்டிருந்த ஒரு மனிதனுக்குக் கொட்டாவி வந்தது. 'ஒரு த்ரில் இல்லாத போரடித்த வேலை' என்று சொடக்குப் போட்டான்.

எழுந்து நெட்டி முறித்துவிட்டு மூலைக் கடையில் டீ குடித்து வரச் சென்றான், "அந்தப் பெண்தான் இரவில் வெளியே வருவதே இல்லையே."

ஆனால் அவன் டீ அருந்திவிட்டு வருமுன் குழந்தையுடன் மாயா வெளியேறிப் போய்விட்டதை அவன் அறியான்.

மாயா கடலை அடைந்தபோது ஒன்பது மணிக்கு மேல் ஆகி விட்டது.

ஒருவரும் கவனிக்கவில்லை என்பதை நிச்சயம் செய்து கொண்டு கடலுக்குள் இறங்கினாள்.

## 17

கடல் நீரின் சிலுசிலுப்பையோ காற்றின் குளிர்ச்சியையோ எதையும் உணராமல் நீரினுள் முன்னேறினாள் மாயா.

தொடையளவுக்குத் தண்ணீர் வந்ததும் குழந்தையை வீசிவிட எண்ணிக் கைகளைத் தூக்கினாள்.

"க்ளுக்..."

கனவில் வந்த கடவுள் குழந்தைக்குத் தாமரைப்பூ விளையாட்டுக் காட்டினாரோ! குழந்தை கிளுக்கிச் சிரித்தது.

மாயாவின் நெஞ்சுக்குள் சிலீர் என்றது. தூக்கிய கைகள் இயங்க மறுத்தன.

மாயாவா? அவளா? அவளேயா?

மாயாவேதானா ஒரு பச்சைக் குழந்தையைக் கொல்லப் போகிறாள்?

அவளது உடம்பெல்லாம் ஒருகணம் குலுங்கியது.

மெல்லத் திரும்பி நடந்து கடலை விட்டு வெளியேறிக் கரையின் ஓரமாகவே பிள்ளையைக் கையில் ஏந்தியபடி அமர்ந்தாள்.

மீண்டும் திக்கு, திசை தெரியாத பிரமிப்பு.

"மாயா!" என்ற வியப்புக் குரல் அவளது மோனத்தைக் கலைத்தது. மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

பிரேமி!

"மாயா! எங்கேடி இருந்தாய்? என்னடி ஆயிற்று? இது.... மாயா நீ எப்படி... சரி. போகட்டும். எப்படியோ திரும்பி உயிரோடு வந்தாயே, அதுவே பெரிது!" என்று படபடவென்று வேகமாகப் பேசியபடியே தோழியின் அருகே தொப்பென அமர்ந்து அவள் கையைப் பற்றினாள் பிரேமி.

உடனேயே, "டீ, என்ன இது ஈரம்?" என்று கூவினாள்.

"ஈரமா? எங்கே? ஓ! இதைச் சொல்லுகிறாயா? இதைக் கொன்று விட்டு நானும் செத்துவிட வேண்டும் என்று கடலில் இறங்கினேன். அப்போது நனைந்து விட்டது." ஏதோ சர்வ சாதாரணம் போல உணர்ச்சியற்ற குரலில் இயந்திரம் போலச் சொன்னாள் மாயா.

ஆனால் பிரேமி அதிர்ந்து போனாள். "மாயா! என்னடி, ஸில்லி."

முறுவலிக்க முயன்றாற்போல மாயாவின் இதழ்கள் நெளிந்தன. ஒரு பெருமூச்சுடன், "ஆனால் முடியலைடி. எப்படி வந்தாலும் கடவுள் உருவாக்கிய உயிர், சுலபமாக அழித்து விடலாம். ஆனால்... அதனால் குழந்தையை அவனிடம் ஒப்பு வித்து விட்டு மீண்டும் முயற்சி பண்ணலாம் என்று..." ஒப்பு விப்பது போலச் சொல்லிக் கொண்டே போன மாயாவின் பார்வை ஐந்தாறு அடி தூரத்தில் நின்ற இளைஞனின் மேல் விழுந்தது.

குரலை வெகுவாகத் தணித்து, "இவர்... உன் கணவரா பிரேமி? நீ வேண்டுமானால் போகிறாயா? என் தோழி என்று அவருக்குத் தெரிந்தால் உன்னையே மட்டமாக நினைப்பார்

அவர் என்று அங்கிள் சொன்னார்…" என்றாள். அதே உணர்ச்சியற்ற குரலில்.

"அப்பாவா? எப்போடி?" என்று ஆத்திரத்துடன் வினவினாள் மாயாவின் தோழி.

"நாலைந்து மாசம் இருக்கும். அப்பாவின் விலாசத்துக்காக அவரிடம் கேட்டேன். ஆனால் அட்ரஸ் தரலை. தரவே மாட்டேன் என்றுசொல்லிவிட்டார்," என்றாள் மாயா முகம் வாட

"சும்மாவே நொந்து வந்தவளை இன்னமும் துன்புறுத்தினாராக்கும்!" என்று சீறினாள் பிரேமி.

தன்னுணர்வு பெற்றதுபோல மாயாவின் விழிகள் அகன்றன. "நீ… நீ என்னை நம்புகிறாயா, பிரேமி?" என்றாள் குரல் நடுங்க.

"நிச்சயமாய். காட்டினால்கூடக் காப்பி அடிக்காதவள் நீ. உன்னை நம்பாமல் இருக்க முடியுமா?"

மாயாவின் இமைகள் நனைந்தன "ரொம்பவும் நன்றி பிரேமி! ரகு காறித் துப்பினார். அங்கிள் திட்டினார். அப்பாவும் பாபுவும் நான் செத்தால் நல்லது என்கிறார்கள். நீ… நீ… ஒருத்திதான்…" பேச முடியாமல் அவளது உதடுகள் நடுங்கின.

ஆறுதலாகத் தோழியின் தோளை அணைத்துக் கொண்டு கணவனை நிமிர்ந்து பார்த்தாள் பிரேமி.

புரிந்தவனாக அவன் தலையசைத்து விட்டுச் சற்றுத் தூரமாகச் சென்று அமர்ந்தான்.

தன்னை அடக்கிக் கொள்ள மாயா பாடுபடுவதைப் பிரேமி உணர்ந்தாள். பேச்சை மாற்ற, "ரொம்ப அழகாக இருக்கிறதடி, உன் குழந்தை!" என்று குழந்தையைத் தூக்கினாள்.

மாயாவின் உடல் வெளிப்படையாகப் பார்க்கவே குலுங்கவும், "என்னடி?" என்று புரியாமல் வினவினாள்.

"என் இயலாமையால் என்மேல் சுமத்தப்பட்ட ஒரு சுமை என் குழந்தையாகி விடுமோ, பிரேமி?"

பதில் கூற முடியாமல் அவள் தயங்கியபோது மாயாவே தொடர்ந்தாள். "அதைத் தொடாதே பிரேமி. தந்துவிடு. அவன் என்னை அவமானப்படுத்திய போதெல்லாம் நான் தூய்மை இழந்ததாக ஒப்புக் கொள்ளவே இல்லை. எந்த விதத்திலும் நான் மாசுபட்டுப் போனதாக எண்ணவில்லை.

"ஆனால், 'மாசைக் குழந்தையாகவே வளர வைத்து விட்டேனே!' என்றான்.."

"மாயா! ஐயோடி!"

"ஆமாம், அப்படித்தான் சொன்னான். இது... இது ஒரு மாசு பிரேமி. இதை நீ தொட்டால் எனக்குப் பிடிக்கவில்லை."

"சேச்சே! என்ன பேச்சடி இது? யாரோ ஏதோ உளறினால் இந்தப் பச்சைக் குழந்தை என்ன செய்யும்?"

"இது அவனுடையது."

"ஏய், என்னடிது? பத்து மாதம் உன் சதையும் ரத்தமும் தானே இதுவாக உருவாகியிருக்கிறது. தாய்மை என்பது..."

மீண்டும் மாயா அதிர்ந்தாள். "பிரேமி, என் இசைவு இல்லாமல், என் விருப்பம் இல்லாமல், என் வெறுப்பில், என் பயத்தில், என் கலக்கத்தில் - பிரேமி! வேண்டாம், விட்டுவிடு. இதைப் பற்றிப் பேசாதே. ஐயோம்மா..." மாயாவின் உடம்பெல்லாம் குளிர் சுரம் கண்டவள் போல நடுங்கத் தொடங்கியது.

"ஏய், என்னடி மாயா. இதோ பார் மாயூ..." என்று தோழியை அணைத்து அவள் நடுக்கத்தை அடக்க முயன்றாள். பிரேமி.

கண்ணீருடன், "உனக்கு மாயூ நினைவிருக்கிறது. ஆனால் அப்பாவுக்கு மறந்து போயிற்றேடி. என்ன மாயா என்று கூடக் கேட்கவில்லையே!" என்று விம்மினாள் மாயா.

திகைத்தவளாய்ச் சற்று நேரம் பேசாதிருந்தாள் பிரேமி.

மாயாவின் விம்மலும் நடுக்கமும் சற்று சமனப்பட்டதும், "வயதானால் புத்தி அதிகம் ஆகும் என்று நினைத்திருந்தேன். நம் பெரியவர்கள் வேறு சொல்கிறார்கள். மாயா! இதோ பார். நடந்தது எல்லாம் என்னிடம் சொல்லு. இனி என்ன செய்யலாம் என்று பார்ப்போம்," என்றாள்.

"செய்வதற்கு ஒன்றுமே இல்லையடி," என்றாள் மாயா நிராசையுடன்.

"பரவாயில்லை. ஒருவருக்கு இருவராய் யோசித்துப் பார்க்கலாம். முதலில் சொல்லு. எதைச்செய்வதானாலும் முழு விவரமும் அறிந்து செய்யவேண்டும். அரைகுறை ஞானத்தோடு நம் அப்பாமார் செய்தாற்போல நாமும் செய்யக்கூடாது," என்று மாயாவை வற்புறுத்தி எல்லா விஷயங்களையும் அறிந்து கொண்டாள் பிரேமி.

"ரகுவிடம் பதிலுக்கு உமிழ்வதற்கென்ன?" என்று சீறினாள்.

"இந்த அப்பாவின் புத்தி இப்படிப் போகிறதே!" என்று வருந்தினாள்.

'சத்தியம்' என்று சொன்ன பின்னரும் மாயாவின் தந்தை நம்பாததை அறிந்ததும் வியப்புடன் வேதனையும் கொண்டாள்.

மாயா சொல்லாமல் விட்டதையெல்லாம் ஊகத்தில் கண்டு உள்ளூர நொந்தாள்.

எல்லாவற்றுக்கும் காரணமான சுதாகரை நினைத்தாலே அவளுக்கு ஆத்திரம் பொங்கியது. "ராஸ்கல், உன்னை கிட்நாப் செய்ததும் செய்துவிட்டு அங்கே கூடச் சேர்ந்து தேடியது என்ன? உன் அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு, வீட்டுக்கும் ஆஸ்பத்திரிக்குமாக அலைந்தது என்ன? கிடைத்தாளா, கிடைத்தாளா என்று ரகுப்பாவுக்கு எழுதியது என்ன? சரியான... சரியான 'கட்த்ரோட்!' இவனை எல்லாம்

கோர்ட்டுக்கு இழுத்துக் கதறடிக்க வேண்டும்," என்றாள் சினத்துடன்.

"நான்கூட அப்படிப் பயமுறுத்தினேன், பிரேமி! ஆனால் என் வக்கீல் கேட்கும் கேள்விகளுக்கு உன்னால் பதில் சொல்ல முடியுமா என்று... அதான். சொன்னேனேடி. ஒன்றும் பயன் இல்லை," என்றாள் மாயா விரக்தியாக.

அவளால் பிரேமியின் பேச்சில் முழுக் கவனம் வைக்கவும் முடியவில்லை.

அவள் சோர்வதைக் கண்ட பிரேமி விரைவில் ஒரு முடிவுக்கு வந்தாள். "மாயா! நான் சொன்னதைக் கேள். நாங்கள் இங்கே என் மாமியார் வகை உறவினர் வீட்டில் இருக்கிறோம். இரவில் உன்னை அங்கே கூட்டிச் செல்ல முடியாது. அதனால் பல்லைக் கடித்துக்கொண்டு இன்று இரவு மட்டும் நீ அந்த லாட்ஜிலேயே இரு.

"நான் காலையில் முதல் காரியமாக அப்பாவுக்கு 'ட்ரங்க்கால்' போட்டு அங்கிளின் விலாசம் கேட்கிறேன். பிறகு நாம் மூவருமாக அங்கிளிடம் போகலாம்... ஓகோ, ஆன்ட்டிக்கு உடம்பு சரியில்லை என்றாயில்லையா? முதலில் அங்கே நான் போகிறேன். நிலைமையைப் பார்த்து அங்கிளிடம் பேசிவிட்டு உன்னிடம் வந்து அழைத்துப் போகிறேன்.

"நீ மட்டும் இந்தப் பிள்ளையைக் கொல்வது, பிறகு தற்கொலை செய்வது, எல்லாவற்றையும் முழுக்க மறந்து விட வேண்டும். ஓகே?

"பார்த்துக் கொண்டே இரு. நாளைக்கு நான் அங்கிளிடம் பேசியதும் எல்லாம் சரியாகப் போகும். தைரியமாக இரு.

"உன் கெட்ட காலம் எல்லாம் இன்றோடு முடிந்து போயிற்று. அல்லது நாளை டெல்லிக்குக் கிளம்புமுன் ஒரு தரம் பீச்சில் நடக்க வேண்டும் என்ற ஆசை எனக்குத் திடீர் என்று வருமா? அப்படி ஆசை வந்ததால்தானே நாம் இருவரும் சந்திக்க

முடிந்தது? அதனால் இனிக் கவலைப்படும் தேவையே உனக்கு இல்லை.

"வா, இப்போது போகலாம். பச்சை உடம்பு. குளிர் காற்று. அடேடே! ஈரம் வேறு. வா வா வா! நீ சோர்ந்து வேறே போயிருக்கிறாய். முதலில் உன் ரூமில் படுத்து நீ நன்றாகத் தூங்க வேண்டும். வா." என்று மாயாவை எழுப்பி அழைத்துச் சென்றாள்.

பிரேமியும் அவள் கணவனுமாக மாயாவை ஒரு டாக்சியில் கொண்டுவந்து லாட்ஜில் விட்டார்கள்.

லாட்ஜில் இருந்த பெண் டாக்சியில் வந்து இறங்குவதைக் காணவும் எதிர்ச் சாரியில் நின்றவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

மீண்டும் ஒருதரம் மாயாவுக்குத் தைரியம் சொல்லி விட்டுப் பிரேமி கிளம்பினாள்.

கிளம்பும்போது நினைவு வந்தவளாக, "மாயூ! இதுதான் என் கணவரடி!" என்று அறிமுகம் செய்வித்தாள்.

"இதுவா? என்னடி அவரை அஃறிணை ஆக்கி விட்டாய். ஆமாம், அவர் 'இது' வானால் நீ 'எது' டி!" என்று மாயாவின் கேலியை எதிர்பார்த்து ஏமாந்தாள்.

சிரமத்துடன் முறுவலிக்க முயன்றபடி, கரம் குவித்த தோழியைக் கண்டதும், "மாயூ, நீ மாறிவிட்டாயே! என்று" கண்ணீரும் கோபமுமாகப் பொருமினாள். "நாளைக்குப் பார். இந்த அப்பாவுக்கும் அங்கிளுக்கும் நான் கொடுக்கிற டோஸில் இரண்டு பேருக்குமே இருந்த மந்த புத்தி போய்விடும். அந்தக் காலத்தில் அறிவுக்காகவே அப்பா, தாத்தா எல்லாரையும் பெரிய பொக்கிஷம் என்றார்கள். இப்போதானால் அதெல்லாம் அடியோடு இல்லை. பிள்ளைகள் சொல்லித் தெரிய வேண்டியிருக்கிறது. கண் முன்னே வளர்ந்தவளை நம்பத் தெரியவேண்டாம்? இதற்கெல்லாம் எத்தனை பிறவி எடுத்துக்

கஷ்டப்படப் போகிறார்களோ?" என்று ஆத்திரத்துடன் அடுக்கினாள்.

தன் சோர்வையும் மீறி உதடுகளில் அரும்பிய வெகுலேசான புன்னகையுடன், "நீ மாறவே இல்லையடி!" என்று களைப்புடன் சுவரில் சாய்ந்து நின்றாள் மாயா.

அதைக் கண்டு பிரேமியின் கணவன். "வா, பிரேமி! உன் தோழி சோர்வது தெரியவில்லை? படுத்து உறங்கட்டும். நாம் நாளை எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு வரலாம்," என்று மனைவியை அழைத்துச் சென்றன்.

மனமில்லாமல் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே உடன் சென்றாள் பிரேமி.

உடல் மிகவும் அயர்ந்திருந்த போதும் மாயாவால் உறங்க முடியவில்லை.

பிரேமியின் பேச்சோ, அவளது திட்டங்களோ எதுவும் அவள் மனதில் பதியவில்லை.

தன் போக்கில் அவளது சிந்தனைகள் எங்கெங்கோ ஓடின. வெகுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தவள்போல ஒரு கூடையில் சில துணிகளை எடுத்து வைத்தாள்.

குழந்தையுடன் கூடையையும். தூக்கிக் கொண்டு கிளம்பிச் சென்றாள்.

விடியவில்லை என்பது கூட அவள் மனதில்படவில்லை.

செய்ய முடிவெடுத்த காரியம் மட்டுமே நினைவில் இருக்க ஒரு டாக்ஸி பிடித்துக் கொண்டு சென்ட்ரலுக்குப் போனாள்.

"கோவை செல்ல அடுத்த ரயில் எப்போது?" என்று விசாரித்தாள்.

மூன்று மணி ரயிலில் கோவைக்கு டிக்கெட் வாங்கினாள்.

பாட்டரியில் இயங்கும் 'வாக்கிடாக்கி' பொம்மை போல இதையெல்லாம் செய்தவள் தன்னை ஒருவன் பின்தொடர்ந்து வந்ததையோ கண்காணித்ததையோ அறிய வில்லை.

அதே பொம்மைத் தன்மையுடன்தான் குழந்தையின் தேவைகளையும் கவனித்தாள்.

கோவையில் இறங்கி அவன் - சுதாகர் - சொல்லியிருந்தபடி பஸ்ஸில் ஏறினாள்.

அவன் சொல்லியிருந்தபடியே இறங்கினாள்.

இருள் பரவி வரும் வேளையில் தன்னந்தனியாகக் கைக்குழந்தையுடன் காட்டில் இறங்குகிறாளே என்பது போல அந்த பஸ்ஸின் கண்டக்டர் பார்த்த பார்வையையும் அவள் உணர்ந்து கொள்ளவில்லை.

பாதையில் மெல்ல அடியெடுத்து வைத்து அவள் நடக்கத் தொடங்கினாள்.

நாலு எட்டு எடுத்து வைக்கும்முன் அவள் அருகே வந்து நின்றது அந்தக் கார்.

சரிந்து அவள் புறமாக இருந்த கதவைத் திறந்து விட்டு, "ஏறிக் கொள், மாயா!" என்றான் சுதாகர்.

அந்த அரை வெளிச்சத்திலும் அவன் கண்கள் பளபளத்தன.

# 18

ஒரு பேச்சும் இல்லாமல் காரில் ஏறி அமர்ந்தாள் மாயா.

பிறகும் பேசாமல் ஏதோ சீட்டில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

காரை வீட்டின்முன் நிறுத்தி விட்டு அவள் கையில் இருந்த கூடையை வாங்கி இரண்டு எட்டில் சென்று ஹாலில் வைத்து விட்டுத் திரும்பினான் சுதாகர்.

மெல்லப் படி ஏறிக் கொண்டு இருந்த மாயாவிடம் குழந்தையை வாங்கிக் கொள்ளக் கையை நீட்டினான்.

நிமிர்ந்தும் பாராமல், "இருக்கட்டும்," என்று குழந்தையைத் தானே சுமந்து வந்து ஒரு சோபாவிலே கிடத்தினாள் அவள்.

அதன் பிறகு மல்ல நிமிர்ந்து சுதாகருடைய முகத்தை நேராக நோக்கினாள்.

அவனது முறுவல் மெல்ல மறைந்து விழிகள் கூர்மை பெற்றன.

ஒரு சிறு அமைதிக்குப் பின், "என்ன சாப்பிடுகிறாய், மாயா? பிரெட், பழங்கள், ஸ்வீட், சாப்பாடு எல்லாம் இருக்கிறது," என்று நிறுத்திக் குழந்தையிடம் பார்வையைச் செலுத்தினான். பிறகு தோளைக் குலுக்கி, " நீ எதெல்லாம் சாப்பிடலாம் என்று எனக்குத் தெரியாது. அதனால் எல்லாமே தயார் பண்ணச் சொன்னேன்," என்றான் மீண்டும் அரும்பிய முறுவலுடன்.

அவன் பேச்சு மனதில் நெருட, "நான் வருவேன் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள் மாயா.

"கோபித்துக் கொள்ளாவிட்டால் சொல்லுகிறேன். ஓர் ஏஜென்ஸி மூலம் உனக்கு ஒரு 'ஷேடோ' போட்டிருந்தேன். மாதா மாதம் உன் அறையில் பணம் போட்டது அந்த ஆள் மூலமாகத்தான். இதோ, இவன் பிறந்ததும் அப்படித்தான் எனக்குத் தெரிந்தது. இப்போதும்...."

"ஓ!" பெருமூச்சுடன் திரும்பினாள் மாயா.

"என்ன சாப்பிடுகிறாய், பேபி?"

"வெறும் தண்ணீர் வேண்டும்."

உள்ளே குரல் கொடுத்தான் சுதாகர்.

ஆப்பிள் பழச்சாறுடன் வந்த ராமனின் விழிகள் ஆர்வமும் குறுகுறுப்புமாகக் குழந்தையிடம் படிந்து, பதிந்து மீண்டு சென்றன.

"குடி, மாயா!"

வெறிச்சிட்ட பார்வையுடன் தலையசைத்தாள் மாயா. "தண்ணீர் போதும்," என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டுக் குழந்தையின் அருகில் சோர்வுடன் அமர்ந்தாள்.

அவள் பேச்சைக் காதில் வாங்காமல், "அல்லது குளித்துவிட்டுச் சாப்பிடுகிறாயா, மாயா? இரவு நெருங்குகிறதே என்று பார்த்தேன். ஆனால் நல்ல சுடுநீர் 'டப்'பில் நிரப்பிச் குளித்துவிட்டு லைட்டாகச் சாப்பிட்டுவிட்டு நன்றாகத் தூங்கு." என்றான்.

"நான் இங்கே தங்க வரவில்லை, சுதாகர்," என்றாள் மாயா, மெல்லிய குரலில் தெளிவாக.

சட்டென இவன் உதடுகள் அழுத்தம் பெற்றன. "பின்னே?"

குழந்தையை ஒரு தலையசைப்பினால் சுட்டிக் காட்டினாள் மாயா. "இது உன்னுடையது. முதலில் இதைக் கொன்றுவிட்டுச் சாவது என்று நினைத்தேன் ஆனால்..." என்று மீண்டும் பெருமூச்செறிந்தாள்.

"முடிந்திராது!" என்றான் அவன் இறுமாப்புடன் தலையை நிமிர்த்தி.

'இவனுக்கு எப்படித் தெரியும்?' என்பது போல அவனைப் பார்த்தாள் மாயா.

தலையைச் சுமப்பதுகூட மாயாவுக்குப் பாரமாகத் தோன்றவே சோபாவின் பின்னே தலையைச் சாய்த்து வைத்துக் கொண்டாள்.

"தாய்ப் பாசம் தடுத்திருக்கும்!" என்றான் அவன் வெற்றிக் குரலில்.

லேசாகச் சிரித்தாள் மாயா. "தாயா? நானா? ச்சு... சுதா இந்தக் குழந்தையை உன்னிடம் ஒப்படைத்து விட்டுப் போகத்தான் வந்தேன்... முதலில் ஓர் அநாதை ஆசிரமத்தில் விட்டுவிடலாம் என்றுதான் நினைத்தேன். ஆனால் எப்படி, எங்கே என்றெல்லாம் ஒன்றும் தெரியவில்லை. அதனால்தான் உன்னிடமே கொடுத்து விடலாம் என்று வந்தேன்." விட்டுவிட்டுச் சிரமத்துடன் பேசியவள் மெல்ல நிமிர்ந்தாள். "ஒரு விஷயம் சுதாகர். இந்தக் குழந்தையை எப்படி வளர்த்தாலும் சரிதான். ஆனால் உன்னைப் போல் மட்டும் வேண்டாம்... ஏனென்றால்... ஏனென்றால் ஒரு பெண்ணின் வாழ்வை அழிப்பது மகா பாவம் சுதாகர்!" என்று மீண்டும் சோர்ந்தாள்.

அவள் முகத்திலேயே பார்வையை நிறுத்தி, "அழிவானேன்?" என்றான், அவன் - மென்மையாக.

அவன் குறிப்பை அவள் புரிந்து கொள்ளவில்லை.

வெறித்த விழிகளை மீண்டும் அவனிடம் திருப்பினாள். "நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் நீ சொன்னதுதான் நடந்தது. யாரும்...யாரும் என்னை நம்பவில்லை. ரகு... அங்கிள்...அப்பா...தம்பி...அவர்களில் யாருக்குமே என்னிடம் நம்பிக்கை இல்லை... ஊகூம், பிரேமி என்னை நம்பினாளே. ஹூம். நாங்கள் எல்லாரும் அவளை மாமியார் என்று கேலி

செய்வோம். கடைசியில் நான் தப்பு செய்திருக்க மாட்டேன் என்பதை அவள் ஒருத்திதான் நம்பினாள்... அவளாவது நம்பினாளே. ஆனால் அப்பா...? அப்பாவால் எப்படி என்னிடம் நம்பிக்கை இழக்க முடிந்தது? அணுவளவும் என்னை நம்பவில்லையே!

"உன் திமிரை அடக்குவேன் என்றாய். அது திமிர் என்று நான் இன்னமும் எண்ணவில்லைதான். ஆனால் எல்லாம்... எல்....லாம் அடங்கி ஒடுங்கி அழிந்தே போயிற்று. என் ஆயிரம் ஆயிரம் ஆசைகளும் அழிந்து போயின. இனி....

"இனி உயிர் மட்டும்தான் மிச்சம்.. அதுவும் விரைவில் போய்விடும். விரைவில்..."

மெல்ல மெல்லத் தேய்ந்த அவள் குரல் ஒலி அடங்கிப் போயிற்று.

மீண்டும் பெருமூச்சுடன் நிமிர்ந்தாள்.

சுதாகரை இரக்கமாகப் பார்த்தாள்.

"இப்படி எல்லாம் அழிப்பது ரொம்பப் பெரிய பாவம், சுதாகர்! இதற்கெல்லாம் கடவுள் என்ன தண்டனை வைத்திருக்கிறாரோ! நீ என்ன பாடுபடப் போகிறாயோ என்று பாவமாகக் கூட இருக்கிறது.

"தப்புக்குத் தீர்வு இரண்டு விதம், சுதாகர்! ஒன்று பிராயச்சித்தம். அதைச் செய்யாவிட்டால் கிடைப்பது தண்டனை. கடவுள் விட்டு விடுவார் என்று எண்ணாதே. அவர் ரொம்பக் கறார் ஆசாமி. எத்தனை ஜென்மம் எடுத்தாலும் விடாமல் வாங்கி விடுகிறார். ஏதாவது பிராயச்சித்தம் செய்து விடு சுதாகர்! இனியேனும் நல்லவனாக இருக்கப் பார்."

ஒரு பிடிவாதத்துடன் பேசிக் கொண்டு வந்த மாயாவுக்கு மூச்சு வாங்கிற்று. ஆயினும் விடாமல், "சின்ன வயதில் ரம்பையின் காதல் கதையைக் கேட்ட போது எனக்கு ஒரே சிரிப்பாக வந்தது. ஆனால்.. ஆனால் இப்போது தெரிகிறது

சாணிமலையும்... தண்டனையும்...” என்று சோர்ந்து போய் முணுமுணுப்பில் முடித்தாள்.

அவள் பிடிவாதத்துடன பேசுவதை அதுவரை கையைக் கட்டிக் கொண்டு கேட்ட சுதாகர், முறுவலை அடக்க முயன்றபடி, “ஓகே! பேபி. இனி நல்லவனாக மிக மிக நல்லவனாகவே இருக்கின்றேன். இனி எல்லாம் உன்னிடம் கேட்டு, உன் சம்மதம் பெற்ற பிறகே செய்கிறேன். சரிதானா? இப்போது வருகிறாயா? உள்ளே போய்க் குளித்துச் சாப்பிடலாம்...” என்று ஒரு புரியாத குழந்தையிடம் பேசுவது போலப் பேசினான் அவன்.

மாயா அவனை வெறித்தாள். இவ்வளவு சிரமப்பட்டு இவனுக்குப் புத்தி சொன்னது எல்லாம் வீண். ஒன்றையும் அவன் மனதில் ஏற்கவே இல்லை.

பாவம், பின்னால் என்ன கஷ்டப்படப் போகிறானோ என்று பரிதாபப்பட்டது மாயாவின் பூ மனம்.

ஒரு பெருமூச்சுடன் இருக்கையை விட்டு எழுந்தாள் மாயா. “என்னவோ, குழந்தையையாவது உன்னைப் போல வளர்க்காதே. அவ்வளவுதான்...” என்று வெளியே செல்லத் திரும்பினாள்.

கால்கள் நிதானமின்றித் தள்ளாடின. இதென்ன சோர்வு!

சட்டென, “நீ கடைசியாக எப்போது சாப்பிட்டாய்?” என்று அதட்டிக் கேட்டான் சுதாகர்.

புருவ நெரிப்புடன் யோசித்துப் பார்த்துவிட்டு, அலுப்புடன், “ச்சு...நினைவில்லை,” என்று மேலே ஓர் எட்டு எடுத்து வைத்தாள் மாயா.

பசிவேளை தாண்டியதும் அலுப்பில் அதுவரை உறங்கிய குழந்தை இப்போது விழித்துச் சிணுங்கி அழுதது.

மாயா தயங்கி நிற்பதையும் மேலாடை நனைவதையும் கண்டு அவன் திருப்தியுடனும் ஒரு கர்வத்துடனும் நன்றாகவே முறுவலித்தான்.

சில விநாடி தயக்கத்தின் பின் மாயா திரும்பி வந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு அருகில் இருந்த அறைக்குச் சென்றாள்.

சற்றுப் பொறுத்துத் திரும்பி வந்து குழந்தையை மீண்டும் சோபாவில் கிடத்தினாள்.

குழந்தையின் நெற்றியில் கிடந்த அடர்ந்த முடியை மெல்ல ஒதுக்கினாள்.

சிகரெட்டை அணைத்துவிட்டு நெருங்கி வந்த சுதாகரிடம், "காலையில் விடிந்ததும் பசும்பால் கொடுக்கச் சொல்லு, சுதாகர்! கூடையில் பாட்டில் எல்லாம் இருக்கிறது," என்றாள்,

அவளது வழியை மறைத்து நின்று, "உனக்கு என்ன வேண்டுமானாலும் தருகிறேன் பேபி. இங்கேயே என்னோடு இருந்துவிடு," என்றான் அவன்.

மிகுந்த வேதனையும் அதைவிட அதிகமான ஏக்கமுமாக மாயா அவனைப் பார்த்தாள்.

மிஞ்சி மிஞ்சி அவள் திருமணத்தைத்தானே விரும்பக் கூடும் என்ற எண்ணத்தில், "ஷ்யூர் பேபி! நீ ஒரு வார்த்தை சொன்னால் போதும். என்ன வேண்டுமானாலும் செய்வேன். எது வேண்டுமானாலும் தருவேன்," என்றான் அவன் தன்னம்பிக்கையுடன்.

அவளது உதடுகளில் ஏளனப் புன்னகை போல ஒன்று தோன்றி உடனே மறைந்தது.

தொடர்ந்து விழிகளில் நீர் திரள, "உன்னால் எனக்கு எதைத் தர முடியும் சுதாகர்? அப்பாவின் நம்பிக்கை வேண்டும்; அம்மாவின் ஆரோக்கியம் வேண்டும்; தம்பி தங்கையின் பிரியம் வேண்டும்; சூழ வாழ்ந்தோரின் நன்மதிப்பு வேண்டும்! இதையெல்லாம் உன்னால் தர முடியாதே, சுதாகர்! தரவே முடியாதே, வெகு சுலபமாக அழித்து விட்டாய். ஆனால் ஒன்றைக்கூட உன்னால் மீட்டுத் தரமுடியாதே!" என்று தன் கைகளில் முகம் புதைத்துப் பரிதாபமாக ஏங்கி அழுதாள்.

"போனதை மறந்துவிடு பேபி! இனி நாம் இருவருமாக நம் குழந்தையை நீ சொன்ன மாதிரி நல்லவனாக வளர்ப்போம், திருமணம் செய்து கொள்வோம்!" என்று அவளை லேசாக அணைத்துக் கூந்தலை வருடினான் சுதாகர்.

உடம்பெல்லாம் நொந்து விட்டாற்போல அவனிடமிருந்து விலகினாள் மாயா.

"ஊகூம்..." என்று ஒற்றைச் சொல்லால் மறுத்து விட்டு வாயிலை நோக்கி நடக்கத் தொடங்கினாள் மாயா.

அவன் முகத்தில் சட்டெனக் கடுமை பரவியது. "முன்னிருந்த நாய்கள் இன்னமும் இருக்கின்றன மாயா, மீறிச் செல்ல முயன்றாயானால் கடித்துக் குதறிக் கொன்று விடும்," என்று எச்சரித்தான்.

மீண்டும் அவள் உதடுகளில் ஒரு முறுவல் தோன்றி மறைந்தது. "ஆனால் முன்பிருந்த மாயா இப்போது இல்லையே சுதாகர், அந்த மாயாவுக்குப் பெற்றவர்கள் உற்றவர்கள் என்று எத்தனையோ பாசங்கள் இருந்தன. நேசங்கள் இருந்தன. எதிர்காலத்தைப் பற்றி எண்ணற்ற ஆசைகள் இருந்தன. ஒளிமிக்க எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இருந்தது. உயிர்மீது ஆசையும் இருந்தது. இந்த மாயாவுக்கு அதெல்லாம் ஒன்றுமே இல்லை, சுதாகர்! பாசமில்லை, நேசமில்லை, நம்பிக்கை இல்லை. உயிர் வாழும் ஆசையும் இல்லை!" என்று மேலே நெஞ்சின் உறுதியினாலேயே நடக்கத் தொடங்கினாள்.

"சொல்வதைக் கேள், மாயா!" என்ற சுதாகரின் அதட்டல் அவள் காதில் விழுந்த மாதிரியே தெரியவில்லை. நில்லாமலேயே நடந்து கொண்டிருந்தாள்.

ஆயினும் மாயா பிடிவாதமாகப் போய்விடுவாள் என்று சுதாகர் எண்ணிவிடவில்லை.

நாய்களிடம் அவளுக்குள்ள பயம் அவன் அறிந்ததே.

அவளது சின்னச் சின்னப் பயங்கள், சின்னச் சின்ன சந்தோஷங்கள்...

வாசல்வரை சென்றுவிட்டு முகத்தைச் சுளித்துக் கொண்டு கூந்தல் துள்ளி விழ அவள் எப்படித் திரும்புவாள் என்று எண்ணுகையில் அடக்கிய சிரிப்பில் உதட்டோரம் துடித்தது அவனுக்கு.

ஆனால் வெளி கேட்டை நெருங்கும்போது கூட-அதிலும் அந்த நாய்கள் பாயத் தயாராக நிற்பதைக் கண்டபிறகும்கூட - அவளது தளர்ந்த நடையில் தயக்கம் இல்லை என்பதைக் காணவும் அவனுக்குச் சுரீல் என்றது.

“நில், மாயா!” என்று கூவியபடி மின்னலெனப் பாய்ந்தான்.

ஆனால் அதற்குள் எல்லையை மிதித்திருந்தாள்.

மூன்று நாய்களுமே அவள் மீது பாய்ந்திருந்தன.

## 19

நாய்களைக் கூவி அழைத்தபடியே ஓடி மாயாவை அடைந்தான் சுதாகர்.

அப்போது பற்றியிருந்த நாயைப் பிடித்துத் தூக்கி எறிந்தான்.

அலங்கோலமாய்ச் சரிந்திருந்த அவளை நிமிர்த்தினான்.

நாய்களின் பல்லோ நகமோ பட்டு அங்கங்கே கிழிந்திருந்த ஆடைகளையும் இரத்தக் கறைகளையும் உணர்விழந்த

அவளது நிலையையும் கண்டதும் ஒரு கணம் அவனுக்கு ஐம்புலன்களும் செயல் இழந்தன.

மறுகணம் "பேபி!" என்ற கதறலுடன் அவளை அள்ளி அணைத்தான்.

பதற்றத்துடன் மூக்கில் விரல் வைத்துச் சுவாசம் பார்த்தான்.

மூச்சு வருவதும் போவதும் புரியாமல் திகைத்தான்.

கலங்கிப் போய் 'பல்ஸ்' பார்த்தான். ஓரிரு மெல்லிய துடிப்புகளை உணர்ந்தான்.

அவளை இரு கரங்களிலுமாக ஏந்திக்கொண்டு உள்ளே சென்றான்.

அதற்குள் அவனுடைய அலறலைக் கேட்டு எதிரே ஓடி வந்த ராமனை டாக்டரிடம் அனுப்பினான்.

மலைவாசிகளுக்கு உதவி செய்த பழக்கத்தில் அவன் அறிந்த மட்டும் அவளுக்கு முதல் உதவி செய்து பார்த்தான்

ஆனால் அவளுக்குச் சற்றும் உணர்வு திரும்பாததைக் கண்டு அதிர்ந்து போனான்.

அவளை விட்டு இம்மியும் நகரத் துணிவற்றுப் போய் அள்ளி மடியில் போட்டு அணைத்தபடி சிலையாகிப் போனான்.

வெகு நேரம் கழித்து டாக்டர் சங்கர் வந்தபோதும் அவன் அப்படித்தான் இருந்தான்.

"அவளைப் படுக்கையில் விடு, சுதா!" என்று தன் சிகிச்சையைத் தொடங்கினான் சங்கர்.

ஆனால் அவனுடைய சிகிச்சைகளை எல்லாம் மீறிக் கொண்டு இரண்டு தினங்கள் சென்ற பின்னரும் மாயா கண் திறக்கவே இல்லை.

நம்பிக்கை இழந்து, "சங்கர்! உன்னால் அவளைக் காப்பாற்ற முடியவில்லையா? அல்லது...." என்று நெஞ்சு உலரக் கேட்டான் சுதாகர்.

'ஏன் இப்படிப் பயப்படுகிறோம்' என்று அவனால் புரிந்து கொள்ளக்கூட முடியவில்லை.

யாரோ ஒரு சாதாரணப் பெண் இந்த மாயா.

எத்தனையோ பெண்களில் ஒருத்தி.

அழகிதான்! ஆனால் இவளைவிடவும் அழகிய பெண்கள் எத்தனையோ பேர் இல்லையா?

அவளது பேச்சும் நடப்பும் ரசனைக்கு உரியவையே.

ஆனால் இவற்றை இழப்பதால் மட்டுமே அவனது உலகம் இருண்டு போக முடியுமா?

இழக்கக் கூடும் என்ற நினைவிலேயே நெஞ்சு உலர்ந்து போகிறதே! இது எப்படிச் சாத்தியம் ஆயிற்று.

எப்படியோ, அவள் இல்லாத உலகத்தில் அவனுக்கும் ஒன்றும் இராது என்பது மட்டும் அவனுக்குத் தெளிவாக வெகு துல்லியமாகப் புரிந்தது.

அவன் முகத்தை ஒருதரம் கூர்ந்து பார்த்துவிட்டு, "எந்த டாக்டராலும் இவ்வளவுதான் முடியும், சுதா! பிழைக்க வேண்டும் என்கிற ஆசை நோயாளிக்கும் இருக்க வேண்டும் அல்லவா?" என்று கூறிவிட்டுப் போனான் சங்கர்.

வெறும் வார்த்தைகள்! அவை கூட இப்படி வலிக்குமா?

மார்பை அழுத்திக் கொண்டே மாயாவிடம் சென்றான் சுதாகர்! கண் திறவாமல் கிடந்தவளைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டே நின்றான்.

எவ்வளவு துடிப்பான பெண்! இப்படி எத்தனை அடிகள் இவள் நெஞ்சில் விழுந்திருந்தால் பிழைக்க வேண்டும் என்கிற ஆசை இவளுக்கு இல்லாமல் போயிருக்கும்.

அந்த அடிகள் எல்லாம் இவளுக்கு விழக் காரணம்? கடவுளே!

தலையைக் குலுக்கிவிட்டுக் கொண்டு மாயாவின் கையைப் பற்றிக்கொண்டு அவள் அருகில் அமர்ந்தான் சுதாகர்.

அவன் நெஞ்சில் நிறைந்திருந்த வேதனைக்கு அவளது ஸ்பரிசம் மட்டுமே சிறு ஆறுதலைத் தந்தது.

இறுகிப் போய் அவன் அமர்ந்ததைப் பார்த்துப் பெருமூச்செறிந்து விட்டுப் பின்னணியில் ஒதுங்கினாள் நர்ஸ் ஜானிம்மை.

* * *

தன் தந்தையிடம் பிரேமி எவ்வளவோ வேண்டியும். வாதாடிப் பார்த்தும் சுந்தரத்தின் விலாசத்தைச் சொல்ல அடியோடு மறுத்து விட்டார் ரத்தினபாண்டியன்.

கடைசியில் பிரேமியுடைய கணவன் டெலிபோனைக் கையில் வாங்கி, "மாமா! எனக்கு எல்லா விபரமும் தெரியும்! என்னிடம் நம்பிக்கை வைத்து அந்தப் பெண்ணின் தகப்பனாருடைய விலாசத்தைக் கொடுங்கள்! நாங்கள் அங்கே கவனமாக இடம் பார்த்து நடந்து கொள்கிறோம்," என்றான்.

அதன் பிறகு மறுக்க முடியாமல் நண்பருடைய முகவரியை மாப்பிள்ளையிடம் சொன்னார் ரத்தின பாண்டியன்.

உடனே இருவருமாகச் சுந்தரத்திடம் ஓடினார்கள். நல்லவேளையாக ரேணுகாவின் உடம்பு பெருமளவு தேறி அவள் நடமாடிக் கொண்டு இருந்தாள்.

சுந்தரத்திடம் பிலுபிலுவென்று பிடித்தாள் பிரேமி. "இத்தனை வருடங்கள் வளர்த்திருக்கிறீர்கள். அவளைத் தெரியவில்லையா, அங்கிள்? அவள் சத்தியம் என்றபிறகும் நீங்கள் நம்பவில்லையாமே! மாயா பொய்ச் சத்தியம் செய்து எப்போது கண்டீர்கள்? யாரோ ஒருவன் அவளுக்குக் கொடுமை செய்தால் உங்கள் பங்குக்கு என்று நீங்களும் அநியாயம் செய்வதா? உங்கள் பெண்ணைவிட உங்களுக்கு அந்த ரகுவின்

சொல்லா நம்பத் தகுந்தது? அங்கே அவள் சிறைப்பட்டு என்னென்ன கஷ்டப்பட்டு விட்டாள் தெரியுமா? கடைசியாக எப்படியோ மீண்டு தந்தை என்று வந்தால் நீங்கள் வேறு வெந்த புண்ணில் வேல் பாய்ச்சினீர்களா?" என்று படபடவென்று கடுகாய்ப் பொரிந்தாள்.

"அக்கா தப்பு செய்யமாட்டாள் என்று எனக்குத் தெரியும்." என்றாள் ப்ரியா பளிச்சென்று.

"அப்படிச் சொல்லடி, தங்கம்!" என்று ப்ரியாவை மெச்சிக் கொண்டாள் பிரேமி.

"உனக்குத் தெரிய வருகிறது! எனக்குத் தெரிகிறது! ஆனால் நம் அப்பாமாருக்கு மேல்மாடி காலியாக அல்லவா இருக்கிறது. வயதானாலே இப்படித்தான்!" என்று தொடங்கி வயதானவர் களைப் பற்றி ஒரு லெக்சர் அடிக்கத் தொடங்கினாள்.

ஆனால் அவளது கணவன் அதைத் தடுத்து நிறுத்தி, சுந்தரத்தையும் அழைத்துக் கொண்டு லாட்ஜுக்கு வந்து சேர்ந்தபோது பறவை பறந்து வெகுநேரம் ஆகி விட்டிருந்தது.

பிரேமிக்குச் சொரேர் என்றது.

"ஐயோ, மாமா! என்று அலறியவள் சற்று நிதானித்தாள்.

கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, "அங்கிள்! நம்ம ரகுப்பா வீட்டுக்குச் சுதர்கரன் என்ற ஒருத்தன் வந்தானே! நினைவிருக்கிறதா?" என்று அவசரமாகக் கேட்டாள்.

திகைப்புடன் அந்த அறையைச் சுற்றிச் சுற்றி மலங்க விழித்துக் கொண்டிருந்த சுந்தரம் நின்றார்.

பிரேமி மீண்டும் அதே கேள்வியைக் கேட்கவும், "ஆமாம், ரொம்ப நல்ல மனிதர்." என்று பதில் கூறினார்.

"நல்ல பிள்ளை! மண்ணாங்கட்டி!" என்று வெடித்தாள் பிரேமி! "அந்த மகாமனிதன்தான் மாயாவைத் தூக்கிச் சென்று இந்த நிலைக்குக் கொண்டு வந்தது. இவன் எல்லாம் நல்லவனாம்!

சும்மா முகத்தைப் பார்த்து மயங்குவது!" என்று எரிச்சல பட்டாள்.

மேலும் திகைத்தவராக, "ஐயோ, ரயிலில் பார்த்ததாக... ரகு... அவரும் பார்த்ததாய்ச் சொன்னாரே! தேட உதவுகிறேன் என்றாரே! ரேணுவை ஆஸ்பத்திரியில் சேர்க்க வர எல்லாம் உதவி செய்தாரே... மீண்டும் விசாரித்துக் கடிதம் கூட எழுதினார்..." என்று திரும்பத் திரும்பச் சொன்னார் சுந்தரம்.

"எல்லாம் உங்களை ஏய்க்க. அதையெல்லாம் விடுங்கள். முதலில் ரகுப்பாவிடம் அவன் அட்ரஸ் கேளுங்கள். மாயா அவனிடம்தான் போயிருக்க வேண்டும். சீக்கிரம்," என்று முடுக்கினாள் பிரேமி.

'மீண்டும் அவனிடமே ஏன் போக வேண்டும்?' என்று குழம்பினார் சுந்தரம் மீண்டும்.

பொறுமையிழந்து பாய்ந்தாள் பிரேமி. "பின்னே வேறே எங்கே போவாள்? வேறு இடமே எதுவும்இல்லை என்றுதான் நீங்கள் எல்லாருமாய் அவனிடமே விரட்டி விட்டீர்களே. அங்கே அவனிடம் போவதை விடச் சாவது மேல் என்று கடற்கரைக்கு அவள் போயிருந்தபோதுதான் நான் அவளைச் சந்தித்தேன்."

'சாவதற்கா? ஐயோ மாயூ!" என்று அலறினார் அவர்.

"ஆமாம், இப்போது அலறுங்கள். குழந்தையைக் கொன்று விட்டுச் சாக நினைத்தாளாம். ஆனால் தண்ணீரில் அதை வீசுமுன் மனது தாங்கவில்லை. அவள் மனம் எவ்வளவு மென்மை என்றுதான் உங்களுக்குத் தெரியுமே! யாருடைய தானாலும் கடவுள் படைத்த உயிர் ஆயிற்றே என்று தயங்கி விட்டாளாம். குழந்தையை அவனிடம் கொடுத்து விட்டு மீண்டும் முயற்சி செய்யப் போவதாகச் சொன்னாள். அவன் வீட்டில் இருந்தும் வெளியேறி விட்டால் பிறகு அவளைக் கண்டுபிடிக்கவே முடியாது! அங்கிள்! சீக்கிரம் ஓடுங்கள். சும்மா நிற்கிறீர்களே. யோசிக்க நேரமில்லை, அங்கிள்! ஐயோ, நாளன்று

இவர் டெல்லியில் ட்யூட்டியில் சேர்ந்தாக வேண்டுமே. அல்லது நாங்களே பார்ப்போம்! என்று குமுறினாள் பிரேமி.

"சும்மா நில்லாதீர்கள் அங்கிள்! பாஸ்கர்! போங்கள்..." என்று விரட்டினாள்.

ஒருவாறு ரகுவின் தந்தையோடு தொடர்பு கொண்டு சுதாகருடைய கம்பெனியின் பெங்களூர் அலுவலகத்தின் விலாசத்தைத் தெரிந்து கொண்டார் சுந்தரம்.

முதலில் அவர் மட்டும் கிளம்புவதாக இருந்தார்.

ஆனால் ரேணுகா தானும் வருவதாகப் பிடிவாதமாகக் கூறவும் பாபுவை ப்ரியாவுக்குத் துணை வைத்து விட்டுப் பெற்றவர் இருவருமாகக் கிளம்பினர்.

பெங்களூரில் சுதாகரின் அலுவலக நிர்வாகியிடம் சுந்தரம் கத்திய தினுசில் அவர் முதலில் சுதாகரின் இருப்பிடத்தை அவரிடம் சொல்லாமல் மழுப்பினார்.

சுதாகர் இருக்கிறாரா இல்லையா என்று விசாரித்துச் சொல்வதாகக் கூறி அவரைத் தங்க வைத்துவிட்டு ஆள் மூலம் அந்த நிர்வாகி சுதாகரோடு தொடர்பு கொண்டார்.

முதலில் சற்று நேரம் அவன் ஒன்றுமே சொல்லவில்லை.

பிறகு, "நம் கம்பெனி காரிலேயே அவர்களை இங்கே அழைத்து வா," என்று ஆளை அனுப்பினான்.

மீண்டும் மாயாவிடம் சென்று குனிந்து, "மாயா! மாயாபேபி!" என்று அழைத்துப் பார்த்தான்.

சற்றுத் திறந்த மாயாவின் விழிகள் அடையாளம் அறியாமல் மீண்டும் மூடிக் கொண்டன.

அவன் தவிப்புடன் மீண்டும் அவள் கையைப் பற்றியவாறே அமர்ந்து கொண்டான்.

சுந்தரமும் ரேணுகாவும் வந்தபோதுதான் அவன் மீண்டும் அங்கிருந்து எழுந்து வந்தான்.

எழுந்து வந்து, "வாருங்கள்," என்றான் அமைதியாக.

"என் மகளை மீண்டும் அடைத்து வைத்திருக்கிறாயா? விடடா அவளை!" என்று ஆத்திரத்துடன் பாய்ந்து வந்தார் சுந்தரம்.

சினத்துடன் குறுக்கே வந்து தடுத்த வேலையாள்களை ஒரு பார்வையாலேயே விலக்கினான் சுதாகர்.

பிறகு சுந்தரத்திடம், "அவளுக்கு உடம்பு சரியில்லை, வந்து பாருங்கள்," என்று அழைத்தான்.

"ஏன்டா பாவி? அவள்ளை அடித்துப் போட்டு விட்டாயா? அல்லது போகிறேன் என்றதால் காலை ஒடித்தாயா? மாயூ, என் மாயூக் கண்ணா!" என்று அரற்றியபடியே உள்ளே வந்தார் சுந்தரம்.

உணர்வற்று, பிடுங்கி வெயிலில் எறிந்த கொடி போல வாடிக் கிடந்த மகளைப் பார்த்ததும் பதறிப் போனார்.

"என் கண்ணே, மாயூ! மாயாம்மா! தப்பாக நினைத்து விட்டேனடா! பாவி நான். மன்னித்துவிடு, கண்ணம்மா! அம்மா மாயூ!" என்று கதறினார்.

மகளை வருடியபடியே மென்மையாக அழைத்தாள் ரேணுகா.

அந்த அழைப்பில் மாயாவின் இமைகள் திறந்தபோது உடனே மீண்டும் மூடிக் கொண்டன.

எரித்து விடுபவர் போலச் சுதாகரை முறைத்து விட்டு, "மாயாவை அழைத்துப் போகப் போகிறோம்," என்று அறிவித்தார் சுந்தரம்.

"அவளுக்கு... அவளுக்கு... உடம்பு ரொம்பவும் சரியில்லை. கட்டிலுக்குக் கட்டில்கூட மாற்ற வேண்டாம் என்கிறார் டாக்டர். இவள் குணமடைந்தபின்.. நீங்கள் முதலில் குளித்து விட்டுச் சாப்பிடுங்கள்," என்றான் சுதாகர் மெல்லிய குரலில்.

"உன் வீட்டில் உணவா?' என்று பொங்கினார் அவர்.

அதே உணர்ச்சியற்ற பார்வையுடன், "அவளுக்குக் குணமாகும் வரையில்தான்..." என்றான்.

ஜானிம்மையை அழைத்து, "மாயாவின் தாயாரும் சற்று உடல் நலம் குறைந்தவர்கள்தான் ஜானி! அவர்களையும் கவனித்துக் கொள்... ராமனிடம் சொல்லி இவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கச் சொல்," என்று கூறிவிட்டுத் தன் அறைக்குப் போய்விட்டான்.

வெறுப்பாக இருந்த போதும் வேறு வழியின்றி அங்கேயே தங்கினார் சுந்தரம்.

"போகின்ற போது மிச்சப் பணத்தை எல்லாம் அவன் மூஞ்சியில் விசிறி அடித்துவிட்டுப் பாக வேண்டும்," என்றார் மனைவியிடம்.

ஒரு வாரம் சென்ற பின்னர் மனைவியையும் மகளுக்குத் துணையாக அங்கேயே விட்டுவிட்டு அவர் சென்னைக்குத் திரும்ப வேண்டியது ஆயிற்று.

'அவனிடமா விட்டுச் செல்வது?' என்று கலங்கிய போதிலும் வேறு வழி இருக்கவில்லை. மாயா இன்னமும் தெளியவில்லை.

பச்சை உடம்பில் உள்ளேயும் வெளியிலுமாகப் பட்ட காயங்கள் இலகுவில் ஆறுவதாக இல்லை.

அந்த ஏழு நாள்களில் ஒருமுறை மட்டிலுமே தந்தையை இனம் கண்டு! 'அப்பா,' என்று அழைத்திருந்தாள்.

அவசரம் அவசரமாக, "மன்னித்து விடு, மகளே!" என்று கத்தியபோது புன்னகை புரிய முயன்றவாறே அவள் மீண்டும் சோர்ந்து போனாள்.

ஆயினும் அவள் உடம்பில் சிறு முன்னேற்றம் தெரிந்தது.

இருப்பிடம் தெரிந்த பிறகு இந்த சுதாகரன் இனி வாலாட்டத் துணிய மாட்டான் என்ற தைரியம் இருந்தது.

மேலும் சென்னையிலும் ஒரு மகள் இருக்கிறாளே.

கூடவே இந்த இருநூற ரூபாய் சம்பாத்தியமேனும் நிலைத்தாக வேண்டும்.

அத்தனையும் எண்ணித் தனியே சென்னைக்குக் கிளம்பினார் சுந்தரம்.

சுதாகரை எச்சரிப்பது போலப் பார்த்து விட்டு, "மூன்று நாள்களுக்கு ஒருமுறை உன் கடிதம் வரவில்லையானால் நான் நேரே வந்து விடுவேன்," என்றார் மனைவியிடம்.

அவன் அதைக் கேட்டது போலக் காட்டாதபடி கா டிரைவரிடம் ஏதோ சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

அந்த ஜானிம்மையை ரேணுகாவுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

ஜானிம்மையும் மாயா மட்டுமின்றி ரேணுகாவுக்கும் டானிக் பழச்சாறு என்று வேளை தவறாமல் கொடுத்துப் பராமரித்தாள்.

வேண்டாம் என்று மறுத்தாலும் விடவே மாட்டாள்.

எந்நேரமும் அவள் முகத்தில் இருந்த கனிவும் புன்னகையும் கூட அந்தத் தாயைக் கவர்ந்தன.

மாயா பெரும்பாலும் அரை மயக்கமும் முழுத் துயிலுமாக இருந்தாள்.

சுதாகர் எளிதில் கண்ணில் படுவதே இல்லை. தப்பித் தவறி எதிரே வர நேர்கையில் தலை குனிந்தவாறே சென்று விடுவான்.

அவனைப் பார்க்கையில் ரேணுகாவுக்கும் சங்கடமாக இருக்கும், வெறுப்பும் ஆத்திரமும் வரும்.

தேன்சிட்டுப் போல இருந்த என் மகளை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டானே பாவி. இனி அவள் கதி என்ன என்று கலங்குவாள்,

குழந்தையைப் பார்க்கையில் மனம் மேலும் குழம்பும். ஆனால் அதன் சிரிப்பில் மாயாவைக் கண்டபோது அதை வெறுக்கவும் ரேணுகாவால் முடியவில்லை.

பலவாறு கலங்கிய மனதுக்குள் ஜானிம்மையின் பேச்சும் சிரிப்பும் இதமாக இருந்தன.

ஜானியால் சும்மா இருக்க முடியாது.

ஒன்று ஏதாவது வேலை செய்ய வேண்டும். அல்லது வாய் வலிக்கப் பேச வேண்டும்.

ஆங்கிலத்தில் தமிழைக் கலந்து அப்போதும் ஒரு சமயம் சரியான சொல் கிடைக்காமல் தடுமாறி அதை நடித்துக் காட்டிச் சமாளித்தபடி அவள் பேசுவது ரேணுகாவுக்கு வேடிக்கையாக இருக்கும்.

தன் இனத்தாரின் கதைகள், தான் படித்த வகை, வேலை செய்யும் இடத்தில் நடந்தது... இதெல்லாம் பற்றிக் கதை கதையாக அளப்பாள்.

ஒவ்வொரு சமயம் சுதாகரைப் பற்றியும் கூறுவாள்.

அந்த மலைக்குடிமக்களை மனிதர்கள் ஆக்கும் அவனது முயற்சிகளைப் பற்றிப் பெருமையாகப் பேசுவாள்.

சுத்தமான குடிநீர் டாங்க், அவர்களைப் படிக்கவைக்கும் முயற்சி. மருத்துவ வசதி, இரவு பகல் என்று இல்லாமல் ஆபத்து என்றால் ஓடிவருவது... ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்று சொல்வாள்.

புரண்டு படுத்த மாயாவுக்கு இதமாகத் தலையணையை வைத்துவிட்டு ஒருநாள் தொடங்கினாள். "எங்கள் ராஜையா ராஜவம்சம் அம்மா! அவர் கையாலே உங்க மகளுக்குத் தோட்டி வேலை வரைக்கும் செய்திருக்காரு. நீங்க வர்றதுக்கு முந்தின நாள்தான் நான் வந்தேன். அது வரைக்கும் காண்ட்ராக்டுலேர்ந்து விடுபட முடியலை. வேறே ஆள் வேண்டாமின்னிட்டுத் தானே

பார்த்துக்கிட்டாரு. அழுக்குத் துணிகூட மாத்தலை. சாப்பாடு தூக்கம் ஒண்ணும் கிடையாது. ரெண்டுநாள் தாடியோட கண்ணு செவப்பா கையிலே 'பெட் பானோ'ட ராஜையாவைப் பார்த்ததும் அப்படியே அழுதுட்டேன். எங்க ராஜையாவை அப்படிப் பார்க்க முடியும்னு யாரால எதிர்பார்க்க முடியும்?"

கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்துபோய் மீண்டும் புரண்டதால் விலகிய மாயாவின் போர்வையைச் சரியாக மூடிவிட்டு வந்து அமர்ந்தாள்.

"எங்கள் ராஜையா தங்கம் அம்மா!" என்று முடித்தாள்.

இதை ரேணுகாவினால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அழகான தூக்கணாங் குருவிக் கூடாக இருந்தது அவளது குடும்பம்.

அதைப் பிய்த்து எறிந்தவன் இந்தச் சுதாகர்.

அவன் எப்படித் தங்கம் ஆக முடியும்?

மறுத்துப் பேச எண்ணி, "ஆனால்.. ஆனால் இவளை..." என்று தொடங்கிவிட்டு மேலே பச்சையாகப் பேச இயலாமல் தடுமாறினாள்.

"எங்களுக்குக் கொஞ்சம் தெரியும்மா. அவரு விரலை அசைச்சாக்கூடத்தான் அதைப் பத்து நாள் பேசுவாங்களே. ஆனால் ஒருத்தரை அவருக்கு விரோதமாய் பேசச் சொல்லுங்க. பார்ப்போம். நடக்கவே நடக்காதே. எங்க எல்லாருக்கும் அவரு ஒரு கடவுள் மாதிரி. நான் வெள்ளாடு கறந்துக்கிட்டிருக்காம இப்படி ஓர் உசந்த தொழில் பார்க்கிறது அவராலேதானேம்மா! ஏதோ பெண் விஷயத்திலே கொஞ்சம் தப்பு செய்வாருன்னு தெரியும்தான். ஆனால் கிருஷ்ணப்பன் போல் என்று அதையும் செல்லமாத்தான் சொல்லுவாங்க. இஷ்ட விரோதமா ஒரு பெண்ணைக் கொண்டு வந்து வச்சிருக்கிறாரின்னும் தெரியும். அப்படியும் அவருக்குப் பிள்ளை பெற உங்க பெண் கொடுத்து வச்சிருக்கணுமின்னுதான் சொன்னாங்க."

இதற்கு மேல் ரேணுகாவால் கேட்க முடியவில்லை. 'சரி சரி, அதைவிடு ஜானியம்மா! இந்தப் பையனைப் பார், இப்போதே லேசா முகம் பார்த்துச் சிரிக்கிறானே. எங்கள் மாயா கூட இப்படித்தான் ஒரு மாதக் குழந்தையாக இருக்கும்போது சிரிப்பாள்," என்று பேச்சை மாற்றினாள்.

அப்போதைக்குப் பேச்சு திசை மாறிவிட்டபோதும் ஜானி அடிக்கடி சுதாகரைப் பற்றியே பேசுவாள்.

அவள் பேச்செல்லாம் அவனைத் தெய்வமாக்கிக் காட்டும்.

ஆயிரம் சொன்னாலும் எப்படி ஒப்புவது? அவர்களது குடும்பத்துக்கு அவன் அரக்கனாக இருந்தானே.

சுந்தரம் சென்னைக்குச் சென்றபின் ஒருநாள், காலையில் ஜானியுடன் சேர்ந்து, மகளையும் அவள் பெற்ற மகவையும் கவனித்து விட்டு ரேணுகா குளிக்கச் சென்றாள்.

உடையைக் களையத் தொடங்கிய பிறகுதான் ஜாக்கெட்டை மாற்றி எடுத்து வந்தது தெரிந்தது.

சேலையால் தோளை மூடிக்கொண்டு, மெல்லக் கதவைத் திறந்து கொண்டு வருகையில் ஜானிம்மை வெகு அவசரமாயும் ஓசையின்றியும் மகளின் அறையை விட்டு வெளியேறுவது தெரிந்தது.

குழப்பத்துடன் ஜன்னல் அருகே விரைந்து வந்து பார்த்தபோது ஜானி. வெகு வேகமாக மாடிப்படி ஏறிக் கொண்டு இருந்தாள்.

இதென்ன மர்மம்?

ரேணுகா யோசித்துக் கொண்டு இருக்கும் போது அவசரமான காலடிகள் கேட்கவும் மறைந்து நின்று கவனித்தாள்.

ஜானியோடு வந்தவன் சுதாகர்.

இரண்டே எட்டில் மாயாவின் படுக்கையை அணுகி விட்டான் அவன்.

"இதேதடா வம்பு?" என்று கவலையுடன் எட்டிப் பார்த்தாள் ரேணுகா.

## 20

மகளின் அறைக்குள் கவலையோடு பார்த்த தாயார் மேலும் திடுக்கிட்டுப் போனாள்.

அங்கே சுதாகர் நடுங்கும் விரல்களால் மாயாவின் கூந்தலை நீவினான். கைகளைத் தடவினான். காலின் மேல் சேலையை இழுத்துச் சரி செய்தான். மீண்டும் முகத்தை வருடினான்.

எல்லாவற்றுக்கும் மேலாக அந்தக் கண்கள்.

இமைக்கும் நேரம்கூட வீண் என்று நினைத்தது போல மாயாவின் முகத்திலேயே நிலைத்திருந்தன.

"பேபி, பேபி, பேபி!" முணுமுணுப்பு வருத்தத்துடன், கெஞ்சுதலுடன், வேண்டுதலுடன் ரேணுகாவின் காதுகளில் சன்னமாக விழுந்தது.

'இத்தனை வேதனையும் தவிப்பும் இந்த வில்லனிடமா?' ரேணுகா திகைத்தாள்.

ஒரு வேளை இவன் ரொம்பப் பெரிய வில்லன் அல்லவோ? ஆனால் அப்படி நினைக்கவும் வழியில்லையே.

சற்றுப் பொறுத்துக் கண்ணைத் துடைத்துக்கொண்டபடி, "ராஜையா!" என்று விளித்து ஜானி அவனிடம் ஏதோ சொல்வது கேட்டது.

சலனமற்றுக் கண் மூடிக் கிடந்த மாயாவைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி விசனத்துடன் சுதாகர் செல்வதையும் ரேணுகா கண்டாள்.

அவளுக்கும் ஏனோ கண்ணைக் கரித்துக் கொண்டு வந்தது.

அன்று மாலையில் குழந்தைக்கு வெந்நீர் எடுத்து ஃபிளாஸ்குடன் ரேணுகா வருகையில் வாயில் பக்கமிருந்து சுதாகர் வந்து கொண்டிருந்தான்.

வழக்கமாக இப்படிச் சந்திக்க நேர்கையில் வேறுபுறம் திரும்பியபடி ரேணுகா போய்விடுவாள்.

ஆனால் இன்று அவனது விசனம் நினைவு வந்தவளாக நின்று, கையிலிருந்த ஃபிளாஸ்க்கின் மேல் பார்வையைப் பதித்து, "இன்று மாயாவுக்கு முன்னை விட மிகவும் பரவாயில்லை. பல தடவை என்னை அடையாளம் புரிந்து அம்மா என்றாள்," என்று கூறிவிட்டு மெல்ல நடையைத் தொடர்ந்தாள்.

ஆனால் அவன் நின்றே விட்டான். பிறகு, மெல்ல, "மிக்க நன்றி அம்மா!" என்றான்.

அதன் பிறகு அவ்வப்போது மாயாவின் உடல் நிலை பற்றிச் சுதாகரிடம் ரேணுகா சொல்வாள்.

மாயா உறங்கும் நேரங்களில் தோட்டங்களில் உலாவவும் சென்றாள். சுதாகர்தான் மாயா விழித்திருக்கும் வேளைகளில் அவள் கண்ணில் படுவதே இல்லையே.

படிப்படியாக மாயாவின் உடம்பு குணமடைந்தது.

முழு உணர்வு வந்ததும் அவள் ஆசையுடன் தாயைப் பார்த்தபோது அந்தப் பார்வையில் அந்தத் தாயின் மனம் தவித்துப் போயிற்று.

ஆனால் மகளோ ஏதும் நடவாதது போலத் தாயிடம் சலுகை கொண்டாடினாள்.

தானே எழுந்து உட்காரவும் உறுதியுடன் நடமாடவும் தொடங்கினாள்.

அன்று மாயாவிடம் ஒரு கதைப் புத்தகத்தைக் கொடுத்து விட்டுக் குழந்தையுடன் தோட்டத்திற்குச் சென்றாள் ரேணுகா.

தனியே அமர்ந்திருந்த மாயாவுக்குப் புத்தகம் போர் அடித்தது.

ஒன்று தோன்றவும் கவனத்துடன் கட்டிலை விட்டு இறங்கினாள்.

சுவரைப் பிடித்துக் கொண்டு மெல்ல நடக்கத் தொடங்கினாள்.

பத்தடி நடந்திருப்பாள்.

கைகால் சோர்ந்து முகம் எல்லாம் வியர்த்துக் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

ஆனால் கால்கள் லேசாகத் தடுமாறும்போதே இருகரங்கள் அவளைச் சுற்றிப் படர்ந்து அவளைத் தாங்கிக் கொண்டன.

அவன் கரங்கள்.

வளையமாகச் சுற்றி வந்து தன்னைப் பற்றியிருந்த அவன் கைகளை வெறித்துப் பார்த்தாள் மாயா.

இந்தக் கைகள்-

இவை என்னை அணைத்திருக்கின்றன.

என் விருப்பம் இல்லாமல் என் சம்மதம் இல்லாமல் வளைய...

மருட்சியுடன் திரும்பி அவனைப் பார்த்தாள் மாயா.

அவனும் உணர்ச்சியற்ற பாறை முகத்துடன் அவளையே பார்த்தான்.

மெல்ல அவன் கைகளை விலக்கிவிட்டுச் சுவரைப் பற்றிக் கொண்டு கட்டிலை நோக்கித் திரும்பி நடந்தாள்.

ஆனால் முடியாமல் தள்ளாடினாள்.

பொறுமையிழந்த வேகமான மூச்சுடன் சட்டென அவளைத் தன் கரங்களில் தூக்கிக் கொண்டான் சுதாகர்.

"பலம் வரும்வரை சற்றுப் பொறுக்கக் கூடாதா?" என்று கடிந்துவிட்டுப் படுக்கையை நோக்கி நடந்தான்.

சிகரெட்டோடு இணைந்த அவனுக்கே உரிய வாசனை மாயாவின் நாசியை நெருடியது. கண்களை இறுக மூடிக் கொண்டு அவன் பிடியில் அசையாமல் கிடந்தாள்.

கட்டிலை நெருங்கியதும் அவள் எதிர்பார்த்தபடி அல்லாமல் அவன் பிடி இறுகிப் போயிற்று.

ஒரு திடுக்கிடலுடன் விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.

மீண்டும் திடுக்கிட்டாள்.

நேர் எதிரே வெறித்திருந்த அவன் விழிகளில், அழுந்த மூடியிருந்த உதடுகளில் ஏன் இந்தத் தவிப்பு?

ஏதோ புரிந்தும் புரியாமலும் மாயா அசைவற்றிருந்தாள்.

"எங்கள் ராஜையா..." என்று ஜானியின் குரல் என்னவோ சொல்லிற்று-மிகமிக மென்குரலில் - அவள் காதுக்குள்-

சற்றுப் பொறுத்து வெளியே ரேணுகாவின் குரல் கேட்கவும் ஒரு பெருமூச்சுடன் மாயாவைக் கட்டிலில் கிடத்தினான் சுதாகர்.

அவள் கூந்தலை ஒதுக்கிவிட்டு, "அவசரப்பட்டு உடம்பை அலட்டிக்கொள்ளாதே!" என்று கூறிவிட்டு வெளியேறினான்.

மாயா எழுந்து நடமாடுவதை அறிந்ததும் சுந்தரம் ஓடோடி வந்தார்.

முதலில் மகளிடம் மன்னிப்புக் கேட்டார். "என் கண்மணியிடம் எனக்கு நம்பிக்கை இருந்திருக்க வேண்டாமா? நான் மடையனாக நடந்து விட்டேனே, பாப்பா!" என்று மிகுந்த வருத்தத்துடன் கூறினார்.

லேசாக முறுவலித்தாள் மாயா. "உங்கள் பேரில் தப்பு இல்லைப்பா, ரகு தப்பாகச் சொல்லக் கூடும் என்று நினைத்திருப்பீர்களா என்ன? அதோடு அம்மாவுக்கு வேறு ஆபத்து என்றவுடன் ஆத்திரப்பட்டு விட்டீர்கள்," என்று சமாதானமாகப் பேசினாள்.

"எல்லாம்... எல்லாம் இந்த ராஸ்கல் செய்த சதி. ரகுவையும் குழப்பி என்னையும் நம்ப வைத்தான்," என்றார் அவர் ஆத்திரமாக. "ஆனால் எந்த நிலையிலும் உனக்கு நான் ஆதரவாக இருந்திருக்க வேண்டுமே," என்று வருந்தினார்.

"போகட்டும் விடுங்கப்பா," என்றாள் மாயா மென்மையாக.

சிரமத்துடன் தன்னை அமைதிப் படுத்திக் கொண்டு, "மாயூம்மா, என்றைக்கு ஊருக்குப் போகலாமடா? இந்த ஞாயிறேகூடப் பயணம் செய்யலாம் என்கிறார் டாக்டர்," என்றார்.

சற்று நேரம் சோர்ந்திருந்த தன் கைகளைப் பார்த்தபடி பேசாதிருந்தாள் மாயா. பிறகு, "அப்புறம் சொல்கிறேனே, அப்பா! முதலில்... முதலில் சுதாகரை இங்கே வரச் சொல்கிறீர்களா?" என்றாள்.

முகத்தில் எரிச்சல் கோடுகளுடன் எழுந்து சென்றார் தந்தை.

அரை மயக்கமும் நினைவுமாக இருந்தபோது விட்டு விட்டு ஒலித்த ஜானியின் வார்த்தைகள், அந்தச் சிறு குழந்தையின் சிரிப்பு, ப்ரியா...

மாயா ஏதேதோ யோசித்தபடி படுக்கையில் சாய்ந்திருந்தாள்.

வெகு நேரம் கழித்துத் தலையைத் திருப்பியபோது அறை வாயிலில் சுதாகர் நிற்பது தெரிந்தது.

எவ்வளவு நேரம் நின்றிருப்பான்?

இறுக மூடிய அவன் கரங்கள் அவள் மனதில் பதிந்தன.

'என் வீடு. எங்கேயும் வருவேன்,' என்றவன் இப்போது சொந்த வீட்டிலே அந்நியன் போல நிற்பது பொருந்தாமல் மனதில் நெருடியது.

"உள்ளே வா... வாருங்கள். உட்காருங்கள்," என்றாள் மெல்லிய குரலில்.

அவன் பேசாமல் வந்து ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்தான்.

"அப்பா ஊருக்குப் போக வேண்டும் என்கிறார். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று அவனிடம் கேட்டாள் மாயா.

"உன் விருப்பம் போலச் செய்," என்றான் அவன் தரையைப் பார்த்தபடி.

தொண்டையைச் செருமிக்கொண்டு, "உன் மகிழ்ச்சிதான் இப்போது முக்கியம் மாயா! அதைக் கெடுக்க முடிந்தவரையில் ஆனதெல்லாம் செய்து விட்டு இது வேறா என்று நினைக்காதே... பெரிய தப்பு செய்து விட்டேன். அதற்கு மன்னிப்பே கிடையாது. ஆனால் இனியேனும்... மாயா, எங்கே இருந்தால் உனக்குக் கொஞ்சமேனும் ஆறுதல் கிட்டுமோ, அங்கே இரு. நீ இங்கே... மாயா! நீ உன் தந்தையோடு சென்றாலும் உன் பெயரில் பாங்கில் மாதா மாதம் பணம் போடுவேன். அதை எடுத்துச் செலவு... செலவே செய்ய வேண்டும். நான்..." என்றவன் உதட்டைக் கடித்துக் கொண்டு மவுனமானான்.

மாயா பேசாமல் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

எதையோ விழுங்கிவிட்டு மறுபடியும் தொடர்ந்தான். "உன் விருப்பம் ஒன்றுதான் இப்போது முக்கியம் மாயா! அதன்படி நீயாக முடிவு செய். ஆனால் உன் மனத் திருப்திக்காக ஓர் உறுதி சொல்கிறேன். இந்தக் குழந்தையை என் போல வளரவிட மாட்டேன். நிச்சயம். நர்ஸரி எல்லாம் மாற்றி பெயின்ட் செய்து விட்டேன். நீ சொன்ன மாதிரி. பூக்கள், டொனால்ட் டக், மிக்கி மவுஸ் என்று...

“அப்புறம் நீ சொன்னாயே, பிராயச்சித்தம் என்று. பெண்களுக்காக ஒரு ஹோம் தொடங்கப் போகிறேன். எல்லாப் பொறுப்பிலும் பெண்களே. நூறுபேர் வரை சேர்க்க வசதியாக ஒரு டிரஸ்ட் ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறேன்... அப்புறம் வேறு ஒன்றும் இல்லையே?”

“அப்படியானால் என்னைப் போகச் சொல்கிறீர்களா?” என்று நிதானமாகக் கேட்டாள் மாயா.

“பேபீ!” வினாடியில் நிலை குலைந்து போய் அவள் கையைப் பற்றி அதில் முகம் புதைத்தான் அவன்.

“இங்கே தங்குமாறு உன்னைக் கோரும் தகுதிகூட எனக்கு இல்லேம்மா!” என்றவன் அவள் கையை விடுவித்து விட்டு எழுந்து நடந்தான்.

வாசல் வரை சென்றவன் திரும்பி, “சாணிமலை தெரிய இன்னொரு பிறவி தேவையில்லை, பேபி!” என்று தெளிவற்ற குரலில் கூறிவிட்டுப் போய் விட்டான்.

அவன் முகம் புதைத்த கையைத் தூக்கிப் பார்த்தாள் மாயா.

கை நனைந்திருந்தது.

நெஞ்சில் எங்கோ ஒரு மூலையில் அவளுக்கு வலித்தது.

மீண்டும் வந்த தந்தையிடம் மாயா தயக்கத்துடன் ஆனால் திடமாகப் பேசினாள். “நான் இங்கேயே இருக்கிறேன் அப்பா.”

“மாயா!” என்று அதிர்ந்து போன தந்தையின் கையைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, “நன்றாக யோசித்துப் பாருங்கள் அப்பா! நான் உங்களோடு வந்தால் எத்தனையோ புதிய சிக்கல்கள் உண்டாகும்,” என்றாள் அமைதியாக.

“எதையும் நாம் சமாளித்துக் கொள்ளலாம்,” என்றார் அவர் பிடிவாதமாக.

“ரொம்பக் கஷ்டம் அப்பா! முதலில் இந்தக் குழந்தை...”

"அது அதன் தகப்பன் பாடு..." என்றார் அவர் வெறுப்பாக.

அவள் பேசாது முறுவலிக்கவும், அவர் பதறிப் போய், "மெய்யாகவே அதற்கு நீ பொறுப்பில்லை, கண்ணம்மா! நிச்சயம்," என்றார்.

"இவன் நல்ல மனிதனாக உருவாக வேண்டாமா, அப்பா?"

"அப்போது தூக்கிக் கொண்டு வா," என்றார் அவர் விட்டேற்றியாக.

லேசான புன்னகையுடன், "வரலாம். ஆனால் அப்புறம் ப்ரியாவுக்குத் திருமணம் என்பதையே மறந்து விடலாம்," என்றாள்.

ஏதோ சொல்ல வாயெடுத்த தந்தையைத் தடுத்துப் பேசினாள். "பொறுங்கள் அப்பா! நான் முதலில்சொல்லி முடித்து விடுகிறேன். இப்போதும் கூடப் ப்ரீயைத் தப்பாகத்தான் - அதாவது கெட்டு ஓடிப்போன ஒருத்தியின்... லெட் அஸ் ஃபேஸ் இட் டாடி... அந்த மாதிரிப் பட்டவளின் தங்கை என்ற நிலையில்தான் அவளை மதிப்பிடுவார்கள் என்றுதானே நினைக்கிறீர்கள்? இருக்கலாம். ஆனால் உங்களின் ஒருமகள் ஓடிப்போனதில் உங்கள் தப்பு ஒன்றும் இல்லை. அவள் எப்படியோ, அவர் மானஸ்தர் என்று உங்களை ஒப்புக் கொள்வார்கள்."

"யாருடைய ஒப்புதலும் எனக்குத் தேவையில்லை, பாப்பா!" என்றார் அவர் சினத்துடன்.

ஓர் அன்னையின் கனிவுடன் அவருடைய கைகளை வருடினாள் மாயா. "அப்பா... அப்பா! இப்படி எல்லாம் பேசக் கூடாது அப்பா! உங்களைப் பொறுத்தவரை, தேவையற்றுப் போவது ப்ரீயை, வீட்டை நினைத்தால் தேவையானது ஆகிவிடும்."

"யாரும் அறியாமல் வேறு எங்காவது போய் வாழலாம், பாப்பா."

"உலகம் ரொம்ப சின்னது அப்பா! நீங்கள் சொல்வது ஏதும் நடக்கக் கூடிய காரியம் இல்லை. ம்... நான் என்ன சொல்லிக் கொண்டு இருந்தேன்? ஆமாம், தப்பில் உங்கள் பங்கு ஏதும் இல்லை என்ற மதிப்பு இருக்கும். ஆனால் என்னையும், என்னோடு இந்தப்பையனையும் அழைத்துச் சென்றால் என் தப்பை நீங்கள் ஓகே பண்ணியதாக ஆகிவிடும்."

"நீ தப்பே பண்ணவில்லையே, என் கண்ணே!" என்று கதறி விட்டார் அவர்.

வருத்தமாக முறுவலித்தாள் மாயா. "ஆமாம், அப்பா. அது உண்மைதான். ஆனால் யார் ஒப்புக் கொள்வார்கள்?"

"காலம் மாறி விட்டது கண்ணம்மா! உண்மை யறிந்து உன்னை நேசிக்கும் ஒருவன் வருவான்."

"அறிந்தவர்களே மாறுகையில் அறியாதவர்களைப் பற்றி நம்பிக்கை வைக்காதீர்கள் அப்பா. அப்படியே வந்தாலும் இதை எல்லாம் விளக்கிச் சொல்லி... சீச்சீ! மேலே எந்தப் புது வேதனையையும் அனுபவிக்க எனக்குத் தெம்பு இல்லை, அப்பா!"

"ஒரு மடையனும் வேண்டாம், பாப்பா. நீ என்னோடயே இருந்துவிடு."

"ஸாரிப்பா. அதுதான் முன்பே காரணம் சொன்னேனே. மேலும் ஓடுகாலி, அவனை விட்டும் ஓடி வந்து விட்டாள் என்பார்கள். நிறைய அசிங்கங்கள் அப்பா! ஒவ்வொருவராகப் போய்ச் சமாதானம் சொல்ல முடியுமா? சொன்னால்தான் நம்புவார்களா?"

"நானே நம்பாமல் போனேனே, கண்ணம்மா!" என்று அரற்றினார் சுந்தரம்.

"உஷ். அதையெல்லாம் மறந்துவிட வேணும்பா..." என்றாள் மாயா அன்பாக.

"உன்னை உயிரோடு இழக்கச் சொல்கிறாயா. கண்ணா? என்னால் முடியவே முடியாது."

"என்னாலும் முடியாதுப்பா. ஆனால் அதற்கு அவசியம் இராது. கொஞ்ச காலம் கழித்துச் சுதாகரோடும் குழந்தையோடும் நான் வந்தால் ஏதோ ஓடினாலும் குடியும் குடித்தனமும் ஆக இருக்கிறாள் என்று ஒரு மாதிரிச் சரியாகிப் போகும். குறைந்த பட்சம் சுதாகரின் காரும் பணமுமாவது சரி செய்து விடும்," என்று சிரித்தாள் மாயா.

தந்தையின் முகம் போன போக்கைப் பார்த்துச் சிரிப்பை நிறுத்திவிட்டு. "டாடி! நான் சும்மா வாயில் வந்ததைப் பேசுகிறேன் என்று நினையாதீர்கள் நான் ரொம்ப ரொம்ப யோசித்துத்தான் சொல்கிறேன். இவன் பிறந்தபோது ஆஸ்பத்திரியிலும், இப்போது இங்கே 'ஸிக்'காகவும் படுத்திருந்த போதெல்லாம் யோசித்துக் கொண்டேதான் இருந்தேன். ரொம்ப ரொம்ப யோசித்தேன், அப்பா! அதன் பிறகுதான் இந்த முடிவுக்கு வந்தேன்," என்று முடித்தாள் மாயா.

"மாயூ! இவன் தயவில் உன்னை விட்டுப் போவதாம்மா? முன்பு உன்னை எப்படி நடத்தினான்? யோசிடா," என்றார் தந்தை.

"இனி அப்படி எல்லாம் நடக்காது. சுதாகர் இயல்பில் கெட்டவரில்லையப்பா! ஒற்றைப் பிள்ளையாய் நின்று போனது. பெற்றோர் அவரை வளர்த்த விதம், நிறைந்த பணம்... நடந்து போனவற்றுக்கு இதெல்லாம் கூடக் காரணம்தான். மேலும் சுதாகர் நினைத்திருந்தால் என்னை இன்னமும் எவ்வளவோ கொடுமை செய்திருக்கலாம். இதை விடவா என்று எண்ணாதீர்கள். இதை விடவும் இருக்கிறது. நாலு புதிய தலைமுறைக் கதைகளையும், சினிமாக் கதைகளையும் பார்த்தால் தெரியும். ஆனாலும், அப்போதும் மற்ற வகையில் என்னை மகிழ்விக்கவே அவர் முயன்றார்," என்று பெருமூச் செறிந்தாள்.

"பெரிய அவர்!" என்றார் சுந்தரம் ஆத்திரத்துடன்.

களைப்புடன் முறுவலித்தாள் மாயா. "அன்பு ரொம்பப் பெரிய விஷயம் அப்பா! அது நிறைய விஷயங்களைத் தலைகீழாக மாற்றி விடுகிறது..." சோர்வாகச் சாய்ந்தபடி மகள் தலையணையைத் தேடுவதைக் கண்டு தந்தைக்கும் மகளுக்கும் இடையே குறுக்கிட்டாள். ரேணுகா.

"அவளுக்குக் களைப்பாக இருக்கிறது. விடுங்கள்," என்று தலையணையை மகளுக்கு வசதியாக வைத்தாள்.

மாயா படுத்ததும் நிமிர்ந்து. "ஆனால் ஒன்று. மாயா இங்கே தங்குவது என்றால் சுதாகர் கையால் அவள் கழுத்தில் தாலி ஏற வேண்டும்," என்றாள் அழுத்தமாக.

"என்ன உளறுகிறாய்? சட்டப்படியும் அவனுக்கு இவளை அடிமையாக்க வேண்டும் என்கிறாயா?" என்று எரிந்து விழுந்தார் சுந்தரம்.

"இல்லை. திருமணத்தால் யாரும் அடிமையாவது இல்லை."

யோசனையோடு. "அது சரிதான் அப்பா! நான் உங்களைப் பார்க்க வரும்போது கழுத்தில் தாலி இருந்தால் இன்னமும் நல்லதுதான்," என்றாள் மாயா.

பிறகு. "சுதாகரிடம் நீங்கள் சொல்லுங்கள். அம்மா," என்று கூறிவிட்டுக் கண்களை மூடிக் கொண்டாள்.

முதலில் சுதாகரால் நம்பவே முடியவில்லை.

மீண்டும் மீண்டும் கேட்டான்.

நடந்தது முழுவதையும் அறிந்ததும் மீண்டும் அவன் முகத்தில் திரை விழுந்தது.

அமைதியான முறையில் குருவாயூரில் திருமணம் நடந்தது.

பாபு. பிரியா இருவரும் வந்திருந்தனர்.

அக்கா. அக்கா என்று ஒட்டிக் கொண்டு அலைந்தாள் ப்ரியா. குழந்தையைக் கண்டு அவளுக்கு ஒரே குதூகலம். மேலும். 'உன் இடுப்பு மெலிந்து விட்டதடி!" என்று மாயா சொல்லவும் அவளுக்கு அளவிட முடியாத ஆனந்தம்.

பாபு தடுமாறினான்.

ஆனால் மாயா அவனை இழுத்து வைத்துப் பேசினாள்.

குழந்தையைக் காட்டி, "இவன் உன்னைப் பார்த்துச் சிரிக்கிறான் பார், பாபு. தாய்க்குப் பிறகு தாய்மாமனாம். அம்மா சொன்னார்கள். இவனுக்கு என்ன பெயர் வைக்கலாம், சொல்லேன். உன் பெயரில் முதல் பகுதியை வைத்து மோகன் என்று கூப்பிடுவோமா?" என்று முறுவலோடு வினவினாள்.

அவள் கையைப் பிடித்துக் கொண்டு ஒரேயடியாக அழுது விட்டான் பாபு. "உன்னை என்னவெல்லாம் சொல்லி ஏசி விட்டேன். என்னை மன்னிப்பாயா அக்கா?" என்று விம்மினான்.

'சீசீ. அசட்டுத் தம்பிப் பையா, ஆண் பிள்ளை அழலாமா! அன்றைக்கு உன் நிலைமையில் ஒரு 'ஸெயின்ட்' இருந்திருந்தால் கூட அப்படித்தான் பேசியிருப்பார். அதனால் அதையெல்லாம் முழுக்க மறந்துவிட வேண்டும். இப்போது என்ன ஆகிவிட்டது? மீண்டும்தான் நாம் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்துவிட்டோமில்லையா? 'ஆல் இஸ் வெல் தட் என்ட்ஸ் வெல்' என்று உனக்குத் தெரியும் அல்லவா? போதாக் குறைக்கு இந்தக் குட்டிப் பையன் வேறு. பார். சிரிப்பதைப் பார், பாரேன் பாபு."

பாபுவும் தன்னை மறந்து குழந்தையிடம் லயித்தான்.

மாயாவின் தாயிடம் தனியே பேசினான் சுதாகர்.

தயங்கியபடியே எங்கோ பார்த்துக் கொண்டு, "எதற்கும் நீங்கள் மாயாவை உங்களோடு அழைத்துச் சென்று விடுகிறீர்களா?" என்று அவன் கேட்ட போது ரேணுகாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

## 21

**சு**தாகரின் கேள்வியால் ஒரு கணம் பூமியே தட்டாமாலை சுற்றியது ரேணுகாவுக்கு.

இது என்ன புதுப் பூதம் என்று அஞ்சியபடியே, "ஏ... ஏன்?..." என்ற திணறினாள்.

அவன் இன்னமும் மாமியாரை நேராகப் பார்க்கவில்லை. அறையில் உள்ள அத்தனை சாமானையும் வெறித்தான். பிறகு குனிந்த தலையுடன், "வந்து... நீங்கள் எல்லாரும் இல்லாமல் இங்கே மாயாவுடன் தனித்திருக்க எனக்குப் பயமாக இருக்கிறது... அன்று உடம்பு சரியில்லாத போதுகூட என்னால் எளிதில் அவளை விட்டு விலக முடியவில்லை..." என்றான்.

ரேணுகாவின் முகம் சிவந்து போயிற்று. ஆயினும் 'அப்பாடி' என்று மூச்சுவிட்டபடி, "அதற்குத் தேவையும் இல்லையே... தனி மரம் தோப்பாகாது என்பார்கள். குட்டிப் பையனும் உங்களைப் போல ஒன்றாக நின்று விடக்கூடாது," என்றாள் இதமாக.

அவன் முகம் சட்டெனக் கருத்தது. "என்னைப் போல அவனை வளரவிடக்கூடாது என்று மாயா முன்பே சொன்னாள்," என்றான்.

அவசரமாக, "அது முன்பிருந்த உங்களை..." என்று குறுக்கிட்டாள் ரேணுகா. "இப்போதுதான் நீங்கள் அடியோடு மாறி விட்டீர்களே. கொட்டிய பாலுக்காக வருந்தாதே· என்பார்கள். பழசை எல்லாம் மறந்து புது வாழ்வு தொடங்குங்கள்," என்று முடித்தாள்.

பேச்சு முடிந்ததென்று நகர முயன்ற ரேணுகாவைச் சுதாகர் மீண்டும் அழைத்தான். "அதோடு இன்னமும் ஒன்று..." என்று தொடங்கினான்.

"தப்புக்கு இரண்டு வகைத் தீர்வு. அதில் ஒன்று பிராயச்சித்தம். அதைச் செய்யாவிட்டால் கிடைப்பது தண்டனை," என்றாள் மாயா. இதுவரை இப்போது அனுபவிப் பதையே தாங்க முடியவில்லை, எனவே என் பிராயச்சித்தமாக இதை நீங்கள் ஏற்க வேண்டும்," என்று கெஞ்சுதலாகக் கேட்டுக் கொண்டான்.

"என்னது?" என்றாள் ரேணுகா தயக்கமாக.

"மதுரையில் உங்கள் வீடு ஒரு லட்சம் பெறுமானம் உள்ளது. என்னால் போனது. சென்னையில் அதுபோல ஒரு வீடு உங்கள் பெயரில் வாங்கினேன். அந்தப் பத்திரம் இது. மேலும் உங்கள் கணவருக்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு வேலைக்கு - என் கம்பெனியில் இல்லை - அது என் நண்பர் ஒருவருடைய கம்பெனி - திறமையுள்ள ஜி. எம். வேண்டும் என்று கொஞ்ச காலமாகவே தேடிக் கொண்டிருந்தார். அந்த வேலைக்குத்தான் - அதை ஏற்பாடு செய்திருக்கிறேன். எப்படியாவது உங்கள்... மாயாவின் அப்பாவை ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும்," என்று வேண்டினான்.

ஆனால் விஷயத்தைச் சொன்னதுபோது அவர் குதித்தார்.

"நான் என்ன என் மகளை இவனுக்கு விற்றுவிட்டுப் போவதாக நினைத்தானா? ராஸ்கல்! விலை கொடுக்கிறானாமா? என்னவொரு திமிர் இருக்க வேண்டும்? இவன் தயவு இல்லாமலே பிழைக்க முடியும் என்று சொல்," என்று கொதித்தார்.

ஆன்னால் மாயா அவரைப் பணிய வைத்தாள். "தப்பு செய்தவர் மனம் திருந்திப் பிராயச்சித்தம் செய்யும்போது அதை ஏற்க மறுப்பதும்கூட ஒரு விதத்தில பாவம்தான் அப்பா! அது மட்டும் அல்ல. ஒருவர் மன்னிப்பை வேண்டும் போது மறுப்பவர்

முன்னர் செய்த தப்பையும்விடக் கொடியது. என் அப்பா அந்தக் கொடுமை செய்யலாமா? காந்தி இதையாப்பா உங்களுக்குக் கற்றுத்தந்தார்? பகைவனிடமும் கருணை காட்டு என்றல்லவா சொன்னார்?" என்றெல்லாம் சொல்லி அவரை ஏற்க வைத்தாள்.

"கட்டாயம் சீக்கிரம் சென்னைக்கு வர வேண்டும்." என்று உறுதி மொழியைப் பெற்றுக் கொண்டு சுந்தரம் குடும்பத்தினர் அன்று சென்னைப் பயணம் ஆனார்கள்.

லேசாகச் சோர்வாக இருந்ததால் மாயா சீக்கிரமே படுக்கச் சென்று விட்டாள்.

ஆனால் கடைசி வேளைப் பசியாறல் முடிந்து குழந்தையுடன் ஜானி நர்ஸரிக்குச் சென்ற பிறகும் தூக்கம் வரவில்லை.

"பெட்ஸைட் லாம்ப்"பைப் போட்டுக்கொண்டு ஒரு கதைப் புத்தகத்தில் ஆழ்ந்தாள்.

வெகுநேரம் கழித்துக் கதவு தட்டப்படவும் 'யெஸ்' என்று பார்வையைத் திருப்பினாள் மாயா.

உடலில் ஒரு சிலிர்ப்பு ஓடியது.

ஏனெனில் திறந்த கதவின் வழியே உள்ளே வந்தவன் சுதாகர். அவன் கண்கள் அவளை யாசித்தன.

"எ...என்ன?"

கதவை மூடிவிட்டு அவன் தன்னை நெருங்கிவருவதை நெஞ்சு படபடக்கப் பார்த்துக் கொண்டே இருந்தாள் மாயா.

படுக்கையில் ஓரமாக அமர்ந்து அவள் கையிலிருந்த புத்தகத்தை வாங்கிப் பிரித்திருந்த பக்கத்தில் அடையாள மிட்டு மேசையில் வைத்தான் சுதாகர்.

பிறகு மெல்ல அவள் கைகளைப் பற்றி "மாயா... ப்ளீஸ்..." என்றான்.

மாயா தொண்டையில் மிடறு விழுங்கினாள்.

"மாயூ... என்னால்...என்னால் அங்கே தனித்திருக்க முடியவில்லை. பேபி ப்ளீஸ்... நான் முன்போல இல்லை. பேபி ஆனால்... மாயா..."

கிளம்பும்போது அம்மா சொன்னது இப்போது நன்றாகப் புரிந்தது அவளுக்கு.

விழிகளைத் தாழ்த்திக் கொண்டு விளக்கு ஸ்விட்சை நோக்கிக் கை நீட்டினாள்.

அவள் கையைத் தடுத்து அவன், "மாயூ..." என்று அவள் முகத்தைக் குனிந்து பார்த்தான்.

அவள் லேசாக முறுவலிக்கவும், "என்ன மாயூ..." என்று அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

மறுநாள் காலையில் மாயா குளித்துவிட்டு வரும் போதும் சுதாகர் விழித்து எழவில்லை.

ஓர் ஆச்சரியத்துடன் அவன் முகத்தைப் பார்த்தபடி சற்று நேரம் நின்றாள்.

பெற்றவர்கள் தம் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்க ஏன் துடிக்கிறார்கள்? என்று புரிந்தாற் போல இருந்தது.

தன்னுள்ளே வெட்கியவளாகக், குழந்தையை நாடிச் சென்றாள்.

குழந்தைக்கு உடைமாற்றிக் கொண்டு இருந்த ஜானிம்மை குறும்பாகச் சிரித்தாள்.

"ஷ். சும்மாயிரு ஜானி," என்று முகம் சிவந்து விட்டுக் குழந்தையைத் தூக்கினாள் மாயா.

குழந்தையின் பசி பாதி தீர்ந்து கொண்டிருக்கும் போது காலடிச் சத்தம் கேட்டு நிமிர்ந்தாள்.

சுதாகர்தான்.

அப்படியே உடம்பெல்லாம் கூச்சமாகிவிட்டது மாயாவுக்கு. இழுத்து மூடிக்கொண்டு விழிகளைத் தாழ்த்தி, "இப்போது இங்கே யாரும் வரக்கூடாது," என்றாள் பளிச்சென்று.

கணம் தயங்கி, "வரக் கூடாதா?" என்றான் அவன். தலை நிமிராமலே, "ஊகூம்..." என்றாள்.

அவன் திரும்பிச் செல்லவும், 'அம்மாடி' என்று நிமிர்ந்தவள் ஜானியின் குற்றம் சாட்டும் பார்வையைச் சந்தித்தாள்.

"என்ன ஜானி?" என்று வியப்புடன் விசாரித்தாள்.

"எங்கள் ராஜையாவைக்கூட விரட்டுகிறாயே! பாவம், அவர் முகம் வாடிப் போயிட்டுது..." என்றாள் ஜானி குறையாக.

"நிஜமாகவா?" என்றாள் மாயா ஆச்சரியத்தோடு.

"பின்னே பொய்யா சொல்லுகிறேன்? அப்படியே களை இழந்து கூம்பிட்டுது. ரெண்டு வார்த்தையிலே அவரை வருத்தப்படுத்தி விட்டியே!" என்றாள் ஆதங்கத்துடன்.

"நான் நினையாமல் பேசிவிட்டேன், ஜானி," என்று சமாதானம் சொன்னாள் மாயா.

குழந்தை விளையாடத் தொடங்கியதும் அவனை ஜானியிடம் கொடுத்துவிட்டுச் சுதாகரைத் தேடிப் போனாள்.

ஆபீஸ் அறையில் மேஜையின் பின்னிருந்து ஏதோ வேலையில் முனைந்திருந்தான் சுதாகர்.

மாயாவைக் கண்டதும் வேலையை அப்படியே விட்டு விட்டு எழுந்து முன்னே வந்தான்.

அவன் கண்களில் உணர்ச்சியைக் காட்டாத ஒரு கவனத்தைக் கண்டதும் மாயாவுக்கு வேதனையாக இருந்தது.

"என்ன மாயா?"

"வந்து..."

“என்ன?” அவளது தோளைப் பற்றிக் கேட்டான் அவன்.

“கொஞ்சம் முன்னே நர்சரியில் உங்கள் முகம் வாடிப் போயிற்று என்று ஜானி சொன்னாள். நான் உங்களை வருத்தப்படுத்த என்று அப்படிச் சொல்லவில்லை...”

“நானும் அப்படி நினைக்கவில்லை, மாயா...” என்றான் சுதாகர். “ஆனால் நேற்றிரவு கடமையாகத்தான் என்னைச் சகித்தாயோ என்று எண்ணினேன்,” என்றான். அதே கவனமாக உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன்.

அந்த முகத்தின் பின்னே மறைந்து கிடந்த வேதனை புரிந்தவளாக, “ஊகூம். அய்யோ.. அப்படி எல்லாம் இல்லை,” என்று அவசரமாக மறுத்தாள் மாயா.

“மெய்?”

“நிஜம் சுதாகர்!”

தன்னியல்பாய் அவளது தோள்களை வருடிக்கொண்டிருந்த கையைப் பிரித்துத் தொங்கவிட்டுக் கொண்டு, “காட்டு,” என்றான் சுதாகர்.

அவள் திகைத்தாள். “அப்படி என்றால் என்ன அர்த்தம்? எப்...எப்படிக் காட்டுவது?”

“உனக்குத்தான் தெரிய வேண்டும்,” என்றான் அவன் கண்ணை எட்டாத முறுவலுடன்.

“எப்படி?” ஒன்றும் புரியாமல் திகைத்தாள் மாயா.

அன்பை உணரத்தானே முடியும்! எப்படிக் காட்டுவது?

“எனக்குத் தெரியவில்லையே.... ப்ளீஸ்...” என்று திணறியபடியே அவனைப் பார்த்தாள் மாயா.

அவ்வளது கவனத்தையும் மீறி மெல்ல அவன் கண்களில் பயம்... பயமே தோன்றுவதையும் உதட்டோரம் கட்டுப்பாட்டை மீறித் துடிப்பதையும் உடம்பு இறுகுவதையும் கண்டு அவள் தவித்துப் போனாள்.

தான் செய்த பிசகுகளின் விளைவால் இயல்பாக அன்பை எதிர்பார்க்கும் தைரியம் அவனுக்கு இல்லை என்பது அவளுக்குப் புரிந்தது. ஆனால் காட்டும் வகை புரியாத காரணத்தினால் மட்டுமே அவளுக்கு அன்பில்லை என்று நினைத்து அவன் துன்புறுவது தெரிந்த போது அவளால் தாங்க முடியவில்லை.

கடைசியில் அவன் படும் வேதனையைச் சகிக்க முடியாமல், "என்ன சுதாகர் இது? ஊகூம்..." என்று அவன் முகத்தை இரு கரங்களாலும் இழுத்து இறுக அணைத்துக் கொண்டாள்.

அவனிடம் அசைவே இல்லை.

ஆனால் அது ஒரு கணம்தான்.

மறுகணம் ஆயிரம் முத்தங்களால் அவளை அர்ச்சித்துக் கொண்டிருந்தான் சுதாகர்.

"பேபி, பேபி, பேபி... பேபி... பேபி..."


மயங்குகிறாள்
ஒரு மாது
ரமணிசந்திரன்